வள்ளியம்மை

# திருமணப்படலம்

— உரையுடன் —



ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர்

விலை ரூபாய் 1 4 0

# பிரகடனபத்திரம்

**கந்தபுராணம் செய்யுள்—(2 - பாகங்கள்) விலை ரூ. 8.**

சிவபுராணங்களிற் சிறந்தது. இன்சுவை அளிப்பது. பத்தியை விளைவிப்பது தினந்தோறும் பாராயணத்திற்குரியது. இந்நூலை ஒருவர் முறையாகப் படித்தால் எல்லா விஷயங்களையும் அறிந்த பண்டிதராவர். இது முதன்முதல் நாவலரால் அச்சிடப்பட்டது.

**கந்தபுராண வசனம் விலை ரூ. 5.**

இதன் ஒரு சிறு பகுதியே நாவலரால் எழுதப்பட்டது. மற்றப் பகுதிகளெல்லாம் அவர் மாணவர்வழி வந்தவர்களால் பூர்த்திசெய்யப்பட்டன.

**பெரியபுராண சூசனம் விலை ரூ. 0 12.**

பெரிய புராணத்திலுள்ள சாத்திரக் கருத்துகளை விளக்குவது. இது முடிவுபெறாமற்போனது வருந்தத்தக்கதே.

**பெரியபுராண வசனம் விலை ரூ. 2 12.**

இவ்வசன[illegible] முதலில் உண்டாயது. தமிழ் வசன நடைக்கு இது வழிகாட்டியாயுள்ளது. இலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் பாடபுத்தகங்களுள் ஒன்றாக நிலவுவது. பின்னால் பலவசனம் வந்தும் இதற்குள்ள மதிப்பு அலாதியானது.

**திருவிளையாடற்புராண வசனம் விலை ரூ. 2.**

வசன நடையில் சிறந்தது. திருவாலவா யுடையாரின் 64 - திருவிளையாடல்களையும் கூறுவது.

**சேதுபுராணம் விலை ரூ. 2.**

இராமேசுவரத்தின் மகிமையைக் கூறுவது. நிரம்பவழகிய முனிவர் பாடியது. சைவசித்தாந்தக் கருத்துகளை உடையது; பண்டிதர்களுக்கு உற்றது. இராமநாதபுர சமஸ்தான அதிபராயிருந்த பொன்னுச்சாமி தேவர் வேண்டியபடி நாவலர் அச்சிட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.

உ

சிவமயம்.

# கந்தபுராணம்

# வள்ளியம்மை திருமணப்படலம்

நூல் நிலையம்
ஆரம்பம்: 1934

உரையுடன்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். றோட்
யாழ்ப்பாணம்,

இது
யாழ்ப்பாணத்து நல்லூர்
ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்
ச. பொன்னுஸ்வாமி அவர்களால்
சென்னை:
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிடப்பட்டது.
மன்மத௵ வைகாசி௴
1955.

1934

உ

# பதிப்புரை

**மூவிருமுகங்கள்போற்றி முகம்பொழிகருணைபோற்றி
ஏவருந்துதிக்கநின்ற இராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேள் மலரடிபோற்றியன்னான்
சேவலுமயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி.**

சிவபுராணங்களுள் தமிழிற் சிறந்தவை சிவபிரானது முக்கண்ணாகத் துலங்கும் பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் என்பவையாம். இம்மூன்றனுள் மிகவும் பரந்து பெருங்காப்பியக்கடலாய் நிலவுவது தமிழ்க் கந்தபுராணமே. இதன் செய்யுட்கள் 10000 - க்கு மேலன. இது பொருளாலும் அகலத்தாலும் தமிழ் நூல்களிற் சிறந்தது. பெருங்காப்பிய இலக்கணங்கள் உவமாலங்காரங்கள் பொருந்தியது. அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கையும் விளக்கி அவற்றை அடையும் வழியையும் சாதனத்தையும் காட்டுவது. பெரிய புராணத்தைப்போல சிவபிரானது திருவருட்சிறப்பையும் சிவனடியாரது திருவருட் சிறப்பையும் சிவனடியாரது அன்புத்திறத்தையும் கூறுவது. தேவாரம், திருவாசகம்போல் பக்தி விளைவிக்கும் தோத்திரப்பாக்கள் நிரம்பப்பெற்றது. திருக்கோவையார்போல பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக ஆன்ம ஈடேற்றமுறையை ஒருங்கே கூறுவது. சாத்திர நூலாகிய சிவஞானசித்தியாரைப்போல் சைவசமய உண்மையை நாட்டிப் புறச்சமயங்களைக் கண்டிப்பது. ஆயினும் சிவோபாசனையின் பெருமையையும் சிவநிந்தையின் கொடுமையை

யும் உயிர்கள் முத்தி அடையும் முறைமையையும் விளக்கு தலே நோக்கமாகக்கொண்டது.

இத்தகையச்சிறந்த தமிழ்ப்புராணம் திருக்கலியாணப் படலம், தெய்வயானையம்மை திருமணப்படலம், திருமணப் படலம், வள்ளியம்மை திருமணப்படலம் என்னும் நான்கு படலங்களை முதலிலும் இடையிலும் கடையிலும் கொண் டிருப்பது மங்களகரத்தைப் போற்றியதெனலாம். கந்த சட்டி விரதமுடிவில் வள்ளியம்மை திருமணப்படலத்தை எல்லோரும் படனஞ்செய்வது தொன்றுதொட்டுள வழக் கம். அப்படலம் 267 திருவிருத்தங்களைக் கொண்டது. அதற்கு உரை சிலபுலவர்கள் எழுதியிருப்பினும், யாழ்ப் பாணத்து வல்லுவெட்டித்துறை **ச. வயித்தியலிங்க பிள்ளை** எழுதிய உரையே மிகவும் சிறப்புடையதாகக் காணப்படு கின்றது. இது பல ஆண்டுகளுக்குமுன் **சைவாபிமானிப்** பத்திராதிபராயிருந்த பொ. ஞானசபாபதிப் பிள்ளையால் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டது. அது இப்போது கிடைப்பது அருமையாயிருப்பதால் அதனை அச்சிடுவது நலமென ஆறுமுக நாவலரது சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகராகிய ச. **பொன்னுஸ்வாமி** அவர்களிடம் முறையிட்டேன். அவர்கள் நாவலர் அச்சுக் கூட வெளியீடாக இப்பதிப்பை அச்சிட்டுதவினர். அவர் களுக்கு எனதுவந்தனம் உரியதாக. குகதாசர்கள் போற்று வார்களாக.

திருமயிலை,
மன்மத வைகாசி
விசாகம்.

**சே. வெ. ஜம்புலிங்கம்.**

## நூலாசிரியர் சரித்திரக் குறிப்பு

கந்தபுராணத் தமிழாசிரியராகிய **கச்சியப்பசிவா சாரியர்** காஞ்சிபுரத்தில் ஆதிசைவகுலத்தில் 800 ஆண்டு களுக்குமுன் விளங்கியவரென்ப. இவர் வடமொழி தென் மொழி ஆகிய இருமொழியுங் கற்றுச் சிறந்தவர். வேத சிவாகமங்கள் சமயசாத்திரங்கள் இலக்கண இலக்கியங்கள் திரிபற உணர்ந்தவர். இவருடைய பாடல்கள் இனிமை பயப்பன. குமரவேள் அருள்பெற்றவராதலால் இவரது புராணத்தைக் கிரமமாக அன்போடு படிப்பவர் கேட்பவர் குமாரக்கடவுளின் பத்தியும், விரும்பிய வரசித்தியும் பரமுத்தியும் பெறுவரென்பது உண்மை. இவரது சரித்திர விரிவை கந்தபுராணத்தில் காணலாம்.

கந்தபுராணம் முதலில் அச்சிடப்பட்டது **ஆறுமுக நாவலரவர்களாலே**தான். அது நிகழ்ந்தது 1869 - ம் ஆண்டில். 10,346 பாடல்களை ஏட்டுச் சுவடியிலிருந்து எடுத்துச் சரிப்படுத்தி வசதி சிறிதும் இல்லாத 90 ஆண்டு களுக்கு முன் நாவலர் தனிமையாகப் பிரசுரித்தது முருகப் பெருமான் திருவருளாலேயாம். இக்காலத்தில் புராணங் களைச் சிலர் புறக்கணிக்கின்றனர். அவர்கள் புராணத்தைப் பற்றி நாவலர் கூறியிருப்பதைச் சிந்திப்பார்களாக:—

"பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது. உலகத்தினது தோற்ற மும், ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக் கதைகளுமாகிய இவ்வைந்தையுங் கூறுதலால் புராணம் பஞ்சலக்கணம் எனவும் பெயர் பெறும். இதிகாச மும் புராணத்துள் அடங்கும்."

## உரையாசிரியர் சரித்திரக்குறிப்பு

இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. **வயித்தியலிங்க பிள்ளை** 1843-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வல்லுவெட்டித் துறையில் பிறந்தவர். தந்தையார் சங்கரர் என்பார். இவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் தமிழ் நூல்களைக் கற்றறிந்தவர். தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பாண்டித்தியமுடையவர். சைவசமய சாத்திரங்களில் மிகப் பயிற்சியுடையவர். சைவப்பிரசாரத்தின் பொருட்டு "சைவாபிமானி" என்னும் பத்திரிகையை நடாத்தியவர். சென்னையில் சிலகாலம் தங்கி தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை அச்சிட்ட சி **வை. தாமோதரம் பிள்ளையவர்க**ளின் மதிப்பைப்பெற்றவர். எனது நண்பராயிருந்த மட்டக்களப்பு வித்துவான் ச. பூபால பிள்ளையின் ஆசிரியருள் ஒருவராயிருந்தவர். பூபால பிள்ளை பாடிய சோம வாரவிரத மகிமையைக்கூறும் **சீமந்தனி புராணம்** இவரது பார்வையிலேயே சென்னையில் 1894-ம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

இவ்வுரையாசிரியர் இயற்றிய வேறு நூல்களாவன:— கந்தரலங்காரவுரை, கல்வளையந்தாதியுரை, தெய்வயானையம்மை திருமணப்படலவுரை முதலியன.

இவர் 1900-ம் ஆண்டில் இறந்தனர் என்ப.

**பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்**
**இறையிமோர் மறுவில யாவு மேன்மையே**
**மறைபல சான்றுள வாய்மையே யவை**
**அறிஞர்க ணுடியே யவற்றைக் காண்கவே.**

கந்தபுராணத்திலுள்ள

# சில தோத்திரப் பாசுரங்கள்

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

எவர்தம் பாலுமின்றி எல்லைதீ ரமலற்குள்ள
மூவிருகுணனுஞ் செய்க்கு முகங்களாய் வந்ததென்னப்
பூவியல் சரவணத்தண் பொய்கையில் வைகும்ஐயன்
ஆவிகளருளு மாற்றா லறுமுகங் கொண்டானன்றே.

மறைகளின் முடிவால்வாக்கால் மனத்தினா லளக்கொணமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த்தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந் தருளினனே.

ஏலவார் குழலிறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலையான தொன்றழிவின்றி வைகு மாறொக்கும்.

ஆதலி னமதுசத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்.

கந்தநம ஐந்துமுகர்தந்த முருகேசநம கங்கையுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலைபுனையும்
தந்தைநம ஆறுமுகஆதிநம சோதிநம தற்பரமதாம்
எந்தநம என்றுமிளையோய்நம குமாரநமஎன்றுதொழுதார்.

முழுமதியன்னவாறு முகங்களு முந்நான்காகும்
விழிகளினருளும் வேலும் வேறுள படையின்சீரும்
அழகிய கரமீராறும் அணிமணித் தண்டையார்க்கும்
செழுமலரடி யுங்கண்டான்அவன் தவஞ்செப்பற்பாற்றே.

வீறுகேதனம் வச்சிரமங்குசம் விசிகம்
மாறிலாதவே லபயமே வலமிடம்வரதம்
ஏறுபங்கய மணிமழுத் தண்டுவில்லிசைந்த
ஆறிரண்டுகை யறுமுகங்கொண்டு வேளடைந்தான்.

ஈசனே யவனுடலான் மதலையாயினன்காண்
ஆசிலாவவன் அறுமுகத்துண்மையா லறிநீ
பேசிலாங்கவன் பரனொடு பேதகனல்லன்
தேசுலா வகன்மணியிடைக் கதிர்வருதிறம்போல்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுனுற்றால்
தூயவராகி மேலைத்தொல்கதி யடைவரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட்செய்த
மாயையின் மகனுமன்றே வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்.

கையிலார் கைகள்பெற்றுங் காலிலார் கால்கள்பெற்றும்
மொய்யிலார்மொய்கள்பெற்றும்மூங்கைகள்மொழியைப்பெற்றும்
மையல்சேர் குருடரானோர் வாள்விழி பெற்றுஞ்சென்றார்
ஐயன்மேலுள்ளம் வைத்தார்க் கனையதோ அரிதுமாதோ.

---

உ

கணபதி துணை.

கந்தபுராணம்

# வள்ளியம்மை திருமணப்படலம்

## மூலமும் உரையும்

### காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

### நூல்.

வெள்ளியங்கிரியினோர்சார்விளங்கியகந்தவெற்பி
னள்ளுறுநகரந்தன்னினங்கையோடினிதுமேவு
மள்ளிலைவேற்கைநம்பியம்புவியெயினர்போற்றும்
வள்ளியைவதுவைசெய்தமரபினைவழாதுசொல்வாம்.

இதன்பொருள். வெள்ளியங் கிரியின் ஓர் சார் விளங்கிய கந்தவெற்பின் நள் உறு நகரந்தன்னில் - வெள்ளியாகிய கைலாசகிரியினதோர்பாலில் விளங்குகின்ற கந்தகிரியின் நடுவணே பொருந்துகின்ற திருக்கோயிலில், நங்கையோடு இனிது மேவும் அள் இலை வேல் கை நம்பி - மகடூஉக்களிற் சிறந்த தெய்வயானையாரோடு இனிது வீற்றிருந்தருளுகின்ற கூர்மையாகிய இலைபோலும் வேற்படையை யேந்துந் திருக்கரத்தினையுடைய ஆடூக்களிற் சிறந்த குமாரக்கடவுள், அம் புவி எயினர் போற்றும் வள்ளியை வதுவை செய்த மரபினை வழாது சொல்வாம் - அழகாகிய பூமியிலுள்ள வேட்டுவராற்

காக்கப்பட்ட வள்ளியம்மையாரைத் திருமணஞ் செய்தருளிய சரிதத்தைத் தவறாது சொல்வேம் (யாம்) என்றவாறு:

அம் அல்வழிச்சாரியை. இன்னோரன்னதைச் சாரியையெனக்கொள்ளாது அழகெனப் பொருள்கூறுவாருமுளர். விளங்கிய என்னும் பெயரெச்சத்தில் இன்இடைநிலைகடைகுறைந்தது. அவ்வெச்சவினையின் எச்சப்பெயராகிய கந்தவெற்பு முக்காலத்தினும் ஒத்தியல்பொருளாதலின் நிகழ்காலத்தாற் கூறவேண்டுதலின் அது இயல்பினின் வரூஉங்கால வழுவமைதிச்சொல்லென்க. ஆதியிலே தேவர்கள் கந்தஸ்வாமியைப் பூசிக்கப்பொருந்திய கிரியாதலாற் கந்தகிரியெனப்பட்டதென்பது. உறு- ஈண்டு முக்காலவினைத்தொகை. நங்கை- மகடூஉவைச் சிறப்பிக்கும்பெயராதலானும் நம்பி ஆடூஉவைச் சிறப்பிக்கும்பெயராதலானும் அவரின் மிக்காரும் ஒப்பாரும் எப்புவனத்தினும் இலரெனத் தொனித்தலறிக. மேவும் என்னும் பெயரெச்சம் எதிர்காலவாய்பாட்டதன்றோ? அதனெச்சப்பெயராகிய நம்பி முக்காலத்தினும் ஒத்தியல்பொருளாதலின் அது காலவழுவமைதிச் சொல்லோவெனின், இன்னோரன்ன உம்மிறுதிவினைச்சொல் எதிர்காலச் சொல்லாயிருத்தலன்றி முக்காலத்துக்கும் பொதுச்சொல்லுமாமென்று நச்சினார்க்கினியராதிய தொல்லாசிரியர்க்குக் கருத்தாதலின் அற்றன்றென்க. இலை, ஈண்டு ஆகிருதிப்பண்பைக்குறியாது தகட்டுவடிவப்பண்பையே குறித்தது. கந்தஸ்வாமியுடைய திருக்கரத்துவேல், இருதலையும் அறுமுகமும் முப்பத்திரமுமுடைத்தாதலினென்க. போற்றும் என்பது காலவழுவமைதிக்கிளவியென்பது மரபு முறைமை. அது ஈண்டு முறைமையாகிய ச்ரிதப்பயத்ததாதலிற் பண்பாகுபெயர். யாம் என்னுமெழுவாயெஞ்சியது. (1)

அயன்படைத்திடுமண்டத்துக்காவியாய்ப்
பயன்படைத்தபழம்பதியென்பரா
னயன்படைத்திடுநற்றொண்டைநாட்டினுள்
வியன்படைத்துவிளங்குமேற்பாடியே.

இ - ள். நயன் படைத்திடும் நல் தொண்டை நாட்டினுள் வியன் படைத்து விளங்கும்மேற்பாடி - பெருவளங்களை யுடைத்தாயிருக்கின்ற நன்மையாகிய தொண்டைநாட்டினுள்ளே விரிவுடைத்தாகி விளங்குகின்ற மேற்பாடியென்னு மூரை, அயன் படைத்திடும் அண்டத்துக்கு ஆவியாய் பயன் படைத்த பழம்பதி என்பர் - பிரமதேவராற் சிருட்டிக்கப் பட்ட இவ்வண்டத்துக்கு உயிர்போலாகிப் பலனுடைத்தான பழைமையாகியவூரென்பர் (அறிந்தோர்) எ - று.

ஆலும் ஏயும் அசைமொழிகள். அயன், பிறத்தலில்லாதவன். அ இன்மைப்பொருளைத்தரும் உபசருக்கம். ஜன் பிறத்தலுடையவன் "எட்டேயவ்வும்" என்றவிதிப்படி ஜ யகரமாயது. பிரமதேவருக்கு அயனென்னுநாமம் உபசாரமென்ப. அது அனுபக்ஷத்தைக்குறித்ததே. சம்புபக்ஷத்தைக்குறித்துப் பொருள்சேர் நாமமெனினுமிழுக்காது. இவ்வண்டம் பிருதிவியண்டமாயிர கோடியினுளொன்று. யோனிபேதங்கள் எண்பத்துநான்கு நூறுயிரங்களுள்ளும் மானுடயோனி விசேஷமுடைத்து. அம் மானுடப்பிறப்புப் புவியின்கண்ணது ஆதலினானும், இவ்வண்டத்திலே சுவர்க்கமத்தியபாதாலமென்னுந் திரிலோகங்களி னுள்ளும் ஆன்மாக்கள் மத்தியலோகமாகிய புவியிலே உற்பவித்துச்செய்யும் இருவினைகளுள்ளும் நல்வினையின் பயனாகிய இன்பத்தை மேலேயுள்ள சுவர்க்கலோகத்திலுந் தீவினையின்பயனாகிய துன்பத்தைக் கீழேயுள்ள பாதலலோகத்திலுஞ் சென்று அனுபவித்து அவ்வினை தொலைந்தனான்றே மீண்டும் புவியிலே வந்து தோன்றுதலுண்மையாதலினானும் சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்களும் புவியிலே வந்து சிவனையருசிப்பது உண்மையாதலினானும் புவிவிசேஷமுடைத்து;புவியினுள்ளும்வேதசிவாகமங்கள் வழங்கும் ஆரியதேசம் விசேஷமுடைத்து; அதனுள்ளும் காஞ்சீபுரமாதிய விசேஷதலங்களையுடையதாயும் சான்றோருறையும் இடமென்று ஆன்றோராற் புகழப்பட்டதாயுமுள்ள தொண்டைநாடு விசேஷமுடைத்து; அதனுள்ளுஞ் சுப்பிரமணியப்பெருமான் வள்ளிநாயகியாரோடு களவொழுக்கத்தை உலகத்தின்பொருட்டு

நடித்தருளிய இடமாகிய மேற்பாடியென்னும் ஊர் விசேஷ முடைத்து; ஆதலின் அயன்படைத்திடும் அண்டத்துக்கு ஆவி யாய்ப் பயன்படைத்தவென்றார். நயன் இன்பம் ஈண்டு ஒற்றுமை நயம்பற்றிக் காரணத்தைக் காரியமா உபசரிக்கப்பட்டதென்பது. அறிந்தோர் என்னுஞ்சொல்லெஞ்சியது. மானுடயோனி விசேஷ மென்பதற்குப் பிரமாணம்:—

"அண்டசஞ்சுவேதசங்களுற்பீசஞ்சராயுசத்தோ
டெண்டருநாலெண்பத்துநான்குநூறாயிரத்தாய்
உண்டுபல்யோனியெல்லாமொழித்துமாநுடத்துதித்தல்
கண்டிடிற்கடலைக்கையானீந்தினன்காரியங்காண்."

—சிவஞானசித்தியார்.

தேவர்களும் புவியில் வந்து சிவனை அருச்சிப்பரென்றதற்குப் பிரமாணம்:—

"மானுடப்பிறவிதானும்வகுத்ததுமனவாக்காயத்
தானிடத்தைந்துமாடுமரன்பணிக்காகவன்றோ
வானிடத்தவருமண்மேல்வந்தரன்றனையர்ச்சிப்ப
ரூனெடுத்துழலுமூமரொன்றையுமுணராரந்தோ."

—சிவஞானசித்தியார்.

தொண்டைநாடு விசேஷமுடைத்தென்பதற்குப் பிரமாணம்:—

"மான்றவல்வினைகால்சீக்கும்வளங்கெழுதொண்டைநாடு
சான்றவருடைத்தென்றேதுந்தகுமொழிக்கதிரான்மற்றை
யேன்றசீர்நாட்டின்சீர்த்தியென்னுமீனுளிமையாப்ப
வான்றசெம்பரிதியாயதனையதண்டகநன்னாடு."

—தணிகைப்புராணம்.

சுப்பிரமணியப்பெருமான் களவு ஒழுக்கத்தை உலகத்தின் பொருட்டு நடித்தருளியதென்பதற்குப் பிரமாணம்:—

"கேட்டலுமகிழ்ந்திங்கிருவெனமுனியைக்
கிழமையினிருத்திமுன்புறத்தி
னீட்டிரும்பொருளின்றுறைகளுங்கற்பி
னியற்றுமக்கடியுமண்வழங்கக்

காட்டியகுமரன்களவெனுமின்பக்
கடற்றுறைவழக்கமுமுலகி
னூட்டியநுதலுங்கருத்தொடுந்தமியே
நண்ணினன்வள்ளிமால்விலங்கல்."

—தணிகைப்புராணம். (2)

**ஆயதொல்லையணிநகர்ஞாங்கரின்**
**மீயுயர்ந்ததொர்வெற்புநிற்கின்றதாற்**
**பாயதெண்கடற்பாரளவிட்டிடு**
**மாயவன்றன்வடிவெனநீண்டதே.**

**இ-ள்.** ஆய தொல்லை அணி நகர் ஞாங்கரில் - அப் பழமையாகிய அழகையுடையவூரின்பாங்கரில், மீ உயர்ந்த தொர் வெற்பு நிற்கின்றது - வானமளவிலுயர்ந்ததோர் கிரி நிற்கின்றது, பாய தெள் கடல் பார் அளவிட்டிடு மாயவன் தன் வடிவு என நீண்டது - பரந்த தெள்ளிய கடலையுடைய நிலவுலகை (ஓரடியால்) அளந்ததிருமாலதுவடிவுபோல அதுநீண்டிருப்பது. எ - று.

ஆய, அகரச்சுட்டின்மரூஉ. வெளியெல்லாம் ஆகாயமேயாயி னும் மேலென்னும் பண்புப்பொருட்டாகிய மீ ஆகுபெயராய் மேலிடமென்னும்பொருட்டாய் வானத்தையுணர்த்தலின் கட் பொறிக்கு நீலநிறம்போற்றோன்றும் மேல்வெளியையே நுதலிற் றென்பது. மீ ஆகுபெயர். ஆல் அசைமொழி. பாரளந்தமாயவன் வடிவு காசிபன்பால் வாமனனா யவதரித்துவந்து மாவலியால் மூவடிமண்ணிரந்து மண்முழுவதையும் ஓரடியாலளத்தற்குக் கருதி நீண்டயர்ந்தவடிவு. ஏ ஈற்றசைமொழி. மாயவனது நெடிய வடிவு அக்கிரிக்கு உவமையாக்கப்பட்டதாதலின் உவமையணி.(3)

**அரவுந்திங்களுமாறுமெல்லாரமுங்**
**குரவுங்கொன்றையுங்கூவிளமும்மிசை**
**விரவுந்தன்மையின்வெற்புவிண்ணோரெலாம்**
**பரவுங்கண்ணுதற்பண்ணவன்போன்றதால்.**

இ - ள். வெற்பு - அக்கிரி, அரவும் திங்களும் ஆறும் மெல் ஆரமும் குரவும் கொன்றையும் கூவிளமும் மிசைவிரவுந் தன்மையின் - பாம்பும் மதியும் நதியும் மென்மையாகிய ஆத்தியும் குராவும் கொன்றையும் வில்வமும் தன்மீது கலந்திருக்கப் பெறுந்தன்மையினாலே, விண்ணோர் எலாம் பரவும் கண்ணுதல் பண்ணவன்போன்றது - வானவர் யாவராலுந் துதிக்கப்படுகின்ற கண்ணுதலையுடைய பரமசிவன் போன்றது. எ - று.

அரா குராவென்பவை "குறியதன்கீழாக் குறுகலுமதனோ டுகரமேற்றலுமியல்புமாந்தூக்கின்" என்றவோத்துரைத்த விதிகளுளொன்றுபெற்றன. உம்மையெண் ஈண்டுதொகைபெறாது வந்தது அதுவும் விதியாதலின். கண்ணுதல் கண்ணையுடைய நெற்றியென விரியும். நுதற்கண்ணெனக்கொண்டு கூட்டிப் பொருளுரைப்பினும் அமையும். அன்மொழித்தொகையெனக் கொண்டு கண்ணுதலாகிய பண்ணவனெனினும் அமையும். ஆல் அசைமொழி. மேல்வருமசைமொழிகளையும் உய்த்துணர்ந்து கொள்க. அரவு முதலியவை தன்மீது கலந்திருக்கப் பெறுந் தன்மையினாலே சிவனை நிகர்தலின். எது உவமையணி. (4)

**வாலிதாகியவானருவித்திர**
**ணீலமேகநிரையொடுதாழ்தலிற்**
**றோலுநூலுந்துயல்வருமார்புடை**
**நாலுமாமுகன்போலுமந்நாகமே.**

இ - ள். அந்நாகம் - அக்கிரி, நீலமேக நிரையொடு வாலிது ஆகிய வான் அருவித் திரள் தாழ்தலின் - நீலநிறமாகிய முகில்வரிசையோடு தூய்மையதாகிய பெரிய அருவித் திரள் (தன்கண்) தாழ்தலினாலே, தோலும் நூலும் துயல்வரு மார்பு உடை மா நாலுமுகன் போலும் - தோலும் முப்புரி நூலுங் (கிடந்) தசையப்பெற்ற மார்பினையுடைய பெருமை

யாகிய சதுர்வதனங்களைக்கொண்ட பிரமதேவர்போலும். எ - று.

வாலிது பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்றாலணையும் பெயர்; வால்பகுதி, இ சாரியை, து விகுதி. தாழ்தல் மேலிருந்து கீழ்வரையுந் தங்குதல். தோல் கிருட்டிணாசினம்; இது உபவீதத்திற் கட்டப்பட்டிருப்பது. பிரமா சதுர்முகனானது தனது ஐந்தலைகளினொன்றாகிய உச்சிச்சென்னி சிவபெருமானை இகழ்ந்தது பற்றி அவருடைய ஆஞ்ஞைப்படி வைரவக்கடவுள் அச்சென்னியை நகத்தாற் கிள்ளிவிட்டது பற்றியென்க. இதற்குப் பிரமாணம் ததீசியுத்தரப்படலத்திற் காண்க. அணி மூன்னையது. (5)

**குமரவேள்குறமங்கையொடிவ்விடை**
**யமருமாலதுகாண்பனென்றாசையாற்**
**றமரவானதிதானணுகுற்றிட**
**நிமிருகின்றதுநீள்கிரியன்னதே.**

இ - ள். நீள்கிரி - அந்நீண்டகிரி, குமர வேள் குறமங்கையொடு இவ்விடை அமரும் - குமாரராகிய சுப்பிரமணியப்பெருமான் குறவர் மகளாகிய வள்ளிநாயகியாரோடு இங்ஙனம் விரும்பியிருப்பார், அது காண்பனென்று - அதனைக் காண்பேனென்று, மால் - விஷ்ணுமூர்த்தியானவர், ஆசையால் - ஆசையினாலே, தமர வான் நதிதான் அணுகுற்றிட நிமிருகின்றது அன்னது - ஒலியையுடைய தேவகங்கைதங்குமிடந் (தனக்குச்) சமீபமாக நீண்டதுபோன்றது. எ - று.

குமரவேள்- இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குமரன் என்றுங் குமாரராதலிற் சிறப்புப்பெயரென்பது விஷ்ணுமூர்த்தி தன் மகளோடு மருகராகிய சுப்பிரமணியப்பெருமானீண்டமர்வாரதுகாண்பனென்றாசையால் நீண்டதுபோன்றதென்க. வானதி - ஆகுபெயர். வானதி தங்குமிடம் கிம்புருடர் விஞ்சையராதியோர் பதத்துக்குமேலுள்ளது. மேல் மாயவன்றன் வடிவென நீண்டதே

என்று கூறி மீண்டு ஈண்டிங்ஙனங் கூறியது புனருத்தியாமோ வெனின், ஆண்டு மாயவன் வடிவுபோல் நீண்டது கிரியென்றும் ஈண்டு மாயவனே ஓர்காரணம்பற்றிநீண்டதுபோன்றது கிரியென்றும் கூறியிருத்தலினுகாவென்பது. நிமிருகின்றது, காலவழுவமைதிச்சொல். அது தொழிற்பெயர். நீள்கிரி குமரவேள் குறமங்கையொடிவ்விடையமரும் அது காண்பனென்று ஆசையால் தமரவானதிதான் அணுகுற்றிடநிமிருகின்றது அன்னது. எனக்கொண்டு, அந்நீண்டகிரியானது (தனது புத்திரராகிய) குமரவேள் (தனது மருமகளாகிய) குறமகளோடு இவ்விடத்து விரும்பியிருக்கும் அதனைக்காண்பலென்று ஆசையினுலே ஒலியையுடைய தேவகங்கைதான் (ஈண்டு) சார்வுற்றிடுதற்கு ஆக (தனது பதத்ததிலே நீளவோடியிருத்தலையொழிந்து அப்பதத்தினின்று கீழ்நோக்கிப் புவியளவாக) நிமிர்கின்றதுபோன்றது என்று பொருள்கூறினுமமையும். கிரியருவியாறு தலைகீழாயோடவிருத்தலுண்மையின் இப்பொருள் சிறந்ததெனினுமிழுக்காது. இப்பொருளில் ஆல் அசைமொழி. உய்த்துணர்க. இச்செய்யுளுக்குப் பொருள்சிறிது பொருத்தமும் பொருத்தமின்மையுமாகப் பலவாறுகூறுவார். அவற்றையெல்லாம் எடுத்தீண்டுரைப்பிற் பெருகும். இவ்விரு பொருட்கும் கவி தானே திருமால் ஆசையால் காண்பனென்று நிமிருகின்றதுபோன்றதென்றும் நிகழாததை நிகழ்ந்ததும் நிகழ்கின்றதுமாகக்கூறி உவமையாக்கினமையின் தற்குறிப்பேற்றவுவமையணி. (6)

## வேறு

**கள்ளிறைத்திடுபூந்தண்டார்க்கடம்பணிகாளைபன்னுட்**
**பிள்ளைமைத்தொழின்மேற்கொண்டுபெட்புடனெழுகும்வண்ண**
**வள்ளியைத்தன்பால்வைத்துவள்ளிவெற்பென்னுநாமம்**
**முள்ளவக்கிரியின்மேன்மையுரைத்திடுமளவிற்ருமோ.**

இ - ள் கள் இறைத்திடு கடம்பு பூ தண் தார் அணி காளை - மதுவையிறைக்கின்ற கடப்பமலராலாகிய குளிர்ந்த மாலையையணிகின்ற குமாரராகிய சுப்பிரமணியப்பெருமான்,

பல் நாள் பிள்ளைமை தொழில் மேற்கொண்டு பெட்பு உடன் ஒழுகும் வண்ணம் - பலநாள்களில் பிள்ளைமைத்தொழிலாகிய களவொழுக்கத்தை மேற்கொண்டு (அவ்வொழுக்கத்துக் குரிய) ஆசையோடு (அவ்வொழுக்கத்) தொழுகும்வண்ணம் வள்ளியை தன் பால் வைத்து வள்ளி வெற்பு என்னு நாமம் உள்ள அக்கிரியின் மேன்மை உரைத்திடும் அளவிற்று ஆமோ - வள்ளிநாயகியாரைத் தன்கண்வைத்து (அதனுலே வள்ளிகிரியென்னும் பெயர்பெற்றுள்ள அக்கிரியினது மேன்மை (எம்மாற்) சொல்லப்படுமளவினையுடைத்தாமோ. எ - று.

காளை- பருவங்குறித்துவந்த ஆகுபெயர். களவொழுக்கத் துக்குரிய பருவம், பதினையாண்டும் பத்துத்திங்களுந்தொட்டுப் பதினுறுட்டைப்பிராயத்துக்கு நான்குநாளல்லது ஐந்துநாளைக்கு முன்னுளளவுமேயென்று தொல்லாசிரியர் கூறுதலின் கள வொழுக்கத்தைப் பிள்ளைமைத்தொழிலென்றார். மேற்கொண்டு என்றதனுலே சுப்பிரமணியப்பெருமான் விருப்புவெறுப்பற்றவ ரென்பதும் உலகத்தின்பொருட்டே அக்களவொழுக்கத்தை நடித்தருளினவரென்பதுந் தொனித்தலுணர்க. எம்மால் என்பது அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. வள்ளிநாயகியாரைத் தன் கண்வைத்ததனுலே வள்ளிவெற்பென்னு நாமம்பெற்றுள்ள கிரி யெனப்பட்டமையிற் பொருட்காரகவேதுவணி. (7)

**செய்யவெண்குன்றிவித்துஞ்சீர்திகழ்கழைவீழ்முத்தும்**
**பையரவினங்களீன்றபருமணித்தொகையுமீண்டிச்**
**சையமதெங்குஞ்சேர்தருரகாகணங்களெல்லாம்**
**வெய்யவனழற்காற்ருதுவீழ்ந்தெனவிளங்குகின்ற.**

இ - ள். செய்ய (குன்றிவித்தும்) வெண் குன்றி வித்தும் சீர் திகழ் கழை வீழ் முத்தும் பை யரவு இனங்கள் ஈன்ற பருமணி தொகையும் ஈண்டி சையது எங்கும் சேர் தல்- செம்மையுடைய குன்றிவித்துக்களும் வெண்மையாகிய

குன்றிவித்துக்களும் அழகுவிளங்குகின்ற வேய்களினின் றுதிர்ந்த முத்துக்களும் படத்தினைக்கொண்ட அராவினங் கள் கக்கிய பருமையாகிய அரதனக்கூட்டமும் நெருங்கி அக்கிரியின்மேலிடமெங்குஞ் சேர்ந்திருத்தல், தாரகா கணங் கள் எல்லாம் வெய்யவன் அழற்கு ஆற்றாது வீழ்ந்து என - விண்மீன் கூட்டமெல்லாம் ஆதித்தனுடைய வெய்யிலி னழலுக்கு ஆற்றாது (தங்கிலைகளினின்றும்) வீழ்ந்திருத்தல் போல, விளங்குகின்ற - (ஆண்டு) விளங்குகின்றன. எ - று.

குன்றிவித்து செய்ய என்பதனோடுங் கூட்டப்பட்டது. செய்யவெண்குன்றிவித்தும் என்றதற்கு புறத்தே செம்மையை யும் அகத்தே வெண்மையையுமுடைய குன்றிவித்தெனினுமமை யும். சையம்- ஆகுபெயர். வெய்யவனழற்காற்றாது என்றது வெய்யவனது வெய்யிலின் அழலைப் பொறுக்கமாட்டாமல் என்ற வாறு. வீழ்ந்திருத்தல்- வீழ்ந்தெனக்குறைந்துநின்றது. சையம தெங்குஞ்சேர்தலாகிய செய்யவெண்குன்றிவித்துஞ் சீர்திகழ் கழைவீழ்முத்தும் பையரவினங்களீன்ற பருமணித்தொகையு மீண்டி தாரகாகணங்களெல்லாம் வெய்யவனழற்காற்றாது வீழ்ந் திருந்தாற்போல விளங்குகின்றன. என்றுகொண்டு பொருள் கூறினுமமையும். இப்பொருட்கு வீழ்ந்திருந்தாலெனற்பாலது வீழ்ந்தெனக்குறைந்துநின்றதென்க. கிரியிலுள்ள குன்றிவித்து ஆதியவற்றுக்கும் விண்மீன்களுக்கும் ஒளியினாலும் நிறத்தினாலும் வடிவினாலு மொப்புமைகூறலாற் பண்புவமையணி. வெய்யவ னழற்காற்றாது வீழ்ந்து என்றது தற்குறிப்பேற்றவணி. (8)

கானுறுதளவம்பூத்தகாட்சியாற்கழைகளெல்லாந்
தூநகைமுத்தமீன்றதோற்றத்தாற்பொதும்பர்தன்னிற்
றேனமர்தொடையறுங்குஞ்செய்கையாற்சிலம்பின்சாரன்
மீனமுமதியும்பூத்தவிண்ணெனவிளங்கிற்றம்மா.

இ - ள். கான் உறு தளவம் பூத்த காட்சியால் - நறுமணம்மிகுந்தமுல்லைகள் மலர்ந்திருக்கின்ற காட்சியாலும்,

கழைகள் எல்லாம் தூநகை முத்தம் ஈன்றதோற்றத்தால் - வேய்களெல்லாம் தூய்மையாகிய ஒளியினையுடைய முத்துக்களை ஈன்றிருக்கின்ற தோற்றத்தாலும், பொதும்பர் தன்னில் தேன் அமர் தொடையல் தூங்கும் செய்கையால் - சோலையில் தேன்பொருந்திய கூண்டு தூங்குஞ்செய்கையாலும், சிலம்பின் சாரல் மீனமும் மதியும் பூத்த விண் என விளங்கிற்று - அக்கிரியினது சாரல் உடுக்களும் உடுவின் வேந்தும்பூத்த ஆகாயத்தைப்போல விளங்குகின்றது. எ-று.

இச்செய்யுளிலுள்ள பெயரெச்சக்கிளவிகளில் முன்னைய பிற பெயரும் பின்னையது இடப்பெயருங் கொண்டன. காட்சி தோற்றம் செய்கை இம்மூன்றும் ஈண்டுத்தன்மைப்பொருள். பொதும்பர் ஆகுபெயர். தொடையல் ஈண்டுத்தேன்கூடு; தேனீயாற்றொடுக்கப்பட்டதென்பதுபொருள். தொடு பகுதி ஐ செயப்படுபொருள்விகுதி அல் சாரியை. விளங்கிற்று- இயல்பின்வந்த காலவழுவமைதி. மேல்வருங் காலவழுவமைதிச் சொற்களையுமுய்த்துணர்க. தளவம்பூத்த காட்சியாதியவற்றால் மீனமும் மதியும்பூத்த விண்ணென விளங்கிற்றென்றமையின் இது ஏதுவுவமையணி. (9)

**கூட்டளிமுரலுநீலக்குண்டுநீர்ச்சுனைகள்யாண்டுங்**
**காட்டியபிறங்கல்யாருங்காணொணுவள்ளலீண்டே**
**வேட்டுவர்சிறுமிக்காகமேவுதல்காண்பனென்னு**
**நாட்டமெய்ம்முழுதும்பெற்றுநண்ணியதன்மைபோலாம்.**

இ-ள். கூட்டம் அளி முரலும்நீலக் குண்டு நீர்ச்சுனைகள் யாண்டும் காட்டிய பிறங்கல் - கூட்டமாகிய வண்டுகளொலிக்கப்பெற்ற காவிப்போதுகளையுடைய ஆழமாகிய நீரினைக்கொண்ட வாவிகளைத் (தன்மீது) எவ்விடத்துங் காட்டுகின்ற அக்கிரி, யாரும் காணொணு வள்ளல் வேட்டுவர் சிறுமிக்கு ஆக ஈண்டே மேவுதல் காண்பன் என்னு - யாவராலுங் காணக்கூடாத வள்ளலாகிய சுப்பிரமணியப்பெருமான்

குறவரது மகளாகிய வள்ளிநாயகியாருக்காக இவ்விடத்தே சார்ந்திருத்தலைக் காண்பேனென்று, மெய் முழுதும் நாட்டம் பெற்று நண்ணிய தன்மை போல் ஆம் - (தனது) தேக முழுதும் விழிகளைப் பெற்றிருக்கின்ற தன்மைபோலாகும். எ - று.

கூட்டம் இறுதிகுறைந்துநின்றது. கூட்டளி என்றதற்கு இசையைக் கூட்டுகின்ற வண்டு எனினுமமையும். கூடு அளி கூட்டளி என விரிந்ததெனினுமமையும். யாருங்காணுறு வள்ளல் என்றது அன்பரல்லாத மற்றுமெவ்வகைப்பட்டவர்களாலுங் காணக்கூடாத வள்ளல் என்றபடி. வேட்டுவர்சிறுமிக்காக என்றது வள்ளிநாயகியாருக்கு அருள்செய்தற்காக என்றவாறு. அஃதாவது வள்ளிநாயகியார் முன்னைச்செய்த தவத்தாலே தாமியற்றியருளுங் களவொழுக்கவின்பத்தை அவர் பெறுதற்கென்பது. ஈண்டு வேட்டுவர்சிறுமிக்காகவென்றது மேல் சுப்பிரமணியப்பெருமான் களவொழுக்கத்யைுலகமடைய நடித்தருளிய தென்றதோடு மாறுகாதோவெனின், வள்ளிநாயகியாருக்கு அவ்வின்பத்தையருள்புரியவே அவ்வாயிலாக உலகமதனையடைதலினுகாதென்பது. நீலப்பூக்களையுடைய சுனைகளை யாண்டுங் காட்டிய பிறங்கலெனவே நாட்டத்திற்கொப்பு நீலப்பூக்களோ சுனைகளோவெனின், நாட்டத்திற்கு நீலப்பூக்களை யாண்டு முவமைகூறுதலின் நீலப்பூக்களே என்றல் சிறந்ததென்பது. (10)

**விண்ணுயர்பிறங்கன்மீதுவிரிகின்றசுனைகண்மிக்குத்**
**துண்ணெனவிளங்கும்பெற்றிசூரியன்முதலோர்காண**
**மண்ணெனுமடந்தையாங்கோர்மதலையில்வரம்பிலாந**
**கண்ணடிநிரைத்துவைத்தகாட்சிபோன்றிருந்தமாதோ.**

இ - ள். விண் உயர் பிறங்கல்மீது விரிகின்ற சுனைகள் மிக்கு துண்ணென விளங்கும் பெற்றி - ஆகாயமளவிலுயர்ந்த அக்கிரியின்மீது பரந்தசுனைகள் மிகுந்து துண்ணென்று விளங்கிக்கொண்டிருக்கின்ற தன்மை, மண் எனும் மடந்தை

ஆங்கு ஓர் மதலையில் சூரியன் முதலோர் காண வரம்பு இலாத கண்ணடி நிரைத்து வைத்த காட்சி போன்று இருந்த - பூமியாகிய பெண் அங்ஙனமோர் தூணிலே ஆதித்தன்முதலாகிய வான்பதவாசிகள் பார்த்தற்கு அளவையில்லாத கண்ணாடிகளை நிரைத்துவைத்த தன்மைபோன்றிருக்கின்றன. எ - று.

துண்ணென விரைவுக்குறிப்பு; அது ஈண்டுப்பார்ப்பவருற்று நோக்காதிருக்கவும் அவர்க்குப் புலப்பட விளங்கியிருத்தல். கண்டவர் பரப்பு ஆதியவற்றை நோக்கி நடுக்கமுற என்று பொருள் கூறி அச்சக்குறிப்பெனினுமமையும். (11)

**ஒள்ளிணர்க்கணியின்கொம்பருலவியேயசோகில்வாவி**
**வெள்ளிலிற்பாய்ந்துமந்திவியன்கடுவுறைப்பமீள்வ**
**வள்ளியரிடத்துச்சென்றோர்மானவப்பண்பிலோர்பாற்**
**போள்ளெனவிரப்பான்புக்குப்புலம்பொடுமீண்டவாபோல்.**

இ - ள். வள்ளியர் இடத்துச் சென்றோர் - கொடையாளரிடத்து (யாசித்தற் பொருட்டுமுற்) சென்ற ஆதுலர், மான அப் பண்பு இலோர் பால் இரப்பான் பொள்ளெனப் புக்குப் புலம்பொடு மீண்டவா போல் - பெருமையையுடைய அக்கொடைக்குணம் இல்லாத கீழோரிடத்து (அவ்வாறு) யாசித்தற்பொருட்டு விரைவிற்சென்றுபுக்கு (அவர் கடிதலினாலே) மனவருத்தத்தோடு திரும்பும்வாறுபோல, மந்தி - குரங்குகள், ஒள் உணர்க் கணியின் கொம்பர் உலவி அசோகில் வாவி வெள்ளிலில் பாய்ந்து வியன் கடு உறைப்ப மீள்வ - (முன்னர்) ஒள்ளிய பூங்கொத்துக்களையுடைய வேங்கைமரங்களின் சினைகளிலுலாவி அசோகமரங்களிற் றாவிப் (பின்னர்) விளாமரங்களிற் பாய்ந்து அவற்றிலுள்ள பெரியமுட்களானவை தைத்தலுறைப்பத் திரும்புவன. எ - று.

ஒள்ளினர்க்கணி, ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்துவந்த் வழக்கியல். கொம்பு-கொம்ப ரெனநின்ற இறுதிப்போலி. உலாவிவாவிபாய்ந்து என்னும் செய்தென்வாய்பாட்டுத் தெரிநிலைவினையெச்சங்கள் ஒன்றை யொன்றுகொள்ள ஈற்றது மீள்வ என்னு முற்றுவினையோடு முடிந்தது. வாவுதல் பாய்தல் இரண்டும் ஒருபொருளெனினும் ஈண்டுப் பாய்தல் விரைந்து தாவுதற்பொருட்டு. கடு ஆகுபெயர். உறைத்தல் வருத்தல். வள்ளியர் என்றது உத்தம மத்திமக் கொடையாளரை; வள் பகுதி, இ சாரியை, அர் விகுதி. மான வப்பண்பு என்றதற்கு மனிதர்க்குரிய பண்பு எனினுமமையும். பொள்ளென- விரைவுக்குறிப்புப்பொருளைத் தருவதோரிடைச் சொல். "பொள்ளெனவாங்கேபுறம்வேரார்" என்றதிற்போல. ஒடு - அடைமொழிப்பொருளில்வந்தது. ஏகாரம் இசைநிறை. உத்தம மத்திமக் கொடையாளரிடத்து இரத்தற்குச் சென்றவர் அவர்கள்தம்மைக்கண்டவுடன் காட்டும் முகமலர்ச்சியையுஞ் சொல்லும் இன்சொல்லையும் முறையேகுறிப்பறிந்தீதலும் கேட்டதை இல்லையென்னாது ஈதலுமாகிய செயல்களையும்பெற்று களிப்படைந்து அக்களிப்போடு கூடிய உள்ளக்கிளர்ச்சியினாலே விரைந்து அப்பண்பில்லாத கீழோரிடத்து அவ்வாறிரப்பான் சென்று அவர் கடியவருத்தத்தோடு திரும்புமாறுபோலக் குரங்குகள் உலாவத்தக்கவாகிய வேங்கைமரங்களின் சிறந்த கொம்பர்களிலுலாவி எளிதே வாவித் திரிதற்குத் தக்கவாகிய அசோகமரங்களில் வாவிக்களிப்படைந்து அக்களிப்போடு கூடிய உள்ளக்கிளர்ச்சியினாலே விளாமரங்களில் விரைந்து பாய்ந்து அவற்றிலுள்ள முட்கள் தைத்தலால் வருத்தமுற மீள்வன என்றபடி. (12)

**தொகையுறுகுலைச்செங்காந்தடுடுப்பெடுத்தமருஞ்சூழ்விற்**
**சிகையுறுதோகைமஞ்ஞைசெறிந்துலாவுற்றதன்மை**
**யகையுறுகழைகொன்றுண்டவாரழல்சிதறவாங்கே**
**புகையுறுகின்றதன்மைபோலவேபொலிந்ததம்மா.**

இ - ள். தொகை உறு குலைச் செங்காந்தள் துடுப்பு எடுத்து அமரும் சூழ்வில் - கூட்டமுற்ற பூங்கொத்துக்களை

யுடைய செங்காந்தள்கள் பூக்களையெடுத்துப் பொருந்துஞ் சூழலில், சிகை உறு தோகை மஞ்ஞை செறிந்து உலாவுற்ற தன்மை - கிரணம்பொருந்திய கலாபத்தையுடைய மயில்கள் செறிந்து உலாவுகின்றதன்மை, அகை உறு கழை கொன்று உண்ட ஆர் அழல் சிதற - (காற்றால்) ஒன்றோடொன்று அடிதலுற்ற மூங்கில்களை (அவற்றுற்றோன்றி) எரித்துண்ட நிறைந்த அக்கினி சிதற, ஆங்கே புகை உறுகின்ற தன்மை போலவே பொலிந்தது - அங்ஙனமே புகை பொருந்துகின்ற தன்மைபோலவே பொலிந்திருந்தது. எ - று.

தொகை ஈண்டு ஐவிகுதிபெற்ற தொழிற்பெயர் செய்துடுப்புப்போறலின் பூவைத்துடுப்பென்றார். இது உவமவாகு பெயர். அகை முதனிலைத்தொழிற்பெயர். ஏகாரமிரண்டனுள் முன்னையது பிரிநிலையும் பின்னையது தேற்றமுமாமென்க. (13)

**கண்டுதங்கேளிர்தம்மைக்கைகொடுபுல்லியில்லங்**
**கொண்டுசெல்பான்மையுன்னிவிலக்குறுகொள்கைத்தென்ன**
**விண்டொடர்செலவிற்றுகும்வெஞ்சுடர்க்கதிரைவெற்பிற்**
**றண்டலைகணியின்கொம்பாற்றழீஇக்கொடுதடுக்கலுற்ற.**

இ - ள். தம் கேளிர் தம்மைக் கண்டு கைகொடு புல்லி இல்லம் கொண்டு செல் பான்மை உன்னி விலக்குறு கொள்கைத்து என்ன - (கிரகஸ்தர் வழியிற் செல்லும்) தமதுறவினரைக்கண்டு கையினாற்றழுவி (அவர்க்கு உண்டி முதலிய உபசாரஞ் செய்யவேண்டி) அவரைத் தங்கிரகத்துக்குக் கொண்டுசெல்லுந் தன்மையைக் கருதி அவரது செல்லுகையைத் தடுக்கின்ற தன்மைத்தென்று சொல்ல, வெற்பின் தண்டலை - அக்கிரியின்கணுள்ளசோலை, விண் தொடர் செலவிற்று ஆகும் வெம் சுடர்க் கதிரை - வானிற்செல்லுஞ் செலவினை உடைத்தாகிய வெம்மையாகிய சுடரினையுடைய சூரியனை, கணியின் கொம்பால் தழீஇக்கொடு தடுக்கல்

உற்ற - வேங்கைமரத்தின் கொம்பராலே தழுவிக்கொண்டு தடுத்தல்செய்கின்றது. எ - று.

கேளிர் என்றதில் கேள் பகுதி, இ சாரியை, ர் விகுதி. கொடு- கொண்டு என்னும் மூன்ரும்வேற்றுமைச் சொல்லுருபு இடைக்குறையாய் நின்றது. உற்றது என்பது உற்ற என ஈறு கெட்டு நின்றது. ஒருமை பன்மைமயக்கமெனினு மமையும். தழீஇக்கொடுதடுக்கலுற்ற என்பது தற்குறிப்பேற்றவணி. கண்டு கொள்கைத்தென்ன என்றதிலுவமையணி தொனிக்கின்றது. ()

**நிறையழிகடமால்யானைநெடுவரைச்சிகரம்பாய்ந்து**
**விறலொடுமுழங்கவாங்கோர்விடரளைமடங்கல்கேளாக்**
**கறுவுகொள்சினத்தினார்க்குங்கம்பலைகனகனெற்றுந்**
**தறியிடையிருந்தசீயத்தழங்குரலென்னலாமால்.**

இ - ள். நிறை அழி கடம் மால் யானை நெடு வரைச் சிகரம் பாய்ந்து விறலொடு முழங்க - நிறையழிந்த மதமயக்கங்களையுடைய யானை அந்நெடியமலைச் சிகரத்திற்பாய்ந்து வலிமையோடு சத்திக்க, ஆங்கு ஓர் விடர் அளை மடங்கல் கேளாக் கறுவு கொள் சினத்தின் ஆர்க்கும் கம்பலை - அங்கே யோர் மலைப்பிளப்புப்போலுங் குகையினுளிருக்குஞ் சிங்கம் அச்சத்தத்தைக் கேட்டுக் கறுவுதல்கொண்ட சினத்தோடு கெற்சிக்குஞ்சத்தம், கனகன் எற்றும் தறியிடை இருந்த சீயம் தழங்கு குரல் என்னலாம் - (தன் மகன் பிரகலாதனை னது சொல்லாலெழுந்த கோபத்தால்) இரணியன் எற்ற வெடித்த தூணினுட்டோன்றியிருந்த நாரசிங்கத்தினது முழங்கும் முழக்கம் என்று சொல்லலாம். எ - று.

நிறையழிவு தான் ஒழுகுநெறி தவறுதல். நிறையழியானை என இயையும். நிறையழிதல் மதமயக்கங்களானென்பது. இரணியனடிக்க வெடித்ததூண் உவமையாதலின் விடரளை என்றதற்குப் பிளப்பையொத்த குகையென்ரும். பண்புத்தொகை

யாகக் கொள்ளினுமாம். கறுவுதல் சினக்குறிப்பினென்று. தழங்கு குரலெனற்பாலது தழங்குரலெனத் தொகுக்கும்வழித் தொகுத்தது. இதிலுமுவமையணி தொனிக்கின்றது. (15)

**பறையடிப்பதனுற்சேணிற்பயன்விரிப்பார்போன்மாரு**
**யறையடிப்பாந்தளாப்பவகலிருவிசும்பேருர்ப்பக்**
**கறையடித்தொகுதியார்ப்பக்கடுந்திறலரிமானுர்ப்பச்**
**சிறையடிக்கொண்டுசிம்புளார்த்திடத்திங்கள்செல்லும்.**

**இ - ள்.** பறை அடிப்பதனுல் சேணில் பயன் விரிப் பார்போல் - பறையடிப்பதனுலே தூரத்திலே குறித்தபயனை விரிப்பார்போல, மாருய் அடி அறை பாந்தள் (தொகுதி) ஆர்ப்ப -(உதயஞ்செய்கின்ற தன்னைக்கண்டு) மாருகி அக்கிரி யினது அடிமுழைஞ்சின்கணுள்ள அராக்கூட்டமாம் ஆரவா ரிக்க, (மாருய்) அகல் இரு விசும்பு ஏறு (தொகுதி) ஆர்ப்ப - (அவ்வொலியைக்கேட்டு) மாருகி யகன்ற பெரியமேகத்தின்க ணுள்ள இடிக்கூட்டமாரவாரிக்க, (மாருய்) கறையடிதொகுதி ஆர்ப்ப -(அவ்வொலியைக்கேட்டு) மாருகி யானைக்கூட்டம் ஆரவாரிக்க,(மாருய்) கடும்திறல்அரிமான் (தொகுதி) ஆர்ப்ப- (அவ்வொலியைக்கேட்டு) மாருகிக் கடுமையாகிய திறலினை யுடைய சிங்கக்கூட்டம் ஆரவாரிக்க, (மாருய்) சிம்புள் (தொகுதி) சிறை அடிகொண்டு ஆர்த்திட -(அவ்வொலி யைக்கேட்டு) மாருகிச் சிம்புட்பறவைக்கூட்டஞ் சிறையடித் தல் கொண்டு ஆரவாரிக்க, திங்கள் செல்லும் - (எஞ்ஞான் றும்) சந்திரன் ஆண்டுச்செல்லும். எ - று.

பறையடித்தலாலே தூரத்திலுள்ளார்க்குக் குறித்தபயனை விரிப்பார்போலச் சந்திரோதயத்தை அதன்மீது பகையுற்ற அராக்களின் ஆரவாரமும், அராக்களின் அப்பகையொலியை இடிகளின் ஆரவாரமும், அவ்வாறு நிகழும்வ்விடிகளினெலியை யானைகளினுரவாரமும், அவ்வாறு நிகழும் அவ்யானைகளினெலி யைச் சிங்கங்களினுரவாரமும், அவ்வாறு நிகழுமச் சிங்கங்களி

ளுலியைச் சிம்புள்களின் ஆரவாரமும், ஆரத்திலுள்ளாரும் அறியவிரிப்பதென்பது. ஆரத்திலுள்ளார்க்குப் பறையால் விரிக்கும்பயன் கொடை வெற்றி காவல் முதலியன. பறையடிப் பதனுற் சேணிற்பயன் விரிப்பார்போல் என்றதற்கு ஆரத்தே பறையடித்தலாலே குறிக்கும் விஞ்ஞாபனப்பயனை (ஒன்றை யொன்று தொடர்ந்த வீடுகளையுடைய ஊரில் முறையே ஒருவர்க் கொருவராக) விரித்துரைப்பார்போல என்று பொருள்கூறி மேல், அடிமுழையினுள்ள அராக்களிளுலியைக்கேட்டு அதற்கு மேலிடத்துள்ள இடிகளொலிக்க, அவ்விடிகளின் ஒலியைக்கேட்டு அதற்குமேலிடத்துள்ள யானைகளொலிக்க, அவ்யானைகளின் ஒலி யைக்கேட்டு அதற்குமேலிடத்துள்ள சிங்கங்களொலிக்க, அச்சிங் கங்களின் ஒலியைக்கேட்டு அதற்குமேலிடத்துள்ள சிம்புள்கள் ஒலிக்க என்று இயைப்பினுமொருவாறமையும். (16)

இன்னபல்வளமைசான்ற கிரிதனிலெயினரீண்டி
மன்னியதாங்கோர்சீறூர்வதனமாறுடையவள்ளல்
பின்னரேதன்பான்மேவப்பெருந்தவந்தன்னையாற்றிப்
பொன்னகரிருந்தவாபோற்புன்மையற்றிருந்ததம்மா.

இ-ள். இன்ன பல் வளமை சான்ற கிரிதனில் - இத் தன்மையபலவளங்கள் நிறைந்த அக்கிரியில், எயினர் ஈண்டி மன்னியது ஓர் சீறூர் - குறவர்கள் நெருங்கிச் சேர்ந்திருப்ப தாகிய ஓர் சிற்றூர், ஆறு வதனம் உடைய வள்ளல் பின்னரே தன்பால் மேவ பெரும் தவந்தன்னை ஆற்றி பொன் நகர் இருந்தவர்போல் புன்மை அற்று இருந்தது - ஆறுதிருவத னங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் பின்னரே தன் கட்சாரப் பெருமையாகிய தவத்தை இயற்றிக்கொண்டு (தேவர்களது) பொன்னகரமாகிய அமராவதியிருந்தவாறு போல எளிமையற்றிருக்கின்றது. எ-று.

ஆங்கு - அசைநிலை. வள்ளல் என்றது சுப்பிரமணியப் பெரு மான் அன்பர்க்குவேண்டிய வேண்டியாங்கு அருளும் அருட்குண

முடையரென்பதைக் குறிக்கின்றது. தேவர்களதும் குறவர்களதும் தவத்தை அவர்களது உறைவிடங்களி லேற்றப்பட்டது. இருந்தவாறு என்பது இருந்தவா எனக்குறைந்தது. அம்மா சண்டு வியப்புப்பொருளைத் தந்தது. (17)

ஆயதோர்குறிச்சிதன்னிலமர்தருங்கிராதர்க்கெல்லா
நாயகனுகம்பூண்டுள்ளோனுமவேனம்பியெனபோன்
மாயிருந்தவமுன்செய்தோன்மைந்தர்கள்சிலரைத்தந்து
சேயிழைமகட்பேறுன்னித்தெய்வதம்பராவியுற்றான்.

இ-ள். ஆயது குறிச்சிதன்னில் அமர்தரும் கிராதர்க்கு எல்லாம் நாயகன் - அச்சிற்றூரிலிருக்கின்ற குறவர்களுக்கெல்லாந்தலைவன், நுகம்பூண்டுள்ளோன் - அரசென்னுஞ் சகடத்தினது நுகத்தைப் பூண்டிருப்பவன், நாம வேல்நம்பி என்போன் - அச்சத்தைத்தருகின்ற வேலைத்தரித்த நம்பி யென்னும் இயற்பெயருடையவன், மா இரும் தவம் முன் செய்தோன் - பெருமையாகிய தவத்தை முற்பிறப்பிற் செய்தவன், மைந்தர்கள் சிலரை தந்து சேயிழை மகள்பேறு உன்னி தெய்வதம் பராவி உற்றான் - அவன் புத்திரர்கள் சிலரைப் பெற்றுச் செம்மையாகிய ஆபரணத்தையுடைய புத்திரிப் பேற்றைக்கருதிக் கடவுளைத் துதித்திருந்தான். எ - று.

ஆயது அகரச்சுட்டின்மரூஉ; அங்ஙனமென்று ஒரு சொல் வருவித்து ஆகியதானவென்று பொருள்கூறினுமமையும். ஓர்- அசைமொழி. நுகம்பூண்டுள்ளோன் எனவே மிக்க பாரமாகிய அரசென்னுஞ் சகடத்தைத்தானே செவ்வேநடத்தும் இறைமாட்சியுடையனென்பது தொனித்தலுணர்க. மா இரும் - ஒரு பொருட்பன்மொழி. இச்செய்யுள் நம்பியுடைய தன்மையை மிகுத்துரைத்தலின் தன்மையணி. (18)

அவ்வரைமருங்குதன்னிலைம்புலனொருங்குசெல்லச்
செவ்விதினடாத்துந்தொன்மைச்சிவமுனியென்னுமேலோ
னெவ்வெவர்தமக்குமெய்தாவீசனையுளத்துட்கொண்டு
சைவநல்விரதம்பூண்டுதவம்புரிந்திருத்தலுற்றான்.

இ-ள். அ வரை மருங்குதன்னில் - அக்கிரியினது பக்கத்திலே, ஐம்புலன் ஒருங்கு செல்ல செவ்விதின் நடாத்தும் தொன்மை சிவமுனி என்னும் மேலோன் - ஐம்புலன்களும் ஒருங்குசெல்லச் செவ்வேநடாத்துகின்ற பழமையாகிய சிவமுனியென்னுமேலவர், எ எவர்தமக்கும் எய்தா ஈசனை உளத்துள்கொண்டு - எவ்வகைப்பட்ட எவர்க்கும் அடைதலில்லாத பரமசிவனை மனத்துட்கொண்டு, நல் சைவ விரதம் பூண்டு-நல்ல சைவவிரதத்தைப் பூண்டு, தவம் புரிந்து இருத்தலுற்றான் - தவம்புரிந்துகொண்டிருந்தார். எ - று.

ஐம்புலன்களாவன: ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என்பன. ஐம்புலனொருங்குசெல்லச் செவ்விதின் நடத்தலாவது ஐம்புலன்களையுந் தத்தம் பொறிவழியே செல்லவிடாது தாமுயல உள்ளம் பதிந்தபொருளிடத்தே அவ்வுள்ளத்தோடு ஒருங்குசெல்ல நடத்தல். ஒருங்குசெல்ல நடாத்தல் என்பது யோகிகளல்லாதாருடைய புலங்கள் அவர்கள்உளத்தைத் தம்வசம் இருத்தல்போலத் தமதுளத்தை அது பதிந்தபொருளினின்று மிழுக்காது ஒடுக்கச் செய்தல்; இது இலக்கணை. எவ்வெவர் தமக்கும் என்றது அன்பரல்லாத எவ்வகை மேம்பாடுடையவர்க்கு மென்றவாறு. (19)

சிறப்புறுபெரியபைங்கட்சிறுதலைச்சிலைக்கும்புல்வாய்
நெறிப்பொடுநிமிர்வுற்றான்றநெடுஞ்செவிக்குறியதோகைப்
பொறிப்படுபுனிதயாக்கைப்புன்மயிர்க்குளப்புமென்கான்
மறிப்பிணையொன்றுகண்டோர்மருளவந்துலாவிற்றங்கண்.

இ - ள். அங்கண் - (அச்சிவமுனிவர் தவம்புரிந்து கொண்டிருக்கின்ற) அவ்விடத்து, சிறப்பு உறு பெரிய பைங்கண் - சிறப்புற்ற பெரிய பசுமையாகிய கண்களையும், சிறு தலை - சிறுத்தலையினையும், சிலைக்கும் புல் வாய் - ஒலிக்கின்ற புல்லியவாயினையும், நெறிப்பொடு நிமிர்வுற்று ஆன்ற நெடும் செவி - நெறிப்புறுதலோடு நிமிர்ந்து அகன்ற நெடிய காதுகளையும், குறிய தோகை - குறியவாலினையும், பொறிப்படு புனிதயாக்கை - புள்ளியுற்றதூய்மையையுடைய உடலினையும், புல் மயிர் குளப்பு மெல் கால் - புல்லியமயிர்களைத்தரித்த குளம்போடுகூடிய மென்மையாகிய கால்களையுமுடைய, மறிப்பிணை ஒன்று - மான்பிணையொன்று, கண்டோர் மருள வந்து உலாவிற்று - கண்டோர் (தனது பேரழகால்) மயங்க வந்து உலாவியது. எ - று.

புல்வாய் என்றதிற் புன்மை சிறுமைப்பொருட்டு. நெறிப்புறுதல் - செவ்வேநிற்றல். புன்மயிரென்றதில் புன்மை மென்மை புன்மயிரக்காலென இயையும். (20)

**போர்த்தொழில்கடந்தவைவெற்புங்கவனருளால்வந்த**
**சீர்த்திடுநவ்விதன்னைச்சிவமுனியென்னுந்தூயோன்**
**பார்த்தலுமிளமைச்செவ்விபடைத்திடும்பிறனிற்கண்ட**
**தூர்த்தனின்மையலெய்திக்காமத்தாற்சுழலலுற்றான்.**

இ - ள். சிவமுனி என்னும் தூயோன் - சிவமுனியென்னுந் தூயவர், போர்தொழில் கடந்த வை வேல் புங்கவன் அருளால் வந்த சீர்த்திடு நவ்வி தன்னை பார்த்தலும் - சமர்த்தொழில்கடந்த கூர்மையாகிய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியப் பெருமானது திருவருளால்வந்த சிறப்புற்ற மான்பிணையைப் பார்த்தலும், இளமை செவ்வி படைத்திடும் பிறன் இல் கண்ட தூர்த்தனின் மையல் எய்தி காமத்தால்

சுழலலுற்றான் - இளமைப்பருவத்து அழகினைப் பெற்ற பிறன் மனையாளைக்கண்ட காமுகன்போல மயக்கமெய்திக் காமாசையினால் (நெஞ்சஞ்) சுழலலுற்றார். எ - று.

இளமைப்பருவத்தோடுகூடிய அழகினைப்பெற்ற பிறன்மனையாளைக்கண்ட தூர்த்தன் தனது ஆசையையவட்குக்கூற முடியாது காமத்தால் நெஞ்சஞ் சுழல்வதுபோலச் சிவமுனியும் அம்மான் பிணையைக்கண்டு ஆசைகொண்டு தமதாசையை அதற்குக்கூறமுடியாது நெஞ்சஞ் சுழலலுற்றாரென்பது. (21)

**ஏமத்தின்வடிவஞ்சான்றவிலங்கெழிற்பிணையின்மாட்டே**
**காமத்தின்வேட்கைவைத்துக்கவலையாயவலமெய்தி**
**மாமத்தமளைபுக்கென்ன மனக்கருத்துடைந்துவேறா**
**யூமத்தம்பயன்றுய்த்தார்போலுன்மத்தனாகியுற்றான்.**

இ - ள். ஏமத்தின் வடிவு சான்ற இலங்கு எழில் பிணையின்மாட்டே - இன்பத்தைத் தருகின்ற உறுப்பு நிறைந்த விளங்குகின்ற அழகினையுடைய அம்மான்பிணையிடத்தே, காமத்தின் வேட்கை வைத்து கவலையாய் அவலம் எய்தி - காமத்தினாசைவைத்து கவலையாகித் துன்பமடைந்து, மத்தம் மா அளை புக்கென்ன மனக்கருத்து உடைந்து வேறாய் - மத்தவாரணம் மலைக்குகையிற் புக்குடைந்தாற்போல உள்ளக்கருத்துடைந்து வேறுபட்டு, ஊமத்தம் பயன் துய்த்தார்போல் உன்மத்தன் ஆகி உற்றான் - ஊமத்தம் பழத்தை மிசைந்தார்போல மயக்கமுடையராகியிருந்தார் (அம்முனிவர்). எ - று.

ஏமத்தின்வடிவு நிறைதலாவது சிறுபருவத்தே அடையாளம் மாத்திரமுடைத்தாய் புணர்ச்சிக்குரிய பருவத்தேவளரும் உறுப்பு முற்றவளர்தல். ஏமத்தின் வடிவுசான்ற என்றதற்கு, இன்பமாகிய வடிவுநிறைந்த (காமஞ்சான்ற என்றபடி) என்று பொருள் கூறினுமமையும். இப்பொருளில் அத்தும் இன்னும் அல்வழிச்

சாரியை என்க. எமம் என்பதன் இறுதிமகரங்கெட்டு விதிஉயிரீ ருகி அத்துச்சாரியையோடுபுணர "அத்தினகரமகரமுனையில்லை" என்றபடி அச்சாரியையி னகரங்கெட்டுப் புணர்ந்தது. மத்தவா ரணம் மலைக்குகையிற்புக்குச் செல்வழி வருவழியறியாது உள்ளே மலையில் முட்டிமுட்டி வருத்தத்தால் நெஞ்சுடைந்தாற்போல அம்மான்பிணையிடத்தே காமமயக்காலுள்ளஞ்சென்று அதனோடு மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சியையாவது அவ்வுள்ளத்தை மீட் கும் வழியையாவது அறியாது மேன்மேலுங் காமமீறி வருத்தத் தால் மனக்கருத்துடைந்தாரென்பது. (22)

**படவரவனையவல்குற்பைந்தொடிநல்லார்தம்பாற்**
**கடவுளர்புணர்ச்சியென்னக்காட்சியினின்பந்துய்த்து**
**விடலருமார்வநீங்கிமெய்யுணர்வெய்தப்பெற்றுத்**
**திடமொடுமுந்துபோலச்சிவமுனியிருந்துநோற்றான்.**

**இ - ள்.** சிவமுனி-அச்சிவமுனிவர், அரவுபட அனைய அல்குல் பைந்தொடி நல்லார் தம்பால் கடவுளர் புணர்ச்சி என்ன காட்சியின் இன்பம் துய்த்து - அராவின் படத்தை நிகர்த்த அல்குலையும் பசுமையாகிய வளையலையுமுடையமக டூஉக்களிடத்துக் கடவுளர்சேர்தல்போல (அம்மான்பிணை யிடத்துப்) பார்வையாலின்பமனுபவித்து, விடல் அரும் ஆர்வம் நீங்கி மெய் உணர்வு எய்தபெற்று - விடுதற்கரிய அக் காம வேட்கை நீங்கி மெய்யறிவு எய்தப்பெற்று, திடமொடு முந்துபோல இருந்து நோற்றான் - மனவுறுதியோடு முன் போல இருந்து தவஞ்செய்தார். எ - று.

ஆரியநூல், அச்சிவமுனிவராய் உற்பவித்தது விஷ்ணுமூர்த்தி யென்றும் அம்மானுயுற்பவித்தது திருமகளென்றுங் கூறுகின் றது. தணிகைப்புராணத்திலும், "மானுகமலர்த்திருமாதவனுகி மரயோனுனுவொளிநாமுற வள்ளியையீன்றவாற்ற ஞானாளுமிவற் றணவேமெனநண்ணி யாங்குத் தாநாளு மிருந்துழல்கின்றனதாவு மான்கள்" என்று கூறப்பட்டிருக்கின்றதென்பது. (23)

**நற்றவன்காட்சிதன்னுனவ்விபாற்கருப்பஞ்சேரத்**
**தெற்றெனவறிதறேற்றிச்செங்கண்மாலுதவும்பாவை**
**மற்றதனிடத்திற்புக்காள்வரைபகவெறிந்தவைவேற்**
**கொற்றவன்முன்னஞ்சொற்றகுறிவழிப்படருநீராள்.**

இ - ள். நல் தவன் காட்சிதன்னுல் நவ்விபால் கருப்பம் சேர - அந்நன்மையாகிய தவத்தினையுடைய சிவமுனிவரது காட்சிப் புணர்ச்சியினுலே அம்மான்பிணையிடத்துக் கருப்பமடைய, செம் கண் மால் உதவும் பாவை தெற்றென அறிதல் தேற்றி - செம்மையாகிய கண்ணையுடைய திருமால் பெற்றபாவைபோலுஞ் சுந்தரிதெற்றெனவறிந்து, வரை பக எறிந்த வை வேல் கொற்றவன் முன்னம் சொற்ற குறி வழி படரும் நீராள் - கிரௌஞ்சகிரி பிளவுபட எறிந்த கூர்மையாகிய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியப் பெருமான் முன்னர்க்கூறியருளிய நெறிவழியே செல்லுந்தன்மையராகி, அதனிடத்தில் புக்காள் - அக்கருப்பத்தின்கட் புகுந்தார். எ - று.

காட்சி ஆகுபெயர். தெற்றென விரைவுக்குறிப்பு; தெளிவாக என்று பொருள் கூறினுமமையும். அறிதல் தேற்றி என்னுஞ் சொற்களொரு சொற்றன்மையுற்று அறிந்து என்னும் பொருள்தந்து நின்றன. மற்று அசைநிலை. கொற்றவன் என்றது எவ்வகைப்பட்ட தேவராதியராலும் வெல்லுதற்கரிய சூரனுதி அவுணரையழித்த வெற்றியுடையவரென்பதைக் குறிக்கின்றது. குறி ஈண்டு நெறி. நீராள் என்னுங் குறிப்புவினைமுற்று வினையெச்சமானது. (24)

**வேறு**

**மானிடத்தின்வருமைந்தன்முந்துநீ**
**மானிடத்தின்வருகென்றவாய்மையான்**
**மானிடத்தின்வயினடைந்தாண்மரு**
**மானிடத்தின்மானுகியமான்மகள்.**

இ - ள். மருமானிடத்தின் மான் ஆகிய மால் மகள் - சிவபெருமானிடத்துள்ள சத்தியுளொன்ருகிய விஷ்ணு மூர்த்தியுடைய மகளாகிய சுந்தரியம்மையார், மானிடத்தின் வரு மைந்தன் முந்து நீ மானிடத்தின் வருகென்ற வாய்மையால் - சிவபெருமானிடத்துத் தோன்றிய குமாரக்கடவுள் முன்னர் நீ மானுடப்பிறவியிற் பிறக்கக்கடவாயென்று திரு வாய் மலர்ந்தருளிய திருவாக்கினலே மானிடத்தின் வயின் அடைந்தாள் - அம்மானிடத்துச் (சிவமுனிவராலடைந்த) கருப்பத்தின்கட் சார்ந்தார். எ - று.

மான் என்பது மஹான் என்னும் வடமொழித்திரிபு. மானுடம் மானிடமெனத்திரிந்தது. வருக என்றதின் ஈற்றகரங் கெட்டது. வயின் வயிறு; ஈண்டு வயிற்றின்கட் கருப்பத்துக்காதலின் ஆகுபெயர். மருமான், கிரீசன் என்னும் ஆரியமொழிப் பொருட்டாகின்றதோர் பெயர். விஷ்ணுவுஞ் சிவபெருமானுக்கு ஓர் சத்தியா இருத்தலை:—

"என்றுமாயனிசைத்தலுமெம்பிரா
னன்றுநீயுநமக்கொருசத்திகா
ணன்றுதாருகத்தந்தணர்பாங்குறச்
சென்றபோழ்தினுஞ்சேயிழையாயினுய்

முன்னைவேதன்முடிந்தனன்போதலு
முன்னொடேவந்துவப்பொடுகூடினோம்
பின்னரிந்தப்பிரமனையுந்தியா
லன்னையாகியளித்தனையல்லையோ"

—மகாசாத்தாப்படலம்.

என்னும் செய்யுள்களானுணர்க. (25)

**அனையகாலையிலாயிடை நீங்கியே**
**புனிதநவ்விபுனமெங்கணுமுலாய்ச்**
**சுனையினீருண்டொர்சூழலின்வைகியே**
**யினியமால்வரையேறிநடந்ததே.**

இ - ள். அனையகாலையில் புனித நவ்வி ஆயிடைநீங்கி - அச்சமயத்தில் அத்தூய்மையாகிய மான்பிணை அவ்விடத்தை நீங்கி, புனம் எங்கணுமுலாய் - புனமெங்கும் உலாவி, சுனையின் நீர் உண்டு - சுனையின்கண் நீர்குடித்து, ஓர் சூழலின் வைகி - ஓர் மரங்களின்சூழ்மையுடைய இடத்திற்றங்கி, இனிய மால் வரை ஏறி நடந்தது - நல்ல பெருமையாகிய வள்ளிமலையிலேறி நடந்தது. எ - று.

அனைய அகரச்சுட்டின்மரூஉ. ஏகாரங்களில் முன்னைய இசைநிறை; பின்னையது ஈற்றசை. (26)

நடந்தநவ்விநலத்தகுவெற்பினி
லிடந்தொறுஞ்செறியேனற்புனமெலாங்
கடந்துபோயதுகாவல்கொள்வேட்டுவர்
மடந்தைமார்கள்வரிவிழியென்னவே.

இ - ள். நடந்த நவ்வி - அங்ஙனம் நடந்த அம்மான்பிணை, நலத்தகு வெற்பினில் இடந்தொறும் செறி ஏனல் புனம் எலாம் - நன்மையுற்ற அக்கிரியிலுள்ள இடந்தோறும் பொருந்திய தினைப்புனமெல்லாவற்றையும், காவல் கொள் வேட்டுவர் மடந்தைமார்கள் வரி விழி என்ன - அப்புனங் காவல்கொள்ளும் வேட்டுவர் புத்திரிகளது செவ்வரிகளையுடைய விழிநோக்கம்போல, கடந்து போயது - கடந்து சென்றது. எ - று.

வேட்டுவப்பெண்கள் மங்கைப்பருவத்தே விவாகஞ் செய்யு முன்னர்ப் புனங்காப்பது வழக்கமாதலின் வேட்டுவர் மடந்தைமார்கள் என்றதற்கு வேட்டுவர் புத்திரிகளென்றும். மடந்தை ஈண்டுப்பருவங்குறியாது பெண்ணென்னும்பொருட்டாகின்றது. புனங்காக்குமகளிர் விழிநோக்கம் புனத்திலுள்ள வளத்தைப் பறவை விலங்குகள் வந்தழிக்கின்றனவோவென்று புனமுழுதுஞ் சென்று கடத்தல்போல நவ்வி கடந்துபோயதென்க. விழி ஆகுபெயர். (27)

பிள்ளையீற்றுப்பிணுவெயின்சேரியி
னுள்ளமாதருளித்தலைக்கோல்கொடு
வள்ளிகீழ்புகுமாமுதல்வெளவியே
பொள்ளல்செய்திடுபுன்புலம்புக்கதே.

இ - ள். பிள்ளை ஈற்று பிணு - பிள்ளையையீனுதலையுடைய அம்மான்பிணையானது, எயின் சேரியின் உள்ள மாதர் - வேட்டுவச்சேரியிலுள்ள மாதர்கள், உளி தலை கோல் கொடு கீழ் புகு மா வள்ளி முதல் வெளவியே பொள்ளல் செய்திடு புல் புலம் புக்கது - உளியைத்தலையிற்கொண்ட கோலைக்கொண்டு (நிலத்தின்) கீழ்ப்புக்க பெரியவள்ளிக்கிழங்கைக் கவர்ந்து துளைத்தல் செய்த புல்லிய புலத்திற்புக்கது. எ - று.

பிள்ளை ஈண்டு மக்கட்பிள்ளை. எயின் வேட்டுவச்சாதி. உளித்தலைக்கோல்-பாரை; நுனி உளிபோறலின் உளியெனப்பட்டது. (28)

தோன்றலுக்குத் துணைவியைத்தொல்பிணை
தான்றரித்துத்தளர்ந்துதளர்ந்துபோய்
மான்றரற்றியுயிர்த் துவயிறுநொந்
தீன்றுவள்ளியிருங்குழியிட்டதால்.

இ - ள். தொல் பிணைதான் தோன்றலுக்கு துணைவியை தரித்து - அப்பெருமையாகிய மான்பிணையானது சுப்பிரமணியப் பெருமானுக்கு மனைவியாராகுபவரை (வயிற்றிற்) றாங்கி, தளர்ந்து தளர்ந்து போய் - தளர்ந்துதளர்ந்துசென்று, வயிறு நொந்து - வயிறுநொந்து, மான்று அரற்றி உயிர்த்து ஈன்று - மயங்கியழுது (வெய்தாக) மூச்சுவிட்டுஈன்று, இரும் வள்ளி குழி இட்டது - பெருமையாகிய வள்ளிக்கிழங்கை யகழ்ந்த குழியின்கண் இட்டது. எ - று.

தோன்றலுக்குத் துணைவியையென்றதில் நான்காவது முறைக் கிளை பொருளாக வேற்றுமை செய்தது. தொல் பழைமை, ஈண்டுப்பெருமை; அது இலக்கணையின்பாற்படும். நொந்து என்ற செய்தென்வாய்பாட்டு வினையெச்சம் ஒற்றுமைபற்றி முதலுடன் முடிந்தது. வள்ளி ஆகுபெயர். (29)

குழைகுறுந்தொடிகோல்வளையேமுதற்
பழையபூண்கள்பலவுடன்றாங்குறுத்
தழைபுனைந்துதனதுணர்வின்றியே
யுழைவயின்வந்துதித்தனளொப்பிலாள்.

இ - ள் ஒப்பிலாள் - தமக்கொப்பில்லாதவராகிய சுந்தரியம்மையார், குழைகுறும் தொடி கோல் வளையே முதல் பழைய பூண்கள் பல உடன்தாங்குறு - குண்டலமுஞ் சிறுத்த தொடியும் கோல்வளையுமுதலாகிய பழைய அணிகள் பலவற்றை உடனே தரித்து, தழை புனைந்து - தழையை (ஆடையாகப்) புனைந்து, தனது உணர்வு இன்றியே உழை வயின் வந்து உதித்தனள் - தனது அறிவில்லாமலே அம்மான் பிணையின்வயிற்றின்கணிருந்துவந்து உற்பவித்தார். எ - று.

குறுமை ஈண்டுச்சிறுமை. தொடி கைவளை. கோல்வளை கோலியவளை; கோலுதல் ஈண்டு விளிம்புகள் வளைவுற்ற வரிவரியாகத்தோன்ற வளைத்தியற்றல். கோலம் என்றதின் இறுதி கெட்டு நின்றதெனக்கொண்டு அழகியவளையென்று பொருள் கூறுவாருமுளர். பழைய பூண்கள் முன்னரே திருமாலுடைய மகளாக இருந்த ஞான்று தரித்திருந்த பூண்கள். உடன் அப்பொழுது. தழைபுனைந்தது இனி வேட்டுவர் மகளாகத் தாம் வளர்தல்பற்றியென்பது. தாம் உற்பவிக்குமுன்னர்ப் பழைய பூண்களைத் தரித்ததும் தழைபுனைந்ததுந் தெய்வத்தன்மையாலென்க. உற்பவிக்கும்போது முன்னுணர்வு இன்மையானது சுப்பிரமணியப் பெருமான்கள்வொழுக்கத்தை அவர் வாயிலாக உலகமடைய நடித்தருளும் அருள்பற்றியென்பது. (30)

கோற்றெடிக்கைக்குழவியை நோக்கியே
யீற்றுமா ன்பிணையெம்மினத்தன்றிது
வேற்றுருக்கொடுமேவியதீண்டெனு
வாற்றவேமருண்டஞ்சியகன்றதே.

இ - ள். ஈற்று மான் பிணை - அவ்வீனுதலையுடைய மான்பிணையானது, கோல்தொடி கை குழவியை நோக்கியே - கோல்வளையையணிந்த கரத்தினையுடைய பிள்ளையைப் பார்த்து, இது எம் இனத்து அன்று - இதுஎம்மினத்ததன்று, ஈண்டு வேற்றுரு கொடு மேவியது எனு - இங்ஙனம்வேற்றுக் கொண்டுவந்தது என்றெண்ணி, ஆற்றவே மருண்டு அஞ்சி அகன்றது - மிகமருண்டு வெருண்டு நீங்கியது. எ - று.

ஈற்று ஈன் பகுதி, து தொழிற்பெயர் விகுதி. பகுதியீற்று ணகரம் வலித்தலாய் முடிந்தது. இனத்ததுஎனச்சாரியைபெற்றே முடிவது விகாரத்தால்அச்சாரியைதொக்கு இனத்துஎனநின்றது.

வேறு

அன்னையெனவீன்றவரிணமருண்டோடியபின்
றன்னிணையிலாததலைவிதனித்தனளாய்க்
கின்னரநல்யாழொலியோகேடில்சீர்ப்பாரதித
னின்னிசையோவென்றயிர்க்கவேங்கியழுதிட்டனளே.

இ - ள். அன்னை என ஈன்ற அரிணம் மருண்டு ஓடிய பின் - தாயென ஈன்ற அம்மான்பிணைமருண்டு ஓடியபின்னர், தன் இணை இலாத தலைவி தனித்தனள் ஆய் - தமக்குநிகரில்லாததலைவியானவர் தனித்தவராகி, கின்னர நல்யாழ் ஒலியோ - கின்னரரதுநல்லவீணையினது ஓசையோ, கேடு இல் சீர் பாரதி தன் இன் இசையோ என்று அயிர்க்க ஏங்கி அழுதிட்டனள் - கெடுதலில்லாத அழகையுடைய சரஸ்வதியினது இனியஇசையோவென்று ஐயமுற ஏங்கியழுதார். எ - று.

எனவென்னும் இடைச்சொலீண்டுப் பெயரோடியைந்து வந்தது. கின்னரர் யாழ் என்பது "சிலவிகாரமாமுயர் திணை" என்றவிதிப்படி நிலைமொழியீற்றுமெய்கெட்டு முடிந்தது. கின்னரமாகிய நல்யாழெனினுமமையும். கேடு, கெடு என்னும்பகுதியோடு நல்லென்னுந்தொழிற்பெயர் விகுதிபுணர்ந்து அவ்விகுதி கெட்டு முதல்நீண்டு முடிந்தது. (32)

அந்தவளவைதனிலாறிரண்டுமொய்ம்புடைய
வெந்தையருளுய்ப்பவெயினர்குலக்கொற்றவனும்
பைந்தொடிநல்லாளும்பரிசனங்கள்பாங்கெய்தச்
செந்தினையின்பைங்கூழ்செறிபுனத்துப்புக்கனரே.

இ-ள். அந்த அளவைதனில் - அப்பொழுது, ஆறு இரண்டு மொய்ம்பு உடைய எந்தை அருள் உய்ப்ப - பன்னிரண்டு திருப்புயங்களையுடைய எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவருள் செலுத்த, எயினர் குலக் கொற்றவனும் பைந்தொடிநல்லாளும்-வேட்டுவர்குலத்துக்கு அரசனும் (அவனுடைய) பசியவளையலையணிந்த மனையாளும், பரிசனங்கள் பாங்கு எய்த செம் தினையின் பைங்கூழ் செறி புனத்து புக்கனர் - ஏவலாளர் பக்கத்திற் சார்ந்துவரச் செம்மையாகிய தினைப்பயிர்செறிந்தபுனத்தின்கண் புக்கார். எ-று.

அந்த என்பது அகரச்சுட்டின்மரூஉ. எந்தை எமது தந்தை; எம் பகுதி; தை முறைப்பொருட்டரும்விகுதி; இது எனது தந்தையென்னும் பொருள் தருமிடத்து மரூஉமொழியென்க. (33)

கொல்லைபுகுந்தகொடிச்சியொடுகானவர்கோ
னல்லைநிகர்குழலாளம்மென்குரல்கேளா
வெல்லையதனிலெழுமொலியங்கேதென்னு
வல்லைதனிலவ்வறும்புனத்தில்வந்தனனே.

இ-ள். கொல்லை புகுந்த கொடிச்சியொடு கானவர் கோன் - (தினைப்புனமாகிய) கொல்லையில் (தன்னோடு) புக்க

(தன் மனையாளாகிய) கொடிச்சியோடு வேட்டுவர்க்கரசனுகிய நம்பியென்பவன், அல்லை நிகர் குழலாள் அம்மென் குரல் கேளா - அந்தகாரத்தையொத்த குந்தளத்தை யுடையராகிய சுந்தரியம்மையாரது அம்மென்மையாகிய அழகைச்சத்தத்தைக் கேட்டு, எல்லையதனில் எழும் ஒலி ஏது என்று - அப்பொழுதில் ஆண்டுத்தோன்றும் ஓசையாதென்று, வல்லைதனில் அ வறும் புனத்தில் வந்தனன் - விரைவிலவ்வெறுமையாகிய புனத்தின்கண் வந்தான். எ - று.

எல்லை அளவு; ஈண்டுப்பொழுதளவு; அது வேட்டுவராசன் புனத்திற்புக்கநேரம். எல்லையதனில் என்றதற்கு அவ்வறும்புனத்தெல்லையில் என்று பொருள்கூறி அங்கு என்பது ஆங்கு என்னும் அசைநிலைமுதற் குறுகியதென்று கொள்ளினுமமையும். (34)

**வந்தான்முதலெடுத்தவள்ளிக்குழியில்வைகு**
**நந்தாவிளக்கனையநங்கைதனைநோக்கி**
**யிந்தாவிஃதோரிளங்குழவியென்றெடுத்துச்**
**சிந்தாகுலந்தீரத்தேவிகையிலீந்தனனே.**

இ - ள். வந்தான் வள்ளி முதல் எடுத்த குழியில் வைகும் நந்தா விளக்கு அனைய நங்கைதனை நோக்கி -(அங்ஙனம்) வந்தவனுகிய நம்பியென்பவன் வள்ளிக்கிழங்கை (அகழ்ந்து) எடுத்த குழியின்கணிருக்கின்ற (என்ஞான்றும்) ஒளிகெடாதமணிவிளக்கை ஒத்த சுந்தரியம்மை யாரைப் பார்த்து, இந்தா இஃதோ ஓர் இளம் குழவி என்று எடுத்து- இவ்விடத்து (வைகிய) இஃதோரிளைய பெண்பிள்ளையென்றெடுத்து, தேவி சிந்தாகுலம் தீர கையில் ஈந்தனன் -(தனது மனக்கவலை தீர்ந்து) தனது மனைவியினுடைய மனக்கவலையுந்தீர அவள் கையிற்கொடுத்தான். எ - று.

வந்தான் தெரிநிலை வினைமுற்றுலணையும்பெயர். நெய்விளக்கெல்லாம் நெய்குறையுமிடத்து ஒளிகெடுமாதலின் ஒருகாலும் ஒளிகெடாத மணிவிளக்கை நந்தாவிளக்கென்றுரொன்பது. இந்தா

என்பது இங்கு என்னுமிடைச்சொற்பொருள்தருமோர் மொழி யென்க; அது அங்குஎன்னும் பொருள்தரும் அந்தா என்னுந் தெலுங்கபாடைநிலத்திருந்து வந்த திசைமொழி நோக்கி அஃ தொப்பத் தமிழ்நிலத்து வழங்குவதென்பது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. சிந்தாகுலந்தீர எடுத்து ஈந்தனனென்று இயைத்துப் பொருள்கூறினுமமையும். (35)

**ஈந்தான்சிலைநிலத்திலிட்டானெழுந்தோங்கிப்**
**பாய்ந்தான்றெழித்தானுவகைப்படுகடலிற்**
**றோய்ந்தான்முறுவலித்தான்றோள்புடைத்தான்றொல்பிறப்பி**
**னாந்தாமியற்றுதவநன்றாங்கொலென்றுரைத்தான்.**

இ - ள். நந்தான் சிலைநிலத்தில் இட்டான் - (அவ் விளங்குழவியைத் தன்தேவிகையிற்) கொடுத்தவனாகிய அவ் வேட்டுவராசனானவன் தனது வில்லைப் (பெருமகிழ்ச்சியினாலே) நிலத்திலிட்டு, எழுந்து ஓங்கி பாய்ந்தான் - (நிலத்தினின்று) மேலெழுந்துயர்ந்து பாய்ந்து, தெழித்தான் - பேரொலிசெய்து, உவகை படுகடலில் தோய்ந்தான் - உள்ளக் களிப்பாகிப் ஒலிக்கின்றகடலில் மூழ்கி, முறுவலித்தான் - சிரித்து, தோள் புடைத்தான் - தோளைத்தட்டி, தொல் பிறப்பில் நாந்தாம் இயற்று தவம் நன்று ஆம் கொல் என்று உரைத்தான் - பழமையாகிய பிறவிகளில் நாமியற்றிய தவம் நன்மையுடைத்தாம் போலுமென்று கூறினான். எ - று.

ஈந்தானென்றதற்கும் வந்தானென்றதற்குரைத்ததுரைக்க. இச்செய்யுளின் இடையிலுள்ள இட்டானென்பது முதலிய உயர் திணை ஆண்பாற்படர்க்கை இறந்தகாலவுடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றெல்லாம் வினையெச்சங்களாயின. தோள்புடைத்தானென்றதற்குத் தோள்பூரித்து என்றுபொருள் கூறினுமமையும். நாம் என்று தன்னையுந் தன்மனையாளையுங்குறித்துப் பன்மையாக் கூறினனென்பது. உவப்பில்வந்த பால்வழுவமைதி யெனினும் ஒக்கும்; முற்றவத்தை வியக்கின்றானாதலின் உயர்வில்வந்த பால்வழுவமைதி யெனினும் ஒக்கும். (36)

கொற்றக்கொடிச்சிகுழவியைத்தன்கைவாங்கி
மற்றப்பொழுதில்வயாவும்வருத்தமுமாய்ப்
பெற்றுக்கொள்வாள்போலப்பேணிப்பெரிதுமகிழ்
வுற்றுக்கனதனத்திலூறுமமிர்தூட்டினளால்.

இ - ள். கொற்றக் கொடிச்சி குழவியை தன் கை வாங்கி - வேட்டுவராஜஸ்திரியாகிய கொடிச்சி யென்பவள் அப்பிள்ளையைத் தனது கரத்தால் வாங்கி, அப்பொழுதில் வயாவும் வருத்தமும் ஆய் பெற்றுக்கொள்வாள் போல பேணி - அச்சமயத்தில் கருப்பநோவும் (அதனாலுண்டாகின்ற) வருத்தமுமுடையளாகிப் பெற்றுக்கொண்டவளைப் போலப்பேணி, பெரிது மகிழ்வு உற்ற-மிகக்களிப்படைந்து, கன தனத்தில் ஊறும் அமிர்து ஊட்டினள் - தனது பாரித்த தனங்களிலூறுகின்றபாலை (அப்பிள்ளைக்கு) ஊட்டினாள். எ - று.

கொற்றம் - உலகத்திலுள்ள யாரையும் ஆணைக்குளடக்கும் வெற்றியையுடைய அரசு. மற்று - அசைநிலை. பெற்றுக்கொள் வாள் ஈண்டு ஒருசொல்லன்று; கொள்வாள் இயல்பினின் வரூஉங் காலவழுவமைதிச்சொல். பேணல் - காத்தல். (37)

வென்றிச்சிலையெடுத்துமேலைப்புனமகன்று
குன்றக்குறவன்குதலைவாய்க்கொம்பினுடன்
மன்றற்றுணைவிதனைவல்லைகொடுசிறூரிற்
சென்றக்கணத்திற்சிறுகுடிலிற்புக்கனனே.

இ - ள். குன்றக்குறவன்-மலைச்சாரலிலுள்ள சிற்றூரில் வாழு மவ்வேட்டுவராசனானவன், வென்றி சிலை எடுத்து - (தான் முன்னிலத்திலிட்ட) வென்றியையுடைய வில்லை யெடுத்து, குதலை வாய் கொம்பின் உடன் மன்றல் துணைவி தனை வல்லை கொடு - மழலைமொழி பேசும் வாயினையுடைய

பூங்கொம்புபோலுமப்பெண்பிள்ளையோடு (தான்) கல்யாணஞ் (செய்துகொண்ட) மனைவியை விரைவிற்கொண்டு, மேலை புனம் அகன்று - அம்முதுபுனத்தைநீங்கி, அக்கணத்தில் சிற்றூரில் சென்று சிறு குடியில் புக்கனன் - அக்கணத்தில் தஞ்சிற்றூரின்கட்சென்று தன் சிறுகுடியிற் புக்கான். எ-று.

குன்றம் ஈண்டு மலைச்சாரலுக்காகி அம்மலைச்சாரலிலுள்ள சிற்றூரையுணர்த்தலின் இருமடியாகுபெயர். குதலைவாய்க்கொம்பு உவமவாகுபெயர். (38)

அண்டரமுதமனையமகட்பெற்றிடலான்
மண்டுபெருமகிழ்வாய்மாத்தாட்கொழுவிடையைக்
கெண்டியொருதன்கிளையோடினிதருந்தித்
தொண்டகமதார்ப்பக்குரவைமுறைதூங்குவித்தான்.

இ - ள். அண்டர் அமுதம் அனைய மகள் பெற்றிடலால் மண்டு பெரு மகிழ்வு ஆய் - தேவர்களது அமுதத்தை நிகர்த்தமகளைப் பெற்றுக்கொள்ளுதலால் (உள்ளத்தில்) மிக்க பெருங்களிப்பாய், மா தாள் கொழு விடையை கெண்டி ஒரு தன் கிளையோடு இனிது அருந்தி - பெரிய தாள்களையுடைய கொழுமையாகிய கடாவைவெட்டிப் (பாகஞ்செய்து) ஒப்பற்ற தனது சுற்றத்தாரோடு இனிது புசித்து, தொண்டகமது ஆர்ப்ப குரவை முறை தூங்குவித்தான் - (தமக்குரிய) குறிஞ்சிப்பறை ஆரவாரிக்கக் குரவைக்கூத்தை முறைமையாக ஆடுவித்தான். எ - று.

அமுதம் பெறுதற்கு அருமையையும் சுவையால் எவற்றினும் மிக்கதும் தன்னையுண்டார்க்கு மரணத்துன்பத்தை யொழிப்பது மாதிய பெருமையையும் உடையதாதலின் பெறுதற்கருமையு முலகத்துள்ளார் யாவரினு மேலாகிய அழகுந் தன்னைச் சார்ந்தவர்க்குப் பேரின்பத்தைக்கொடுத்தலுமாதியவற்றையுடைய அவ்வம்மையாருக்கு உவமையானதென்க. திருமுருகாற்றுப்படையில்

"மாத்தாட் கொழுவிடை" என்றதில் விடை என்னுஞ் சொல்லுக்கு உரையாசிரியர்கள் கடாவென்று பொருளுரைத்திருத்தலின் ஈண்டும் விடை என்றதற்குக் கடாவென்று பொருளுரைத்தாம். கடா என்பது எருமை ஆடு இவற்றின் ஆணுக்குரிய பெயராயிருத்தலின் இவற்றில் யாதோவெனின், ஈண்டு மாத்தாள் என்ற அடையினுல் எருமையாணேயென்பது. குரவைக்கூத்து கைகோத்தாடல்; "குரவைக்கூத்தே கைகோத்தாடல்" என்னுந் திவாகரச் சூத்திரத்தானுணர்க. (39)

**காலையதற்பின்கடவுட்பலிசெலுத்தி**
**வாலரிசிமஞ்சண்மலர்சிந்திமறியறுத்துக்**
**கோலநெடுவேற்குமரன்விழாக்கொண்டாடி**
**வேலனைமுற்கொண்டுவெறியாட்டுநேர்வித்தான்.**

இ - ள். காலை அதன் பின் கடவுள் பலி செலுத்தி - அக்காலைபின்பின்னர்த் தெய்வத்துக்குப் பலியைச்செலுத்தி, வால் அரிசி மஞ்சள் மலர் சிந்தி மறி அறுத்து - வெண்மையாகிய அரிசியையும் மஞ்சளையும் மலரையுந் தூவி ஆட்டுமறியைவெட்டி, கோல நெடு வேல் குமரன் விழா கொண்டாடி - அழகிய நெடிய வேலாயுதத்தைக் கொண்ட அச்சுப்பிரமணியப்பெருமானுக்குக் திருவிழாக்கொண்டாடி, வேலனை முன் கொண்டு வெறியாட்டு நேர்வித்தான் - வெறியாட்டாளனை முற்கொண்டு வெறியாட்டைச் செய்வித்தான் (அவ்வேட்டுவராசன்.) எ - று.

கடவுள் ஈண்டு சுப்பிரமணியப்பெருமான். பலி கடாவினது இரத்தத்தோடு பிசைந்த அரிசியாதிய; "மாத்தாட் கொழுவிடைக் குருதியொடு விரைஇத் தூவெள்ளரிசி சில்பலிச்செய்து பல்பிரப் பிரீஇ" என்பதனுனுணர்க. மறி - ஆட்டுக்குட்டி; ஆடெனினுமொக்கும். வேலைக்கரத்திற்கொண்டு திரிதலால் வேலன் என்று வெறியாட்டாளனுக்குப் பெயரானது என்ருர் நச்சினார்க்கினியார். (40)

இன்னபலவுமியற்றியிருங்குறவர்
மன்னன்மனைவிவடமீன்றனையனையாள்
கன்னிமடமகட்குக்காப்பிட்டுக்கானமயிற்
பொன்னஞ்சிறைபடுத்தபூந்தொட்டிலேற்றினளே.

இ-ள். இன்ன பலவும் இயற்றி - இவைபோல்வன பலவற்றையுஞ்செய்ய, இரும் குறவர் மன்னன் மனைவி வட மீன்றனை அனையாள் - பெருமையாகிய அவ்வேட்டுவர்க்கரச னுடைய மனையாளாகிய (கற்பில்) அருந்ததியை நிகர்த்த கொடிச்சியென்பவள், கன்னி மட மகட்குக் காப்பிட்டு கான மயில் பொன் அம் சிறை படுத்த பூ தொட்டில் ஏற்றினள் - கன்னியாகிய அம்மடமையையுடைய மகளுக்கு (சூர் முதலிய தெய்வங்கள் பேய்களாதியவை தீண்டாதபடி தஞ்சாதிவழக்கப்படி காவல்செய்வதாகிய) காப்பையிட்டுக் கானகத்திலுள்ள மயில்களினது (இடையிடையே) பொன் னிறத்தைக்கொண்ட அழகிய சிறைகளை (அழகுண்டாகச்) செறிக்கப்பட்ட பொலிவாகிய தொட்டிலி லேற்றினள். எ-று.

இயற்றி என்பது இயற்ற என்பதன் திரிபு. கன்னி மடமகள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அவ்வம்மையார் மான் வயிற்றிலிருந்து உற்பவிக்கும்போது குழைகுறுந்தொடி கோல் வளையேமுதற் பழையபூண்கள் பலவற்றைத் தரித்துவந்தமையின் காப்பிட்டு என்றதிற் காப்பு ஆபரணமன்றென்பது. (41)

நாத்தளர்ந்துசோர்ந்துநடுக்கமுற்றுப்பற்கழன்று
மூத்துநரைமுதிர்ந்தமூதாளர்வந்தீண்டிப்
பாத்திபடுவள்ளிப்படுகுழியில்வந்திடலால்
வாய்த்தவிவளுமம்வள்ளியெனக்கூறினரே.

இ-ள். நா தளர்ந்து சோர்ந்து நடுக்கம் உற்று பல் கழன்று மூத்து நரை முதிர்ந்த மூதாளர் வந்து ஈண்டி -

நாக்குத்தளர்ந்து சோர்வுற்று நடுக்கம்பொருந்திப் பற்கள் கழன்று (வயதால்) மூத்துநரைநிறைந்த (அங்கிலத்து) முதியோர்கள் (அவ்வேட்டுவராஜனுடைய இல்லின்கண்) வந்து சார்ந்து, பாத்திபடு வள்ளி படு குழியில் வந்திடலால் வாய்த்த இவள் நாமம் வள்ளி என கூறினர் - பாத்திபட்ட வள்ளியினது (கிழங்கு) உண்டாகிய குழியிலிருந்து (இப் பிள்ளை) வந்ததால் (இவ்வாறு) வாய்த்த இப்பெண்பிள்ளை யின்பெயர் வள்ளியென்று கூறினர்கள். எ - று.

நாத்தளர்தல்-நாமுபற்சியாற் பிறக்கு மெழுத்துக்களாலாகிய சொற்களைச் சொல்லுதற்கு நன்றுகூடாது சோருதல். முதிர்தல் ஈண்டு நிறைதல். நாத்தளர்ந்து சோர்ந்து நடுக்கமுற்றுப் பற் கழன்று மூத்து நரைமுதிர்ந்த மூதாளர் என்றதில் ஒற்றுமை பற்றிச் செய்தென்வாய்பாட்டுச் சினைவினையும் முதல்வினையுஞ் சேர்ந்து முதலுடன் முடிந்தன. முதுமை ஆளர் மூதாளரென்று யது; முதுமையின் இறுதிகெட்டு முதல் நீண்டு புணர்ந்தது. பாத்தி - பாய்ச்சுநீரொருபாலுஞ் செல்லாது நிற்கக்கட்டுஞ் சிறு வரம்புகளையுடையபள்ளம். படுகுழி என்றதற்குக் கிழங்கை எடுத்தகுழியெனினுமமையும். (42)

**தம்மரபிலுள்ளதமராகியமுதுவ**
**ரிம்முறையாலாராய்ந்தியற்பேர்புனைந்துரைப்பக்**
**கொம்மைமுலையாள்கொடிச்சியொடுகுன்றவர்கோ**
**னம்மனையைநம்மகளென்றன்பால்வளர்த்தனனே.**

இ - ள். கொம்மை முலையாள் கொடிச்சியொடு குன்றவர்கோன்-திரட்சியாகிய ஸ்தனங்களையுடையளான கொடிச்சியென்பவளோடு வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவன், தம் மரபில் உள்ள தமர் ஆகிய முதுவர் - தமது குலத்திலுள்ள சுற்றத்தாராகிய முதியோர்கள், இம் முறையால் ஆராய்ந்து இயற்பேர் புனைந்து உரைப்ப - இம்

முறைமையினாலே (கூடி) ஆராய்ந்து (தமக்கு வந்து வாய்த்த மகளுக்கு) இயற்பெயரையிட்டுக்கூற, அம் மனையை நம் மகள் என்று அன்பால் வளர்த்தனன்-(யாவர்க்குந்) தாயான அவ்வம்மையாரை நமது மகளென்று அன்பால் வளர்த்தான். எ - று.

திணைப்பெயர் நிலப்பெயர் சாதிப்பெயர் குடிப்பெயர் உடைமைப்பெயர் குணப்பெயர் தொழிற்பெயர் கல்விப்பெயர் இயற்பெயர் என்னப்படும் பலவகைப்பெயர்களுள் இயற்பெயர் ஆதியிலே குரவரால் இடப்பட்ட பெயரென்பது; அது காரணம் பற்றியும் இடுகுறியாயும் இடப்படும்; அவற்றுள் இப்பெயர் காரணம்பற்றி யிடப்பட்டதென்க. கொடிச்சியோடு கூடிய கானவர்கோனென்று பொருள்படுதலால் வளர்த்தனன் என்று ஒருமையாகக்கூறினர்; "சிறப்பொடு பூசனைசெல்லாது" என்றது போலவென்பது. (43)

முல்லைப்புறவமுதல்வன்றிருமடந்தை
கொல்லைக்குறிஞ்சிக்குறவன்மகளாகிச்
சில்லைப்புன்கூரைச்சிறுகுடிலிற்சேர்ந்தனளாற்
றொல்லைத்தனித்தந்தைதோன்றியமர்வுற்றதுபோல்.

இ - ள். புறவம் முல்லை முதல்வன் திரு மடந்தை — காடாகிய முல்லை நிலத்துக்குத் தெய்வமாகிய விட்டுணுமூர்த்தியுடைய அழகிய மகளான சுந்தரியம்மையார், கொல்லை குறிஞ்சி குறவன் மகள் ஆகி - தினைக்கொல்லையையுடைய குறிஞ்சி நிலத்து வேட்டுவராஜனுடைய மகளாகி, தொல்லை தனி தந்தை தோன்றி அமர்வுற்றது போல் — பழைமையாகியஒப்பற்ற தமதுதந்தையாகிய விஷ்ணுமூர்த்தி (அரசரில்லிற்) றோன்றி (இடையரில்லிற்சார்ந்) திருந்தது போல, சில்லை புல்கூரை சிறு குடிலில் சேர்ந்தனள் — இழிவானபுல்லாதியவற்றால் வேயப்பட்ட புல்லிய கூரையையுடைய சிறுகுடிலிற் சேர்ந்திருந்தார். எ - று.

விட்டுணுமூர்த்தி முல்லைநிலத்துக்குத் தெய்வமென்பதை "நெடுமால் குறும்பொறை நாடன்றோன்றல் வடுவில் கற்பின் மனைவிகிழத்தி......முழுதுடனுடைல் முல்லைக் கருப்பொருளே." என்னும் அகப்பொருட் சூத்திரத்தானுணர்க. சில்லை - இழிவு; ஈண்டு இழிவாகிய புல்லாதியவற்றுக்காதலால் ஆகுபெயர். விஷ்ணுமூர்த்தி கிருட்டிணுவதாரத்தில் வசுதேவனென்னும் அரசனுடைய மகனுகி அவனுடைய இல்லிற்றோன்றி நந்தகோப னென்னும் இடையனுடைய இல்லிற்சேர்ந்திருந்ததை பாகவத நூலிற்காண்க. கிருட்டிணுவதாரத்தை விஷ்ணுமூர்த்தி எடுத் திருந்தது இப்போது நிகழுங் கலியுகத்துக்குமுந்திய துவாபர யுகத்தின் ஈற்றிலன்றோ; அங்ஙனமாக, அதற்குமுன்னே பல்லாயிர வருஷங்களுக்கு முன்னிகழ்ந்த அவ்வள்ளியம்மையாருடைய தோன்றல் சார்ந்திருத்தலாகிய செயல்களுக்கு உவமையானது எங்ஙனமெனின், இந்நூலைப் பாடியருளிய புலவர் பிற்காலத் திருந்தாராதலின் உவமையாக்கினுரென்பது. அல்லதூஉம் விஷ்ணுமூர்த்திமேலெடுக்குங் கற்கி அவதாரசரிதத்தையும் ஆதி யிலே விஷ்ணுபுராணங்களிலமைத்ததுபோல கிருட்டிணுவதார சரிதத்தையும் பாகவதநூலினுதியி லமைத்திருத்தலின் தெளிவு பற்றி இறந்தகாலத்தாற் கூறினுரெனினுமொக்கும். அல்லதூஉம் பௌராணிகருடைய கொள்கையெல்லாம் பெரும்பாலும் ஓர் யுகத்தில் நடந்தசரிதம்போல மற்றையுகங்களிலும் நடப்ப தென்பது; இக்கந்தபுராணப் பாயிரப்படலத்துள்ள "முந்தொரு காலத்தில்" என்ற முதலையுடைய செய்யுளில் அம் முந்தொரு காலம் ஆதிகற்பத்தில் துவாபரயுகமென்று ஆறுமுகநாவலரவர் களுங் கூறியிருக்கின்றூர்கள். அவர்களுக்கும் அப்படலத்திற் கூறப்பட்ட வியாதமுனிவருடைய உற்பத்தி முன்யுகத்தும் நிகழ்ந்ததென்பது கருத்துப்போலும். ஆதலினுல் பாகவத நூல் களிற் கூறப்பட்ட கிருட்டிணுவதாரசரிதம் முன்யுகத்து நிகழ்ந் தமை பற்றி உவமையாக்கினுரெனினுமமையுமென்க. (44)

மூவாமுகுந்தன்முநனுட்பெறுமமுதைத்
தேவாதிதேவன்றிருமைந்தன்றேவிதனை
மாவாழ்சுரத்திற்றம்மாமகளாப்போற்றுகையா
லாவாகுறவர்தவமாரளக்கவல்லாரே.

இ - ள். மூவா முகுந்தன் முதல் நாள் பெறும் அமுதை - கெடுதலாகாத விஷ்ணுமூர்த்தி முன்னாளிற் பெற்ற அமிர்தம்போல்வாரை, தேவ அதிதேவன் திருமைந் தன் தேவிதனை - தேவர்களுக்குள் அதிதேவராகிய சிவபெருமானுடைய திருக்குமாரராகிய சுப்பிரமணியப் பெருமானுக்கு மனைவியாரை, மா வாழ் சுரத்தில் *தம் மா மகள் ஆ போற்றுகையால்-மிருகங்கள் வாழ்கின்ற காட்டிலே தம்முடைய பெருமையாகிய மகளாகக் காத்தலினால், ஆ ஆ குறவர்தவம் யார் அளக்க வல்லார் - ஆ ஆ அக்குறவர்களது (முற்) றவத்தை யார் தாம் அளவை செய்யவல்லவர் எ-று.

மூவா என்றது மூவாதஎன்னும் எதிர்மறைப் பெயரெச்சத்து இறுதிகெட்டது; எதிர்மறைவினைத்தொகை என்று கூறுவாரு முளர். அமுது உவமவாகுபெயர். அதி என்பது உயர்வுப் பொருளைத் தருமோருபசருக்கம். தேவ ஆதி தேவன் என்று பிரித்துத் தேவர்களுக்குள் முதலாகிய தேவர்என்று பொருள் கூறினுமமையும். அமுதை தேவிதனை என்ற ஒரு பொருண்மேல் வந்த பலபெயர்களுக்கு இறுதியில் போற்றுகையாலென்று ஒரு வினைகொடுத்தது. "ஒரு பொருண்மேற் பலபெயர்வரி னிறுதி யொருவினை கொடுப்ப" என்னும் ஓத்துண்மையினென்பது. இக்காலத்து உரையாசிரியர்கள் ஒரு பொருண்மேல்வரும் பல பெயர்களைச் சார்ந்திருக்கும் வேற்றுமை யுருபுகளில் இறுதிப் பெயரைச்சார்ந்த வுருவுநிற்க மற்றவையை நீக்கிப் பெயர்தோறு மெண்ணும்மை கொடுத்து இறுதியிற் பண்புருபோடு இயற் பெயரை வருவித்துரைகூறுப; அங்ஙனங்கூறுவது மாணக்கரி னிது விளங்குதற் பொருட்டென்க. ஆக என்பது இறுதி குறைந்து ஆ என நின்றது. ஆவா வியப்பின்கண் வந்த இடைச் சொல். ஆர் என்பது யாரென்னும் வினாவினைக்குறிப்பின் முதல் யகரவொற்றுக்கெட்டது; இது மரூஉமுடிபின்பாற்படும்; ஈண்டு அதுவினாப்பொருளைத் தராது. இலர் என்னும் பொருளைத் தந்தது; "அரியவரை கீண்டுகோட்டுவார்யாரே பெரியவரை வயிரங்கொண்டு" என்றதிற்போல என்பது. (45)

பொற்றொட்டில்விட்டுப்புவியின்மிசைதவழ
கற்றுத்தளர்நடையுங்காட்டிக்கணிநீழன்
முற்றத்திடையுலவிமுறத்தின்மணிகொழித்துச்
சிற்றில்புனைந்துசிறுசோறட்டாடினளே.

இ - ள். பொன் தொட்டில் விட்டு புவியின்மிசை தவழ கற்று - அழகிய தொட்டிலிற் (கிடத்தலை) விட்டு நிலத்தின் கண்ணே தவழப்பழகி, தளர் நடையும் காட்டி கணி நீழல் முற்றத்திடை உலவி - தளர்கின்ற நடையையுங்காட்டி வேங்கைமர நீழலையுடைய முற்றத்தின்கணுலாவி, முறத்தின் மணிகொழித்து - முறத்தினாலே முத்துக்களைக் கொழித்து, சிற்றில் புனைந்து சிறு சோறு அட்டு ஆடினள் - சிற்றிலைக் கட்டி சிறுசோற்றையட்டு விளையாடினார். (அவ்வள்ளியம்மையார்) எ - று.

தளர்நடை - தள்ளாடி மெள்ளவடியெடுத்துவைக்கும் நடை. கணியென்பது வேங்கைமரத்துக்கோர் பெயராயது வேட்டுவர்கள் தினைப்பயிர்க் கதிர்களைக்கொய்யுங் காலத்தைக் கணிப்பது ஆதலின்; அது பூக்குங்காலந் தினைக்கதிர் கொய்யுங்காலமாதலின் அக்காலத்தை அது கணிப்பதென்பது மரபுவழுவமைதி; கணியென்னும் பகுதியும் வினை முதற்பொருளுணர்த்தும் இகரவிகுதியும் புணர்ந்து அவ்விகுதி கெட்டதென்பது. அந்நிலத்தின் முத்துக்கள் யானைக்கோட்டிலும் மூங்கில்களிலுந்தோன்றிய முத்துக்கள். சிற்றில் இலை முதலியவற்றாற் கட்டுங் குடில். சிறுசோறட்டாடுதல் வேய்ங்குழற்றுண்டங்களைக் குடுவையாகவும் முத்துக்களை அரிசியாகவும் செம்மணியை நெருப்பாகவும் இன்னபிறவற்றை மற்றும் வேண்டுவனவாகவுங் கொண்டும் அவற்றையெல்லா மவைபோல்வன பிற கொண்டும் விளையாடுதல். (46)

முந்தையுணர்வுமுழுதுமின்றியிம்முறையாற்
புந்திமகிழ்வண்டல்புரிந்துவளர்செவ்விக்க
ணைந்தைபுயம்புல்லுவதற்கிப்பருவமேற்குமெனப்
பைந்தொடியினுக்கியாண்டுபன்னிரண்டுசென்றனவே.

இ - ள். மூர்த்தை உணர்வு முழுதும் இன்றி இம்முறையால் புந்தி மகிழ் வண்டல் புரிந்து வளர் செவ்விக்கண்—முன்னுணர்வு முழுதுமில்லாமல் இம்முறையால் மனங்களிக்கின்ற விளையாட்டைச்செய்து வளர்கின்ற காலத்தில், எந்தை புயம் புல்லுவதற்கு இப்பருவம் ஏற்கும் என - எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமானது திருப்புயத்தைத் தழுவுதற்கு இப்பருவம் இசையுமென்ன, பைந்தொடியினுக்கு யாண்டு பன்னிரண்டு சென்றன - பசுமையாகிய வளையலையுடைய அவ்வள்ளியம்மையாருக்கு வயது பன்னிரண்டு சென்றன. எ - று.

மூர்த்தையுணர்வு திருமாலுடைய மகளாயிருந்துவந்து மான் வயிற்றிலிருந்து உதித்தவுணர்வு. பைந்தொடியினுக் கியாண்டு பன்னிரண்டு சென்றன என்றதனால் பன்னிரண்டாம் வயது முற்றுஞ்சென்றதென்று கொள்ளற்க; அப்பன்னிரண்டாம் வயதிலே ஒன்பது திங்களுஞ்சென்று முடியப்பத்தாந் திங்கள் செல்கின்றதென்றே கொள்ளல்வேண்டும்; அங்ஙனங்கொள்ளுவ தெற்றாலோவெனின் பொருளிலக்கணத்திற் கூறப்பட்டபடி மகளிருக்குப் பன்னிரண்டாம்வயது முற்றின் பூப்புண்டாம் பூப்புண்டாகுமுன்னர் ஒருவனுக்கு மணம்புரிந்து கொடுத்தல் வேண்டும்; கொடுக்காவிடின் ஒரு பூப்புக்கு ஒரு மறையோனைக் கொன்ற தோஷம் பெற்றாருக்குண்டாம் என்பதனானும் பூப்புண்டாகும் நாளைக்குச் சின்னாளைக்கு முன்னருண்டாகும் முலைப் பாரிப்பைக்காணின் இற்செறித்துவைத்தல் உண்மையினானும் சுப்பிரமணியப்பெருமான் களவுகைகோளும் உலகத்திலேநிகழும் வண்ணம் அவ்வள்ளியம்மையாரோடு அக்களவொழுக்கம்புரிந் தருளியதாதலால் அக்களவொழுக்கத்துக்கு ஏற்றகாலம் பதினொரு வயதும் பத்துத்திங்களும் புக்கபின்னர் பதினோராந் திங்களின் முதனாள்தொட்டுப் பன்னிரண்டாந் திங்கள்முடிய நாலுநாளைக்கு அல்லது ஐந்துநாளைக்கு முன்னாளளவுமே யாதலினானுமென்பது. அங்ஙனமாயின் பைந்தொடியினுக்கியாண்டு பன்னிரண்டுசென்ற வென்று கூறலாமோவெனின், பன்னிரண்டாமாண்டில் சென்ற

முடிந்த ஒன்பது திங்களுமவ்வாண்டைச் சேர்ந்தனவே யாதலிற் பெரும்பான்மைபற்றிக் கூறலாமென்க. (47)

ஆனபருவங்கண்டம்மனையும்மனையிற்
கோனுமொருதங்குலத்தின்முறைநோக்கி
மானின்வயிற்றுதித்தவள்ளிதனைப்பைம்புனத்தி
லேனல்விளையுளினிதளிக்கவைத்தனரே.

இ-ள். ஆன பருவம் கண்டு - (தம்மகளுக்கு அங்ஙனம்) ஆகிய பருவத்தைக்கண்டு, அம்மனையும் அம்மனையில் கோனும் ஒரு தம் குலத்தின் முறை நோக்கி - தாயாகிய கொடிச்சியும் அவ்வில்லினுள்ள இறைவனாகிய நம்பியென்பவனும் ஒப்பற்றதங்குலத்தில் (நிகழும்) முறைமையை ஆராய்ந்து, மானின் வயிற்று உதித்த வள்ளிதனை பைம்புனத்தில் ஏனல் விளையுள் இனிது அளிக்கவைத்தனர் - மான் பிணையினது வயிற்றின்கணிருந்துதித்த அவ்வள்ளியம்மையாரைப் பசுமையாகிய தினைப்பயிர்விளைவை நன்று காவல் செய்ய வைத்தார்கள். எ-று.

அவ்வேட்டுவர்களது குலமுறையாவது மகளிருக்குப் பன்னிரண்டாம் வயதின் ஈற்றிலுள்ள இருதிங்களுக்கு முன்னே அம்மகளிரைப் புனங்காவல்புரியவைத்துப் பன்னிரண்டாம் வயதினிறுதியிலே மகட்பேசிவருந் தக்கானுக்கு மணஞ்செய்து கொடுத்தலென்க. ஏனல் ஆகுபெயர். விளையுள் தொழிற்பெயர்; விளை பகுதி, உள் தொழிற்பெயர் விகுதி. (48)

காட்டிலெளிதுற்றகடவுண்மணியைக்கொணர்ந்து
கூட்டிலிருளோட்டக்குருகுய்த்தவாறன்றே
தீட்டுசுடர்வேற்குமரன்றேவியாந்தெள்ளமுதைப்
பூட்டுசிலைக்கையார்புனங்காப்பவைத்ததுவே.

இ-ள். பூட்டு சிலை கையார் - (நாணைப்) பூட்டுகின்ற வில்லையேந்துங் கையினையுடையராகிய வேட்டுவர்கள், தீட்டு

சுடர்வேல் குமரன் தேவி ஆம் தெள்அமுதை புனம் காப்ப வைத்தது - தீட்டப்படுகின்ற சுடரையுடைய வேலாயுதத்தைக்கொண்ட சுப்பிரமணிபப் பெருமானுக்குத் தேவியாராகுந் தெளிந்த அமுதம்போல்வாரைத் தினைப்புனங்காவல் செய்யவைத்தது, குருகு - பறவையானது, காட்டில் எளிது உற்ற கடவுள் மணியை கொணர்ந்து கூட்டில் இருள் ஓட்ட உய்த்தவாறு அன்றே - காட்டில் எளிதாகியுற்ற கடவுண் மாமணியை (எடுத்துக்) கொணர்ந்து (தன்) கூட்டிலுள்ள இருளை யோட்டவைத்தவாறு (போலும்) அன்றே. எ-று.

கடவுண்மா மணி - தெய்வங்களுக்குரியமணி; அது நவமணியின்வேறுயவற்றினும் பெருவிசேடமுடைத்தா யிருப்பது. குருகு ஈண்டுதூக்கணங்குரீஇ முதலிய சிலபுட்கள். அன்றே - பலரறிதேற்றப் பொருள்தருமிடைச்சொல். தீட்டுதல் சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கரத்துவேலுக்கு இல்லையாகவும் தீட்டு சுடர்வேல் என்று வேற்சாதிப் பொதுமைபற்றிக் கூறினூர். சிவபெருமானுலாதியில் உண்டாக்கப்பட்டபொழுது கூராக்கிய சுடர்வேலெனினுமமையும். நாணையென்றது அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. (49)

சுத்தமெழுகிட்டுச்சுடர்கொளுவிப்பன்மணியின்
பத்திகுயின்றிட்டபழுப்பேணியிற்பாதம்
வைத்துமகிழ்ந்தேறிமகடூஉத்தினைப்புனத்தி
லெத்திசையுங்காணுமிதணத்திருந்தனளே.

இ - ள். சுத்த மெழுகு இட்டு சுடர் கொளுவி - சுத்தமாகிய மெழுகைவிட்டு (அதன்மீது) நெருப்பைக்கொளுத்தி, பல் மணியின் பத்தி குயின்றிட்ட - பலவாகிய வரதனங்களை வரிசையாகப் பதிக்கப்பட்ட, பழுப்புஏணியில் பாதம் வைத்து மகிழ்ந்து ஏறி - பழுப்பையுடைய ஏணியிலே திருவடியைவைத்துக் களிப்புற்றேறி, மகடூஉ தினைப்புனத்

தில் எத்திசையும் காணும் இதணத்து இருந்தனள் - அவ் வள்ளியம்மையார் (அப்புனத்தில்) எத்திசையையுங் காணத் தகும் பரணிலிருந்தார். எ - று.

சுடரைக்கொளுந்தல் மணிகளைப் பதிக்கத்தக்கதாக மெழு குருகி நெகிழவேண்டியென்பது. மெழுகிலே அக்கினியை வைத்து எடுக்குமிடத்து அம்மெழுகுருகியதாற் கொளுவியது போலிழுக்குமாதலிற் கொளுவி என்றதற்கு கொளுவச்செய்து (வைத்து எடுத்து என்றபடி) என்றுரைப்பினுமமையும். பழுப்பு நென்பு. (50)

கிள்ளையொடுகேகயமேயன்றிப்பிறநிலத்தி
லுள்ளபறவையொருசார்விலங்கினொடும்
வள்ளிமலைப்புனத்தில்வந்துற்றனமாவும்
புள்ளுமயங்கல்பொருணூற்றுணிபன்றோ.

இ - ள். கிள்ளையொடு கேகயமே அன்றி - (அந்நிலத் துக்குரிய கருப்பொருள்களைச் சார்ந்த) கிளிகளோடு மயில் களன்றி, பிறநிலத்தில் உள்ள (ஒருசார்) பறவை ஒருசார் விலங்கினொடும் வள்ளி மலை புனத்தில் வந்து உற்றன - பிற நிலங்களிலுள்ள ஒருசாரானபறவைகள் ஒருசாரான விலங்குக ளோடும் வள்ளிமலையைச்சார்ந்த தினைப்புனத்தில் வந்து சார்ந்தன, மாவும் புள்ளும் மயங்கல் பொருள் நூல் துணிபு அன்றோ - (ஒருநிலத்திற் பிறநிலங்களுக்குரிய) விலங்கு களும் பறவைகளுஞ் (சார்ந்து) கலந்திருப்பது பொருணூ லின் துணிபல்லவோ. எ - று.

கிளியும் மயிலும் அக்குறிஞ்சி நிலத்துக்குரிய வென்பதை "விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன் குறத்தி கொடிச்சி குறவர் கானவர்குறத்தியர் கிளிமயின் மறப்புலிகுடாவடி...... கொருஞ்சுனையாடல் குறிஞ்சிக்கருப்பொருளே." என்பதனு னுணர்க. ஒருசார்பறவையும் ஒருசார்விலங்குகளும், தினையை

இரையாகக்கவரும் புளுக்களாதியவும் மான்களாதியவுமென்க. தினையை இரையாகக்கவராத பறவைகளுமுளவாதலின் ஒருசார் என்பதை பறவையோடும் சேர்த்திடு மென்க. "முத்திறப்பொருளுந்தத்தந் திணையொடு மரபின் வாராதுமயங்கலுமுரிய" என்னு மோத்துண்மையின் மாவும் புள்ளுமயங்கல் பொருணூற்றுணிபு என்றுரென்பது. அன்றே என்பதற்கு முன்னுரைத்ததுரைக்க.

கட்டுவரிவிற்கருங்குறவர்கைத்தொழிலா
லிட்டவிதணத்திருந்தெம்பெருமாட்டி
தட்டைகுணிறழலைத்தாங்கித்தினைப்புனத்தைக்
கிட்டலுருவண்ணங்கிளிமுதற்புள்ளோட்டினளே.

இ - ள், எம் பெருமாட்டி - எம்பெருமாட்டியாராகிய வள்ளியம்மையார், கட்டு வரி வில் கரும் குறவர் கை தொழிலால் இட்ட இதணத்து இருந்து - கட்டாகியவரிதலையுடைய வில்லை யேந்துங்கருமையாகிய வேட்டுவர்கள் (கல்) கைத்தொழிலாற் செய்திட்ட பாணினிடத்துத்தங்கி, தட்டை குணில் தழலைத்தாங்கி கிளி முதல் புள் தினைப் புனத்தை கிட்டலுருவண்ணம் ஓட்டினள் - தட்டையையுங் கவணையுந் தழலையுந் தரித்துக் கிளிமுதலாகிய பறவைகள் தினைப்புனத்தைச்சார்தலுறுவண்ணம் (அவற்றைத்) துரத்தினர். எ - று.

கட்டு வழி வில் என்றதற்கு (வரிந்துகட்டுங்) கட்டையுடைய நீண்ட வில்லெனினுமமையும். வரிந்துகட்டுதல் எற்றுக்கெனின் வில்லை வளைக்கும் பொழுது அது இடையிடையே பிளவுபடா திருத்தற் கென்பது. வரி கட்டு என்று மொழியைமாற்றி வரிந்துகட்டிய என்று பொருளுரைப்பினுமமையும்; ஈண்டு "வரிப்புனைபந்தொடுபாவைதூங்க" என்றதிற்போல வரி என்பது, செய்தென்வாய்பாட்டு வினையெச்சப்பொருளில் வந்ததென்க. தட்டையுந் தழலுங் கிளிகடிகருவி விகற்பப் பொருள்கள்; பிறபறவைகளையுங் கடியுங் கருவிகளாகவும் கிளிகடிகருவிகளென்

பது தினைக்கதிரைக்கொய்து கவரும் புட்களிற் கிளியேகடுமை யுடையது ஆதலினானும் அது குறிஞ்சிநிலத்துப் புள்ளாதலின் ஆண்டு மற்றவையிலதிகமாக விருத்தலினானும் பெரும்பான்மை பற்றி யிட்டபெயரென்க. (52)

எய்யானவையுமிரலைமரைமான்பிறவு
கொய்யாதவேனற்குரல்கவர்ந்துகொள்ளாமன்
மையார்விழியாண்மணிக்கற்கவணிட்டுக்
கையாலெடுத்துக்கடிதோச்சிவீசினளே.

இ-ள். எய் ஆனவையும் இரலை மரை மான்பிறவும் - முட்பன்றிகளுங் கருமான்களும் மரைகளும் பிறவிலங்குகளும், கொய்யாத ஏனல் குரல் கவர்ந்து கொள்ளாமல் - கொய்யப்படாத தினைக்கதிர்களைக் கவர்ந்து கொள்ளாமல், மை ஆர் விழியாள் - (தீட்டும்) மைபொருந்தியகண்களை யுடையராகிய அவ்வள்ளியம்மையார், கவண் மணிக்கல் இட்டு கையால் எடுத்து கடித்து கடிது வீசி ஓச்சினள் - கவணிலே அரதனக்கல்லையிட்டுக் கரத்தினாற்றூக்கி விரைவில் வீசி எறிந்தார். எ - று.

கொய்யப்படாதவெனற்பாலது செயப்பாட்டு வினைப் பொருளுணர்த்தும்படுவிகுதிதொக்கு கொய்யாத என்றுநின்றது. மையார் என்றதற்குக் கருமைபொருந்திய வெனினுமமையும். ஓச்சினள் என்றதிலுள்ள விகுதியைப்பிரித்து வீசி என்றதிற் கூட்டிப் பொருளுரைத்தாம். வீசுதல் கவணை வேகமாவாட்டுதல்.

பூவைகாள்செங்கட்புறங்காளாலோலந்
தூவிமாமஞ்ஞைகாள்சொற்கிளிகாளாலோலங்
கூவல்சேர்வுற்றகுபினங்காளாலோலஞ்
சேவல்காளாலோலமென்றுடிருந்திழையாள்.

இ-ள். பூவைகாள் செம் கண் புறவங்காள் ஆலோலம் - நாகணவாய்களே செம்மையாகிய கண்களையுடைய புறாக்களை

ஆலோலம், தூவி மா மஞ்ஞைகாள் சொல் கிளிகாள் ஆலோலம் - தோகையையுடைய கரிய மயில்களே சொற்களை யுடையகிளிகளே ஆலோலம், கூவல் சேர்வு உற்ற குயிலினங்காள் ஆலோலம் - கூவுதல்சேர்தலுற்ற குயிலினங் களே ஆலோலம், சேவல் காள் ஆலோலம் என்றாள் திருந்து இழையாள் - கோழிகளே ஆலோலமென்று புட்களை யோச்சினார் திருத்தமுற்ற ஆபரணங்களையுடையராகிய அவ்வள்ளியம்மையார் எ - று.

ஆலோலம் என்பது புட்களையோச்சுங்குறிப்புரை. சேவல் என்பது பறவை யாணுக்கேயன்றிக் கோழிப்பறவைக்கும் வழங் கும் ஓர்பெயரென்க; கோழிப்பெடைக்கும் அப்பெயராகுமோ வெனின், களிறு என்னும் யானையாண்பெயர் யானைச்சாதிக்கு வழங்கல் போலவும் காலாயுதம் ஆண்தலைப்புள்ளென்னுங் கோழியாண்பெயர் கோழிச்சாதிக்கு வழங்கல் போலவும் சேவல் பெடை என்னும் வேற்றுமைகுறியாது அது கோழிச் சாதிக்கு வழங்குவவென்பது. ஈண்டு கோழி கானங்கோழி. சேவல்காளென்னும் விளிப்பெயரை யொழித்த மற்றை விளிப்பெயரெல்லாம் அவ்வச்சாதியின் பெடைகளைக்குறித்த தென்றும் சேவல்காளென்றதே அப்பறவை ஆண்களைக்குறித்த தென்றுங்கூறுவாருமுளர். பூவைகாளென்றதாதியவை அப் பொருள்தாராமையின்அதுபொருந்தாதென்க. அவ்வள்ளியம்மை யார் பூவைகாள் என்பது முதலானபறவைச்சாதிகளை முறையே விளித்துத்துரத்த அப்பறவைகளுள்உள்ள பெடைகளெல்லாம் உள்ளதிடங் குறைந்த பெண்பாலாதலிற் பறந்து சென்றுவிட உள்ளத்திடமிகுந்த ஆண்பாற் பறவைகளெல்லாந் தங்கவே அங் ஙனந்தங்கிய அவ்வாண்பாற் பறவைகளை மீண்டும் விளித்துத் துரத்தினாரெனினுமமையும். மயிலினுக்குச் சேவலென்பது அமையுமோவெனின், "எழுந்துமுன்னுறு மஞ்ஞையஞ்சேவன்மே லேறி" என்று இப்புராணத்திலே முன்னிருத்தலின்மையு மென்பது. (54)

இந்தமுறையிலிவளேனற்புனங்காப்ப
வந்தவளவிலவளுக்கருள்புரியக்
கந்தவரைநீங்கிக்கதிர்வேலவன்றனியே
வந்துதணிகைமலையிடத்துவைகினனே.

இ-ள். இந்த முறையில் இவள் ஏனல் புனம் காப்ப - இம்முறைமையினால் இவ்வள்ளியம்மையார் தினைப்புனத்தைக் காவல்செய்ய, கதிர்வேலவன் - கிரணத்தையுடைய வேற்படையைக்கொண்ட சுப்பிரமணியப்பெருமான், அந்த அளவில் அவளுக்கு அருள்புரிய கந்தவரை நீங்கி தனியே வந்து தணிகைமலையிடத்து வைகினன் - அப்போது அவ்வள்ளியம்மையாருக்கு அருள்புரியவேண்டித் (தமது) கந்தகிரியைவிட்டுத் தனியேவந்து திருத்தணிகை மலையின்கணிருந்தருளினார். எ - று.

இந்த அந்த என்பன இகர அகரச்சுட்டுக்களின் மரூஉக்கள். தனியே வந்தது அவ்வள்ளியம்மையார் வாயிலாகக் களவு கைகோளுலகத்தில் நிலைபெறச்செய்தருள வேண்டியென்று தொனித்தலுணர்க. (55)

வேறு

சூரல்பம்பியதணிகைமால்வரைதனிற்சுடர்வேல்
வீரன்வீற்றிருந்திடுதலும்வேலையங்கதனில்
வாரியும்வடித்துந்தியும்வரிசையாலுறழ்ந்தும்
சீரியாழ்வல்லநாரதன்புவிதனிற்சேர்ந்தான்.

இ-ள். சூரல் பம்பிய மால் தணிகை வரையிடை சுடர் வேல் வீரன் வீற்றிருந்திடுதலும் - பிரம்புகள் நிறைந்திருக்கின்ற பெருமையாகிய திருத்தணிகைமலையினிடத்துச் சுடரையுடைய வேலாயுதத்தைத் தரிக்கும் வீரமுடையராகிய சுப்பிரமணியப்பெருமான் வீற்றிருந்தருளவும், வேலை

யதனில் - அச்சமயத்திலே, வரிசையால் வாரியும் வடித்து உந்தியும் உறழ்ந்தும் சீர் யாழ் வல்ல நாரதன் புவிதனில் சேர்ந்தான் - (யாழிசைநூலிற் கூறப்பட்ட) முறைமையினால் வார்தலைச்செய்தும் வடித்தலைச்செய்தும் உந்தலைச் செய்தும் உறழ்தலைச் செய்துஞ் சீரிய யாழ் வாசித்தலில் வல்ல நாரத முனிவர் பூமியிற்சேர்ந்தார். எ - று.

ஆங்கென்னும் அசைநிலை முதல் குறுகிநின்றது. வார்தலா தியவற்றினிலக்கணத்தை,

"வழுவிலைந்தங் குலமுதலா வெழுவாயளவுந் தொடல்வார்தல்
எழுவாய்முதலா வீறளவு மெறிதல்வடித்த லிசையனைத்துந்
தழுவுநரம்பு முழுதினையுந் தடவித்தள்ளலுந் தல்பைங்தேன்
ஒழுகல்போலு நரம்பிரண்டை மாறிமாறித் தொடலுறழ்தல்."

—கூர்மபுராணம்.

என்ற செய்யுளானுணர்க. வார்தல் முதலான சிலவற்றைக் கூறவே உபலக்கணத்தானே உருட்டல் தெருட்டல் அள்ளல் பட்டடையாதிய மற்றையவுங் கொள்ளப்படும்; அவற்றினிலக்கண மெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்; அக்கூர்ம புராணத்திற் காண்க. வடித்தும் எனற்பாலது வடித்து எனக்குறைந்து நின்றது. சீரியாழ் என்று சிறப்பித்ததனாலே அந்நாரதமுனிவ ருடைய யாழ், விபஞ்சிகை சித்திரிகை சித்திரகோஷாவணி லவுலாட்சி கூர்மிகை குச்சிகை பரிவர்தினி கின்னரி வல்லகி வீணை கௌஸதி ராவணஸ்வரம் சகளவல்லகி ஆரவாளி ஆநாவித கைசிபவீணை பிரமவீணை சாரங்கவீணை சரவீணை ஆகாசவீணை அந்தரவீணை உருத்திரவீணை என்னும் வீணாபேதங்களில் மேன்மையுடைத்தாய் சிவபெருமானுடைய திருநடனத்துக் கிசைய வாசிக்கப்படுவதாய் அம்முனிவர் அந்நடனத்தைக்கண்டு அதற்கிசைய வாசிக்கும்போது ஆநந்தத்தாலே சித்தவிருத்தி யொடுங்கி அவ்வியாழ்வாசித்தலை மறந்து வாளாநிற்பினும் தெய்வத்தன்மையாலே தானே வாசிப்பதாய் மகதியாழென்னும் பெயருடைத்தா யிருப்பதென்பது. யாழ் ஆகுபெயர். அம்

முனிவர் தேவமுனிவராதலிற் புவிதனிற் சார்ந்தானென்றதற்கு முன் விண்ணுலகத்திலிருந்து என்று கூறிக்கொள்க. (56)

வளவிதாகியவள்ளிமால்வரைதனில்வந்து
விளையுளாகியதினைப்புனம்போற்றிவீற்றிருந்த
புளினர்பாவையைக்கண்டுகைதொழுதுபுந்தியினி
லளவிலாததோரற்புதத்துடனிவையறைவான்.

இ - ள். வளவிது ஆகிய மால் வள்ளி வரைதனில் வந்து - சீரிதாகிய பெரிய வள்ளிகிரியின்கண் வந்து, விளையுள் ஆகிய தினைப்புனம் போற்றி வீற்றிருந்த புளினர் பாவையை கண்டு - விளைதலாகிய தினைப்புனத்தைக் காவல்செய்து கொண்டு வீற்றிருக்கின்ற வேட்டுவர் மகளாகிய அவ்வள்ளியம்மையாரைக் கண்டு, கை தொழுது - கை (கூப்பி) வணங்கி, புந்தியினில் அளவு இலாதது அற்புதத்துடன் இவை அறைவான் - தமதுள்ளத்தில் அளவில்லாததாகிய அற்புதங் கொள்ளுதலோடு இவற்றைச் சொல்லுவார் (அந்நாரத முனிவர்) எ - று.

வளவிது குறிப்புவினைமுற்றுலணையும்பெயர். ஆகிய என்பதிரண்டனுள் முன்னையது பண்புருபு இடைச்சொல்; பின்னையது பெயரெச்சம். பாவை உவமவாகுபெயர். கை தொழுது என்றதற்குக் கையால்வணங்கியெனினுமமையும். ஓர்-அசை. அற்புதம் ஆகுபெயர். (57)

அன்னையாகியிங்கிருப்பவர்பேரழகனைத்து
முன்னியான்புனைந்துரைக்கினுமுலவுமோவுலவா
வென்னையாளுடையறுமுகன்றுணைவியாயிருப்ப
முன்னர்மாதவம்புரிந்தவரிவரெனமொழிந்தான்.

இ - ள். அன்னை ஆகி இங்கு இருப்பவர் பேர் அழகு அனைத்தும் யான் உன்னி புனைந்து உரைக்கினும் உலவுமோ

உலவா - (யாவர்க்குந்) தாயாகி ஈண்டிருப்பவருடைய பேரழகுகள் யாவற்றையும் யான் கருதிப்புனைந்துரைப்பினும் ஒழியுமோ ஒழியா, இவர் என்னை ஆள் உடை அறுமுகன் துணைவி ஆய் இருப்ப முன்னர் மா தவம் புரிந்தவர் என மொழிந்தான் - இவ்வம்மையார் என்னை யடிமையாகவுடைய ஆறுதிருவதனங்களையுடையராகிய சுப்பிரமணியப்பெருமானுக்கு மனைவியாராகியிருப்ப முன்னரே பெருமையாகிய தவத்தைச் செய்தருளினவரென்று (தம்முள்ளே) கூறினார் (அந்நாரதமுனிவர்.) எ - று.

பேரழகனைத்துமென்றூர் ஒவ்வோருறுப்புக்களிலுமுள்ள பல்வகைப் பண்புகளாகிய பேரழகுகளைக் குறித்து; பல்வகைப் பண்புகளாவன கண்ணுக்குச் செம்மை கருமை வெண்மை நீட்சி அகற்சி பிறழ்ச்சி கூர்ப்பு ஆகிய பண்புகள்; பிறவுமன்ன. புனைந்துரைத்தல் ஈண்டு அப்பண்புகட்கு ஒத்த பண்புகளையுடைய உவமானங்களெடுத்து வருணித்துரைத்தல். ஓகாரம் வினைப் பொருளில் வந்தது. ஆக என்றது எஞ்சியது. உடைய என்னுங் குறிப்புப்பெயரெச்சத்திறுதிகெட்டது. ஆளுடை என்றதற்கு ஆளுதலையுடையவெனினுமமையும். முன்னர் ஈண்டு முப்பிறப்பிலென்னும் பயத்தது. அந்நாரதமுனிவர் யோகக்காட்சியாற் கண்டு இங்ஙனங் கூறினரென்பது. (58)

வேறு

கார்த்தினைப்புனங்காவற்கன்னியைப்
பார்த்துமற்றிவைபகர்ந்துபோற்றிப்போய்
மூர்த்தமொன்றினின்மூன்றுபூமலர்
தீர்த்திகைச்சுனைச்சிகரநண்ணினன்.

இ - ள். கார் தினை புனம் காவல் கன்னியை பார்த்து இவை பகர்ந்து போற்றி போய் - கருமையாகிய தினைப் புனத்தைக் காவல் கொள்ளுதலையுடைய அவ்வள்ளியம்மை

யாரைப்பார்த்து இவற்றைத் (தம்முட்) கூறி வாழ்த்திச் சென்று, மூர்த்தம் ஒன்றினில் மூன்று பூமலர் தீர்த்திகை சுனை சிகரம் நண்ணினுன் - முகூர்த்தகாலமொன்றில் (வைகறேுறும்) மும்மூன்று (நீலப்)பூ மலரப்பெறுந் தீர்த்த மாகிய சுனையையுடைய திருத்தணிகைவரையைச் சார்ந்தார் (அங்காரதமுனிவர்.) எ - று.

கருமையைத் தினைப்பயிரிலேலற்றுக; தினையிலேற்றினு மமையும். காவல் ஆகுபெயர். மற்று அசைநிலை. (59)

தணிகையங்கிரிதன்னில்வைகிய
வீணையில்கந்தனையெய்தியன்னவன்
றுணைமென்சீறடிதொழுதுபன்முறை
பணிதல்செய்திவைபகர்தன்மேயினுன்.

இ - ள். தணிகையங் கிரிதன்னில் வைகிய இணை இல் கந்தனை எய்தி - திருத்தணிகை வரையிலிருக்கின்ற ஒப்பில்லாத சுப்பிரமணியப்பெருமானையடைந்து, அன்னவன் துணை மெல் சீறடி பல் முறை தொழுது - அவருடைய உபயமாகிய மெல்லிய சிறிய திருவடிகளைப் பல்முறை நமஸ்கரித்து, பணிதல் செய்து இவை பகர்தல் மேயினுன் - (அவருடைய திருமுன்னிலையிலே) தாழ்தல் செய்து நின்று இவற்றைக் கூறலுற்றுர் (அங்காரதமுனிவர்.) எ - று.

அம் அல்வழிச்சாரியை. கந்தன் கூட்டமுற்றவர், சரவண தடாகத்தில் ஆறுகிய திருவுருவங்களையும் உமாதேவியார் ஒரு சேரவெடுத்து ஆறுதிருவதனங்களும் பன்னிரண்டு திருப்புயங் களுமுடையதோர் உருவமாக்க அவ்வாறு திருவுருவங்களும் ஒன்ருகக்கூடிய கூட்டமுற்றவர். பன்முறைதொழுதல் மூன்று ஐந்து எழு ஒன்பது பன்னிரண்டுதரமாகிய இவற்றுளொன் றென்க. பணிதல் செய்தல் இறுமாப்போடு நிமிர்ந்து நில்லாது வளைந்து நிற்றல். (60)

மோனநற்றவமுனிவன்றன்மகண்
மானினுற்றுளாள்வள்ளிவெற்பினிற்
கானவக்குலக்கன்னியாகியே
யேனலைப்புரந்திதணின்மேயினள்.

இ - ள். மோன நல் தவ முனிவன்றன் மகள் மானின் உற்றுளாள் - மௌன நிலையையுடைய நல்ல தவத்தினைப் புரிகின்ற சிவமுனிவனுக்கு மகளாகிய மான்வயிற்றினுற்ப வித்தவம்மையார், வள்ளி வெற்பினில் கானவக் குலக்கன்னி ஆகி ஏனலை புரந்து இதணில் மேயினள் - வள்ளிமலையிலே வேட்டுவக்குலக் கன்னியாகித் தினைப்புனத்தைக் காவல் செய்து (ஆண்டுள்ள) பரணின்கணிருக்கின்றார். எ - று.

மோனமென்பது சித்தாசன சிங்காசன ஸவஸ்திகாசன சௌவியாசன சூலாசன சுகாசன சர்வதோபத்திராசன கோமுகாசன கருடாசன மயூராசனுதி எண்பத்துநான்கு ஆசன பேதங்களுள் ஒன்றிலே சுவாத்ம நிஷ்டையிலிருத்தல் போக மோக்ஷமென்னுமிரண்டனுள் மோக்ஷத்தைக் குறித்தியற்றுந் தவத்தை நற்றவமென்றார். முனிவன் தன்மகள் மானினுற்றுளாள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; ஒருபொருட்பல்பெய ரெனினுமமையும். (61)

ஐயனேயவளாகநல்லெழில்
செய்யபங்கயத்திருவிற்கும்மிலைப்
பொய்யதன்றிதுபோந்துகாண்டிநீ
கையனேனிவண்வந்துகண்டனன்.

இ - ள். ஐயனே அவள் ஆகம் நல் எழில் செய்ய பங்கயத் திருவிற்கும் இலை - சுவாமீ! அவ்வம்மையாரது தேகத்திலுள்ள நல்லவழகு செம்மையையுடைய தாமரைப் பூவிலிருக்கின்ற திருமகளுக்குமில்லை, இது பொய்யதன்று -

இது பொய்ம்மையுடைத்தன்று, கையனேன் கண்டு இவண் வந்தனன் - சிறியனேன் (அவ்வம்மையாரை இப்பொழு தாண்டுக்) கண்டு ஈண்டுவந்தேன், நீ போந்து காண்டி - தேவரீர் சென்று காண்பீர். எ - று.

இல்லை என்பது இடைக்குறையானது. பொய்யதன்றென்பது புனைந்துரையதன்றென்றபடி காண்டி என்பதின் ஈற்றிகரம் எதிர்காலப்பொருட்டு. (62)

தாயதாகுமத்தையன்முன்னரே
மாயவன்மகண்மற்றுன்மொய்ம்பினைத்
தோயநோற்றனள்சொற்றவெல்லையிற்
போயவட்கருள்புரிதியாலென்றான்.

இ - ள். தாயது ஆகும் அத்தையல் முன்னரே மாயவன் மகள் - (யாவர்க்கும்) அன்னையாகிய அந்நங்கையார் முற்பிறப்பிலே திருமாலுடையமகள், உன்மொய்ம்பினை தோய நோற்றனள் - (அவர் அப்பிறப்பில்) தேவரீருடைய திருப்புயங்களைச் சேரத்தவஞ்செய்தனர், சொற்ற எல்லையில் போய் அவட்கு அருள்புரிதி என்றான் - யான்கூறிய அவ்விடத்தின்கட் சென்று அவ்வம்மையாருக்குத் திருவருள் செய்வீரென்று சொன்னார் (அந்நாரதமுனிவர்). எ - று.

அது பகுதிப்பொருள்விகுதி; தாய் என்பது பொதுப்பெயராயினும் ஈண்டு உயர்திணைப்பெயராகி தையலென்னுந் தன்பாலேற்றமையின் அஃறிணைப்பொருட்டும் அவ்விகுதிபெற்ற அப்பெயர்திணைவழுவமைதி யென்பது. எயுமற்றுமாலுமசைமொழிகள். சொற்றவெல்லையில் என்றதற்குத் (தேவரீர் அவ்வம்மையார் முற்றவஞ்செய்த ஞான்றுதோன்றி வரங்கொடுத்தவிடத்துக்) கூறியருளியசமயத்திலென்று பொருளுரைப்பினுமமையும்; இன்னுமதற்கு யானிதனைக்கூறிய இப்பொழுதேயெனினுமமையும். (63)

என்றவேலையிலெஃகவேலினு
னன்றுநன்றிதுநவையில்காட்சியோய்
சென்றிநீயெனச்செப்பித்தூண்டியே
கன்றுகாமநோய்க்கவலையுள்வைத்தான்.

இ - ள். என்ற வேலையில் எஃக வேலினன் - என்று சொல்லியகாலையிற் கூர்மையாகிய வேற்படையையுடைய சுப்பிரமணியப்பெருமான், நவை இல் காட்சியோய் இது நன்று நன்று - குற்றமில்லாத அறிவையுடைய முனிவனே (நீகூறிய) இதுநன்றுநன்று, நீ சென்றி என செப்பி தூண்டியே - நீ (செல்லுமிடத்துக்குச்) செல்லாயென்று திருவாய் மலர்ந்து விடைகொடுத்துய்த்தருளி, கன்று காமநோய் கவலை உள் வைத்தான் - கன்றிய காமநோயாகிய கவலையைத் திருவுள்ளத்து வைத்தருளினார். எ - று.

நன்று நன்று உவகைப்பொருணிலையில் அடுக்குமொழி. பாசஞானபசுஞான பதிஞானங்களுள் பதிஞானத்தை நவையில் காட்சியென்றார். சென்றி என்பதில் இகரவிகுதி எதிர்காலங் காட்டியது; இவ்விகுதி ஈண்டு ஏவற்பொருளுமுணர்த்தியது. முன்னர் புரிதி என்பதிலுமது ஆதலிற் சிறுபான்மை ஏவற்பொருளு முணர்த்துமென்பது; ஆய்விகுதி குன்றிய முன்னிலை ஏவல் முற்றின்முன்வரு முன்னிலை யசையாகிய ஈ விகாரத்தாற் குறுகியதெனினு மமையும். (64)

எய்யும்வார்சிலையெயினர்மாதரா
ளுய்யுமாறுதன்னுருவநீத்தெழீஇச்
செய்யபேரருள்செய்துசேவகன்
மையன்மானுடவடிவந்தாங்கினன்.

இ - ள். சேவகன் - (எவ்வகைப்பட்ட தேவராதியராலும் வெல்லுதற்கரிய சூரபன்மனாதியவசுரர்களை வென்ற) யுத்தவீரராகிய சுப்பிரமணியப்பெருமான், செய்ய பேர்

அருள் செய்து - செப்பமாகிய பேரருள்கொண்டு, எய்யும் வார்சிலை எயினர் மாதராள் உய்யுமாறு - (பாணங்களைச்) செலுத்துகின்ற நெடிய வில்லையுடைய வேட்டுவர்க்குமகளாகிய அவ்வள்ளியம்மையார் உய்யுமாறு, தன்உருவம் நீத்து எழீஇ மையல் மானுடவடிவம் தாங்கினன் - தமது திருவுருவத்தை நீத்தெழுந்து காமமயக்கத்தையுடைய மானுடவடிவங்கொண்டருளினர். எ - று.

பாணங்களை என்னுஞ்செயப்படுபொருள் அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. உய்தல் ஈண்டு பெருவாழ்வடைதல். (65)

காலிற்கட்டியகழலன்கச்சினன்
மாலைத்தோளினன்வரிவில்வாளிய
னீலக்குஞ்சியனெடியன்வேட்டுவக்
கோலத்தைக்கொடுகுமரன்றோன்றினன்.

இ-ள். குமரன் - அச்சுப்பிரமணியப்பெருமான், காலில் கட்டிய கழலன் - திருவடியிற்கட்டிய கழலையுடையராயும், கச்சினன் - (திருவரையிற் கட்டிய) கச்சினையுடையராயும், மாலை தோளினன் - மாலையையணிந்த திருத்தோளினையுடையராயும், வரி வில்வாளியன் - (திருக்கரத்திலேந்திய) நெடிய வில்லையும் பகழியையுமுடையராயும், நீலக்குஞ்சியன் - (திருமுடியின்முடித்த) நீலநிறமாகிய குஞ்சியையுடையராயும், நெடியன் - நெடியராயும், வேட்டுவக்கோலத்தை கொடு தோன்றினன் - வேட்டமாடுவோர் கோலத்தைக்கொண்டு தோன்றியருளினர். எ - று.

கழலனாதியகுறிப்பு வினைமுற்றெல்லாம் வினையெச்சங்களாய்க் கொண்டு என்னும் வினையெச்சத்தோடு முடிந்தன. முற் செய்யுளில் மானுடவடிவந்தாங்கினன் என்றுகூறி இச்செய்யுளில் வேட்டுவக்கோலத்தைக் கொடு தோன்றினன் என்றதனானும்

பின்னர் தொல்லை மானுடநல்வடிவங்கொடு நின்முன் என்றும் தொல்லையினுருக்கொடு தோன்றிநின்ற வேள் என்றும் கூறி இப்பொழுதுகொண்ட வுருவமும் மேலே வேங்கைமரமாயின பின்னர்க்கொண்ட வுருவமும் ஒன்றென்றுரைத்ததனுனும் அவ் வுருவத்தை நோக்கி அவ்வள்ளியம்மையார் முழுதுலகருள்புரி முதல்வர்நீர் என்றதனுனும் சுப்பிரமணியப்பெருமான்கொண்ட இவ்வடிவம் மானுட அரசவடிவமும் கோலம் வேட்டஞ்செய்யுங் கோலமுமென்க. (66)

கிள்ளையன்னதோர்கிளவிமங்கைமாட்
டுள்ளமோகந்தன்னுள்ளகந்தனைத்
தள்ளவெம்பிரான்றணிகைவெற்பொரீஇ
வள்ளியங்கிரிவயின்வந்தெய்தினன்.

இ - ள். எம்பிரான் - எமது இறைவராகிய சுப்பிரமணியப்பெருமான், கிள்ளை அன்னது கிளவி மங்கைமாட்டு உள்ள மோகம் தன் உள் அகந்தனை தள்ள - கிளிமொழியை நிகர்த்ததாய மொழியினையுடைய அம்மங்கைமாட்டுக் கொண்ட ஆசையானது தமதகத்துள்ள மனத்தைத்தள்ள, தணிகை வெற்பு ஒரீஇ - திருத்தணிகாசலத்தைநீங்கி, வள்ளியங்கிரிவயின் வந்து எய்தினன் - வள்ளிமலையிடத்துவந் தடைந்தருளினர். எ - று.

கிள்ளை அதனது மொழிக்காதலின் ஆகுபெயர். அன்னது குறிப்புவினை முற்றுலணையும்பெயர். ஓர் - அசைமொழி. மங்கை ஈண்டு பருவங்குறித்துநின்றது. அவ்வள்ளியார்வாயிலாக உலகத் திலே அன்பினுைய ஐந்திணையிற் களவெனப்பட்ட ஒழுக்கம்நிகழ வேண்டி முன்னர் கன்று காமநோய்க்கவலையுள் வைத்தாராதலின் ஈண்டு மங்கைமாட்டுள்ளமோகந் தம்முள்ளகந்தனைத்தள்ள வள்ளியங்கிரிவயின் வந்தெய்தினரென்பது. சுப்பிரமணியப்பெருமான் அங்ஙனங் காமாசையை உள்ளத்துவையாது நடித்தருளினுலகத்து உள்ள மொத்த அவ்வொழுக்கம் நிகழாதென்க. (67)

வேறு

மண்டலம்புகழுந்தொல்சீர்வள்ளியஞ்சிலம்பின்மேல்போய்ப்
பிண்டியந்தினையின்பைங்கூழ்ப்பெரும்புனத்திறைவிதன்னைக்
கண்டனன்குமரனம்மாகருதியவெல்லைதன்னிற்
பண்டொருபுடையில்வைத்தபழம்பொருள்கிடைத்தவாபோல்.

இ - ள். குமரன்-அச்சுப்பிரமணியப்பெருமான், மண்டலம் புகழும் தொல் சீர் வள்ளியஞ்சிலம்பின் மேல் போய்-பூமண்டலத்தாராற் புகழப்படுகின்ற பெரிய சிறப்பினையுடைய வள்ளி மலையின்மேற்சென்று, பிண்டியந்தினையின்பைங்கூழ் பெரும் புனத்து - (உள்ளே) மாவையுடைய தினையினது பயிரையுடைத்தாகிய பெரியபுனத்தின்கண்ணே, பண்டு ஒரு புடையில் வைத்த பழம்பொருள் - பண்டைகாலத்தே ஓரிடத்தில்வைத்த பழமையாகிய பொருள், கருதிய எல்லை தன்னில் கிடைத்தவாபோல் - (அதுவேண்டுவதான ஆபத்து வந்தபோழ்து வேண்டுமென்று அதனைக்) கருதியவிடத்தில் (அது) கிடைத்தவாறுபோல, இறைவிதன்னைக் கண்டனன்- (யாவர்க்கும்) தலைவியாராகிய அவ் வள்ளியம்மையாரைக் கண்டருளினார். எ - று.

தொல் பழமையெனினுமமையும். அம்மா வியப்புப்பொருள் தரும் இடைச்சொல். பொருள் பொன். கிடைத்தவாபோலென்றதனாற் பண்டு ஓர்புடையில்வைத்து மறந்துவிட்டுப் பின்னரப்பொருள் வேண்டுங்காலத்துக் கண்டெடுத்தவாறுபோலென்று தொனித்தலறிக. அங்ஙனமப்பொருளைக் கண்டெடுப்போன் களிப்பிற்சிறந்திருத்தல்போல முன்னர் அவ்வள்ளியம்மையார் தம்மைச்சேரக்கருதித் தவஞ்செய்தபோது அவ்வரங்கொடுத்துவைத்து இப்போது காமக்கவலையைத் திருவுள்ளத்து வைத்த சுப்பிரமணியப்பெருமானும் அவரைக்கண்டு களிப்பிற் சிறந்தாரென்பது. (68)

பூமஞ்சார்மின்கொலென்னப்பொருப்பினிலேனல்காக்குங்
காமஞ்சாலிளமையாளைக்கடம்பணிகாளைநோக்கித்
தூமஞ்சால்விரகச்செந்தீசுட்டிடச்சோர்ந்துவெம்பி
யேமஞ்சால்கின்றநெஞ்சனிதணினுக்கணியன்சென்றான்.

இ - ள். கடம்பு அணி காளை - கடப்பமலர்மாலையை யணிகின்ற காளையாகிய சுப்பிரமணியப்பெருமான், பூ மஞ்சு ஆர் மின்கொல் என்ன பொருப்பினில் ஏனல் காக்கும் காமம் சால் இளமையாளை நோக்கி - பொலிவாகிய மேகத்திற் பொருந்திய மின்னலோவென்ன அவ்வள்ளிமலையிலுள்ள தினைப்புனத்தைக் காவல்செய்யுங்காமஞ்சான்ற இளமையை யுடைய அவ்வள்ளியம்மையாரைப் பார்த்து, விரகம் தூமம் சால் செம் தீ சுட்டிட சோர்ந்து வெம்பி ஏமம் சால்கின்ற நெஞ்சன் - காமநோயாகிய புகைநிறைந்த செம்மையாகிய அக்கினி சுடச்சோர்ந்து வெம்பிமயக்கநிறைகின்ற நெஞ்சை யுடையவராய், இதணினுக்கு அணியன் சென்றான் - (அவ் வள்ளியம்மையாரிருக்கும்) பரணுக்கு அண்மையராகச் சென்றருளினார். எ - று.

பொருப்புங்கடம்புமேனலும் ஆகுபெயர்கள். காமஞ்சால் இளமையாள் காமவின்பத்தை நுகர்தற்கேற்ற பருவநிறைந்த இளமையாளென்பது. காளைபருவங்குறித்ததோர் உவமவாகு பெயர். நெஞ்சன் அணியன் என்னுங் குறிப்புவினைமுற்றுக்களில் முன்னையது வினையெச்சமாகப் பின்னையது பெயரெச்சமானது.

நாந்தகமனையவுண்கணங்கைகேண்ஞாலந்தன்னி
லேந்திழையார்கட்கெல்லாமிறைவியாயிருக்குநின்னைப்
பூந்தினைகாக்கவைத்துப்போயினார்புளினராணோர்க்
காய்ந்திடுமுணர்ச்சியொன்றுமயன்படைத்திலன்கொலென்றான்.

இ - ள். நாந்தகம் அனைய உண் கண் நங்கை கேள் - வாட்படையை நிகர்த்த (மை) உண்ணும்விழிகளையுடைய

நங்கையே (யான்கூறுவதைக்) கேளாய், ஞாலந்தன்னில் வந்து இழையார்கட்கு எல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னை பூதினை காக்கவைத்து போயினர் - இப்பூமியிலே வந்தகின்ற ஆபரணங்களையுடைய மகடூஉக்களுக்கெல்லாந் தலைவியாகியிருக்கின்ற நின்னைப்பொலிவாகிய தினையைக்காவல்செய்யும்படி வைத்துச்சென்றார் (வேட்டுவர்), அயன் புளினராளோர்க்கு ஆய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும் படைத்திலன் கொல்என்றான் - பிரமதேவன் அவ்வேட்டுவராளோர்க்கு உணர்ச்சியொன்றும் படைத்திலன்போலுமென்று திருவாய் மலர்ந்தருளினர் (சுப்பிரமணியப்பெருமான்). எ - று.

நங்கை அண்மை விளியாதலின் இயல்பானது. நங்கையென்பது பெண்ணைச் சிறப்பிக்கும்பெயர். இறைவியாயிருக்கு நின்னைஎன்றது போழகினலே யாவர்க்குமேம்பாடுற்ற நின்னையென்றபடி. ஆய்ந்திடும் உணர்ச்சியொன்றுமென்றது இது செயற்பாலது இது செய்யாதொழிதற்பாலது என்பதையறியுமறிவு சிறிதுமென்றவாறு. அவ்வேட்டுவர் தலைவியாய நின்னை இவ்வாறு வைத்தமையின் அறிவிலாரென்பதுபட அயன்படைத்திலன்கொலென்றார். (70)

வாரிருங்கூந்தனல்லாய்மதிதளர்வேனுக்குன்றன்
பேரினையுரைத்திமற்றன்பேரினையுரையாயென்னி
னூரினையுரைத்தியூருமுரைத்திடமுடியாதென்னிற்
சீரியநின்சீறூர்க்குச்செல்வழியுரைத்தியென்றான்.

இ - ள். வார் இரும் கூந்தல் நல்லாய் - நீட்சியும் பெருமையுமாகிய அளகத்தையுடையநங்காய், மதி தளர்வேனுக்கு உன்றன்பேரினை உரைத்தி - உள்ளந்தளர்கின்றேனுக்குநினது பெயரினையுரைப்பாய், உன் பேரினை உரையாய் என்னின் ஊரினை உரைத்தி - நினது பெயரை உரையாயாயின் (நினது ஊரினையுரைப்பாய், ஊரும் உரைத்திட முடியா

தென்னில் சீரிய நின் சிறார்க்கு செல் வழி உரைத்தி என்றான் - ஊரையுமுரைக்கமுடியாதாயின் சிறப்பினையுடைய நினது சிற்றாருக்குச் செல்லும்வழியையுரைப்பாயென்று திருவாய்மலர்ந்தருளினர் (சுப்பிரமணியப்பெருமான்). எ-று.

பெருமை மயிர்க்குழற்சியின்பொலிவு. மதி ஈண்டு மனம். மற்று அசைநிலை. களவுகை கோளிலே "தெய்வந்தன்னினெய்தவுங்கிழத்தியி னெய்தவும்படூஉமியற்கைப்புணர்ச்சி" என்று நூலோர் கூறிய இருதிறத்துட்பிற்றிறத்தமையுமாறு சுப்பிரமணியப்பெருமான் வள்ளியம்மையாரைவிளித்து மதிதளர்வேனுக்கு என்று தம்முள்ளக்கருத்தைச் சிறிதுவிளக்கி அவருடைய உள்ளக்குறிப்பறியுமாறு நின்பேரினையுரைத்தி யென்றலாதியவற்றைக் கூறியருளினர்; இயற்கைப்புணர்ச்சி தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சியானேமுடியுமாதலினென்பது. தலைமகளாற்பெறுமியற்கைப்புணர்ச்சிக்குரியவேட்கை யுணர்த்தல் மறுத்தல் உடம்படல் கூட்டம் என்னும் நால்வகையுள் இது வேட்கையுணர்த்தலின்பாற்படுமென்பது. மேல்வருஞ் செய்யுளுமன்னது. (71)

மொழியொன்றுபுகலாயாயின்முறுவலும்புரியாயாயின்
விழியொன்றுநோக்காயாயின்விரகமிக்குழல்வேனுய்யும்
வழியொன்றுகாட்டாயாயின்மனமுஞ்சற்றுநகாயாயிற்
பழியொன்றுநின்பாற்சூழும்பராமுகந்தவிர்தியென்றான்.

இ-ள். ஒன்று மொழி புகலாய் ஆயின் - ஒருசொல்லேனுங் கூறாயாயின், முறுவலும் புரியாய் ஆயின் - (புன்) முறுவலுஞ்செய்யாயாயின், விழி ஒன்று நோக்காய் ஆயின் - கண்ணேக்கொன்று நோக்காயாயின், விரகம் மிக்கு உழல்வேன் உய்யும் வழி ஒன்று காட்டாய் ஆயின் - காமநோய் கைமிக்கு உழல்வேனாகிய யானுய்யும் வழியொன்றைக் காட்டாயாயின், சற்று மனமும் உருகாய் ஆயின் - சிறிதேனும் உள்ளமுருகாயாயின், (யானிக்காமநோயாற்ற

கில்லாது இறந்துபடுதல் திண்ணமாதலின்) பழி யொன்று நின்பாற் சூழும் பரா முகந்தவிர்தி என்றான் - (கொலைப்) பாவமொன்றுநின்கட்சூழும் (ஆதலிற்) பராமுகமாயிருத்தலை யொழிவாயென்று திருவாய்மலர்ந்தருளினர் (சுப்பிரமணியப் பெருமான்). எ - று.

விழி ஆகுபெயர். உம்மையிரண்டும் எச்சவும்மைகள். பராமுகமாயிருத்தல்குறையிரப்பார் கூற்றிலுளத்தைச் செலுத்தாது பிறவழியிற் செலுத்தல். முற்செய்யுளிலுள்ள வாரிருங் கூந்தனல்லாயென்ற விளிப்பெயரை இச்செய்யுளுக்குங் கூட்டிக் கொள்க. (72)

உலைப்படுமெழுகதென்னவுருகியேயொருத்திகாதல்
வலைப்படுகின்றான்போலவருந்தியேயிரங்காநின்றான்
நிலைப்படுமதியப்புத்தேள்கலங்கலம்புனலிற்றோன்றி
யலைப்படுதன்மைத்தன்றேவறுமுகனாடலெல்லாம்.

இ - ள். உலை படு மெழுகது என்ன உருகியே ஒருத்தி காதல் வலை படுகின்றான் போல வருந்தியே இரங்கா நின்றான் - உலையிற்பட்ட அரக்கை நிகர்ப்ப (உள்ளம்) உருகி வள்ளிநாயகியாகிய ஒருத்தியின் காதலாகிய வலையி னகப்பட்டார்போல வருந்தி யிரங்கா நின்றார் (சுப்பிர மணியப்பெருமான்), அறுமுகன் ஆடல் எல்லாம் - அச்சண் முகக்கடவுளது திருவிளையாடலெல்லாம், தலைபடு மதியப் புத்தேள் கலங்கலம்புனலில் தோன்றி அலை படு தன்மைத்து அன்றே - கலைகளோடுபொருந்திய திங்கட்கடவுள் கலங்கலை யுடைய நீரின்கட்டோன்றி அலைதலைப்படுந்தன்மையை யுடைத்தன்றே. எ - று.

உலை கொல்லுலை. ஏகாரங்கள் தேற்றப்பொருள். காதல் ஆசை. வள்ளியம்மையார் காரணமாக உண்டாகிய காதலை

ஒருத்திகாதலென்றார். காமாசையிற்பட்டாரதனின் நின்று மீடற் கருமையின் அக்காதல்வலையாக உருவகிக்கப்பட்டதென்பது. ஆகாயத்திலுள்ள திங்கட்கடவுள் அசையாதிருந்தும் கலங்கல் நீரிற்றோன்றி அந்நீரசைவாற் றானசைவதுபோலிருத்தலை ஒப்ப அகண்டபரிபூரண சச்சிதானந்த சுவரூபராகிய சுப்பிரமனியப் பெருமான் இயற்கையாகவே விருப்பு ஆதியவுயிர்க்குணங்களற்ற வரா இருந்தும் அவ்வள்ளியம்மையார் முற்செய்ததவத்துக் கேற்ற பயனை நுகர்வித்தற் பொருட்டும் அவர்வாயிலாக உலகத்திற்களவொழுக்கம் நிகழ்வித்தற்பொருட்டும் தாமருளினுற் கொண்ட அம்மூர்த்தத்தின்கண்ணே கொண்டவிருப்பு ஆதிய வுயிர்க்குணங்கள் தமக்குள்ளனபோலாக நடித்தருளினு ரென்பது. (73)

செய்யவள்குமரிமுன்னந்திருநெடுங்குமரனின்று
மையலின்மிகுதிகாட்டிமற்றிவைபகருமெல்லை
யெய்யுடனுளியம்வேழமிரிதரவிரலையூத
வொய்யெனவெயினர்சூழவொருதனித்தாதைவந்தான்.

இ - ள். செய்யவள் குமரி முன்னம் திரு நெடும் குமரன் நின்று - (முன்னே) இலக்குமிக்குமகளாகிய அவ் வள்ளியம்மையாரது முன்னிலையில் அழகியநெடிய சுப்பிர மணியப்பெருமானின்று, மையலின் மிகுதி காட்டி இவை பகரும் எல்லை - (தமது) ஆசைமிகுதியைக்காட்டி இவற்றைக் கூறும் போழ்து, எய் உடன் உளியம் வேழம் இரிதர இரலை ஊத ஒய்யென எயினர் சூழ ஒரு தனி தாதை வந்தான் - பன்றிகளோடு கரடிகளும் யானைகளும் ஓடவும் கொம்புவாத்தியமூதவும் ஒய்யென்று வேட்டுவர் சூழவும் (அவ்வள்ளியம்மையாருடைய) ஒப்பற்ற தந்தையாகிய நம்பியரசன்வந்தான். எ - று.

இதுபொழுது நிகழும் ஒழுக்கத்துக்கேற்றபொருளும்பட வள்ளியம்மையாரைக்குமரியென்றும் சுப்பிரமணியப் பெரு

மானைக் குமரன் என்றுங் கூறினுரென்பது. மற்று அசைநிலை. இரலையூதவென்று கருமத்தைக் கருத்தாவாக உரைத்தார்; "செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளத்த லும் வழக்கினுளுரித்தே" என்று ஓத்துண்மையின். ஒய்யென என்பது ஒலிக்குறிப்புப் பொருளைத் தருமிடைச்சொல். விரைவுக் குறிப்பெனினுமமையும். ஒருதனி ஒருபொருட் பன்மொழி. (74)

**ஆங்கதுகாலேதன்னினடிமுதன்மறைகளாக**
**வோங்கியநடுவணெல்லாமுயர்சிவநூலதாகப்**
**பாங்கமர்கவடுமுற்றும்பல்கலையாகத்தானோர்**
**வேங்கையினுருவமாகிவேற்படைவீரனின்ருன்.**

இ - ள். ஆங்கு அது காலே தன்னின் அடி முதல் மறைகள் ஆக - அங்ஙனமச்சமயத்திலேயடியாகிய முதல் வேதங்களாக, ஓங்கிய நடுவண் எல்லாம் உயர் சிவநூலது ஆக - உயர்ச்சியுற்ற இடையெல்லாமுயர்ந்த சிவாகமங்களாக, பாங்கு அமர் கவடு முற்றும் பல் கலை ஆக - பக்கத்திற் பொருந்திய கவடுகளெல்லாம பலகலைகளாக, வேல் படை வீரன் தான் ஓர் வேங்கையின் உருவம் ஆகி நின்ருன் - வேலாயுதத்தையுடைய போர்வீரராகிய சுப்பிரமணியப் பெருமான் தாமோர் வேங்கைமரவுருவமாகி நின்றருளினர். எ - று.

ஆங்கு அசைநிலை யெனினுமமையும். அடி முதல் இருபெயரொட்டு. மறை ஓதுதற்கு அதிகாரிகளல்லாதார்க்கு மறைக்கப் படுவது; மறையென்னும் பகுதியோடு செயப்படுபொருண்மை புணர்த்தும் ஐகாரவிகுதிபுணர்ந்துகெட்டு முடிந்தது. இனி உலோகாயதமத முதலிய பொய்ம்மதங்களை மறுப்பு என்னும் பொருட்கண் மறுவென்னும்பகுதியோடுவினைமுதற்பொருண்மை புணர்த்தும் ஐகாரவிகுதிபுணர்ந்து முடிந்ததெனினுமமையும். அம்மறைகளாவன இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்கு வகைப்படும். சிவநூலது சாதியொருமை. சிவாகமங்களாவன:—

காமிகம் முதல் வாதுள மீறுகிய இருபத்தெட்டு. ஈண்டுப்பல்கலை வேதசிவாகமங்களுக்கு அனுகூல சாஸ்திரங்களாகிய புராணங்கள் மிருதிகள் உபாகங்களாதிய நூல்கள். வேதங்களாதியவை அடியாதியவையாகச் சுப்பிரமணியப்பெருமான் தாமோர் வேங்கைமரமாகி நின்றாரென்றதனாலே அவ்வேதங்களாதியவை யுடலாகத் தாமதற்குயிராகிநின்றாரென்று தொனித்தலுணர்க. ()

கானவர்முதல்வனங்கேகது மெனவந்துதங்கண்
மானினிதன்னைக்கண்டுவள்ளியங்கிழங்குமாவுந்
தேனொடுகடமான்பாலுந்திற்றிகள்பிறவுநல்கி
யேனலம்புனத்தினின்றயாணர்வேங்கையினைக்கண்டான்.

இ - ள். கானவர் முதல்வன் ஆங்கே கதுமென வந்து- வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவன் அங்ஙனம் விரைவில் வந்து, தங்கள் மானினிதன்னை கண்டு - தங்களுடைய மகளாகிய வள்ளியம்மையாரைக் கண்டு, வள்ளியங்கிழங்கும் மாவும் தேன் ஒடு கடமான் பாலும் திற்றிகள் பிறவும் நல்கி-வள்ளிக் கிழங்கையும் தினைமாவையும் தேனோடு காட்டுப்பசுவின் பாலையும் தின்பவை பிறவற்றையுங் கொடுத்து, ஏனலம் புனத்தில் நின்ற யாணர் வேங்கையினை கண்டான்-அத்தினைப் புனத்தினிற்கின்ற அழகாகிய வேங்கைமரத்தைக் கண்டான். எ - று.

ஏகாரம் மொழியீற்றசை. கதுமென என்பது விரைவுக் குறிப்புமொழி. தங்கள் என்று பன்மைபாலிற் கூறியது அவ்வரசனையும் அவன் குலத்தாரையுநோக்கி. தேனொடுகடமான்பால் தேனோடுகூடிய கடமான்பாலென்க; பாலோடு தேன்கலந்து பருகலுண்மையின். பருகுவனவாய தேனையும் பாலையுமொடுக் கொடுத்துக் கூட்டினாரெனினுமமையும். திற்றிகள் பிறவாவன தோரை ஐவனம் தினை இவற்றின் மூரலும் மானிறைச்சியாதியவு மென்பது. திற்றிகள் என்பது ஈண்டு உண்பனதின்பனவாதிய மிசைபனவையாவைக்கும் பொதுவாய்நின்றது. அவ்வரசன் மகண்

மீது மிக்க காதலையுடையனாதலின் மகளைக்கண்டு வேண்டிய கொடுத்தபின்னர் வேங்கைமரத்தைக் கண்டானென்பது. (76)

ஆங்கவனயலாய் நின்றவடுதொழின்மறவரானோர்
வேங்கையினிலைமைநோக்கிவிம்மிதநீரராகி
யீங்கிதுமுன்னுற்றன்றுலித்துணைபுகுந்தவாற்றாற்
றீங்குவந்திடுதறிண்ணமென்றனர்வெகுளித்தீயார்.

இ - ள். ஆங்கு அவன் அயல் ஆய் நின்ற அடு தொழில் மறவரானோர் - அங்ஙனம் அவ்வேட்டுவராசனுக்குப் பக்கத்தாராகி நின்ற கொல்லுந்தொழிலையுடைய வேட்டுவரானோர், வேங்கையின் நிலைமை நோக்கி விம்மித நீரர் ஆகி - (ஆண்டுப் புதிதாகத் தோன்றிய) வேங்கைமரத்தினது நிலைமையைப் பார்த்து அற்புதத்தன்மையராகி, வெகுளி தீயார் - கோபமாகிய அக்கினியைக்கொண்டவராய், ஈங்கு இது முன் உற்றன்று - இங்ஙனம் இம்மரமுன்னே பொருந்தியதன்று, இத்துணை புகுந்தவாற்றால் தீங்கு வந்திடுதல் திண்ணம் என்றனர் - இப்போழ்து சார்ந்தவாற்றினாற் றீங்குவந்து சார்தல் நிச்சயமென்றார்கள். எ - று.

அயல் ஆகுபெயர். அடுதொழில் முக்காலவினைத்தொகை. நிலைமை ஈண்டுத்தன்மை. உற்றதெனற்பாலது உற்று எனத் தொகுக்கும்வழித் தொகுத்தவாறு. ஆல் அசைமொழி. துணை ஈண்டுப்பொழுதளவு. நூதனமாகிய தோற்றங்கள் பெரும்பாலுந் தீமைவருதற்கு அறிகுறியென்பவாதலின் தீங்குவந்திடுதல் திண்ணமென்றார் வேட்டுவர். தீயாரென்னுங் குறிப்புவினைமுற்று வினை எச்சமானது. (77)

எறித்தநக்கதிரைமாற்றுமிநநிறக்கனியையபின்னே
முறித்திடுவீர்களோமபார்முநலொடுவீரச்சூழப்
பறித்திடுவீர்களோமபார்பரமரையைக்கனிச்சிநன்றால்
தறித்திடுவீர்களென்பார்தாழ்க்கலீர்சற்றுமென்பார்.

இ - ள். எறித்தரு கதிரை மாற்றும் இரு நிழல் கணியை - எறித்தலைச் செய்கின்ற (சூரிய) கிரணத்தை நீக்குகின்ற பெருமையாகிய நீழலையுடைய இவ்வேங்கைமரத்தை, இன்னே முறித்திடுவீர்கள் என்பார் - இப்பொழுதே முறித்திடுவீர்களென்று சொல்லுவார், முதல் ஒடு வீழ சூழ பறித்திடுவீர்கள் என்பார் - (அது) வேரோடு விழும்படி (அதனது அடியைச்) சூழப் பூமியைத் தோண்டுங்களென்று சொல்லுவார், பராரையை கணிச்சிதன்னால் தறித்திடுவீர்கள் என்பார் - (அதனது) பருத்தஅடியை மழுக்களினாலே தறித்திடுவீர்களென்று சொல்லுவார், சற்றும் தாழ்க்கலீர் என்பார் - (இவற்றுளொன்றைச் செய்யச்) சிறிதுந் தாழ்த்தலைச்செய்யாதீர்களென்று சொல்லுவார் (அவ்வேட்டுவர்.) எ - று.

எறித்தல் ஒளிவீசல். இன்னே என்பது இப்பொழுதே என்னும்பொருளைத் தருமோரிடைச்சொல். பராரை, கோழரை முன்னரை பொரியரைபோல அரையின் பேதமன்று; யாதாயினு மடி பருமையுறுமாயிற் பராரை யெனப்படுமென்பது. (78)

இங்கிவையுரைக்குந்தீயோர்யாரையும்விலக்கிமன்ன
னங்கைதன்வதனம்பாராநறுமலர்வேங்கையொன்று
செங்குரலேனற்பைங்கூழ்செறிதருபுனத்தின்மாடே
தங்கியதென்னைகொல்லோசாற்றுதிசரதமென்றான்.

இ - ள். மன்னன் - வேட்டுவராசன், இங்கு இவை உரைக்கும் தீயோர் யாரையும் விலக்கி - இங்கேயிவற்றைச் சொல்லுகின்ற மறவரெல்லவரையும் (இதனையொன்றுஞ் செய்யன்மின் என்று அவர் முயல்வகையைத்) தடுத்து, நங்கைதன் வதனம் பாரா - வள்ளிநாயகியாருடைய திருமுகத்தைப் பார்த்து, நறு மலர் வேங்கை ஒன்று செம் குரல் ஏனல் பைங்கூழ் செறிதரு புனத்தின்மாடே தங்கியது

என்னை-நறுமணம்பொருந்திய மலர்களையுடைய இவ்வேங்கை மரமொன்று சிவந்த கதிர்களைக்கொண்ட தினைப்பயிர் நெருங்கிய இப்புனத்திலே (முன்னொருபோது மில்லாதது இப்போது புதிதாக உண்டாயிற்று) இது உண்டாதற்குக் காரணமென்னை, சரதம் சாற்றுதி என்றான் - (மகளே) உண்மையை எமக்குக்கூறுவாய் என்றான். எ - று.

தங்கியது என்னை என்பதற்கு சார்ந்துநிற்கின்றது இஃது என்னை (ஈதோரற்புதமாயிருக்கின்றது!) என்று பொருளுரைப்பினுமமையும். அப்பொருள் கூறுமிடத்து சரதம் சாற்றுதி என்றதற்கு இதன்வருகைக் காரணத்தைச் சரதமாகச்சாற்றுதி என்று பொருளுரைக்க. தங்கியது ஆகுபெயர். கொல்லு மோவும் அசைமொழிகள். "கொல்லேயையும்" என்றும் "பிரிநிலை...... ஓகாரம்மே" என்றுமெழுந்த தொல்காப்பியச் சூத்திரங்களால் அவை அசைநிலையாதல் பெறப்பா டின்றாலோவெனின் "அவ்வச் சொல்லிற்கு" என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படுதலின் அதுகடா வன்றென்க. (79)

தந்தையாங்குரைத்தல்கேளாத்தையலும்வெருவியீது
வந்தவாறுணர்கிலேன்யான்மாயம்போற்றோன்றிற்றையா
முந்தைநாளில்லாதொன்றுபுதுவதாமுளைத்ததென்னுச்
சிந்தைமேனடுக்கமெய்தியிருந்தனன்செயலிதென்றாள்.

இ - ள். தந்தை ஆங்கு உரைத்தல் கேளா தையலும் வெருவி - (தமது) தந்தையாகிய நம்பியரசன் அங்ஙனங் கூறுவதைக்கேட்டு அவ்வள்ளிநாயகியாரும் அச்சமுற்று, யான் ஈது வந்தவாறு உணர்கிலேன் - யானிவ்வேங்கைமர முண்டாகிய காரணத்தையறிகிலேன், ஐயா மாயம் போல் தோன்றிற்று - (என்) ஐயனே! (இதுஓர்) மாயம்போலத் தோன்றியது, முந்தை நாள் இல்லாது ஒன்று புதுவது ஆ முளைத்தது என்னு சிந்தைமேல் நடுக்கம் எய்தி இருந்தனன்

செயல் இது என்ருள்-நெருநலில்லாது ஈதொன்று இன்று புதியதாகத் தோன்றிற்றென்று மனத்தில் நடுக்கமடைந்திருக்கின்றேன் (யானறி) செயலிதுவேயென்று சொன்னுர். எ-று.

உம்மை உயர்வுசிறப்பும்மை. தந்தையானவன் சரதஞ்சாற்றுதியென்ன வள்ளியம்மையார் வெருவியதெற்றுக்கெனின், என்முன் நீண்டுநின்று தன்மையலையுரைத்த தலைவரை இவன் கண்டானேவென்னும் ஐயத்தினுலென்பது. அங்ஙனமையமுற்ருர் ஈதுவந்தவாறுணர்கிலேன் யான் மாயம்போற்ருேன்றிற்றையா என்றுத்தாமுரைத்ததென்னை யெனின் அவன் வினுஅயவுடனுராயாதையங்கொண்டு வெருவிப் பின்னராய்ந்து கண்டானுயின் இவன்வதனத்திற் சினக்குறிப்புத்தோன்றும் அஃதின்றிப் பண்டுபோல மகிழ்ச்சிக்குறிப்பே தோன்றியிருத்தலினுற் கண்டிலனென்றுதேறி அவ்வுத்தாமுரைத்தாரென்பது. அஃதொக்கும் கண்டிலனென்று தேறியவழியும் உண்மைகூருது மறைத்துரைத்தலென்னையெனின் அத்தலைவராகிய சுப்பிரமணியப்பெருமான் மீதுகொண்ட அன்பினுனென்க. அங்ஙனமாயின் சுப்பிரமணியப்பெருமான் மையலால்வாடி இரங்கிக்கூறுங் கூற்றுக்கள்போல அவ்வள்ளியம்மையார்மாட்டுத் தோன்றினவல்லவே யெனின், பெண்பாலார் எவ்வளவு காமநோயையுழப்பினும் ஆண்பாலார் போலத் தாங்ககில்லாது விரைவில் வெளிப்படுக்குந்தன்மையிலராய வன்மைக்குணமுடைய ராதலினவை தோன்றினவல்லவென்க. அங்ஙனங் காமநோயைத் தாங்கிநிற்கும்வன்மையுடையரென்பது "கடலன்ன காமமுழந்துமடலேருப் பெண்ணிற் பெருந்தக்கதில்" என்பதனுனுணர்க். அவ்வள்ளியம்மையாருக்கு அன்பு தோன்றிலையெனின் அகத்திணையின்பாற்படாது வழுவாமென்பது. மாயம் இல்பொருளுள்பொருளாயும் ஓர்பொருள் மற்ருேர் பொருளாயுந் தோன்றலாதியவை. இல்லாது முளைத்தது என வினையும். இல்லாதவொன்று எனற்பாலது இல்லாதொன்று எனத் தொகுக்கும் வழித்தொகுத்தது எனக்கொண்டு பொருளுரைப்பினுமமையும். செயல் ஈண்டுத்தன்மை. (80)

வேறு

என்றிவைசொற்றபினேந்திழையஞ்சே
னன்றிவண்வைகுதிநாண்மலர்வேங்கை
யின்றுணையாயிவணெய்தியதென்னுக்
குன்றுவன்வேடர்குழாத்தொடுபோனன்.

இ - ள். என்று இவை சொற்றபின்-என்று இவற்றை (அவ்வள்ளியம்மையார்) உரைத்தபின்னர், குன்றுவன் - வேட்டுவராசனானவன், ஏந்து இழை அஞ்சேல் - ஏந்துகின்ற ஆபரணத்தையுடையாய் அஞ்சாதே, இவண் நன்று வைகுதி - இங்ஙனஞ் சுகமாயிரு, இவண் நாள் மலர் வேங்கை இன் துணை ஆய் எய்தியது என்னு - இவ்விடத்தே புதுமலர்களையுடைய இவ்வேங்கை மரமானது (நினக்கோர்) இனிய துணையாய்த் தோன்றியதென்றுரைத்து, வேடர் குழாத்தொடுபோனன் - வேட்டுவர் கூட்டத்தோடு சென்றான். எ - று.

ஏந்திழை வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. நன்று வைகுதி என்றதற்கு அச்சத்தால் துக்கமுறுதலையொழித்து மகிழ்ச்சியுற்றிருப்பாயென்றவாறு. நாண்மலர் மலருங் காலத்திலே அன்று அன்று மலருமலர். இனிமை ஈண்டு நன்மை. (81)

போனதுகண்டுபுனத்திடைவேங்கை
யானதொர்தன்மையையையனகன்று
கானவர்தம்மகள்காண்வகைதொல்லை
மானுடநல்வடிவங்கொடுநின்றான்.

இ - ள். போனது கண்டு-அவ்வேட்டுவராசன் சென்றதைக்கண்டு, ஐயன் - சுப்பிரமணியப்பெருமான், புனத்திடை வேங்கை ஆனது ஓர் தன்மையை அகன்று - அத்தினைப்

புனத்தின்கண்ணே வேங்கைமரமானதாய ஒப்பற்ற தன்மையை நீங்கி, கானவர்தம் மகள் காண்வகை - வேட்டுவர்மகளாகிய அவ்வள்ளியம்மையார் காணும்படி, தொல்லை நல் மானுட வடிவம் கொடு நின்றான் - முன்னர்க்கொண்டு நின்ற அழகிய மானுடவடிவத்தைக் கொண்டு நின்றருளினார். எ - று.

போனது ஆனது என்பவை முதல்குறைந்த இன்னென்னும் இறந்தகால இடைநிலைபெற்ற தொழிற்பெயர்கள். வேங்கையானதொர் தன்மையை ஐயனகன்று என்றதனானே அவ்வேங்கை மரவடிவமுற்றும் நீங்கியதென்று கொள்ளற்க; முன்னர் வேதங்களாதியவை அவ்வேங்கைமரத்தின் அடியாதியவையாகச் சுப்பிரமணியப்பெருமான் அதற்குயிராகி நின்றாரென்று தொனித்தலினால் அவ்வேங்கைமரவடிவம் நிற்கத் தாம் மானுடவடிவங் கொண்டாரென்பது தொனித்தலினானென்பது. அங்ஙனமாயின் அவ்வேங்கைமரமாகிய வுடலுக்கு உயிராய சுப்பிரமணியப் பெருமான் அதனினின்றும் நீங்கவே அது பட்டழிந்ததாயிற்றே வெனின், சுப்பிரமணியப்பெருமான் அதனிடத்துத் தமது கலையின்பன்மையுள் ஒன்றைவைத்து நீங்கினாரென்க. இங்ஙனம் பொருள்கொள்ளுவதெற்றாலெனின் முன்னர்வந்து அவ்வேங்கை மரத்தைக்கண்ட வேட்டுவர்கள் அற்றைப்பொழுது பின்னர்வந்த காலை அதனைக்காணாதொழியின் அவர்களிடத்து அதனைக் குறித்தவுரைகள் பற்பல நிகழுமே அவ்வுரை நிகழாமையினென்பது. (82)

வேறு

தொல்லையினுருக்கொடுதோன்றிநின்றவே
ளெல்லையின்மையலுற்றிரங்குவானென
வல்லிவர்கூந்தலாளருகுநிற்புறீஇ
நல்லருளாலிவைநவிறன்மேயினன்.

இ - ள். தொல்லையின் உரு கொடு தோன்றி நின்ற வேள் - முன்னர்வடிவத்தைக்கொண்டு தோன்றிநின்ற அச்

சுப்பிரமணியப்பெருமான், எல்லை இல் மையல் உற்று இரங்குவான் என - அளவையில்லாதகாமாசையெய்தி (வருத்தத்தால்) இரங்குவான்போல, அல் இவர் கூந்தலாள் அருகு சிற்புறீஇ - இருளின் தன்மைதங்கிய அளகத்தையுடைய அவ்வள்ளியம்மையாருக்குப் பக்கத்தினின்று, நல் அருளால் இவை நவிறல் மேயினன்-நல்ல திருவருளினாலே யிவற்றைத் திருவாய் மலர்ந்தருளலுற்றார். எ - று.

அல் ஆகுபெயர். நல்லருளாலிவைநவிறன்மேயினனென்றதனும் சுப்பிரமணியப்பெருமான் இயற்கையாகக் காமாசைமுதல் வுயிர்க்குணங்களற்றவரென்றும் அவ்வள்ளியம்மையாருக்கும் அவர்வாயிலாக உலகத்துக்கும் . அருள்செய்யவேண்டி அவற்றைத் தம்முட்கொண்டருளினரென்றுந் தொனித்தலுணர்க. (83)

கோங்கெனவளர்முலைக்குறவர்பாவையே
யீங்குனையடைந்தனனெனக்குநின்னிரு
பூங்கழலல்லதுபுகலொன்றில்லையா
னீங்கலனீங்கலனின்னையென்றுமே.

இ - ள். கோங்கு என வளர் முலை குறவர் பாவையே - கோங்கரும்புபோல வளருமுலையையுடைய வேட்டுவர் பாவாய், ஈங்கு உனை அடைந்தனன் எனக்கு - இங்ஙனம் நின்னையெய்தினேனாகிய எனக்கு, நின் இரு பூ கழல் அல்லது புகல் ஒன்று இல்லை - நின்னுடைய இரண்டாகிய பூவை நிகர்த்த அடிகளையன்றி வேறுதஞ்சமொன்றில்லை, நின்னை என்றும் நீங்கலன் நீங்கலன் - நின்னை எந்நாளும் பிரியேன் பிரியேன். எ - று.

கோங்கு பொருளாகுபெயர். பாவை உவமவாகுபெயர். அடைந்தனன் தன்மையொருமைத்தெரிநிலைவினைமுற்றாலணையும் பெயர்; அவ் வினைமுற்றாகக்கொண்டு அடைந்தேனென்று

பொருள்கூறினுமமையும். பூ தாமரைப்பூ; "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்பதனானுணர்க. ஆல் அசைமொழி. நீங்கல னீங்கல னென்றடுக்கியது வற்புறுத்தற்பொருட்டு. (84)

மாவியல்கருங்கணாய்மற்றுநின்றனைப்
பாவியனீங்கியேபடரவல்லனோ
வாவியையகன்றுமெய்யறிவுகொண்டெழீஇப்
போவதுகொல்லிதுபுகலவேண்டுமோ.

இ - ள். மா இயல் கரும் கணாய் - மான் நோக்கின் தன்மையியன்ற கருமையாகிய கண்ணினையுடையாய், நின்றனை பாவியன் நீங்கியே படர வல்லனோ - உன்னைப் பாவியேனாகியயான் நீங்கிச்செல்ல வல்லமையுடையேனோ, மெய் ஆவியை அகன்று அறிவு கொண்டு எழீஇ போவது கொல் - உடலானது உயிரை நீங்கி அறிவு பெற்றுக்கொண் டெழுந்துபோவது (ஆகுமோ), இது புகல வேண்டுமோ - ஈதுஞ்சொல்லவேண்டுமோ. எ - று.

மா மான்நோக்கத்திற்காய் மீண்டந்நோக்கின் தன்மைக் காதலின் இருமடியாகுபெயர். மிருகமென்னும் விலங்கின்பொதுப் பெயர் மானுக்கும் பெயரானதுபோல ஈண்டு மா என்னும் விலங்கின் பொதுப்பெயரும் மானுக்கானதென்க. மாவியல் கருங்கணாய் என்றதற்கு கருமைபொருந்தியகருங் கண்ணை யென்றுரைப்பினுமமையும்; ஈண்டுக் கருங்கணென்பது விழிச் சாதியினியல்பைக்குறிக்க மா என்பதே மிக்ககருமையை யுணர்த்திற்றென்பது. "மைத்தழையாநின்றமாமிடற்றம்பலவன்" என்றதிற்போலவென்க; "கருங்கண்ணனையறியா" என்றதிற் போலக் கருங்கணென்பது விழியென்னும் பொருட்டாகின்ற தெனினுமமையும். மற்று அசைநிலை. பாவியன் என்பது விரும்பியதை எளிதிற்பெறாது வருந்தும் நல்லூழில்லேன் என்றவாறு. வல்லனோ என்றதற்கு வல்லனல்ல னென்றும் வேண்டுமோ என்றதற்கு வேண்டுவதில்லை என்றும் பொருள்

போந்தமையின் ஓகாரங்களெதிர்மறைப்பொருள். ஆவியை யகன்று மெய்யறிவுகொண்டெழீஇப் போவது கொல்லிது புகலவேண்டுமோ எனவே நின்னைப்பிரிந்துயிர் வாழேனென்பது தொனித்தலுணர்க. போவது எதிர்கால இடைநிலைபெற்ற தொழிற்பெயர். போவதுகொல் என்றதற்கு போவதில்லை யென்று பொருள்படுதலின் கொல் ஈண்டு எதிர்மறைப்பொருளில் வந்தது; கொல் எதிர்மறைப் பொருளையுந்தருதல் முன்னர் "இங்கிவையுரைக்குந்தீயோர்" என்ற (79) செய்யுளில் கொல் அசைநிலையுமாதலைத்தந்தவிதியான் அமையுமென்பது. (85)

மைதிகழ்கருங்கணின்வலைப்பட்டேற்கருள்
செய்திடலன்றியேசிறைக்கணித்தனை
யுய்திறம்வேறெனக்குளகொலீண்டுநின்
கைதனிலிவ்வுயிர்காத்துக்கோடியால.

இ - ள். மை திகழ் கரும் கணின் வலை பட்டேற்கு - கினது விளங்குகின்ற கருங்கண்ணாகிய வலையிலகப்பட்டே னுக்கு, அருள் செய்திடல் அன்றியே சிறைக்கணித்தனை - அருள்புரிந்திடுதலன்றிப் புறக்கணித்தனை, எனக்கு உய் திறம் வேறு உளகொல் - எனக்கு உய்யும்வகை வேறுமுளவோ, ஈண்டு இவ் வுயிர் நின்கைதனில் காத்துக்கோடி - இங்ஙனம் (எனது) இவ்வுயிர் நின்கையில் (தந்தேன்) இரக்ஷித்துக் கொள்ளாய். எ - று.

மைதிகழ்கருங்கண் என்றதற்குக் கருமைவிளங்குகின்ற கருங்கண்ணென்றுரைப்பினுமமையும்; ஈண்டும் கருங்கண் ணென்றதற்கு முன்னுரைத்ததுரைக்க. "காய்சினவேலன்ன மின்னியல்கண்ணின் வலைகலந்து வீசினபோது" என்றதிற் போலக்கண்ணின்வலையென்று உருவகிக்கப்பட்டது. ஏகாரம் மொழியீற்றசைமொழி. கொல் ஈண்டும் எதிர் மறைப்பொருள் தந்தது. பெரும்பாலும் ஒருவரீதல் ஒருவர்கரத்திலாதலின் கைதனிலிவ்வுயிரென்றார். மைதிகழ்கருங்கணின் வலைப்பட்

டேற்கு என்றதனுனே அவ்வள்ளியம்மையார் அச்சுப்பிரமணியப் பெருமானை முன்னர் நோக்கியிருக்கவேண்டுமே அந்நோக்கியாது நோக்கெனின். ஏதிலார்போலநோக்கும் பொதுநோக்கென்பது "ஏதிலார்போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணேயுள" என்பதனுனே அவரதன்புடைமையும் விளங்கு மென்க. (86)

**கோடிவர்நெடுவரைக்குறவர்மாதுநீ**
**யாடியசுனையதாயணியுஞ்சாந்தமாய்ச்**
**சூடியமலர்களாய்த்தோயப்பெற்றிலேன்**
**வாடினனினிச்செயும்வண்ணம்யாவதே**

இ - ள். கோடு இவர் நெடு வரை குறவர் மாது - கொடுமுடிதங்கிய நெடியமலையில்வாழும் வேட்டுவருடைய மகளே, நீ ஆடிய சுனையது ஆய் - நீ (குடைந்து) ஆடுகின்ற சுனையாய் (ஆவது), அணியும் சாந்தம் ஆய் - (நீ) அணிகின்ற சாந்தமாய் (ஆவது), சூடிய மலர்கள் ஆல் - (நீ கூந்தலிற்) சூடுகின்றமலர்களால் (ஆவது), தோய பெற்றிலேன் - (நின்னைச்) சேரப்பெற்றிலேன், வாடினன் இனி செயும் வண்ணம் யாவது - (காமக்காழ்ப்பால்) வாட்டமுறுகின்றேனுகிய யான் இனிச்செய்யும்வண்ணம் யாது. எ - று.

விகற்பப்பொருளைத் தரும் ஆவது என்னுமிடைச்சொற்கள் விகாரத்தாற்றொக்கன. ஆடிய சுனையதா யணியுஞ் சாந்தமாய்ச் சூடிய மலர்களாய்த் தோயப்பெற்றிலேன் என்றது அங்ஙனம் நின்னைச்சேரும் அஃறிணைப்பொருள்களும் நினது சார்வால் மேன்மையுறுகின்றன; யானஃதடையாது வருத்தமுறுகின்றேனுதலின் என்னிலும் அவையே சிறந்தனவென்றபடி. இங்ஙன முயிரில்லா அஃறிணைப்பொருள்களை இன்பத்தை நுகர்வது போலக் கூறுவதும் பிறவும் அகத்திணையில் வழக்காகும்; அது வழுவமைதியின்பாற்படுமென்பது. தோயப்பெற்றிலேனென்றதை வினைமுற்ருகக்கொள்ளாது வினைமுற்றுவினையெச்சமானதெனக்

கொண்டு சேரப்பெற்றிலேனாய் என்றுபொருளுரைப்பினு மமையும். (87)

புல்லிதுபுல்லிதுபுனத்தைக்காத்திடன்
மெல்லியல்வருதிபால்விண்ணின்பால்வரும்
வல்லியர்யாவரும்வணங்கிவாழ்த்திடத்
தொல்லியல்வழாவளந்துய்ப்பநல்குவேன்.

இ - ள். மெல் இயல் - மென்மையாகியசாயலினையுடையாய், புனத்தை காத்திடல் புல்லிது - (எவ்வகைப்பட்ட பெண்களினுஞ்சிறந்தநீ) இத்தினைப்புனத்தைக்காத்தல் புன்மையுடைத்து புன்மையுடைத்து, விண்ணின்பால்வரும் வல்லியர் யாவரும் வணங்கி வாழ்த்திட - தேவலோகத்தின் கண்டோன்றிய கொடியைநிகர்த்தபெண்கள் யாவரும் வணங்கித்துதிக்க, தொல் இயல்வழா வளம் துய்ப்ப நல்குவேன் - பெருமையாகிய இடல்தவறாத செல்வத்தை அனுபவிக்கத்தருவேன், வருதி - (என்னோடு) வருவாய். எ - று.

புல்லிது புல்லிது என்று அடுக்கியது இழிவரலைவற்புறுத்தற்பொருட்டு. மெல்லியல் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ஆல் அசைமொழி. (88)

என்றிவைபலபலவிசைத்துநிற்றலுங்
குன்றுவர்மடக்கொடிகுமரன்சிந்தையி
லொன்றியகருத்தினையுற்றுநோக்கியே
நன்றிவர்திறமெனநாணிக்கூறுவாள்.

இ - ள். என்று இவை பல பல விசைத்து நிற்றலும் - என்று இவை பல பலவற்றைச் சுப்பிரமணியப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிநிற்றலும், குன்றுவர் மடம் கொடி குமரன் சிந்தையில் ஒன்றிய கருத்தினை உற்று நோக்கி - வேட்டுவருடையமகளாகிய வள்ளியம்மையார் அச்சுப்பிர

மணிபப்பெருமானது திருவுள்ளத்திற்பொருந்திய குறிப்பை யுற்றுநோக்கி (அறிந்து) இவர் திறம் நன்று என நாணி கூறுவாள் - இவருடையதன்மை நன்று என்று நாணிக் கூறுவார். எ - று.

பல பல, பலதிறமாகிய பலவார்த்தைகள். கொடி ஆகுபெயர். உற்று நோக்கலாவது உலகமுழுதுமாளுமரசராய இவரிங்ஙனங் கூறுவது மெய்ம்மையோ வம்புமாக்கள்கூறும் பெற்றியான பொய்ம்மையோ என்றுமிக ஆராய்தல்; மைதிகழ்கருங்கணின் வலைப்பட்டேற்கு என்றும், நீயாடியசுனையதாயணியுஞ்சாந்தமாய்ச் சூடியமலர்களாய்த்தோயப்பெற்றிலேன் என்றங் கூறியதாற் சுப்பிரமணியப்பெருமான் தன்மீதுகாமாசைகொண்டகருத்தை வெளிப்படுத்தியருளினாராதலின் இவருள்ளக்கருத்து தன்மீது காமாசையுற்றகருத்தோ அன்றோவென்று மிகவாராய்தலன் றென்பது. எ அசைமொழி. நன்று நன்றன்று என்னும் பொருள்தருதலிற்குறிப்புமொழி. (39)

இழிதலமாகியவெயினர்பாவைநான்
முழுதுலகருள்புரிமுதல்வர்நீரெனைத்
தழுவுதலுன்னியேதாழ்ச்சிசெப்புதல்
பழியதுவேயலாற்பான்மைத்தாகுமோ.

இ - ள். நான் இழிதலம் ஆகிய எயினர் பாவை - யான் இழிந்தகுலத்தாராகியவேட்டுவரதுமகள், நீர் முழுது உலகு அருள் புரி முதல்வர் - நீவிர் உலக முழுதையுங் காத்தருள்கின்ற அரசர், எனை தழுவுதல் உன்னியே தாழ்ச்சி செப்புதல் - (அங்ஙனம் உயர்குலத்தராகிய நீவிர் இழிதலத் தேனாகிய) என்னைச் சேரக்கருதித் தாழ்ச்சியுரைத்தல், பழியது (ஆதும்) ஏ அலால் பான்மைத்து ஆகுமோ - பழியுடைத்தாகுமேயன்றிக் குணமுடைத்தாகுமோ. எ - று.

குலம் என்னும் பண்பு பண்பியினின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. பாவை என்பது தன்மையிலும் முதல்வர்

என்பது முன்னிலையிலும் வந்தமையின் ஓரிடம் பிறவிடந்தழுவியவழுவமைதியென்க; மேல்வருஞ் செய்யுளிற்பேதை இறைவர் என்பவுமன்ன தாழ்ச்சிசெப்புதல் கோங்கெனவளர்முலைக்குறவர் பாவையே யீங்குனையடைந்தனனெனக்கு நின்னிரு பூங்கழலல்லது புகலொன்றில்லை என்பதாதியவற்றைக் கூறித் தம்மைத் தாழ்த்துரைத்தல். ஆகும் என்பது முன்னுங் கூட்டப்பட்டது. ஏகாரந்தேற்றப்பொருட்டு. பான்மைத்தாகுமோ என்பதற்குக் குணமுடைத்தாகாது என்றுபொருள் படுதலின் ஓகாரமெதிர் மறைப்பொருட்டு. (90)

இலைமுதிரேனல்காத்திருக்கும்பேதையா
னுலகருளிறைவர்நீருளமயங்கியென்
கலவியைவிரும்புதல்கடனதன்றரோ
புலியதுபசியுறிற்புல்லுந்துய்க்குமோ.

இ-ள். யான் இலை முதிர் ஏனல் காத்து இருக்கும் பேதை - யான் இலைகண் முதிர்ந்ததினைப்பயிரைக்காத்திருக்கும்பேதை, நீர் உலகு அருள் இறைவர் - நீவிருலகத்தைக்காத்தருளுமிறைவர், உளம் மயங்கி என் கலவியை விருப்புதல் கடனது அன்று - (அங்ஙனமாகியநீவிர்) மனமயங்கி அங்ஙனமாகிய வென்னிற் புணர்ச்சியை விரும்புதல் முறைமையன்று, புலியது பசி உறில் புல்லும் துய்க்குமோ - புலியானதுபசியுற்றாற் புல்லையுமிசையுமோ. எ - று.

முதிர்தல் முற்றல். ஏனல் ஆகுபெயர். பேதை என்றது ஈண்டு பருவங்குறியாது பெண்ணென்னும் பொருட்டாகின்றது. முற்செய்யுளில் இழிகுல மாகியவெயினர் பாவைநான் முழுதுலகருள்புரிமுதல்வர்நீர் என்றுகூறி ஈண்டும் இலைமுதிரேனல்காத்திருக்கும் பேதையான் உலகருளிறைவர் நீரென்றது தமது எளிமையையும் அவரது உயர்வையும்வற்புறுத்திக்காட்டி அவரதாற்றாமையைச்சிறிதாற்றுவிக்கும் பொருட்டென்பது. அரோ அசைமொழி. புலியதுபசியுறிற்புல்லுந்துய்க்குமோ என்றது புலி

பசியுற்றுற்றனக்கேற்ற விலங்கின் விடக்கை (ஊன்) உண்ணுமே யன்றிப்புல்லையுண்ணுது. உண்ணின் அதனது பெருமைக்குத் தக்கதன்று; அதுபோல உலகருளிறைவராய நீவிர் காமவேட்கை யுற்றால் நுமக்கேற்ற உயர்குலஸ்திரியின்கலவியைவிரும்புதலன்றி இழிகுலஸ்திரியாகிய என் கலவியை விரும்புதல் நும்பெருமைக் குத்தக்கதன்றென்றபடி. உம்மை இழிவுசிறப்புப்பொருடந்தது. ஓகாரம் ஈண்டுமெதிர் மறைப்பொருட்டு. (91)

வேறு

என்றிவைபலப்பலவுமேந்திழையியம்பா
நின்றபொழுதத்திலவணெஞ்சம்வெருக்கொள்ள
வென்றிகெழுதொண்டகம்வியன்றுடியியம்பக்
குன்றிறைவன்வேட்டுவர்குழாத்தினெடும்வந்தான்.

இ-ள். என்று இவை பலப்பலவும் ஏந்து இழை இயம்பா நின்ற பொழுதத்தில் - என்று இவைபலப்பல வற்றையும் ஏந்துகின்ற ஆபரணத்தை யுடையராகிய அவ் வள்ளியம்மையார் கூறிநிற்கின்றசமயத்தில் அவள் நெஞ்சம் வெருக்கொள்ள - அவரதுள்ளமஞ்சுதல்கொள்ள, வென்றி கெழு தொண்டகம் வியன் துடி இயம்ப குன்று இறைவன் வேட்டுவர் குழாத்தினெடும் வந்தான் - வென்றிபொருந்திய குறிஞ்சி நிலப்பறையும் பெரியதுடியுமொலிக்க மலையிலுள்ள வேட்டுவராசன் வேட்டுவர் கூட்டத்தோடும் (ஆண்டு) வந்தான். எ - று.

பலப்பல என்றதற்கு முன்னர் (39) பலபலவென்றதற்குரைத்த துரைக்க. ஏந்திழை வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வெரு முதனிலைத் தொழிற்பெயர். குழாத்தினெடு என்றதில் அத்துச்சாரியையின் அகரங்கெட்டது இது புறனடையாற்கொள்ளப்படும். (92)

வந்தபடிகண்டுமடமானடுநடுங்கிச்
சிந்தைவெருவிக்கடவுள்செய்யமுகநோக்கி
வெந்திறல்கொள்வேடுவர்கள்வெய்யரிவணில்லா
துய்ந்திடநினைந்துகடிதோடுமினியென்ருள்.

இ - ள். மடமான் வந்த படி கண்டு நடுநடுங்கி சிந்தை வெருவி கடவுள் செய்ய முகம் நோக்கி - மடமையையுடைய மான்போலும் வள்ளிநாயகியார் (வேட்டுவராசனுண்டு) வந்தவாறுகண்டு நடுநடுங்கி நெஞ்சமஞ்சி அச்சுப்பிரமணியப் பெருமானுடைய செம்மையாகிய திருமுகத்தைப்பார்த்து, வெம் திறல் கொள் வேடுவர்கள் வெய்யர்-வெய்ய திறலினைக் கொண்ட இவ்வேட்டுவர்கள் கொர்டியர்கள், உய்ந்திட நினைந்து இவண் நில்லாது இனி கடிது ஓடும் என்ருள் - (நீவிர்) பிழைத்திட நினைந்து ஈண்டு நில்லாது இப் பொழுதே விரைவிலோடுவீரென்று கூறினர். எ - று.

வந்தபடிகண்டது சமீபமாக வந்ததைக் கண்ணுற்கண்டதன்று; அப்புனத்தே தூரத்தேவந்ததை அவர்களுடைய வாத்திய முழக்காற் கண்டதென்பது. மான் உவம ஆகுபெயர். நடுநடுங்கி இரட்டைக்கிளவி; இதில் முன்னையது பிரிந்திசையாமையின் இரட்டைக்கிளவியேயா மென்பது. (93)

ஓடுமினியென்றவளுரைத்தமொழிகேளா
நீடுமகிழ்வெய்தியவணின்றகுமரேச
ஞடுபுகழ்சைவநெறிநற்றவவிருத்த
வேடமதுகொண்டுவரும்வேடரெதிர்சென்ருன்.

இ - ள். அவண் நின்ற குமரேசன் - ஆண்டுநிற்கின்ற சுப்பிரமணியப் பெருமான், அவள் இனி ஓடும் என்று உரைத்த மொழி கேளா நீடு மகிழ்வு எய்தி - அவ்வள்ளியம்மையார் இப்பொழுதே (நீவிர்) ஓடுவீரென்றுகூறிய

கூற்றைக்கேட்டு மிக்க களிப்படைந்து, நாடு புகழ் சைவ நெறி நல் தவம் விருத்த வேடமது கொண்டு - பூமியிலுள்ளார் புகழுகின்ற சைவசமயநெறியிற் கூறப்பட்ட நல்ல தவத்தினையுடைய (ஓர்) விருத்தர் வடிவங்கொண்டருளி, வரும் வேடர் எதிர் சென்றான் - ஆண்டுவருகின்ற அவ் வேட்டுவர்கட்கு எதிரே சென்றார். எ - று.

ஓடுமினியென்றவளுரைத்த மொழிகேளா நீடுமகிழ்வெய்திய தென்னையெனின் அவ்வள்ளியம்மையார் தம்மீதுகொண் டிருக்கின்ற அன்புமிகுதியை அவ்வார்த்தை விளக்கியதாமென்பது. நாடு ஈண்டுப்பூமி; அது ஆகுபெயர். சுப்பிரமணியப்பெருமான் ஆண்டு நின்றவிடத்தினின்று விருத்தர் வேடங்கொண்டு சென்றருளினரோவெனின் அங்ஙனமாயின் அவ்வள்ளியம்மையாருங் காண்டல்வேண்டும் அங்ஙனங்காண்டல் செய்ததாகப் பின்கூறான்றமையானும் ஆண்டுநின்று அவ்வேட்டுவர்க் கெதிர்புகின் அவ்வள்ளியம்மையாருக்கு அச்சமதிகரிக்கும் அங்ஙனம் அச்சம் பெருகியதாத் தோன்றாமையாலும் அச்சுப்பிரமணியப்பெருமான் வள்ளியம்மையார் ஓடும் என்றவுடன் அவர்சொற்படிசென்று அவர்காணாதபடி விருத்தவேடங்கொண்டு மற்றொருவழிச்சென்று அவ்வேட்டுவர்க்கெதிரே சென்றருளினாரென்பது. (94)

சென்றுகிழவோன்குறவர்செம்மலெதிர்நண்ணி
நின்றுபரிவோடுதிருநீறுதனைநல்கி
வன்றிறன்மிகுத்திடுகவாகைபெரிதாக
வின்றியமையாதவளனெய்திடுகவென்றான்.

இ - ள். கிழவோன் சென்று குறவர் செம்மல் எதிர் நண்ணி நின்று - விருத்தராகிய அச்சுப்பிரமணியப்பெருமான் சென்று அவ்வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவனுக்கு எதிரே சார்ந்துநின்று, பரிவோடு திரு நீறு தனை நல்கி - அன்போடு திரு(வெண்)ணீற்றைக் கொடுத்து, வல் திறல் மிகுத்திடுக - (நினக்கு) வல்லமை அதிகரிக்க, பெரிது வாகை

ஆக - மிகவெற்றியுண்டாகுக, இன்றியமையாத வளன் எய்திடுக என்றான் - இன்றியமையாத வளங்களடைக என்று திருவாய் மலர்ந்தருளினர். எ - று

கிழவோன் "பழமுதிர்சோலை மலைகிழவோனே" என்றதிற் போல அகரம் ஒகாரமானது. வன்றிறல் ஒருபொருட்பன்மொழி வன்றிறல் வலியதிண்மையெனினுமமையும். இன்றியமையாமை இல்லாது நிறையாமை. வளம் சாதியொருமை. (95)

பூதியினையன்பொடுபுரிந்தகுரவன்றன்
பாதமலர்கைகொடுபணிந்துகுறமன்னன்
மேதகுமிவ்வெற்பினில்விருத்தரெனவந்தீ
ரோதிடுதிர்வேண்டியதையொல்லைதனிலென்றான்.

இ - ள். குறமன்னன் - அவ்வேட்டுவராசனானவன், பூதியினை அன்பொடு புரிந்த குரவன்றன் பாதம் மலர் கைகொடு பணிந்து - திருவெண்ணீற்றை அன்போடு கொடுத்து வாழ்த்தியருளிய அக்குரவரது திருவடித்தாமரை மலரை கரத்திற்கொண்டு வணங்கி, மேதகும் இவ்வெற்பினில் விருத்தரென வந்தீர் - மேம்பாடுற்ற இம்மலையின்கண் விருத்தரென வந்தீர், வேண்டியதை ஒல்லைதனில் ஓதிடுதிர் என்றான் - (நமக்கு) வேண்டியதை விரைவிற்கூறியருள்வீர் என்றான். எ - று.

புரிதல் செய்தல்; இப்பொதுவினை "அறநெறிசேர்தற்குச் செய்கபெருநூலை" என்றதிற் செய்தலாகிய பொதுவினை கற்றலைச்செய்தற் சிறப்புவினைப் பொருளில்வந்ததுபோல ஈண்டு கொடுத்து வாழ்த்தற்சிறப்புவினைப் பொருளில்வந்தது. குரவன் வழிபடத்தக்கவன். பாதமலர் கைகொடுபணிதல் பாதமலரிற் கைபடும்படி நமஸ்கரித்தல். கைகொடு என்றதற்குக் கையாலென் றுரைப்பினுமமையும்; இதில் கொண்டு என்ற சொல்லுருபு இடைக்குறையாயிற்றென்பது. என என்னு மிடைச்சொல் பெய

ரோடியைந்து வந்தது. "தோமிலாமூன்றுநூலுந்துவமென வுதித்தவன்றே" என்றதிற்போலவென்பது. வந்தீர் விளிப் பெயர். (96)

ஆண்டொழிலின்மேதகையவண்ணலிதுகேண்மோ
நீண்டதனிமூப்பகலநெஞ்சமருணீங்க
வீண்டுநும்வரைக்குமரியெய்தியினிதாட
வேண்டிவருகின்றனன்மெலிந்துகடிதென்றான்.

இ - ள். ஆண் தொழிலின் மேதகைய அண்ணல் இது கேள் - ஆண்மைத் தொழிலின் மேம்பாடுற்ற வேட்டுவ ராசனே இதனைக் கேளாய், தனி நீண்ட மூப்பு (அகல) நெஞ்சம் மருள் நீங்க - ஒப்பின்மையாக முதிர்ந்த எனது மூப்பு நீங்கவும் (அம்மூப்பினாலென்) உளத்திற் சார்ந்த மயக்கம் நீங்கவும், நும் வரை ஈண்டு குமரி எய்தி இனிது ஆட வேண்டி - நுமது மலையிலே இங்ஙனமுள்ள குமரி தீர்த்தத்தையடைந்து இனிதாக ஸ்நானம்பண்ண விரும்பி, கடிது மெலிந்து வருகின்றனன் என்றான் - விரைவாகவாடி வருகின்றேனென்று திருவாய்மலர்ந்தருளினர் (அவ்விருத்த ராகிய சுப்பிரமணியப்பெருமான்.) எ - று.

ஆண்மை இறுதிகுறைந்தது. அண்ணல் அண்மைவிளி. மோ அசைமொழி. ஈண்டு என்றதற்கு பொருந்தியவென்றுரைப் பினுமமையும். குமரியெய்தியினிதாடவேண்டி என்றது குமரி யாகிய வள்ளியம்மையாரைச் சார்ந்து அவரோடு இனிது லீலை புரியவேண்டி என்றும் ஒருபொருள் தோன்றியவாறு காண்க. ()

வேறு

நற்றவன்மொழியைக்கேளாநன்றுநீர்நவின்றதீர்த்த
நீற்றலுமாடிபெங்கணேரிழைதமியளாகி
யுற்றனளவளுக்கெந்தையொருதனித்துணையதாகி
மற்றிவணிருத்திரென்னவழகிதாமன்னவென்றான்.

இ-ள். நல் தவன் மொழியை கேளா - நல்ல தவத்தினையுடைய விருத்தரது உரையைக்கேட்டு, எந்தை - எந்தையே, நன்று நீர் நவின்ற தீர்த்தம் நிற்றலும் ஆடி - நன்று நீர் கூறிய தீர்த்தத்தில் எப்பொழுதும் ஸ்நானஞ் செய்துகொண்டு, எங்கள் நேர் இழைதமியள் ஆகி உற்றனள் அவளுக்கு ஒரு தனி துணையது ஆகி இவண் இருத்திர் என்ன - எங்களுடைய நேர்மையாகிய ஆபரணத்தையுடையாள் (ஈண்டு) தமியளாகி இப்புனங்காவல்கொண் டிருக்கின்றுள் அவளுக்கு நீவிர் ஒப்பில்லாதவோர் துணையாகி இங்ஙனம் இருந்தருள்வீரென்று (அவ்வேட்டுவராசன்) கூற, மன்ன அழகிது ஆம் என்றுன் - அரசனே (நீ கூறியது நன்மையுடைத்தாகுமென்று திருவாய்மலர்ந்தருளினர் அவ்விருத்தராகிய சுப்பிரமணியப்பெருமான்) எ-று.

நேரிழை பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. எந்தை எமது தந்தையென்னும்பொருட்டு. துணையது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி; இணைமொழியென்றுங் கூறுப. மற்று அசைநிலை. தமதுள்ளக்கருத்துக்கிசைய அவ்வேட்டுவராசன் வள்ளியம்மையாருக்குத் துணையாகியிருப்பீரென்றதனுல் அழகிதாமென்று திருவாய்மலர்ந்தருளினுரென்பது. (98)

இனையதோர்பொழுதிற்றந்தையேந்திழைதன்பாலேகித்
தினையொடுகிழங்குமாவுந்தீங்கனிபிறவுநல்கி
யனையவடுணையதாகவருந்தவன்றன்னைவைத்து
வனைகழலெயினரோடும்வல்லையின்மீண்டுபோனுன்.

இ-ள். தந்தை இனையது பொழுதில் ஏந்து இழைதன்பால் ஏகி - தந்தையாகிய நம்பியென்பவன் இத்தன்மைத்தாயகாலையில் (தனதுமகளாகிய) ஏந்துகின்ற வாபரணத்தையுடையார்மாட்டுச்சென்று, தினையொடு கிழங்கும்மாவும் தீங்

கனி பிறவும் நல்கி - தினைமூரலோடு கிழங்கையும் மாவையும் இனிமையாகிய கனிகளையும் பிறவற்றையும் (அவருக்குக்) கொடுத்து, அனையவள் துணையது ஆக அரும் தவன் றன்னை வைத்து - அவ்வள்ளியம்மையாருக்குத் துணையாக அவ்வரிய தவத்தினையுடையராகிய சுப்பிரமணியப்பெருமானையிருத்தி, வனை கழல் எயினரோடும் வல்லையில் மீண்டு போனான்-கட்டு கின்ற கழலையுடைய வேட்டுவரோடுங் கடிதின் மீண்டு சென்றான். எ - று.

இத்தன்மைத்தாதிய காலை என்றது இவ்வார்த்தைகள் நிகழ்ந்த சமயம். ஓர் அசைமொழி. தினை ஆகுபெயர். மா தினைமா. கனியும் என்றதினும்மை விகாரத்தாற்றொக்கது. பிற- தேன் ஐவன மாதியன. (99)

போனதுமுதியோன்கண்டுபுனையிழைதன்னைநோக்கி
நானினிச்செய்வதென்கொனலிவதுபசிநோயென்னத்
தேனொடுகனியுமாவுஞ்செங்கையிற்கொடுப்பக்கொண்டு
வேனிலுமுடுகிற்றுண்ணீர்விடாய்பெரிதுடையேனென்றான்.

இ - ள் போனது முதியோன் கண்டு புனையிழை தன்னை நோக்கி - (அந்நம்பியரசன்) சென்றதை அவ்விருத்த ராகிய சுப்பிரமணியப்பெருமான் கண்டு அலங்கரிக்கப்பட்ட ஆபரணத்தையுடையராகிய அவ்வள்ளியம்மையாரைப் பார்த்து, பசி நோய் நலிவது நான் இனி செய்வது என் என்ன - பசிநோய் (என்னை) வருத்துகின்றது யானினிச் செய்வதென்னையென்றுகூறியருள, தேனொடு கனியும் மாவும் செம் கையில் கொடுப்ப கொண்டு - (அவர்) தேனோடு கனியையுந் தினைமாவையுஞ் செம்மையாகிய திருக்கரத்திற் கொடுக்க (வாங்கித்) திருவமுது செய்தருளி, வேனிலும் முடுகிற்று உண் நீர் விடாய் பெரிது உடையேன் என்றான் -

வெய்யிலும் வந்தது (யான்) பானஞ்செய்யும் நீர் விடாய் மிகவுடையேனென்று திருவாய்மலர்ந்தருளினர். எ - று.

போனது தெரிநிலை வினையாலணையும்பெயர்; இதில் இறந்த காலங்காட்டும் இன்னிடைநிலைமுதல் குறைந்து நின்றது. ஈண்டு புனையிழை என்றும் முன்னும் பின்னும் பலவிடங்களிலும் ஏந்திழை நேரிழை சேயிழை என்று இழையைச் சிறப்பித்தல் வள்ளியம்மையார் மான்வயிற்றிலிருந்து உற்பவிக்கும்போது குழை குறுந்தொடி கோல்வளையேமுதற் பழையபூண்கள் பலவற்றைத் தரித்துக்கொண்டு உற்பவித்தமையானென்பது. கொல் அசைமொழி. கொள்ளல் உட்கொள்ளல். நானினிச் செய்வதென்கொல் நலிவது பசிநோயென்ன என்றதற்கு நானினிச் செய்வதென்னை என்னைஇப்போது வருத்துவது பசிநோயென்று சொல்ல என்றுரைப்பினுமமையும். (100)

செப்புறுமனையாமாற்றஞ்சேயிழைக்கிழத்திகேளா
விப்புறவரைக்குமப்பாலெழுவரைகடந்ததற்பி
னுப்புறமிருந்ததெந்தாயொருசுனையங்கணேகி
வெப்புறலின்றித்தெண்ணீர்மிசைந்துபின்வருதிரென்ருள்.

இ - ள். சேயிழை கிழத்தி செப்புறும் அனைய மாற்றம் கேளா - செம்மையாகிய ஆபரணத்துக்குரியராகிய வள்ளியம்மையார், (அவ்விருத்தராகிய சுப்பிரமணியப்பெருமான்) திருவாய்மலர்ந்தருளிய அவ்வார்த்தையைக்கேட்டு, எந்தாய் இப்புறம் வரைக்கும் அப்பால் எழுவரை கடந்ததன் பின் உப்புறம் ஒரு சுனை இருந்தது அங்கண் ஏகி - எந்தையே இங்ஙனமுள்ள மலையையும் அப்பாலுள்ள ஏழுமலையுங் கடந்ததன்பின் அங்ஙனமோர் சுனையிருக்கின்றது ஆண்டுச் சென்று, தெள் நீர் மிசைந்து பின் வெப்புறல் இன்றி வருதிர் என்றாள் - தெளிந்தநீரைக் குடித்துப்பின்னர் (தாகத்தால்) வெப்பமடைதலின்றி வருவீரென்றார். எ - று.

சேயிழைக்கிழத்தி என்பதற்கு செம்மையாகிய ஆபரணத்தையுடைய தலைவி என்றுரைப்பினுமமையும். நான்காவது இரண்டாவதாகத் திரிக்கப்பட்டது. இப்புறவரைக்குமப்பாலெழுவரை என்றதற்கு இங்ஙனமுள்ள மலைக்கப்பாலுள்ள எழுமலையெனினுமமையும்; இப்பொருட்கு உம்மையை அசைநிலையென்க; உம்மையைப்பிரித்து எழுவரையோடுகூட்டி முற்றும்மையெனக்கொண்டு பொருள்கூறினுமமையும். இப்புறவரைக்கும் அப்பால் எழுவரைக் (கும்) உப்புறம் ஒருசுனை இருந்தது கடந்ததற்பின் அங்கணேகி என்றியைத்து, இங்ஙனமுள்ள மலைக்கும் இதற்கப்பாலுள்ள எழுமலைக்கும் அப்பாலொரு சுனை இருக்கின்றது. அம்மலைகளைக் கடந்ததன்பின்னர் அச்சுனைக்கட்சென்று என்று பொருள்கூறினு மமையும்; இதில் நான்காவதையும் உம்மையையும் பின்னுங் கூட்டப்பட்டதென்க. (101)

பூட்டுவார்சிலைக்கைவேடர்பூவையேபுலர்ந்துதெண்ணீர்
வேட்டனன்விருத்தன்வெற்பில்வியநெறிசிறிதுந்தேரேன்
றாட்டுணைவருந்துமென்றுதாழ்த்திடாதொல்லையேகிக்
காட்டுதிசுனைநீரென்றுனறுமுகங்கரந்தகள்வன்.

இ-ள். பூட்டு வார் சிலை கை வேடர் பூவையே-(நாணைப்) பூட்டுகின்ற நெடிய விற்படையைத் தரித்த கரத்தினையுடைய வேட்டுவர்மகளே! புலர்ந்து தெள் நீர் வேட்டனன்-(நாப்) புலர்ந்துதெள்ளிய நீர்வேட்கை யுடையனாயினேன், விருத்தன்-(யான்) முதுமையுடையேன், வியன் நெறி சிறிதும் தேறேன்-(அன்றியும்) இம்மலையிற் பெரிய வழியைச் சிறிதுமறியேன், தாள் துணை வருந்தும் என்று தாழ்த்திடாது ஒல்லை ஏகி சுனை நீர் காட்டுதி என்றான் அறுமுகம் கரந்தகள்வன்-(நினது) அடியிரண்டும் வருந்துமென்று தாழ்த்திடாது கடிதிற்சென்று அச்சுனைநீரைக் காட்டுவாயென்று திருவாய் மலர்ந்தருளினார் (தமது) ஆறு திருவதனங்களையுங்கரந்த கள்வராகிய சுப்பிரமணியப்பெருமான். எ - று.

நாணை என்னுஞ் செயப்படுபொருள் அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. பூவை உவமவாகுபெயர். தாகமுறின் நாப்புலர்தலுண்மையாதலின் நா வருவிக்கப்பட்டது. புலர்ந்து என்னுஞ் சினைவினை ஒற்றுமைபற்றி முதலோடு முடிந்தது "பழிப்பது போலப்பான்மையின் மேன்மை புலப்படமொழிவது புகழாப் புகழ்ச்சி" என்பதோத்தாகலின் அறுமுகங்கரந்த கள்வனென்றது புகழாப்புகழ்ச்சியணி. (102)

**முருகனதுரையையந்தமொய்குழல்வினவியெந்தாய்**
**வருகெனவழைத்துமுன்போய்வரையெலாங்கடந்துசென்று**
**விரைகமழ்சுனைநீர்காட்டவேனிலால்வெதும்பினன்போற்**
**பருகினன்பருகிப்பின்னரிஃதொன்றுபகர்நலுற்றன்.**

இ - ள். அந்த மொய்குழல் முருகனது உரையை வினவி - அச்செறிந்த அளகத்தனையுடையராகிய வள்ளியம்மையார் விருத்தராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய மொழியைக்கேட்டு, எந்தாய் வருக என அழைத்து முன் போய் வரை எலாம் கடந்து சென்று விரை கமழ் சுனை நீர் காட்ட - எமது தந்தையே வரக்கடவீரென்று சொல்லி அழைத்துக்கொண்டு (அவருக்கு) முன்னர்நடந்து அம்மலைகளெல்லாவற்றையுங் கடந்துசென்று நறுமணங் கமழ்கின்ற சுனைநீரைக்காட்ட, வேனிலால் வெதும்பினன்போல பருகினன் - வெய்யிலினல் வெப்பமுற்றார்போல (அந்நீரைப்) பருகினர், பருகி பின்னர் இஃது ஒன்று பகர்தலுற்றன் - (அங்ஙனம்) பருகிப்பின்னர் ஈதொன்று கூறியருளலுற்றார் (அச்சுப்பிரமணியப்பெருமான்.) எ - று.

மொய்குழல் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வருக என்பதின் அகரமும் எல்லாமென்பதின் லகரமுந்தொக்கன. விரைகமழ்தல் தாமரைமலர் முதலிய மலர்களின் சார்பினலென்பது. (103)

**ஆகத்தைவருத்துகின்றவரும்பசியவித்தாய்தெண்ணீர்த்**
**தாகத்தையவித்தாயின்னுந்தவிர்ந்திலதளர்ச்சிமன்னோ**
**மேகத்தையனையகூந்தன்மெல்லியல்வினையேன்கொண்ட**
**மோகத்தைத்தணித்தியாயின்முடிந்ததென்குறையதென்றான்.**

இ - ள். மேகத்தை அனைய கூந்தல் மெல் இயல் - முகிலைநிகர்த்த அளகத்தையுடைய மெல்லியால், ஆகத்தை வருத்துகின்ற அரும் பசி அவித்தாய் - (எனது) தேகத்தை வருத்திய (பொருத்தற்கு) அரியபசியைத் தணித்தாய், தெள் நீர் தாகத்தை அவித்தாய் - தெளிந்த நீர்வேட்கையையுந் தணித்தாய், (நீ இங்ஙனஞ்செய்தும்) தளர்ச்சி தவிர்ந்தில - (எனது) வாட்டந்தணிந்திலது, வினையேன் கொண்ட மோகத்தை தணித்தி ஆயின் என் குறையது முடிந்தது என்றான் - வினையினேன் கொண்டமோகத்தையுந் தணிப்பா யாயின் (எனது) குறை நீங்கியது என்று திருவாய் மலர்ந் தருளினார் (அச்சுப்பிரமணியப்பெருமான்.) எ - று.

பசிபோல மற்றொன்று வருத்துதலின்மையின் ஆகத்தை வருத்துகின்ற அரும் பசியென்றார். பசியின்கொடுமையை

> "மானங்குலங்கல்விவண்மையறிவுடைமை
> தானந்தவமுயற்சிதாளாண்மை—தேனின்
> கசிவந்தசொல்லியர்மேற்காமுறுதல்பத்தும்
> பசிவந்திடப்பறந்துபோம்."
>
> —நல்வழி.

என்ற செய்யுளானுனர்க. தவிர்ந்தில என்றது "இரண்டனுட் கூர்ங்கோட்டகாட்டுவல்" என்றதுபோலத் தவிர்ந்திலது என ஒருமையாகற்பாலது பன்மையாகநின்றது. மன்னுமோவுமசை நிலைகள். வினையினீங்கிய விளங்கியவறிவராகிய சுப்பிரமணியப் பெருமான் வினையேனென்று தாங்கொண்ட மானுடவடிவப் பொதுமைபற்றிக் கூறியருளினாரென்பது. மோகம் காமாசை. ()

### வேறு

சறின்முதியோனிரங்கியிரந்துகுறை
கூறிமதிமயங்கிக்கும்பிட்டுநின்றளவி
னுறுமலர்க்கூந்தனங்கைநகைத்துயிர்த்துச்
சீறிநடுநடுங்கியிவ்வாறுசெப்புகின்றாள்.

இ-ள். ஈறு இல் முதியோன் இரங்கி குறை கூறி இரந்து மதி மயங்கி கும்பிட்டு நின்ற அளவில் - இறுதியில்லாத அவ்விருத்தராகிய சுப்பிரமணியப்பெருமானிரங்கித் (தமது) குறையைக்கூறி (அக்குறைமுடிக்கும்படி) இரந்து புத்திமயங்கிக் கும்பிட்டுநின்ற காலையில், நாறு மலர் கூந்தல் நங்கை நகைத்து உயிர்த்து சீறி நடுநடுங்கி இவ்வாறு செப்புகின்றாள் - (நறுமணங்) கமழுகின்ற மலர்களையணிந்த கூந்தலையுடைய அவ்வள்ளியம்மையார் முறுவலித்து (வெய்தாக) வுயிர்த்து வெகுண்டு நடுநடுங்கி இவ்வாறு கூறுகின்றார். எ - று.

சுப்பிரமணியப்பெருமான் இரங்கல் மதிமயங்கலாகிய வுயிர்க்குணங்களையுடைந்தனராகியும் குறைகூறல் குறையிரத்தல் கும்பிடலாகிய உயிர்த்தொழில்களை இயற்றினராகியும் நடித்தருளியதும் களவொழுக்கமும் உலகத்தினுண்மையாக நிகழ்வித்தற்பொருட்டேயாதலின் அருளேயாமென்பது. உலகத்திற் களவொழுக்கமும் நிகழ்வித்தல்வேண்டின் அவர் அங்ஙனம் இரங்கலாதியவற்றையடைந்து குறைகூறலாதியவற்றை இயற்ற வேண்டுமோவெனின் சிவபெருமான் தமது சத்தியாகிய உமாதேவியாரோடு கூடியகாலையில் ஆண் பெண்ணாகிய வுயிர்களும் இணைவிழைச்சுற்றும் கூடாக்காலையில் அவ்விணைவிழைச்சுற்றுமிருத்தலினாலே,பதிபதார்த்தத்தினாலேயே பசுபதார்த்தத்தின்எத்தொழிலும் நிகழ்வதென்பது உண்மையாதலின் வேண்டுமென்க. ஈதறியார்சுப்பிரமணியப்பெருமான்கும்பிட்டுநின்றது அவருடைய பெருமைக்குக் குறைவாமென்றும் அதற்குக் குறிப்புப்பொருள்

வேறுண்டென்றுங் கூறுப; அவருக்கு இரங்கல் மதிமயங்கலாதிய குறைவிலவாம்போலும்!. நின்ற என்பதின் அகரம் விகாரத்தாற் ெறாக்கது. வள்ளியம்மையார் நகைத்தது அவ்விருத்தராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய தவவேடத்திற்கேற்ற ஒழுக்க மின்மையைக் குறித்ததென்பது. உயிர்த்துச்சீறியது தம்மோடு கூறத்தகாத வார்த்தையை அவர் கூறினாரென்றெண்ணி யென்பது. நடுநடுங்கியது தாந்தமியராயவருக்குச் சமீபத்தில் நிற்பதனாெனன்பது. (105)

மேலாகியதவத்தோர்வேடந்தனைப்பூண்டிங்
கேலாதனவேயியற்றினீர்யார்விழிக்கும்
பாலாகித்தோன்றிப்பருகினராவிகொள்ளு
மாலாலநீர்மைத்தோவையரியற்கையதே.

இ-ள். மேல் ஆகிய தவத்தோர் வேடந்தனை பூண்டு ஏலாதனவே இங்கு இயற்றினீர்-மேன்மையாகிய தவத்தரது வேடத்தை (நீவிர்) பூண்டு (அவ்வேடத்துக்குப்) பொருந்தாதனவற்றையே ஈண்டுச்செய்தீர், ஐயர் இயற்கையது - ஐயராகியநுமதியற்கை, யார் விழிக்கும் பால் ஆகி தோன்றி பருகினர் ஆவி கொள்ளும் ஆலாலம் நீர்மைத்தோ - யாவர் விழிக்கும்பால் (போல்) ஆகித்தோன்றித் (தன்னை) உட்கொண்டவருடைய வுயிரைமாய்க்கும் நஞ்சின் தன்மையதோ? எ-று.

ஏலாதவையாவையெனின் மோகத்தைத் தணித்தியென்றலும் இரத்தலும் குறைகூறலும் குறையிரத்தலும் கும்பிடலு மென்க. ஏகாரம் பொருந்துவன பொருந்தாதன என்பவற்றுட் பொருந்தாதனவற்றைப் பிரித்துநிற்றலானும், ஓகாரம் அமுதின் தன்மை நஞ்சின்தன்மை என்பவற்றுள் நஞ்சின் தன்மையைப் பிரித்து நிற்றலாலும் பிரிநிலைப்பொருள். ஐயர் ஈண்டு முன்னிலைக்கண்வந்தது; அது "ஓரிடம்பிறவிடந்தழுவலுமுளவே" என்னும் ஓத்தினமைவது. (106)

கொய்தினைகள்காப்பேனைக்கோதிலாமாதவத்தீர்
மெய்தழுவவுன்னிவிளம்பாதனவிளம்பிக்
கைதொழுதுநிற்றல்கடனன்றுகானவரிச்
செய்கைதனையறியிற்றீதாய்முடிந்திடுமே.

இ-ள். கோது இலா மா தவத்தீர் - குற்றமில்லாத பெரிய தவவேடத்தை யுடையீர்! மெய் தழுவ உன்னி விளம்பாதன விளம்பி - (எனது) மெய்யைத் தழுவக்கருதிக் கூறத் தகாதவார்த்தைகளைக்கூறி, கொய் தினைகள் காப்பேனை கைதொழுது நிற்றல் கடன் அன்று - கொய்யப்படுந் தினைப் பயிரைக் காவல்செய்வேனைக் கும்பிட்டுநிற்றன்முறையன்று, இச்செய்கைதனை கானவர் அறியில் தீது ஆய் முடிந்திடும் - (நம்முடைய) இச்செயலை வேட்டுவரறியில் (நமக்குத்) தீமையாய்முடியும். எ - று.

கொய்தினை முக்காலவினைத்தொகை. இல்லா என்னுமிறுதி கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் இடைக்குறையானது. தவம் ஆகுபெயர். விளம்பாதன விளம்பிக்கைதொழுது நிற்றல்கடனன்று எனவே நமதுவேடம் கூடாவொழுக்கத்தின்பாற்படு மென்று கூறியவாறு. தீதாய்முடிந்திடும் என்றது நமதுயிர்க்கு அவராற் கேடுவருமென்றபடி. (107)

நத்துப்புரைமுடியீர்நல்லுணர்வுசற்றுமிலீ
ரெத்துக்குமுத்தீரிழிகுலத்தேன்றன்னைவெஃகிப்
பித்துக்கொண்டார்போற்பிதற்றுவீரிவ்வேடர்
கொத்துக்கெலாமோர்கொடும்பழியைச்செய்தீரே.

இ-ள். நத்து புரை முடியீர் நல்லுணர்வு சற்றும் இலீர் - (நீவிர்) வலம்புரிச்சங்கை நிகர்த்தசடைமுடியினை யுடையீர் (இங்ஙனம் பெருமையாகிய தவவேடத்தை யுடையீராயிருந்தும்) நல்லவறிவுசிறிதுமில்லீர், எத்துக்கும்

மூத்தீர் இழிகுலத்தேன்றன்னை வெஃகி பித்துக்கொண்டார் போல் பிதற்றுகிர்-எத்திறத்தானுமூத்தீர் (இங்ஙனமூத்தீரா யிருந்தும்) இழிகுலத்தேனாகிய என்னைவிரும்பிப் பித்துக் கொண்டார் போலப் பிதற்றுகின்றீராகி, இ வேடர் கோத்துக்கு எலாம் ஓர் கொடும் பழியை செய்தீரே - இவ்வேடமுடையார் கூட்டத்துக்கெல்லாமோர் கொடுமை யாகிய பழியைச் செய்துவிட்டீரே. எ - று.

வலம்புரிச்சங்கு தன்வடிவம்போலாகச்சடைமுடி மூடிக்கப் படுதலினன் வடிவப்பண்புவமையும் தன்னிறம் போல நரை யுடைத்தாதலின்வண்ணப் பண்புவமையுமானதென்பது "வலம் புரிபுரையும்வானரைமுடியினர்" என்றார் பிறருமென்க. எதுக்கு மெனற்பாலது எத்துக்குமெனவிரிக்கும்வழி விரிக்கப்பட்டது. எத்திறத்தானுமூத்தீரென்றது வயதுகுலமாதியவற்றானென்பது. எத்துக்கு மூத்தீரென்றதற்கு அணுப்புதற்குமூத்திருக்கின்றீ ரெனினுமமையும். பித்து பைத்தியம் இவ்வேடர் என்றது நுமது வேடத்தையொத்த வேடமுடையாரென்றவாறு. கொடும் பழியைச்செய்தீரே என்றது இவ்வேடத்தையுடைய நற்றவர்வரி னும் அவர்களையும் நும்போலக்கூடாவொழுக்க முடையரென்று இகழுமொரு கொடியபழியைச் செய்தீரென்றவாறு. "நேயமலி மெய்யடியார் நோர்ந்துழியுநின்போன் மாபமெனவெள்ளுமொரு வான்பழியும் வைத்தாய்" என்று தணிகைப்புராணத்திலுங் கூறப் பட்டிருக்கின்றது. ஈற்றிலுள்ள ஏகாரந்தேற்றப்பொருட்டு. (103)

சேவலாய்வைகுந்தினைப்புனத்திற்புள்ளினுடன்
மாவெலாங்கூடிவளர்பைங்குரல்கவரு
நாவலோய்நீருநடந்தருளுநான்முந்திப்
போவனலென்றுபுனையிழையாள்போந்தனளே.

இ - ள். சேவல் ஆய் வைகும் தினை புனத்தில் புள்ளினுடன் மா எலாம் கூடி வளர் பைங்குரல் கவரும் - (யான்) காவலாகியிருக்கின்ற தினைப்புனத்தின்கண்ணே

பறவைகளோடு மிருகமெல்லாங் கூடிவளருகின்ற செவ் விக்கதிர் களைக்கவரும், (ஆகலால்) யான் முந்தி போவன் - யான் முன்னர் (ஆண்டுச்செல்வேன்) நாவலோய் நீரும் நடந்தருளும் என்று - நாவில்வல்லவரே நீருஞ் (செல்லு மிடத்துக்குச்)சென்றருளுமென்றுசொல்லி, புனை இழையாள் போந்தனள் - அலங்கரிக்கப்பட்ட ஆபரணத்தையுடைய வள்ளியம்மையார் நடந்தார். எ - று.

பசுமை இப்பொருள்படுதலை "திருவளர்தாமரை சீர்வளர் காவிகளீசர்தில்லைக் குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்காந்தள்" என்றதிற்காண்க. உம்மை எச்சவும்மை. ஆல் அசைமொழி. ()

பொன்னேயனையாண்முன்போகுந்திறனோக்கி
யென்னேயினிச்செய்வதென்றிரங்கியெம்பெருமான்
றன்னேரிலாதமருந்தந்திமுகத்தெந்தைதனை
முன்னேவருவாய்முதல்வாவெனநினைந்தான்.

இ - ள். எம் பெருமான் - எமதிறைவராகிய சுப் பிரமணியப்பெருமான், பொன்னே அனையாள் முன் போகும் திறன் நோக்கி இனி செய்வது என்னே என்று இரங்கி - திருமகளையே நிகர்த்த வள்ளியம்மையார் முன்னே செல்லுந்தன்மையைப்பார்த்து (யாம்) இனிச்செய்வதென்னை யென்று இரங்கி, தன்னேர் இலாது அமரும் தந்தி முகத்து எந்தைதனை முதல்வா முன்னே வருவாய் என நினைந்தான் - தமக்கொப்பில்லாதிருக்கின்ற யானைமுகத்தையுடைய எந்தை யாகிய விக்கினேசுவரக்கடவுளை முதல்வரே (அவ்வள்ளிக்கு) முன்னே (ஓர்யானையாக) வந்தருளீரென்று நினைந்தருளினார். எ - று

ஏகாரங்களில் முன்னையது பிரிநிலையும் இடையது எதிர் மறையும் பின்னையது அசைநிலையுமாம். விக்கினேசுவரக்

கடவுளுடைய திருமுகம் யானையினது முகத்தினின்றுஞ் சிறிதும் வேறுபாடின்மைபற்றித் தந்திமுகம்போலுமுகமென்னாது தந்திமுகமென்று நூல்கள் கூறுவதென்க. எல்லாம்வல்ல சுப்பிரமணியப்பெருமான் இனியாஞ் செய்வதென்னையென்று இரங்கி விக்கினேசுவரக்கடவுளை அவ்வள்ளியம்மையாருக்கு முன்னேயோர் யானையாகவரும்படி வேண்டியதென்னையெனின், விருப்புவெறுப்பாதியவுயிர்க்குணங்களற்ற சுப்பிரமணியப்பெருமான் அவ்வுயிர்க்குணங்கள் தமக்குள்ளன போல நடித்தருளியதெல்லாம் அவ்வள்ளியம்மையார் முன்செய்ததவப்பயனை அவருக்கு ஊட்டவேண்டியும் அவ்வாயிலாக உலகத்திற் களவொழுக்கம் நிகழவேண்டுமே என்று முன்னுரைத்தாம். அவ்வாறே ஈண்டும் இரங்கி, எவ்வகைப்பட்டசெயல்களையுஞ் செய்யும்போதும் விக்கினேசுவரக்கடவுளை முன்னி வழிபட்டுச் செயல்வேண்டுமென்பதையும் குறிப்பால்விளக்கும்பொருட்டு அக்கடவுளை முன்னே வரும்படி வேண்டியருளினர் போலுமென்பது; சுப்பிரமணியப் பெருமானுடைய திருவிளையாடலைப் பிரமவிட்டுணு முதலிய தேவர்களுமுனிவர்களுமறிதல்கூடாது மயங்குவாராயின் யாம் அவருடைய திருவிளையாடல்களின் பயனைச் சிறிதாயினும் ஐயமின்றியறிந்தேமென்றல் பெரும் பேதைமையாமென்பது. ()

அந்தப்பொழுதிலறுமாமுகற்கிரங்கி
முந்திப்படர்கின்றமொய்குழலாண் முன்னாகத்
தந்திக்கடவுட்டனிவாரணப்பொருப்பு
வந்துற்றதம்மாமறிகடலேபோன்முழங்கி.

இ-ள். அந்த பொழுதில் - அச்சமயத்தில், மா அறு முகற்கு இரங்கி - பெருமையாகிய ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமானுக்கிரங்கி, முந்தி படர்கின்ற மொய் குழலாள் முன்னாக - முந்திச்செல்லுகின்ற செறிந்த கூந்தலினையுடையராகிய வள்ளியம்மையாருக்கு முன்னாக, தந்திக்கடவுள் தனி பொருப்பு வாரணம் - யானைமுகக் கடவுளாகிய ஒப்பற்ற மலைபோன்ற யானையானது,

மறி கடலே போல் முழங்கி வந்துற்றது - (திரை) மறிகின்ற கடலையேயொப்ப முழங்கிக்கொண்டு வந்தது. எ - று.

தந்தி ஆகுபெயர். பொருப்பை உவமையாக்காது உருவக மாக்கினுமமையும். அம்மா வியப்பின்கண்வந்தது. ஏகாரம் பிரிநிலைப்பொருட்டு. (111)

அவ்வேலையில்வள்ளியச்சமொடுமீண்டுதவப்
பொய்வேடங்கொண்டுநின்றபுங்கவன்றன்பாலணுகி
யிவ்வேழங்காத்தருள்கவெந்தைநீர்சொற்றபடி
செய்வேனெனவொருபாற்சேர்ந்துதழீக்கொண்டனளே.

இ - ள். வள்ளி - அவ்வள்ளியம்மையார், அவ்வேலையில் அச்சமொடு மீண்டு பொய் தவம் வேடம் கொண்டு நின்ற புங்கவன்றன் பால் அணுகி - அந்தப்பொழுதிலச்சத்தோடு திரும்பிப் பொய்யாகிய தவவேடத்தைக் கொண்டு நின்ற சுப்பிரமணியப்பெருமானிடத்துக் கிட்டி, எந்தை இவ்வேழம் காத்தருள்க - எந்தையே இவ்யானையால் வரும் இடையூற்றை (நீக்கி) என்னைக்காத்தருள்க, நீர் சொற்றபடி செய்வேன் என ஒரு பால் சேர்ந்துதழீ கொண்டனள் - நீர் கூறியவாறு செய்வேனென்று அவரதோர்பாலைச் சேர்ந்து தழுவிக்கொண்டார். எ - று.

தவப்பொய்வேடம் என்றது தவநெறியினில்லாது தவத்தர் வேடம்போலக்கொண்டவேடம். வேழம் ஆகுபெயர். நீக்கி யென்பது அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. என்னையென் பதுமது. ஒருபாலென்றது பிற்பக்கத்தை. (112)

அன்னதொருகாலையறுமாமுகக்கடவுண்
முன்னொருசார்வந்துமுதுகளிற்றின்கோடொற்றப்
பின்னொருசார்வந்துபிடியின்மருப்பூன்ற
விந்நடுவேநின்ருனெறுழ்வயிரத்தூணேபோல்.

இ - ள். அன்னது காலை - அவ்வேளையில், மா அறு முகக்கடவுள் - பெருமையாகிய ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான், முன் ஒருசார் வந்து முது களிற்றின் கோடு ஒற்ற - முன்னாகிய ஓர்பாலில்வந்து பெருமையாகிய அவ்யானையின் கோடுபட, பின் ஒருசார் வந்து பிடியின் மருப்பு ஊன்ற - பின்னாகிய ஓர்பாலில் வந்து பிடியானைபோலும் வள்ளியம்மையாருடைய தனமாகிய மருப்பு ஊன்ற, எறுழ் வயிரம் தூணே போல் இவ் நடுவே நின்றான் - வலிமையையுடைய வச்சிரத்தூணையேபோல இவைக்கு நடுவேநின்றருளினார். எ - று

ஒரும் என்ற அசைமொழி ஒரு என விகாரத்தானின்றது. முன்னொருசார் பின்னொருசாரென்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பிடியும் மருப்பும் ஆகுபெயர்கள். ஏகாரங்களில் முன்னையது தேற்றத்தும் பின்னையது பிரிநிலையிலும் நின்றன. ()

கந்தமுருகன்கடவுட்களிறுதனை
வந்தனைகள்செய்துவழுத்திநீவந்திடலாற்
புந்திமயறீர்ந்தேன்புனையிழையுஞ்சேர்ந்தனளா
லெந்தைபெருமானெழுந்தருள்கமீண்டென்றான்.

இ - ள். கந்த முருகன் - சுப்பிரமணியப்பெருமான், கடவுள் களிறுதனை வந்தனைகள் செய்து வழுத்தி - விக்கினேசுவரக்கடவுளாகிய அவ்யானையை வழிபாடுசெய்து துதித்து, நீ வந்திடலால் புந்தி மயல் தீர்ந்தேன் - தேவரீர் ஈண்டு வந்திடுதலால் உள்ளமயக்கொழிந்தேன், புனை இழையும் சேர்ந்தனள் - அலங்கரிக்கப்பட்ட ஆபரணத்தையுடையாளும (என்னைச்) சேர்ந்தனள், எந்தை பெருமான் மீண்டு எழுந்தருள்க என்றான் - எந்தையாகிய பெருமானே! மீண்டு எழுந்தருள்க என்று திருவாய் திருவாய்மலர்ந்தருளினார். எ - று.

கந்தமுருகன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; கந்தனாகிய முருகனென்க. கடவுட்களிறென்பதும் எந்தைபெருமானென்பதும் அன்ன. ஆல் அசைமொழி. எழுந்தருள்க என்றது வேண்டிக்கோடற்பொருளில்வந்த வியங்கோள்வினைமுற்று.(114)

என்னுமளவிலினிதென்றியானைமுக
முன்னிளவலேகமுகமாறுடையபிரான்
கன்னிதனையோர்கடிகாவினிற்கலந்து
துன்னுகருணைசெய்துதொல்லுருவங்காட்டினனே.

இ-ள். என்னும் அளவில் யானை முக முன்னிளவல் இனிது என்று ஏக - என்று திருவாய்மலர்ந்தருளியவச்சமயத்தில் யானைமுகத்தையுடைய மூத்தோராகிய விக்கினேசுவரக்கடவுள் நன்றென்று சென்றருள, ஆறுமுகம் உடைய பிரான் - ஆறுதிருவதனங்களையுடையவச் சுப்பிரமணியப் பெருமான், கன்னிதனை ஓர் கடி காவினிற் கலந்து துன்னு கருணை செய்து தொல் உருவங் காட்டினன் - அவ்வள்ளியம்மையாரையோர் சிறந்த சோலையிற்புணர்ந்து நெருங்கிய கிருபைசெய்து (தமது) பழைய திருவுருவத்தைக் காட்டியருளினார். எ - று.

முன்னிளவல் முன்பிறந்தவிளவலென்க. கடி உரிச்சொலாதலின் கடிகாவென இயல்பாப்புணர்ந்தது. தொல்லுருவென்றது தாம் திருவவதாரஞ் செய்தபொழுதுள்ள திருவுருவென்பது. (115)

முந்நான்குதோளுமுகங்களோர்மூவிரண்டுங்
கொன்னார்வைவேலுங்குலிசமுமேனைப்படையும்
பொன்னார்மணிமயிலுமாகப்புனக்குறவர்
மின்னாள்கண்காணவெளிநின்றனன்விறலோன்.

இ-ள். முந்நான்கு தோளும் - பன்னிரண்டு திருத்தோள்களும், ஓர் மூவிரண்டு முகங்களும் - ஆறு திருவதனங்

களும், கொன் ஆர் வை வேலும் குலிசமும் ஏனை படையும் - பெருமைபொருந்திய கூர்மையாகிய வேலாயுதமும் குலிசாயுதமும் மற்றைய ஆயுதங்களும், பொன் ஆர் மணி மயிலும் ஆக - (தோகையிற்) பொன்னிறம் பொருந்திய அழகாகிய மயில்வாகனமும் ஆகிய (இவற்றையுடைய)ராக, விறலோன் புனம் குறவர் மின்னாள் கண் காண வெளி நின்றனன் - வீரராகிய சுப்பிரமணியப்பெருமான் தினைப்புனங் காவல் கொள்ளும் வேட்டுவருடைய மகளாகிய வள்ளியம்மையார் காணத் தோன்றி நின்றருளினார் எ - று

முந்நான்கு, ஓர்மூவிரண்டு ஆகுபெயர்கள். மூவிரண்டும் என்றதிலுள்ள உம்மையைப்பிரித்து முகங்களோடு கூட்டப்பட்டது. ஏனைப்படைகள்: தோமரம் கொடி வாள் பகழி அங்குசம் மணி பங்கயமலர் தண்டம் வில் மழு இவைபத்துமென்க. பொன்னார் மணி மயில் என்றதற்கு அழகுபொருந்திய கருமையாகிய மயிலெனினுமமையும். ஆக வெளிநின்றனனென்றியைக்க. வெளிநிற்றல் தோன்றி நிற்றல். (116)

கூரார்நெடுவேற்குமரன்றிருவுருவைப்
பாராவணங்காப்பரவலுருவிம்மிதமுஞ்
சேராநடுநடுங்காச்செங்கைகுவியாவியரா
வாராதகாதலுருவம்மையிதுவோதுகின்றாள்.

இ - ள். அம்மை - அவ்வள்ளியம்மையார், கூர் ஆர் நெடு வேல் குமரன் திரு உருவை பாரா - கூர்மைபொருந்திய நெடியவேற்படைக்கலத்தையுடைய சுப்பிரமணியப்பெருமானது திருவுருவத்தைப் பார்த்து, வணங்கா - வணங்கி, பரவலுறா - துதித்தலுற்று, விம்மிதமும் சேரா - அற்புதங்கொண்டு, நடுநடுங்கா - நடுநடுங்கி, செம் கை குவியா - செம்மையாகிய கரத்தைக்கூப்பி, வியரா - மெய்வியர்த்து, ஆராத

காதல் உறு - முடிவுபெறுதவாசையுற்று, இது ஓதுகின்றாள் - இதனைக் கூறலுற்றார். எ - று.

பராவென்பதாதிய செய்யாவென்னும் வாய்பாட்டு இறந்த காலத்தெரிநிலைவினையெச்சம். வேறு பலவடுக்கித்தம்மெச்சமாகிய ஓதுகின்றாளென்னும் ஒருவினை ஈற்றிலுற அதனோடு அனைத்து முடிந்தன. உம்மை அசைநிலை; எச்சவும்மையெனக்கொண்டு ஏற்கப் பொருளுரைப்பினுமமையும். நடுநடுங்கியது இச்சுப்பிரமணியப் பெருமானை நல்லறிவற்றீரென்பதாதிய முன்னர்க்கூறி யிகழ்ந்தேனே யென்பதுபற்றியென்க. ஆராமை நிறையாமை; ஈண்டுமுடிவில்லாமை. (117)

மின்னேயனையசுடர்வேலவரேயிவ்வுருவ
முன்னேநீர்காட்டிமுயங்காமலித்துணையுங்
கொன்னேகழித்தீர்கொடியேன்செய்குற்றமெலா
மின்னேதணித்தேயெனையாண்டுகொள்ளுமென்றாள்.

இ - ள். மின்னே அனைய சுடர் வேலவரே - மின்னலையே நிகர்த்த சுடரினையுடைய வேற்படைக்கலத்தைக் கொண்டவரே, நீர் இவ்வுருவம் முன்னே காட்டி முயங்காமல் இத்துணையும் கொன்னே கழித்தீர் - தேவரீர் இத்திருவுருவத்தை முன்னரே காட்டி (என்னைச்) சேராமல் இவ்வளவும் பயனின்மையாகவே கழித்தீர், கொடியேன் செய் குற்றம் எலாம் இன்னே தணித்து எனை ஆண்டுகொள்ளும் என்றாள் - கொடியேனாகிய யான் செய்த குற்றமெல்லாவற்றையும் இப்பொழுதே பொறுத்து என்னை ஆண்டு கொண்டருள்வீர் என்று கூறினார் (அவ்வள்ளியம்மையார்). எ - று.

ஏகாரங்களில் முன்னைய பிரிநிலையும் பின்னையது அசைநிலையுமாமென்க. சுப்பிரமணியப்பெருமான் முன்னரே மிக்க காமவேட்கையுற்றதுபோலவும் அதனைத்தரித்தற்கரிதாய் வாடியதுபோலவும் நடித்தருளியதை அவ்வள்ளியம்மையாரியற்கை

யாகவே யடைந்தனரென்று கருதிப்போலும். இவ்வுருவமுன்னே நீர்காட்டிமுயங்காம லித்துணையுங் கொன்னேகழித்தீரென்ற தென்பது. தணித்தல் அவித்தல்; ஈண்டுப் பொறுத்தல். (118)

உம்மையதனிலுலகமுண்டோன்றன்மகணீ
நம்மையணையும்வகைநற்றவஞ்செய்தாயதனு
லிம்மைதனிலுன்னையெய்தினேமென்றெங்க
ளம்மைதனைத்தழுவியையனருள்புரிந்தான்.

இ-ள். நீ உம்மையதனில் உலகம் உண்டோன்றன் மகள் - நீ முற்பிறப்பிற் பூவுலகையுண்ட விஷ்ணுவுடைய மகள், நம்மை அணையும் வகை நல் தவம் செய்தாய் - எம்மைச் சேரும்பொருட்டு நல்ல தவத்தை (அப்பிறப்பிற்) செய்து வைத்தாய், அதனுல் இம்மைதனில் உன்னை எய்தினேம் என்று - அதனுலே இப்பிறப்பில் நின்னைச் சேர்ந்தேமென்றுரைத்து, எங்கள் அம்மைதனை தழுவி அருள்புரிந்தான் ஐயன் - எங்களம்மையாராகிய வள்ளிநாயகியாரைத் தழுவியருள்புரிந்தார் சுப்பிரமணியப்பெருமான். எ - று.

புணர்தல் இருவர் வினையினுனும் நிகழ்வதாதலின் இம்மைதனிலுன்னை யெய்தினேமென்றது நம்மையணையும்வகை நற்றவஞ்செய்தாயென்றதற்கு மாருகாமை காண்க. என்று அருள்புரிந்தானென்றியைத்து என்று திருவாய்மலர்ந்தருளினுரென்று பொருள்கூறினுமமையும். (119)

எங்கண்முதல்வனிறைவிதனைநோக்கி
யுங்கள்புனந்தன்னிலுறைந்திடமுன்னேகுதியான்
மங்கைநல்லாயாமும்வருவோமெனவுரைப்ப
வங்கண்விடைகொண்டடிபணிந்துபோயினளே.

இ-ள். எங்கள் முதல்வன் இறைவிதனை நோக்கி - எங்கள் முதல்வராகிய சுப்பிரமணியப்பெருமான் (எங்கள்)

தலைவியாராகிய வள்ளியம்மையாரைப் பார்த்து, மங்கை நல்லாய் - மங்கையாகிய நங்காய், உங்கள் புனந்தன்னில் உறைந்திட முன் ஏகுதி யாமும் வருவோம் என உரைப்ப - உங்கள் தினைப்புனத்தின்கண் (அதனைக்காவல் செய்து கொண்டு) இருக்கமுன்னர்ச் செல்வாய் யாமும் (ஆங்குப் பின்னர்) வருவோமென்று திருவாய்மலர்ந்தருள, அடி பணிந்து விடைகொண்டு அங்கண் போயினள் - (அவ்வம்மை யார் அப்பெருமானுடைய) திருவடிகளை வணங்கி விடை பெற்றுக்கொண்டு ஆங்குச்சென்றார். எ - று.

தம்மையுமற்றை அன்பர்களையுஞ் சேர்த்து எங்கள் என்றார்; தம்மையுமற்றை ஆன்மாக்களையுஞ் சேர்த்துரைத்தாரெனினு மமையும். ஆல் அசைமொழி. மங்கை ஈண்டுப்பருவங் குறித்து நின்றது. மங்கைநல்லாய் என்றதற்கு மங்கையர்க்குள் நல்லவளே என்று பொருளுரைப்பினுமமையும்; ஈண்டு மங்கையரென்பது "சிலவிகாரமா முயர்திணை" என்னும் ஓத்தின்படி அர் விகுதி கெட்டுப் புணர்ந்ததென்பது. உம்மை எச்சவும்மை. அங்கண் என்பதை போயினள் என்பதனோடு இயைக்காதுவிட்டுப் பொரு ளுரைப்பினுமமையும். (120)

வேறு

வாங்கியசிலைநுதல்வள்ளியென்பவள்
பூங்குரலேனலம்புனத்துளேகியே
யாங்கனமிருத்தலுமயற்புனத்தமர்
பாங்கிவந்தடிமுறைபணிந்துநண்ணினள்.

இ - ள். வாங்கிய சிலை நுதல் வள்ளி என்பவள் பூ குரல் ஏனலம் புனத்துள் ஏகி ஆங்கனம் இருத்தலும்-வளைத்த தனுவைநிகர்த்த நெற்றியையுடைய அவ்வள்ளியம்மையார் பொலிவாகிய கதிர்களையுடைய தினைப்புனத்துட் சென்று அவ்விடத்திருக்கவும், அயல் புனத்து அமர் பாங்கி வந்து

முறை அடிபணிந்து நண்ணினள் - அயற்புனத்தின்கண்ணே (அப்புனங்காவல்கொண்டு) இருக்கும் பாங்கிவந்து முறையே (அவ்வள்ளியம்மையாருடைய) திருவடிகளை வணங்கிச் சார்ந்தாள். எ - று.

வாங்கிய என்பது ஈண்டு செயப்படுபொருட் பெயரெஞ்சிய பெயரெச்சம். பூங்குரல் என்பது "பூவெனொருபெயராயியல் பின்றே" என்னும் ஒத்தின்படியே வல்லெழுத்துப்பெறாது மெல்லெழுத்துப் பெற்றுமுடிந்தது. ஆங்ஙனம் என்பது சந்தநோக்கி ஆங்கனமெனவலித்தது. பாங்கி தோழி. "தோழிசெவிலி மகளாய்ச்சூழலோ டொத்துணையாகி யசாத்தணிவித்தற் குரியகா தனமருவியதுணையே" என்னும் ஒத்தினற்றோழியிலக்கணமும் உணர்ந்துகொள்க. (121)

நாற்றமுந்தோற்றமுநவிலொழுக்கமு
மாற்றமுஞ்செய்கையுமனமுமற்றதும்
வேற்றுமையாதலும்விளைவுநோக்கியே
தேற்றமொடிகுளையங்கினையசெப்புவாள்.

இ - ள். நாற்றமும் தோற்றமும் நவில் ஒழுக்கமும் - (அவ்வள்ளியம்மையார்மாட்டுப் பண்டில்லாததோர்) பரிமளத்தையுந் தோற்றத்தையுஞ் சொல்லப்படுகின்ற ஒழுக்கத்தையும், மாற்றமும் செய்கையும் மனமும் அற்றதும் வேற்றுமை ஆதலும் விளைவும் - (அவருடைய) வாக்குஞ்செயலு மனமும் இல்லையானதையும் வேற்றுமையாதலையும் (முன் விளையாதவொன்று) விளையப்பட்டதையும், இருளை நோக்கி - பாங்கிநோக்கி (ஐயுற்றோர்ந்து), தேற்றமோடு அங்கு இனைய செப்புவாள் - தெளிவோடங்ஙனமிவற்றைக் கூறுவாள். எ - று.

தோற்றம் முலைப்பாரிப்பு, விழிச்சிவப்பு, இதழ்வெளுப்பு ஆதியனவுடைய தோற்றம். ஒழுக்கம் விளையாட்டுச் சிறிதுமின்றி

வாளாவிருக்கு மொழுக்கம். நாற்றம் தோற்றம் ஒழுக்கம் இம் மூன்றும் அகத்திணையில் பாங்கிமதியுடன்பாட்டிற் கூறப்பட்ட ஐயக்குறிகளென்பதை யுணர்த்த ஈற்றிலுள்ள ஒழுக்கத்தைச்சார நவில் என்னுமடைகொடுத்தா ரென்பது. அந்நாற்றமாதிய மூன் ேறாடு உண்டி செய்வினைமறைப்பு செலவு பயில்வு இந்நான்குங் கூடி ஏழேஐயக்குறிக ளென்பவாயினும் பின்னையநான்கும்நெடும் பொழுது கூடிநின்றாலன்றி யுணர்தல்கூடாமையின் அயற்புனத் திருந்தபொழுதுவந்த பாங்கிக்கு ஐயக்குறிகளாயினவல்ல ஆத லின் அவற்றையொழித்து அம்மூன்றோடு அப்பொழுது நிகழும் வாக்கின்மையாதலாதிய மூன்றுங்கூடி அவ்வாறுமையக் குறிக ளாயினவென்பது. அகத்திணையிற்பாங்கி மதியுடம்பாட்டிலே ஐயக்குறிகள் நாற்றமுதற்பயில்வீறாகிய எழு என்று கூறப்பட் டிருக்க அவற்றுள் ஈண்டு நாற்ற முதன் மூன்றை எடுத்துக் கொண்டதும் வேறும் மாற்றமற்றலாதிய மூன்றைச் சேர்த்துக் கொண்டதும் அகப்பொருளிலக்கணத்துக்கு மாறன்றேவெனின் அவ்வகப்பொருளிலக்கணத்துக் கூறப்பட்ட வொழுக்கம் புனைந் துரை யுலகியலெனுந்திற மிரண்டினுலும் புலவரால் நாட்டப் பட்டதோரொழுக்கமாம். ஆகவே உலகியலுக்கு அவ்விலக்க ணத்திற் கூறப்பட்டன எல்லாமமைய வேண்டுமென்பதும் கூறப்படாதனவருதல் கூடாவென்பதும் நியதியன்றாதலின் மாறன்றென்க. மாற்றமும் செய்கையும் மனமும் இம்மூன்றை யும் இவைகொள்ளும் பயனிலைகளாகிய அற்றதும் வேற்றுமை யாதலும் விளைவும் இம்மூன்றையும் வேறுநிரனிறீஇயவாற்றான் அதுமுறைநிரனிறையென்க. மாற்றமும் அற்றதும் செய்கையும் வேற்றுமையாதலும் மனமும் விளைவும் என்றியைத்துரைக்க. வாக்கற்றதென்பது தோழி தம்மிடத்து வரும்போதெல்லாம் அவ்வள்ளியம்மையார் பண்டுகூறும் உபசாரவாக்கு முதலியன அப்பொழுதில்லையாதல். செயல்வேற்றுமையாதல் புள்ளோப்ப லாதியவை பண்டுபோலன்றி வேறுபடல் நாற்றம் தோற்றம் ஒழுக்கம் வாக்கின்மையாதல் செயல்வேறுபடல் இவை காட்சியா னுணரப்படுவன. மனம்விளையப்படுதல் முகக்குறியானுணர்தலின் அனுமானத்தா னுணரப்படுவதென்பது; மனவிளைவுமுகக்குறியா னுணரப்படுமென்பதை "அடுத்ததுகாட்டும் பளிங்குபோனெஞ்

சங்கடுத்தது காட்டுமுகம்" என்பதனானுணர்க. இச்செய்யுளுக்குப் பொருளிலக்கணத்திலே "நாற்றமுந் தோற்றமுமொழுக்கமு முண்டியுஞ் செய்வினைமறைப்புஞ்செலவும் பயில்வுமென்றிவ்வகை யேழினுமைய முற்றோர்தலும் என்று கூறப்பட்டவாறு பொருள் கூறத்தொடங்கி இடர்ப்படுவார்பலர்; அவர் மாற்றமுஞ் செய்கை யும் மனமும் மற்றதும் எனச்சொல்வகுத்து உண்டி மாற்றமும் செய்வினைமறைப்பும் செலவும் பயில்வுமென்றியையாப் பொருள் கூறி, வேற்றுமையாதலும் என்றதற்கு அந்நாற்றமாதியவெல்லாம் வேற்றுமையாதலு மென்றுரைத்து விளைவுமென்றதற்கு அவ் வேற்றுமையாதல் பெருகுதலுமென்றுரைப்பர். அம்மாற்றமா திய சொற்களுக்கு அவைபொருளல்லாதலினாலும் அவர்கூறு முண்டிமாற்றமாதிய நான்கிற்கும் வேற்றுமையாதல் பொருந்துவ தின்றாதலினானும் வேற்றுமையாதலின்மேல் விளைவுகூற வேண்டு வதின்றாதலினானும் அப்பொழுது வந்துகண்ட பாங்கிக்கு அவை ஐயக்குறிகளாதலில்லை யாதலினானும் உலகியலுக்கு அவ்வையக் குறிகளெல்லாம் வேண்டுமென்னும் நியதியின்றாதலினானும் அவருரை உரையன்றென்பது. (122)

இப்புனமழிதரவெங்ஙனேகினை
செப்புதிநீயெனத்தெரிவைநாணுறா
வப்புறமென்சுனையாடப்போந்தனன்
வெப்புறும்வேனிலான்மெலிந்தியானென்றாள்.

இ - ள், நீ இப்புனம் அழிதர எங்ஙன் ஏகினை செப்புதி என - நீ இத்தினைப்புனம் (காப்பவரின்மையான விலங்கு களானும்புட்களானும்) அழிய யாண்டுச் சென்றனை உரையா யென்று (அப்பாங்கி) கூற, தெரிவை நாணுறா - அவ்வள்ளி யம்மையார்நாணி, யான் வெப்பு உறும் வேனிலால் மெலிந்து அப்புறம் மெல் சுனை ஆடபோந்தனன் என்றாள் - யான் வெப்பம்பொருந்திய வெய்யிலினால் மெலிதலுற்று அப் புறத்திலுள்ள மென்மையாகிய சுனைநீரின் முழுகச் சென்றே னென்றார். எ - று.

எங்ஙனம் என்பது எங்ஙன் எனக்கடைக்குறையாயிற்று. தெரிவை ஈண்டுப்பருவங்குறியாது பெண்ணென்னும் பொருட்டாநின்றது. சுனை ஆகுபெயர். (123)

மைவிழிசிவப்பவும்வாய்வெளுப்பவு
மெய்வியர்வடையவுநகிலம்விம்மவுங்
கைவளைநெகிழவுங்காட்டுந்தண்சுனை
யெவ்விடையிருந்துளதியம்புவாயென்றாள்.

இ - ள். மை விழி சிவப்பவும்-(தீட்டும்) மையையுடைய கண்கள் சிவப்பவும், வாய் வெளுப்பவும்-இதழ்கள்வெளுப்பவும், மெய்வியர்வு அடையவும்-மேனிவியர்த்தலுறவும், நகிலம் விம்மவும் - முலைகள் பூரிக்கவும், கைவளை நெகிழவும்-கரங்களிலுள்ளவளையல்கள் நெகிழவும், காட்டும் தண் சுனை - செய்கின்ற குளிர்மையாகிய சுனை, எவ்விடை இருந்துளது இயம்புவாய் என்றாள் - எங்ஙனமிருந்துளது கூறுவாய் (யானும் நின்போலக் காரிகைபெற அச்சுனையைக்குடைவேன்) என்று கூறினாள் (பாங்கி) எ - று.

வாய் ஆகுபெயர். புணர்ந்தமகளிருக்குறுவது நுதற்குறுவியர்வு என்பவாகலின், மெய்வியர்வடையவும் என்றதற்கு நுதல் குறுவியர்வுறவுமென்று உரைப்பினுமமையும்; ஈண்டு மெய் ஆகுபெயரென்ப. வளை ஈண்டுப்பொன்னாலாகிய வளையல்; நெகிழ்ச்சியுறுவது அதுவேயாதலின். இது சுனையாடல்கூறித் தோழி நகுதல். (124)

சொற்றிடுமிகுளையைச்சுளித்துநோக்கியே
யுற்றிடுதுணையதாவுனையுட்கொண்டியான்
மற்றிவணிருந்தனன்வந்தெனக்குமோர்
குற்றமதுரைத்தனைகொடியைநீயென்றாள்.

இ - ள். சொற்றிடும் இகுளையை சுளித்து நோக்கி - (அங்ஙனங்) கூறியபாங்கியை (அவ்வள்ளியம்மையார்)

வெகுண்டுநோக்கி, உனை உற்றிடு துணையது ஆ உள் கொண்டு யான் இவண் இருக்தனன் - நின்னை (எனக்கு) உற்றதுணையாக வுள்ளத்துட்கொண்டுயான் ஈண்டிருந்தேன், கொடியை நீ வந்து எனக்கும் ஓர் குற்றமது உரைத்தனை என்றாள் - கொடுமையையுடையையாகிய நீவந்து எனக்குமோர் குற்றங் கூறினையென்று சொன்னார். எ - று.

ஏயும் மற்றும் அசைநிலைகள். ஆக என்பது ஆ வென இறுதி குறைந்து நின்றது. எனக்குமோர்குற்றமதுரைத்தனை என்றதற்கு (குற்றமுடையார்க்குக் குற்றங்கூறுவதேயன்றிக்) குற்றமுடையேனல்லேனாய எனக்குமோர் குற்றங்கூறினையென்று பொருள்படுதலின் உம்மை எதிர்மறைப்பயத்தது. (125)

பாங்கியுந்தலைவியும்பகர்ந்துமற்றிவை
யாங்கனமிருத்தலுமதனைநோக்கியே
யீங்கிதுசெவ்வியென்றெய்தச்சென்றனன்
வேங்கையதாகிமுன்னின்றமேலையோன்.

இ - ள். பாங்கியும் தலைவியும் இவை பகர்ந்து ஆங்கனம் இருத்தலும் - தோழியுந் தலைவியாரும் இவற்றையுரைத்துக்கொண்டு அவ்விடத்திருக்கவும், முன்வேங்கையது ஆகி நின்ற மேலையோன் - முன்னே வேங்கைமரமாகி (அப்புனத்தில்) நின்றதலைவராகிய சுப்பிரமணியப்பெருமான், அதனை நோக்கி எய்த ஈங்கிது செவ்வி என்று சென்றனன் - (அவ்விருவருங் கூடியிருத்தலாகிய) அதனைப்பார்த்து (அவர்களிருக்கும்புனத்தைச்) சார இதுவேசமயமென்று சென்றருளினார். எ - று.

மற்றும் ஏயும் அசைநிலைகள். ஈங்கிது என்பது "ஒள்வன் படைக்கண்ணிசேறடி யிங்கிவை" என்றதில் இங்கிவை ஒருசொல்லாய் இவையென்னும் பொருடந்ததுபோல இது என்னும் பொருடந்தது. பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற்றொக்கது. (126)

கோட்டியசிலையினன்குறிக்கொள்வாளியன்
நீட்டியகுறியவாள்செறித்தகச்சினன்
வேட்டமதழுங்கியவினைவலோனெனத்
தாட்டுணைசிவந்திடத்தமியனேகினன்.

இ - ள். கோட்டிய சிலையினன் - (ஒருகரத்தில் - வளைத்தவில்லையுடையராகியும், குறிக்கொள் வாளியன்) (ஒருகரத்தில்) குறிக்கொள்ளும் பகழியையுடையராகியும், நீட்டிய குறிய வாள் செறித்த கச்சினன் - நீட்டிய குற்றுடைவாளைச்செறித்த (அரைக்) கச்சையுடையராகியும், வேட்டமதது அழுங்கிய வினைவலோன் என - வேட்டையாட்டத்தான் வாட்டமுற்ற தொழில் வல்லோன்போல, தமியன் தாள் துணை சிவந்திட ஏகினன் - தமியராகவே திருவடிகளிரண்டுஞ் சிவப்புறச்சென்றருளினார் (அச்சுப்பிரமணியப்பெருமான்.) எ - று.

கோட்டிய நீட்டிய என்பவற்றிற்கும் முன்னர் வாங்கிய என்பதற்குரைத்ததுரைக்க. குறிக்கொள்ளல் இலக்கிற்றைத்தல். வல்லோன் வலோனெனச்செய்யுளின்பநோக்கித் தொகுக்கப்பட்டது. வேட்டமதழுங்கிய வினைவலோனெனத் தாட்டுணை சிவந்திடத்தமியனேகினன் என்றதனானே சேனைசூழவருமரசன். அச்சேனையையொழித்துத் தன்னாற்பாணஞ் செலுத்தப்பட்டமாவைத்தேடி ஓடிவருமாறுபோலத்தகியராகவே விரைந்து வந்தருளினாரென்று தொனித்தலுணர்க. (127)

வேறு

காந்தள்போலியகரத்தினீர்யானெய்தகணையாற்
பாய்ந்தசோரியும்பெருமுழக்குறுபகுவாயு
மோய்ந்தபுண்படுமேனியுமாகியோரொருத்தல்
போந்ததோவிவண்புகலுதிர்புகலுதிரென்றான்.

இ - ள். காந்தள் போலிய கரத்தினீர் - செங்காந்தண் மலர்களைநிகர்த்தகைகளையுடையீர், யான் எய்த கணையால் - யான்செலுத்தியபகழியால், பாய்ந்த சோரியும் - பாய்கின்ற வுதிரமும், பெரு முழக்கு உறு பகுவாயும் - பெரிய முழக்க முற்றபிளந்தவாயும், ஒய்ந்த புண் படு மேனியும் ஆகி - முன்னுணுகாதுநுணுகிய புண்பட்டமெய்யுமுடைத்தாகி, ஓர் ஒருத்தல் இவண்போந்ததோ - ஓராண்யானையீண்டு வந்ததோ, புகலுதிர் புகலுதிர் என்றான் - உரையீருரையீ ரென்று திருவாய்மலர்ந்தருளினர் (சுச்சுப்பிரமணியப் பெருமான்.) எ - று.

காந்தள் ஆகுபெயர். போலிய என்பது இடைச்சொல்லடி யாகப்பிறந்தபெயரெச்சம்; போல் பகுதி இன் இடைநிலைகடை குறைந்து நின்றது அ விகுதி. ஒய்ந்தமேனிஎன இயையும். ஒய்தல் நுணுக்கம்; (வாட்டமென்றபடி). அது அப்பொருள்படு தலை "ஒய்தலாய்தனிளத்தல்சா அயாவரிஞன் கூழுள்ள தனுணுக் கம்" என்பதனானுணர்க. புகலுதிர் புகலுதிரென்றது விரைவுப் பொருணிலையிலடுக்கென்பது. இது வேழம்வினாதற்கிளவி. (128)

வேழமேமுதலுள்ளனகெடுதிகள்வினவி
யூழிநாயகனிற்றலுமுமக்குநேரொத்து
வாழுநீரநுக்குரைப்பதேயன்றிநும்வன்மை
யேழையேங்களுக்கிசைப்பதென்னென்றனளிகுளை.

இ - ள். ஊழி நாயகன் - (எல்லாஆன்மாக்களுக்கும்) நித்தியதலைவராகிய சுப்பிரமணியப்பெருமான், வேழமே முதல் உள்ளன கெடுதிகள் வினவி நிற்றலும் - யானையே முதல் (ஆக) உள்ளனவாகிய கெடுதிகளை வினவிநிற்கவும், இகுளை - பாங்கியானவள், நும் வன்மை - நுமது வலிமையை, உமக்குநேர் ஒத்து வாழும் நீரருக்கு உரைப்பதே அன்றி - உமக்குநிகரொத்துவாழுந்தன்மையருக்குக் கூறுவதேயன்றி,

ஏழையேங்களுக்கு இசைப்பது என் என்றனள் - ஏழைமை யுடையேங்களுக்குக் கூறுவதென்னையென்றாள். எ - று.

கெடுதிவினாதற்கண் வேழத்தையே முதல்வினாதல்வழக் காதலின் வேழமே என்றதில் ஏகாரம் பிரிநிலைப்பொருட்டு. உரைப்பதே என்றதில் ஏகாரமும் அது. ஊழிஈண்டுநித்தியம். இது எதிர்மொழிகொடுத்தற்கிளவிக்கினம். (129)

ஐயர்வேட்டைவந்திடுவதுந்தினைப்புனத்தமர்ந்து
தையல்காத்திடுகின்றதுஞ்சரதமோபறவை
யெய்யும்வேட்டுவர்கோலமேபோன்றனவிருவர்
மையறன்னையுமுரைத்திடும்விழியெனமதித்தாள்.

இ - ள். விழி - இவ்விருவருடைய கண்களும், பறவை எய்யும் வேட்டுவர் கோலமே போன்றன-புட்களை எய்கின்ற வேட்டுவரது (விழியின்) தன்மையேபோன்றனவாய், இருவர் மையறன்னையும் உரைத்திடும் - இருவருடைய ஆசையையுங் கூறுகின்றன (ஆதலின்), ஐயர் வேட்டை வந்திடுவதும் தையல் தினை புனத்து அமர்ந்து காத்திடுகின்றதும் சரதமோ - இத்தலைவர்வேட்டையாட்டத்தில் வந்ததும் இத்தலைவி தினைப்புனத்தின்கணிருந்து காவல் செய்வது மெய்ம்மையோ. எ - று.

சரதமோ என்றதற்கு மெய்ம்மையன்று என்னும் பொருளாதலின் ஓகாரம் வதிர்மறைப்பொருட்டு. ஏகாரம் பிரிநிலை. பறவையெய்யும் வேட்டுவர் பறவையை நேரே நோக்காது மற்றொன்றினுளத்தைச் செலுத்தாது அதனையேநோக்காதது போல நோக்குதல் போல அவ்விருவரும்மற்றொன்றினுளத்தைச் செலுத்தாது ஒருவரையொருவர்நோக்காதது போல் நோக்கினரென்பது. இது பாங்கிமதியின் அவரவர் மனக்கருத்துணர் தற்கிளவி. (130)

மனத்திலிங்கிவையுன்னியேதுணைவியுமற்றைப்
புனத்திலேகிவீற்றிருந்தனளன்னதோர்பொழுதிற்
சினத்திடுங்கரியெய்தனமென்றசேவகன்போய்க்
கனத்தைநேர்தருகூந்தலாய்கேளெனக்கழறும்.

இ - ள். துணைவியும் மனத்தில் இங்கிவை உன்னி - அத்தோழியுந் (தன்) மனத்திலிவற்றை நினைத்து, மற்றை புனத்தில் ஏகி வீற்றிருந்தனள் - அயற்புனத்தின்கட்சென்று வீற்றிருந்தாள், அன்னது பொழுதில் - அச்சமயத்தில், சினத்திடும் கரி எய்தனம் என்ற சேவகன் போய் - வெகுண்டிடுகின்றவேழத்தை எய்தேமென்று (முன்னர்க்) கூறியருளியவீரராகிய சுப்பிரமணியப்பெருமான் (ஆண்டுச்) சென்று, கனத்தை நேர்தரும் கூந்தலாய் கேள் என கழறும் - மேகத்தைநிகர்த்த அளகத்தையுடையாய் (யான்கூறுவதைக்) கேளாயென்று கூறியருளுவார். எ - று.

இங்கிவை என்றதற்கு முன் ஈங்கிது என்றதற்குரைத்தது உரைக்க. உம்மை எதிரதுதழீஇய எச்சவும்மை. ஏயும் ஓரும் அசைநிலைகள். (131)

உற்றகேளிருநீங்களேதமியனுக்குமக்குப்
பற்றதாயுளபொருளெலாந்தருவனும்பணிகண்
முற்றுநாடியேபுரிகுவன்முனிவுகொள்ளாது
சற்றுநீரருள்செய்திடுமென்றனன்றலைவன்.

இ - ள். தமியனுக்கு உற்ற கேளிரும் நீங்களே - தமியேனுக்குற்ற உறவினரும் நீங்களே, உமக்கு பற்றது ஆய் உள பொருள் எலாம் தருவன் - உங்களுக்கு விருப்பமதா யுள்ள பொருள்கள் யாவற்றையுந் தருவேன், நும் பணிகள் முற்றும் நாடியே புரிகுவன் - உங்கள் பணிகள் யாவற்றையுந் தேடிச்செய்வேன்; நீர் முனிவு கொள்ளாது சற்று அருள்

செய்திடும் என்றனன் தலைவன்-நீங்கள் (என்மேற்) கோபங் கொள்ளாது சிறிதருள்புரிவீரென்று திருவாய் மலர்ந்தருளி னார் தலைவராகிய சுப்பிரமணியப்பெருமான். எ - று.

உற்றகேளிர் உரியவுறவினர். ஏகாரங்களில் முன்னையது பிரிநிலையும் பின்னையது அசைநிலையுமாம். தமியனுக்கு என்றதனானே காமத்தின்பாற்பட்டு நும்மையன்றிப் பிறிதொருபற்றுக் கோடில்லேனாயினேன் என்று தொனித்தலுணர்க. தம்மால் இயலாததொன்றுமில்லையென்று குறித்தற்கு நுமக்குப்பற்றதாயுள பொருளெலாந்தருவன் என்றும் அப்பாங்கி இத்துணைப் பெரியோர் சிறியேங்கண்மாட்டு இடையறாது இங்ஙனம் அன்புடையராயிருப்பாரோ இருக்காரோ என்றையுறும் ஐயத்தை நீக்குதற்கு நும்பணிகண்முற்றுநாடியே புரிகுவன் என்றுங்கூறியருளினாரென்பது. நாடிப்புரிகுதல் இப்பணியைச் செய்யென்னு ஏவாதிருக்கத் தாமாகவே இது செய்யவேண்டுவதென்று கருதிச் செய்தல். இது தலைவனுட்கோள்சாற்றற்கிளவி. (132)

அண்ணல்கூறியதிதனைதேர்ந்திடுதலுமைய
ரெண்ணமீதுகொலெம்பெருங்கிளைக்கிதோரிழுக்கை
மண்ணினாட்டவோவந்ததுமறவர்தம்பேதைப்
பெண்ணையாதரித்திடுவரோபெரியவரென்றாள்.

இ - ள். இதனை அண்ணல் கூறியது தேர்ந்திடுதலும்-பாங்கியானவள் சுப்பிரமணியப்பெருமான் கூறியருளியதைத் தெளிந்திடுதலும், ஐயர் எண்ணம் ஈதுகொல் - இவ்வரசருடைய வுள்ளக்கருத்திதுவோ, எம் பெரும் கிளைக்கு இது ஓர் இழுக்கை மண்ணின் நாட்டவோ வந்தது - எமது பெருமையாகிய சுற்றத்துக்கு இவ்வொரு குற்றத்தை இப் பூமியினிறுத்தவோ (இவர்) வந்தது (என்று தன்னுட் கருதிக்கொண்டு), பெரியவர் மறவர்தம் பேதை பெண்ணை யாதரித்திடுவரோ என்றாள் - பெரியராயினோர் வேட்டுவர்

குலத்துப் பேதைமையையுடைய பெண்ணை விரும்புதல் செய்வாரோ என்று கூறினள். எ - று.

கூறியது கூறிய கருத்து. தேர்ந்திடுதலும் என்றது இறந்த காலவினையெச்சம்; அது "அன்னமரபிற் காலங்கண்ணியவென்ன வெளவியுமவற்றியல்பினவே" என்னும் விதியானமைக்க. எண்ண மீதுகொல் என்றதற்கு எண்ணமிதுகொல் இதுதக்கதன்று என்று ஒழிந்தசொற்களைத்தருதலால் ஒழியிசைப்பொருளில் வந்தது. கொல் ஈண்டு ஒழியிசைப்பொருளில்வந்ததையும் "அவ் வச்சொல்லிற்கிவையவை பொருளென மெய்பெறக்கிளந்தவியல வாயினும் வினையொடும் பெயரொடு நினையத்தோன்றித் திரிந்து வேறுபடினுந் தெரிந்தனர் கொளலே" என்னுஞ் சூத்திரத்தா னமைக்க. நாட்டவோ வந்தது என்றதற்கு நாட்டுதற்கோவந்தது. இது எமக்குக் குடிப்பழியாவதன்றியும் இவருடைய பெருமைக் குத் தக்கதன்று என்று ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை. ஆதரித்திடுவரோ என்றதின் ஓகாரம் வினாப்பொருட்டு. இச் செய்யுளில் பெரியவர் மறவர்தம்பெண்ணை ஆதரித்திடுவரோ என்றதனால் பாங்கிகுலமுறை கிளத்தற்கிளவியும், பேதைப் பெண்ணை என்றதனால் பாங்கிபேதைமையூட்டற்கிளவியுந் தொனித்தலுணர்க. (133)

சீதரன்றருமமிர்தினையெயினர்கள்செய்த
மாதவந்தனைப்பெண்ணினுக்கரசைமற்றெனக்குக்
காதனல்கியேநல்லருள்புரிந்தகாரிகையைப்
பேதையென்பதேபேதைமையென்றனன்பெரியோன்.

இ - ள். சீதரன் தரும் அமிர்தினை - விஷ்ணுமூர்த்தி தந்த அமிழ்தம்போல்வாளை, எயினர்கள் செய்த மா தவந் தனை - வேட்டுவர்கள் (முன் செய்த பெரிய தவத்தின் பயனானவளை, பெண்ணினுக்கு அரசை - பெண்களுக்குட் டலைமையுடையாளை, எனக்கு காதல் நல்கியே நல் அருள் புரிந்த காரிகையை - எனக்கு (முன்னர்) ஆசைநோயைத்

தந்து (பின்னர் அது தீர) நல்லருள் செய்த அழகினையுடையாளை, பேதை என்பதே பேதைமை என்றனன் பெரியோன் - பேதையென்று சொல்லுவதே பேதைமையென்று திருவாய் மலர்ந்தருளினர் பெரியோராகிய சுப்பிரமணியப் பெருமான். எ - று.

இவளை வேட்டுவருடைய மகளென்கின்றாய் இவள் விஷ்ணுமூர்த்தியுடைய மகளென்றும் ஒருபொருள்பட சீதரன்தருமயிர்தினையென்றார். விஷ்ணுமூர்த்தியே கருத்தாவாக நின்று திருப்பாற்கடலைக்கடைந்து அமிர்தத்தை எடுத்தமையால் சீதரன்தருமமிர்தெனப்பட்டது. அமிர்து உவமவாகுபெயர். இவள் வேட்டுவர்க்கு மகளாகத்தக்கவன்று. வேட்டுவர் முற்சனனத்திற்செய்த பெரிய தவத்தினலே அவரால் வளர்க்கப்பட்டாளென்று தொனிக்க எயினர்கள் செய்த மாதவந்தனை என்றார். மற்று அசைநிலை. தவத்தினது பயனானவளை தவமென்று காரியத்தைக் காரணமாவுபசரிக்கப்பட்டது. அரசு அரசியென்றுபொருளாதலின் குணவாகுபெயர். ஏகாரங்களில் முன்னையது அசைநிலையும் பின்னையது தேற்றமுமாம். இச்செய்யுளில் சீதரன்தருமயிர்தினை எயினர்கள் செய்த மாதவந்தனைப் பெண்ணினுக்கரசை என்றதனால், தலைவன்றலைவி தன்னையுயர்த்தற்கிளவியும், எனக்குக் காதல் நல்கியே நல்லருள்புரிந்த காரிகையைப் பேதையென்பதே பேதைமை என்றதனல் காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதற்கிளவியுந் தொனித்தலுணர்க. (134)

என்றெங்கோனுரைசெய்தலுமடமகளிங்ஙன்
குன்றங்காவலர்வருகுவரவர்மிகக்கொடியோ
ரொன்றுந்தேர்கிலர்காண்பரேலெம்முயிரோறுப்பார்
நின்றிங்காவதென்போமெனநெறிப்படுத்துரைத்தாள்.

இ - ள். என்று எம் கோன் உரைசெய்தலும் - என்று எமதிறைவராகிய சுப்பிரமணியப்பெருமான் கூறியருளலும், மட மகள் - (இயல்பாகவே) பேதைமையையுடைய அப்

பாங்கியானவள், இங்ஙன் குன்றம் காவலர் வருநுவர்-(இனி) இவ்விடத்து (எமது சுற்றமாகிய) வேட்டுவர்கள் வருவார்கள், அவர் மிக கொடியோர் - அவர்களிறப்பக் கொடியவர்கள், ஒன்றும் தேர்கிலர் - (அன்றியும்) ஒன்றையுமாராய்தலில்லாதவர்கள், காண்பரேல் எம் உயிர் ஒறுப்பார் - (அவர்கள் யாம் நும்மோடுரையாடுவதைக்) காண்பார்களாயின் எமதுயிரையழிப்பார்கள், இங்கு நின்று ஆவது என் - (இங்ஙனம் இடையூறு நிகழுதற்கு நீவிர் ஈண்டு நிற்றல் ஏதுவாதலால்) ஈண்டு நின்று அடையும் பயனென்னை, போம் என நெறிப்படுத்து உரைத்தாள் - (இப்புனத்தில் நில்லாது) செல்லுவீரென்று முறைப்படுத்துக் கூறினாள். எ - று.

மடம் மகடூஉக்குணநான்கினுென்று. எவன் என்பது என்னென்றாய் இல்லையென்னும் பொருள் தந்தது. நெறிப்படுத்துரைத்தல் முறைமையைப் பொருத்தியுரைத்தல். இது பாங்கி யஞ்சி அச்சுறுத்தற்கிளவியின்பாற்படும். (135)

தோட்டின்மீதுசெல்விழியினுய்தோகையோடென்னைக்
கூட்டிடாயெனிற்கிழிதனிலாங்கவள்கோலந்
தீட்டிமாமடலேறிநும்மூர்த்தெருவதனி
லோட்டுவேனிதுநானையான்செய்வதென்றுரைத்தான்.

இ - ள். தோட்டின் மீது செல் விழியினுய் - குழையின் மேற் செல்லும் விழியினையுடையாய், தோகையோடு என்னை கூட்டிடாயெனில் - (நினது துணைவியாகிய) அம்மயிலை நிகர்த்தவளோடு என்னைச் சேர்க்காதொழிவையாயின், யான் அவள் கோலம் கிழிதனில் தீட்டி - யான் அவளுடைய வடிவைப் படத்திலெழுதிக்கொண்டு, மடல் மா ஏறி நும் ஊர் தெருவதனில் ஓட்டுவேன் - பனைமடலாலாயதுரகத்திவர்ந்து நும்மூர்த்தெருவிற் செலுத்துவேன், இது செய்

வது நாளை என்று உரைத்தான் - இத்தொழிலை (யான்) செய்வது நாளைக்கேயென்று திருவாய்மலர்ந்தருளினூர் (அச் சுப்பிரமணியப்பெருமான்.) எ - று.

தோகை உவம ஆகுபெயர். மடன்மாவூர்தலாவது தலைமக ளோடு முன்புணர்தலுற்ற தலைமகன் அத்தலைமகளது பாங்கியாற் கூடுங்கூட்டத்தை விரும்பி அப்பாங்கியைக் குறையுற அவளக் குறைமுடிக்க இசையாதவழி ஒருகிழியில் அத்தலைவியின் வடி வத்தையெழுதித் தன்பெயரையுமெழுதிக் கரத்திற்பிடித்துக் கொண்டு வெண்ணீறு வெண்பூளை வெள்ளெருக்கு வெள் ளெலும்பு இவற்றையணிந்து பனைமடலாற்செய்யப்பட்ட குதிரை மீதிவர்ந்து அத்தலைவியூரிற்றெருவிலூர்தல். நாளையே என்றதிற் பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. இது மடலூர்தலைத் தன்மேல்வைத்துரைத்தற்கிளவி. (136)

ஆதிதன்மொழிதுணைவிகேட்டஞ்சியையர்க்கு
நீதியன்றுதண்பனைமடலேறுதனீரிம்
மாதவித்தருச்சூழலின்மறைந்திருமற்றென்
காதன்மங்கையைத்தருவனென்றேகினள்கடிதின்.

இ - ள். துணைவி ஆதிதன் மொழி கேட்டு அஞ்சி - அப்பாங்கியானவள் தலைவராகிய சுப்பிரமணியப்பெருமா னுடைய (மடற்கூற்று) வார்த்தையைக் கேட்டுப்பயந்து, தண் பனை மடல் ஏறுதல் ஐயர்க்கு நீதி அன்று - தண்ணிய பனைமடலாற் செய்யப்பட்ட பாய்மாவின்மீதேறுதல் (உலக முழுதையுங் காத்தருளுகின்ற) அரசராகிய நுமக்கு நீதி யன்று, நீர் இ மாதவி தரு சூழலில் மறைந்திரும் - நீவிர் இக்குருக்கத்தி விருக்ஷச் சூழலிடத்து ஒளித்திரும், என் காதல் மங்கையை தருவன் என்று கடிதின் ஏகினள் - எனது காதலியைக் (கொணர்ந்து) தருவேனென்றுசொல்லி விரை விற்சென்றாள். எ - று.

ஐயர்க்கு ஈண்டு முன்னிலைக்கண்வந்தது. மடல் ஆகுபெயர். மற்று அசைமொழி. இச்செய்யுளில் மடல்விலக்கலுங் குறை நேர்தலுந் தொனித்தலுணர்க. (137)

வேறு

அங்கவெல்லையிலகமகிழ்ச்சியா
யெங்கடம்பிரானினிதினேகியே
மங்குல்வந்துகண்வளருமாதவிப்
பொங்கர்தன்னிடைப்புக்குவைகினன்.

இ - ள். எங்கள் தம்பிரான் அ எல்லையில் அகம் மகிழ்ச்சி ஆய் இனிதின் ஏகி - எமதிறைவராகிய சுப்பிரமணியப்பெருமான் அச்சமயத்திலுள்ள மகிழ்ச்சிகொண்டு இனிது சென்று, மங்குல் வந்து கண்வளரும் மாதவி பொங்கர்தன்னிடை புக்கு வைகினன் - மேகங்கள் வந்து கண்டுயில் செய்கின்ற குருக்கத்தி மரச்சோலையுட்புக்கிருந்தருளினர். எ - று.

ஆங்கு என்னுமசைமொழி முதல்குறுகிநின்றது. அவ்வெல்லை எனற்பாலது அ வெல்லையெனச் செய்யுளின்பநோக்கி வகரந்தொக்கது. (138)

பொள்ளெனத்தினைப்புனத்திற்பாங்கிபோய்
வள்ளிதன்பதம்வணங்கிமானவேற்
பிள்ளைகாதலும்பிறவுஞ்செப்பியே
யுள்ளந்தேற்றியேயொருப்படுத்தினள்.

இ - ள். பாங்கி தினை புனத்திற் பொள்ளென போய் - அப்பாங்கியானவள் (அம்மையார் வீற்றிருக்கின்ற) தினைப்புனத்தின்கண் விரைவிற்சென்று, வள்ளிதன் பதம் வணங்கி - அவ்வள்ளியம்மையாருடைய திருவடிகளை வணங்கி, மானவேல் பிள்ளை காதலும் பிறவும் செப்பி உள்ளம் தேற்றி

ஒருப்படுத்தினுள் - பெருமையாகிய வேற்படைக்கலத்தை யுடைய குமாரக்கடவுளது ஆசையையும் பிறவற்றையுஞ் சொல்லி (அவருடைய) மனத்தைத்தேற்றித் (தன்னுலாகுங் கூட்டத்துக்குச்) சம்மதப்படுத்தினுள். எ - று.

பொள்ளென விரைவுக்குறிப்பு. பிற அவாதாற்ருமையும் அதனுலவர் மடலூரத்துணிதலும். ஏகாரங்கள் அசைநிலை. (139)

இளையமங்கையையிகுளையேனலின்
விளைதரும்புனமெல்லநீங்கியே
யளவின்மஞ்ஞைகளகவுமாதவிக்
குளிர்பொதும்பிற்கொண்டுபோயினுள்.

இ - ள். இகுளை-அப்பாங்கியானவள், இளையமங்கையை- இளையமங்கைப் பருவத்தையுடைய வள்ளியம்மையாரை, விளைதரும் ஏனலின் புனம் மெல்ல நீங்கி அளவு இல் மஞ்ஞைகள் அகவும் குளிர் மாதவி பொதும்பிற்கொண்டு போயினுள் - விளையுந்தினைப்புனத்தை மெள்ளக்கடந்து அளவை யில்லாத மயில்கள் கூத்தாடுகின்ற குளிர்ந்த குருக்கத்தி மரங்கள் செறிந்த சோலையுட்கொண்டு சென்ருள். எ - று.

மங்கையை கொண்டுபோயினுளென இயையும். பொதும்பர் மரஞ்செறிந்தஇடம். (140)

பற்றின்மிக்கதோர்பாவையிவ்வரை
சுற்றியேகியேசூடுங்கோடல்கள்
குற்றுவந்துநின்குழற்குநல்குவ
விற்றியீண்டெனநிறுவிப்போயினுள்.

இ - ள். பற்றின் மிக்கது ஓர் பாவை - அன்பின் மிக்கதாகியதோர் பாவையே, ஈண்டு நிற்றி இவ்வரை சுற்றி ஏகி நீ சூடும் கோடல்கள் குற்று வந்து நின்குழற்கு நல்குவன்-(நின்னுடைய வடிகள் பரல்செறிந்தவிடத்துச் செல்லம்-

பொறுக்காவாதலின்) இங்ஙனம் நிற்பாய் (யானே) இக்கிரியைச் சூழ்ந்துசென்று நீ சூடத்தக்க காந்தண்மலர்களைக் கொய்துவந்து நின்கூந்தலுக்குச் சூட்டுவேனென்று சொல்லி, நிறுவி போயினள் - (அவ்வள்ளியம்மையாரை) நிறுத்தி (அப்புறத்தே) சென்றாள் (அப்பாங்கி). எ - று.

அன்பின் மிக்கதைப்பாவையிலேற்றுக. பாவை உவமவாகு பெயர். நல்குதல் கொடுத்தல்; ஈண்டுச்சூட்டுதல். இது பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கற்கிளவி. "கருதியதுகிளவாதப்பொருடோன்றப் பிறிதொன்று கிளப்பது பரியாயம்மே" என்பவாகலின் இச்செய்யுள்பரியாயவணி. (141)

வேறு

கோற்றொடியிகுளைதன்குறிப்பினுல்வகை
சாற்றினளகன்றிடத்தையனிற்றலு
மாற்றவுமகிழ்சிறந்தாறுமாமுகன்
றோற்றினனெதிர்ந்தனன்றொன்மைபோலவே.

இ - ள். கோல் தொடி இகுளை தன் குறிப்பினுல் வகை சாற்றினள் அகன்றிட - கோலியவளையலையுடைய பாங்கியானவள் தனது குறிப்பினாலே இவ்வகைசொல்லி நீங்க, தையல் நிற்றலும் - அவ்வள்ளியம்மையார் (ஆண்டு) நிற்றலும், மா ஆறுமுகன் ஆற்றவும் மகிழ் சிறந்து தொன்மை போல் தோற்றினன் எதிர்ந்தனன் - பெருமையாகிய ஆறு திருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் இறப்ப மகிழ்ச்சிமிக்கு முன்போலத் தோன்றி எதிர்வந்தருளினார். எ - று.

சாற்றினள் தோற்றினன் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. தோற்றல் ஈண்டுமறைந் திருத்தலைவிட்டு வெளிவரல். தொன்மைபோல என்றதனானே முன்னேவந்த அரசவடிவத்தோடு எதிர்வந்தருளினாரென்பது. தொன்மைபோல

ஆற்ரவுமகிழ்சிறந்து என்றியைத்து முன் கூட்டத்திற்போல இறப்பமகிழ்ச்சிமிக்கு என்று பொருளுரைப்பினுமமையும். (142)

வடுத்துணை நிகர்விழிவள்ளியெம்பிரா
னடித்துணைவணங்கலுமருளையங்கையா
லெடுத்தனன்புல்லினனின்பமெய்தினன்
சுடர்த்தொடிகேட்டியன்றிதனைச்சொல்லினன்.

இ-ள். வடு துணை நிகர் விழி வள்ளி - மாம்பிஞ்சிரண்டை நிகர்த்த கண்களையுடைய வள்ளியம்மையார், எம்பிரான் அடி துணை வணங்கலும் - எமது இறைவராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடிகளிரண்டையும் வணங்குதலும், அவளை அம் கையால் எடுத்தனன் புல்லினன் இன்பம் எய்தினன் - (அச்சுப்பிரமணியப் பெருமான்) அவ்வள்ளியம்மையாரைத் (தமது) திருக்கரத்தாலெடுத்துத் தழுவிப் (புணர்ச்சி) இன்பத்தைப்பெற்று, சுடர் தொடி கேட்டி என்று இதனை சொல்லினன் - ஒளி செய்தலையுடைய வளையலையுடையாய் கேளாயென்று இதனைக் கூறியருளுவார்.

எடுத்தனன் புல்லினன் எய்தினன் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. இதனை என்றது மேற்செய்யுளிற் கூறுவதை. (143)

உந்தையும்பிறரும்வந்துன்னைநாடுவர்
செந்தினைவிளைபுனஞ்சேவல்போற்றிடப்
பைந்தொடியணங்கொடுபடர்திநாளையாம்
வந்திடுவோமெனமறைந்துபோயினன்.

இ-ள். உந்தையும் பிறரும் வந்து உன்னை நாடுவர் - உனது தந்தையும் பிறரும் (ஆண்டு) வந்து நின்னைத் தேடுவார்கள், (ஆதலின்) செம் தினை விளை புனம் சேவல் போற்றிட பைந்தொடி அணங்கொடு படர்தி - செம்மையாகிய

தினைவிளைகின்ற புனத்தைக் காவல்செய்யப் பசுமையாகிய வளையலையுடைய பாங்கியோடு செல்வாய், யாம் நாளை வந்திடுவோம் என மறைந்து போயினன் - யாம் நாளைக்கு வருவோமென்று திருவாய்மலர்ந்து மறைந்து சென்றருளினர் (சுப்பிரமணியப்பெருமான்). எ - று.

உனது தந்தை உந்தைஎன்று மரீஇயது. பிறர் சுற்றமும் பரிசனமும். அணங்கு அழகு; ஈண்டு அழகையுடைய பாங்கிக்கு ஆதலின் ஆகுபெயர். (144)

போந்தபினிரங்கியப்பொதும்பர்நீங்கியே
யேந்திழைவருதலுமிதுளைநேர்கொடு
காந்தளின்மலர்சிலகாட்டியன்னவள்
கூந்நலிற்சூடியேகொடுசென்றேகினள்.

இ - ள். போந்தபின் ஏந்து இழை இரங்கி அப்பொதும்பர் நீங்கிவருதலும் - (சுப்பிரமணியப்பெருமான்) சென்றருளிய பின்னர் ஏந்துகின்ற வாபரணங்களையுடைய வள்ளியம்மையார் (பிரிவாற்றாமையால்) இரங்கி அம்மரஞ்செறிந்த சோலையை நீங்கிவருதலும், இதுளை நேர் கொடு - பாங்கியானவளெதிர்கொண்டு (வந்து), காந்தளின் மலர் சில காட்டி - காந்தண்மலர் சிலவற்றைக்காட்டி, அன்னவள் கூந்தலிற் சூடி - அவ்வம்மையாரது அளகத்திலணிந்து, கொடு சென்று ஏகினள் - (அவரை) அழைத்துக்கொண்டு சென்றாள். எ - று

சுப்பிரமணியப்பெருமானைப் புணர்ந்து நீங்கிவந்த வள்ளியம்மையார் பெருநாணமுடையவராதலின் அந்நாணினால் வருத்தமுறாதபடி பாங்கியானவள் தானதை யறியாதாள்போலக் காந்தண்மலரைக்காட்டி அவருடைய அளகத்திற் சூட்டிக்கொண்டு சென்றாளென்பது. சென்றேகினள் என்பவை ஒரு சொற்றன்மைப்பட்டுச் சென்றாளென்னும் பொருள் தந்து நின்றன; நடந்து

சென்றுளென்று பொருள்கூறினுமமையும். இது பாங்கி தலைவி யைச்சார்ந்து கையுறைகாட்டற்கிளவி. (145)

இவ்வகைவழிபடுமிருளைதன்னொடு
நைவளமேயெனநவிலுந்தீஞ்சொலாள்
கொய்வருதினைப்புனங்குறுகிப்போற்றியே
யவ்விடையிருந்தனளகம்புலர்ந்துளாள்.

இ - ள். நைவளமே என நவிலும் தீம் சொலாள் - குறிஞ்சி யாழிசையேபோலுமென்று சொல்லப்படுகின்ற இனிமையாகிய சொற்களையுடைய வள்ளியம்மையார், இவ் வகை வழிபடும் இருளை தன்னொடு கொய்வரு தினை புனம் குறுகி போற்றி - இவ்வாறு (தன்னை) வழிபடுகின்ற பாங்கி யோடு கொய்யப்படுந் தினைப்புனத்தைச் சார்ந்து காவல் செய்துகொண்டு, அகம் புலர்ந்துளாள் அவ்விடை இருந்த னள் - மனவாட்டமுள்ளவரா யவ்விடத்திருந்தார். எ-று.

நைவளம் ஆகுபெயர். ஏகாரங்களில் முன்னையது பிரிநிலை யும் பின்னையது அசைநிலையுமாம். அகம்புலர்ந்தது பிரிவாற்று மையானென்பது. (146)

வளந்தருபுனந்தனில்வள்ளிநாயகி
தளர்ந்தனளிருத்தலுந்தலையளித்திடு
மிளந்தினையின்குரலீன்றுமுற்றியே
விளைந்தனகுறவர்கள்விரைந்துகூடினர்.

இ - ள். வள்ளிநாயகி வளம் தரு புனந்தனில் தளர்ந்த னள் இருத்தலும் - வள்ளியம்மையார் வளத்தைத்தருகின்ற தினைப்புனத்தின்கண்ணே வாட்டமுற்றவராயிருத்தலும், தலை அளித்திடும் இளம் தினை இன் குரல் ஈன்று முற்றி யிளைந்தன - (அவரால்) முதன்மையாகக் காக்கப்பட்ட இளையதினைப்பயிர்கள் நல்ல கதிர்களையீன்று முற்றிவிளைக்

தன, குறவர்கள் விரைந்து கூடினர் - (அப்பொழுது) வேட்டுவர்கள் விரைந்து (வந்து) கூடினர்கள். எ - று.

தளர்ந்தனள் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. திணை ஆகுபெயர். ஈனுதல் முதல்வினை முற்றல் விளைதல் சினைவினை ஆயினும் முதலோடு சினைக்கு ஒற்றுமையுண்மையின் முதலோடு முடிந்தது. ஏகாரம் அசைநிலை. (147)

வேறு

குன்றவாணர்கள்யாவருங்கொடிச்சியைநோக்கித்
துன்றுமேனல்கள்விளைந்தன கணிகளுஞ்சொற்ற
வின்றுகாறிதுபோற்றியேவருந்தினையினிநீ
சென்றிடம்மவுன்சிறுகுடிக்கெனவுரைசெய்தார்.

இ - ள். குன்றவாணர்கள் யாவரும் கொடிச்சியை நோக்கி - அவ்வேட்டுவர்கள் யாவரும் வள்ளியம்மையாரைப் பார்த்து, துன்னும் ஏனல்கள் விளைந்தன கணிகளுஞ்சொற்ற - (இப்புனத்துள்) நெருங்கிய தினைப்பயிர்கள் விளைந்தன (அதனை வேங்கைமரங்களாகிய) கணிகளுங்கூறின, இன்று காறு இது போற்றி வருந்தினை - இன்றளவுமிதனைக் காத்து வருந்தினாய். உன் சிறு குடிக்கு இனி நீ சென்றிடு என உரைசெய்தார் - உனது சிற்றூருக்கு இப்பொழுதே நீ சென்றிடுவாயென்று சொன்னார்கள். எ - று.

வேங்கைமரத்துக்குக் கணியென்னும் பெயர் வந்த காரணம் முன்னுரைத்தாம். ஏகாரம் அசைநிலை. அம்ம என்றது ஒன்று சொல்வேங்கேள் என்னும் பொருளில்வந்தது. (148)

குறவரிவ்வகைசொற்றனசெவிப்புலங்கொண்டாங்
கெறியும்வேல்படுபுண்ணிடையெரிநுழைந்தென்ன
மறுகுமுள்ளத்தளாகியேமற்றவணீங்கிச்
சிறுகுடிக்குநல்லிகுளையுந்தானுமாய்ச்சென்றாள்.

இ-ள். குறவர் இவ்வகை சொற்றன செவி புலம் கொண்டு - வேட்டுவர்களிவ்வா றுரைத்தனவற்றைச் செவிப் பொறியாலுட்கொண்டு (கேட்டு என்றபடி), எறியும் வேல் படு புண்ணிடை எரி நுழைந்தென்ன மறுகும் உள்ளத்தன் ஆகி - எறியும்வேல்பட்ட புண்ணிடத்து அக்கினி உட்புகுந் தாற்போலச் (சுப்பிரமணியப்பெருமானுடைய பிரிவாற்று மையால் வாட்டமுற்றதன்மேலும் வருத்தமுற்றமனத்தினை யுடையவராய், அவண் நீங்கி - அப்புனத்தை நீங்கி, நல் இருளையும் தானும் ஆய் சிறுகுடிக்கு சென்றாள் - நல்ல பாங்கியும் தாமுமாய்ச் சிற்றூருக்குச் செல்லலுற்றார். எ-று.

பொறியைப் புலமென்று காரியத்தைக் காரணமாவுப சரித்தார். ஆங்கும் எயும் மற்றுமசைநிலைகள். நுழைந்தாலென்ன எனற்பாலது நுழைந்தென்னவெனக் குறைந்து நின்றது; நுழைந்தவென்ன வெனற்பாலதுகுறைந்தது என்று கொண்டு பொருள்கூறினுமமையும். உள்ளமறுகியது இனிச்சுப்பிரமணியப் பெருமானைக்கூடுவதும் அருமையே என்றுகருதியென்க. தோழியுந்தானும்வந்தாள் என்றதுபோல இருளையுந்தானுமாய்ச் சென்றாள் என்று ஒருபாற்குரிய இருசொற்கள்கலந்து ஒருமை முடிபேற்றவென்பது; இது அதிகாரப்புறனடையாற் கொள்ளப் படும். (149)

மானினங்களைமயில்களைகிளியைமாண்புறவை
யேனையுள்ளவைதங்களைநோக்கியேயாங்கள்
போனசெய்கையைப்புகலுதிர்புங்கவர்க்கென்னுத்
தானிரங்கியேபோயினளொருதனித்தலைவி.

இ-ள். ஒருதனி தலைவி - ஒப்பின்மையாகிய அவ் வள்ளியம்மையார் மானினங்களை மயில்களை கிளியை மாண் புறவை ஏனை உள்ளவை தங்களை நோக்கி - மானினங் களையும் மஞ்ஞைகளையும் கிளிகளையும் பெருமையாகிய புறாக்

களையும் மற்றுமுள்ளவைகளையும்பார்த்து, யாங்கள் போன செய்கையை - நாங்கள் (இப்புனத்தைவிட்டுச்சிற்றூருக்குப்) போனசெயலை, புங்கவர்க்கு புகலுதிர் என்னு - (எமது) தலைவராகியபெருமானுக்குக் கூறுங்களென்று, தான் இரங்கியே போயினள் - தானிரங்கிக்கொண்டேசென்றார். எ - று

எனையுள்ளவை மற்றையபக்ஷிகளும் விலங்குகளும் பிறவு மென்பது. ஏகாரம் பிரிநிலைப்பொருட்டு. ஒருதனி ஒரு பொருட் பன்மொழி. (150)

பூவையன்னதோர்மொழியினுள்சிறுகுடிப்புகுந்து
கோவில்வைப்பினுட்குறுகியேகொள்கைவேருகிப்
பாவையோண்கழங்காடலள்பண்டுபோன்மடவா
ரேவர்தம்மொடும்பேசலள்புலம்பிவீற்றிருந்தாள்.

இ - ள். பூவை அன்னது மொழியினுள் சிறுகுடி புகுந்து கோவில் வைப்பினுள் குறுகி - நாகணவாயின்மொழியை நிகர்த்ததாகிய மொழியினையுடைய வள்ளியம்மையார் சிற்றூருக்குப்போய்த் (தமது) இல்லிடத்தின்கட்சார்ந்து, கொள்கை வேறு ஆகி - (தங்) தன்மைவேறுபட்டு, பாவை ஒள் கழங்கு ஆடலள் பண்டு போல் மடவார் ஏவர்தம் மொடும் பேசலள் புலம்பி வீற்றிருந்தாள்-பாவையோடாடும் விளையாட்டையும் ஒள்ளியகழங்கெறிந்தாடும் விளையாட்டையு மாடாதவராகியும் முன்போல மடமையுடையராய மகளிர் யாவரோடும் பேசாதவராகியும் வருந்தி வீற்றிருந்தார். எ - று.

பூவை பாவை கழங்கு ஆகுபெயர்கள். வேட்டுவர்க்கரச னுடைய இல்லமாதலிற் கோவிலெனப்பட்டது. ஏகாரம் அசை நிலை. கொள்கை ஈண்டுத்தன்மை. ஆடலள் பேசலள் என்னு

மெதிர்மறை வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. வீற்றிருத்தல் தனிமையாயிருத்தல். (151)

மற்றவெல்லையிற்செவிலியுமன்னையுமகளை
யுற்றுநோக்கியேமேனிவேருகியதுனக்குக்
குற்றம்வந்தவாறென்னெனவற்புறக்கூறிச்
செற்றமெய்தியேயன்னவடன்னையிற்செறித்தார்.

இ-ள். அ எல்லையில் - அப்பொழுதில், செவிலியும் அன்னையும் மகளை உற்று நோக்கி - செவிலித்தாயும் நற்றாயும் தம்மகளாகிய வள்ளிம்மையாரையுற்றுப்பார்த்து, உனக்கு மேனி வேருகியது - நினக்குமேனிவேறுபட்டது, குற்றம் வந்தவாறு என் என வற்புற கூறி - (இங்ஙனம்) குற்றம் வந்தவாறென்னை யென்றுகடுமையுறக்கூறி, செற்றம் எய்தி அன்னவடன்னை இல் செறித்தார் - கோபமடைந்து அவ்வம்மையாரை இல்லின்கட்செறித்தார். எ - று.

மற்றும் ஏகாரங்களும் அசைநிலைகள். செவிலியுமன்னையும் அவ்வள்ளியம்மையாரை உற்றுநோக்கி இவளுடையமேனிவேறுபட்டது விரகநோயினுலென்றுணர்ந்து கடிந்துவெகுண்டு இல்லின்கட்செறித்தாரென்க. இற்செறித்தல் இனிப்புறத்தே செல்ல வேண்டா மென்று வீட்டிலிருத்தல். (152)

வேறு.

ஓவியமனையநீராளுடம்பிடித்தடக்கையோனை
மேவினள்பிரிதலாலேமெய்பரிந்துள்ளம்வெம்பி
யாவியதில்லாளென்னவவசமாயங்கண்வீழப்
பாவையரெடுத்துப்புல்லிப்பருவரலுற்றுச்சூழ்ந்தார்.

இ-ள். ஓவியம் அனைய நீராள் உடம்பிடி தடகை கோனை பிரிதலாலே - சித்திரப்பாவையை நிகர்த்ததன்மையினையுடைய வள்ளியம்மையார் வேலாயுதத்தையேந்திய

பெருமையாகிய திருக்கரத்தினையுடைய சுப்பிரமணியப் பெருமானைக்கூடிப்பிரிதலாலே, மெய் பரிந்து உள்ளம் வெம்பி ஆவியது இல்லாள் என்ன அவசம் ஆய் அங்கண்வீழ - மெய் வருந்தி மனம்வெம்பி உயிரில்லாதவர் போலத்தம்வச மின்மையாகிய அவ்விடத்துவீழ, பாவையர் பருவரல் உற்று எடுத்து புல்லி சூழ்ந்தார் - (அங்ஙனமுள்ள) வேட்டுவப் பெண்கள் (அதனைக்கண்டு) துன்பமுற்று (அவரை) எடுத்துத்தழுவிச் சூழ்ந்தார்கள். எ - று.

ஓவியம் ஆகுபெயர். மேவினள் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. எகாரம்பிரி நிலைப்பொருட்டு. பரிந்து வெம்பி என்னுஞ்சினைவினைகள் வீழ்வென்னும் முதல்வினையோடு முடிந்தன. பிரிவாற்றுமையால் வந்த வருத்த மதிகரித்ததனுல் மயங்கி வீழ்ந்தாரென்பது. (153)

ஏர்கொண்மெய்நுடங்குமாறுமிறைவளைகழலுமாறுங்
கூர்கொள்கண்பனிக்குமாறுங்குணங்கள்வேருயவாறும்
பீர்கொளுமாறுநோக்கிப்பெண்ணினைப்பிறங்கற்சாரற்
சூர்கொலாந்தீண்டிற்றென்ருர்சூர்ப்பகைதொட்டதோரார்.

இ - ள். ஏர் கொள் மெய் நுடங்கும் ஆறும் - அழகினைக்கொண்ட தேகந்துவளுந்தன்மையினையும், இறை வளை கழலும் ஆறும் - கைவளைகழலுந்தன்மையினையும், கூர் கொள் கண் பனிக்கும் ஆறும் - கூர்மையைக்கொண்ட கண்கள் நீர் துளிக்குந்தன்மையினையும், குணங்கள் வேறு ஆய ஆறும் - குணங்கள் (பண்டையினின்றும்) வேறுகிய தன்மையினையும், பீர் கொளும் ஆறும் நோக்கி - அச்சங் கொள்ளுந்தன்மையினையும்பார்த்து, சூர்ப்பகை தொட்டது ஓரார் - சுப்பிரமணியப்பெருமான் தொட்டதையறியாதவ ராய், பெண்ணினைபிறங்கல் சாரல் சூர் தீண்டிற்று கொலாம்

என்றார் - (எமது) பெண்ணை மலைச்சாரிலுள்ள தெய்வந் தீண்டியதுபோலுமென்றார். எ - று.

இறை ஆகுபெயர். சூர்கோட்பட்டார்க்கும் இவையெல்லா நிகழ்வதுண்மையின் சூர்கொலாந் தீண்டிற்றென்றாரென்பது. சூர் தெய்வப்பெண். சூரென்னும்பெயரையுடையதோர் தெய்வமென்றுங்கூறுப. கொல் கொலாம் என ஈறுதிரிந்தது. (154)

தந்தையுங்குறவர்தாமுந்தமர்களும்பிறருமீண்டிச்
சிந்தையுள்ளயர்வுகொண்டுதெரிவைதன்செயலைநோக்கி
முந்தையின்முதியாளோடுமுருகனைமுறையிற்கூவி
வெந்திறல்வேலினுற்குவெறியயர்வித்தாரன்றே.

இ - ள். தந்தையும் குறவர்தாமும் தமர்களும் பிறரும் ஈண்டி - பிதாவாகிய நம்பியென்பவனும் (அவனுடைய பரிசனர்களாகிய) வேட்டுவர்களும் உறவினரும் பிறரும் நெருங்கி, தெரிவை தன் செயலை நோக்கி சிந்தை உள் அயர்வு கொண்டு - அவ்வள்ளியம்மையாருடைய தன்மையைப் பார்த்து மனத்தினுள்ளயர்ச்சிகொண்டு, முந்தையின் முதியாளோடு முருகனை முறையில் கூவி - பண்டுபோலவே முதிய தேவராட்டியோடு வெறியாட்டாளனை முறைமையாக வழைத்து, வெம் திறல் வேலினற்கு வெறியயர்வித்தார் - வெய்யவலியினையுடைய வேலாயுதத்தைக் கொண்ட சுப்பிரமணியப்பெருமானுக்கு வெறியாட்டுவிழாவைச் செய்வித்தார். எ - று.

பிறர் உறவினரல்லாத அவ்வூரிலுள்ள வேட்டுவர். தெரிவை பருவங்குறியாது பெண்ணென்னும் பொருட்டாகின்றது. செயல் ஈண்டுத்தன்மை. முந்தையிற் கூவியென இயையும். தங் குலக்கன்னியர்க்கு வேறுபாடுதோன்றியக்கால் அவரைச்சூர் தீண்டிற்றோ அன்றோ வென்றையுற்றவழி வெறியயர்வித்து அறிய வேண்டித் தேவராட்டியையுந் தேவராளனையுமழைப்பது.

தொன்மைமுறையாதலின் முந்தையிற் கூவியெனப்பட்டதென்க. பெருநாணுடைய இளம்பெண்கள் ஆண்குழுவும் பெண்குழுவுங் கூடியவிடத்து நின்று வெறியயர்தல் கூடாதாதலிற் றேவராட்டியை முதியாளென்றார். வெறி ஆகுபெயர். (155)

வெறியயர்கின்றகாலைவேலன்மேல்வந்துதோன்றிப்
பிறிதொருதிரமுமன்ருற்பெய்வளைதமியளாகி
யுறைதருபுனத்திற்றெட்டாமுளமகிழ்சிறப்புநேரிற்
குறையிதுநீங்குமென்றேகுமரவேள்குறிப்பிற்சொற்றான்.

இ - ள். வெறி அயர்கின்ற காலை - வெறியாடலைச் செய்யுங்காலையில், குமரவேள் வேலன் மேல்வந்து தோன்றி - சுப்பிரமணியப்பெருமான் அவ்வெறியாட்டாளன்மேல்வந்து தோன்றி, பெய்வளை தமியள் ஆகி உறைதரு புனத்தில் தொட்டாம் பிறிது ஒரு திறமும் அன்று - இவ்விடப்பட்ட வளையலையுடையாள் தமியளாயிருந்த புனத்தின்கண்ணே (இவளையாமே) தொட்டேம் (ஆதலின் இவளில் வேறுபாடு தோன்றியது) பிறிதோர்காரணத்தாலுமன்று, உளம் மகிழ் சிறப்பு நேரின் இது குறை நீங்கும் என்று குறிப்பின் சொற்றான் - (எமது) நெஞ்சமகிழுஞ்சிறப்புநேரின் இக் குறை நீங்குமென்று குறிப்பினாற் கூறியருளினார். எ - று.

குமரவேள் வேலன்மேல்வந்து தோன்றல் சுப்பிரமணியப் பெருமான் வெறியாட்டாளன்மேல் அருபமாயிவர்ந்து அவனுடைய மெய்வாக்குக் காயங்களின் தன்மைகளையடக்கிக் கண்டோர் குறிப்பினாலே தாமேயென்றுணரத் தோன்றலென்பது. பிறிதொருதிறமுமன்று என்பதற்கு தாந்தொட்ட காரணத்தானன்றிப் பிறிதோர் காரணத்தானன்று என்றுபொருள்படுதலின் உம்மை எச்சவும்மை. ஆல் அசைமொழி. தொட்டாமென்றதற்குதீண்டினுமென்னுஞ் செம்பொருளையொழித்து மெய்யுற்றுப் புணர்ந்தாமென்று பொருள்கொள்ளக் கூறியதனானும் சிறப்பு

நேரின் என்றதற்கு எமக்குச் சிறப்பைச்செய்யின் என்னுஞ் செம்பொருளையொழித்து எமக்குச் சிறப்பாக இவளை நேர்ந்தா லென்று அவாய்நிலையாற் செயப்படுபொருளை வருவித்தும் பொருள்கொள்ளக் கூறுதலினானும் குறிப்பிற் சொற்றானென்கு ரென்பது. குமரவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ()

குறிப்பொடுநெடுவேலண்ணல்கூறியகன்னமூல
நெறிப்படவருதலோடுநேரிழையவசநீங்கி
முறைப்படவெழுந்துவைகமுருகனைமுன்னியாங்கே
சிறப்பினைநேர்துமென்றுசெவிலித்தாய்பராவல்செய்தாள்.

இ - ள் நெடு வேல் அண்ணல் குறிப்பொடு கூறிய கன்னமூலம் நெறிப்பட வருதலோடும் - நெடிய வேற் படையையுடைய சுப்பிரமணியப்பெருமான் குறிப்பாற் கூறியருளிய வார்த்தைகள் செவிவழியாக (உளத்துச்) செல்லுதலும், நேர் இழை அவசம் நீங்கி முறைப்பட எழுந்து வைக - நேர்மையாகிய ஆபரணத்தையுடைய வள்ளி யம்மையார் (முன்னடைந்த) தம்வசமின்மையொழிந்து முறைமையாகவெழுந்து இருக்க, செவிலித்தாய் ஆங்கே முருகனை முன்னி சிறப்பினை நேர்தும் என்று பராவல் செய் தாள் - (அவருடைய) செவிலித்தாயானவள் அப்பொழுதே சுப்பிரமணியப்பெருமானையெண்ணித் (தேவரீர் கூறியருளிய படி) சிறப்பினைச் செய்வேமென்றுசொல்லித் துதித்தாள். எ - று.

குறிப்பொடு என்றதில் ஒடுவுருபு தன்னையேற்றபெயர்ப் பொருளைக் கருவிப்பொருளா வேற்றுமைசெய்தது. கூறிய தெரிநிலை வினையாலணையும்பெயர். ஒடு ஒடுவென்னும் இசை நிறையின்விகாரம். ஆங்கு "பொள்ளெனவாங்கே புறம்வேரார்" என்றதிற்போல அப்பொழுதென்னும் பொருள்தந்து நின்றது. சிறப்பு விசேஷபூசனையாதிய. (157)

மனையிடையம்மைவைகவனசரர்முதிர்ந்தசெவ்வித்
தினையினையரிந்துகொண்டுசிறுகுடியதனிற்சென்ரு
ரினையதுநோக்கிச்செவ்வேளிருவியம்புனத்திற்புக்குப்
புனையிழைதன்னைக்காணன்புலம்பியேதிரிதலுற்ருன்.

இ - ள். அம்மை மனையிடை வைகை - வள்ளியம்மையாரில்லத்தின்கண்ணே (அங்ஙனம்) இருக்க, வனசரர் முதிர்ந்த செவ்வி தினையினை அரிந்து கொண்டு சிறுகுடியதனில் சென்ருர் - வேட்டுவர்கள் முற்றிய பருவத்தையுடைய தினையையரிந்துகொண்டு (தஞ்) சிற்றூரின்கட் சென்ருர்கள், செவ்வேள் இருவியம் புனத்தில் புக்கு இனையது நோக்கி - சுப்பிரமணியப்பெருமான் தினைத்தாளையுடைய அப்புனத்திற்சென்று இதனைப்பார்த்து, புனை இழை தன்னை காணன் புலம்பி திரிதலுற்ருன் - அலங்கரிக்கப்பட்ட ஆபரணத்தையுடைய அவ்வள்ளியம்மையாரைக் காணது வருந்தித் திரிதலுற்ருர். எ - று.

அரிந்துகொண்டு என்றதனுலே ஈண்டுத்தினை அடியொழிந்த தினைப்பயிரென்க; கொய்துகொண்டென்னுமையாற் கதிரன்றென்பது. இருவி கொய்யப்பட்டதினையினடி. காணன் வினையெச்சமானது. (158)

கனந்தனை வினவுமஞ்ஞைக்கணந்தனை வினவுமேனற்
புனந்தனை வினவுமம்மென்பூவையைவினவுங்கிள்ளை
யினந்தனை வினவும்யானையிரலையைவினவுந்தண்கா
வனந்தனைவினவுமற்றைவரைகளைவினவுமாதோ.

இ - ள். கனந்தனை வினவும் - (ஈண்டுப் புனங்காவல் கொண்டிருந்தாள் யாண்டுச் சென்ருள் கூறுகவென்று) முகிலையும் வினவுவார், மஞ்ஞை கணந்தனை வினவும் - மயிற்கூட்டத்தையும் வினவுவார், ஏனல் புனந்தனை வினவும் -

கிளைப்புனத்தையும் வினவுவார், அம் மென் பூவையை வினவும் - அழகிய மென்மையாகிய நாகணவாய்களையும் வினவுவார், கிள்ளை இனந்தனை வினவும் - கிளியினத்தையும் வினவுவார், யானை இரலையை வினவும் - யானைகளையும் மான்களையும் வினவுவார், தண் கா வனந்தனை வினவும் - குளிர்ந்த சோலையையும் வினவுவார், வரைகளை வினவும் - மலைகளையும் வினவுவார் (சுப்பிரமணியப்பெருமான்). எ - று.

ஆகாயத்திலுலவித்திரியு மேகத்திற்குப் பூமியில் நிகழுங் காரியங் காணப்படாதிராது; ஆதலின் முன்னர் முகிலைவினவினு ரென்பது. இரலை சாதிகுறியாது ஈண்டுமானென்னும் பொதுமையினின்றது. கா வனம்: ஒருபொருட்பல பெயர். மற்று என்னும் அசைமொழி ஈறுதிரிந்தது. (159)

வாடினுன்றளர்ந்தானெஞ்சம்வருந்தினுன்மையற்கெல்லை
கூடினுன்வெய்துயிர்த்தான்குற்றடிச்சுவடுதன்னை
நாடினுன்றிகைத்தானின்றநடுங்கினுனங்கைதன்னைத்
தேடினுன்குமரற்கீதுதிருவிளையாடல்போலாம்.

இ - ள். வாடினுன் - (சுப்பிரமணியப்பெருமான் வள்ளியம்மையாரை அப்புனத்திற் காணுமையினுலே) வாடி, தளர்ந்தான் - சோர்ந்து, நெஞ்சம் வருந்தினுன் - உள்ளம் வருந்தி, மையற்கு எல்லை கூடினுன் - மயக்கத்திற்கு (ஓர்) எல்லையாகக்கூடி, வெய்து உயிர்த்தான் - வெய்தாக மூச்செறிந்து, குற்றடி சுவடுதன்னை நாடினுன் - (அவருடைய) சிறிய அடிச்சுவட்டைப் பார்த்து, திகைத்தான் - திகைத்து, நின்று நடுங்கினுன் - நின்று நடுநடுங்கி, நங்கைதன்னை தேடினுன் - அந்நங்கையாரைத் தேடினுர், ஈது குமரற்கு திருவிளையாடல் போலாம் - இச்செயல் அச்சுப்பிரமணியப்பெருமானுக்குத் திருவிளையாடல்போலும். எ - று.

தேடினான் என்றதொழிந்த வினைமுற்றெல்லாம் வினையெச்சமாயின. வாடுதல் மேனித்தழைவுகெடுதல். தளர்தல் மெய்வலி குறைந்துசோர்தல். மையற்கெல்லை கூடியென்றது மயக்கமென்பதெவ்வளவோ அவ்வளவையுமடைந்து என்றபடி. இது அவலமென்னு மெய்ப்பாடு நிகழப்பெற்றமையிற் சுவையணி.(160)

வல்லியைநாடுவான்போன்மாண்பகல்கழித்துவாடிக்
கொல்லையம்புனத்திற்சுற்றிக்குமரவேணடுநாள்யாமஞ்
செல்லுறுமெல்லைவேடர்சிறுகுடிதன்னிற்புக்குப்
புல்லியகுறவர்செம்மல்குரம்பையின்புறம்போய்நின்றான்.

இ - ள். குமர வேள் - சுப்பிரமணியப்பெருமான், அல்லியை நாடுவான்போல் கொல்லையம்புனத்தில் சுற்றி வாடி மாண் பகல் கழித்து - வள்ளியம்மையாரைத் தேடுவார்போலக் கொல்லையாகிய தினைப்புனத்திற் சுற்றிவாடிப் பெருமையாகிய பகற்பொழுதைக்கழித்து, நடுநாள் யாமம் செல்லுறும் எல்லை - இடையிரவாகிய யாமம் நிகழுங் காலையில், வேடர் சிறுகுடி தன்னில் புக்கு புல்லிய குறவர் செம்மல் குரம்பையின் புறம்போய் நின்றான் - வேட்டுவரது சிற்றூரின்கட் சார்ந்து (ஆண்டு வாழும்) புன்மையுடைய வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவனுடைய சிறுகுடிலின் புறத்தே சென்று நின்றருளினார். எ - று.

வல்லி நாள் ஆகுபெயர்கள். கொல்லையம்புனம் குமரவேள் நடுநாள் யாமம் இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள். இது தொகைச்சொற்றொடர்புண்டாகத் தொடுத்துரைக்கப் பட்டதனால் வைதருப்பநெறியில் வலியென்னுங் குணாலங்காரமென்பது.

பாங்கிசெவ்வேளைக்கண்டுபணிந்துநீர்கங்குற்போதி
லீங்குவந்திடுவதொல்லாதிறைவியும்பிரியினுய்யா
ணீங்களிவ்விடத்திற்கூடநேர்ந்ததோரிடமுமில்லை
யாங்கவடன்னைக்கொண்டேயகலுதிரடிகளென்றாள்.

இ - ள். பாங்கி செவ்வேளை கண்டு பணிந்து - பாங்கி யானவள் (அங்ஙனம் நிற்கின்ற) செம்மையாகிய சுப்பிர மணியப் பெருமானைக் கண்டு வணங்கி, கங்குல் போதில் நீர் ஈங்கு வந்திடுவது ஒல்லாது - (ஏற்றிழிவுடைத்தாய இவ் வரையில் அரவும் உருமும் புலியும் எண்கும் வெண்கோட்டி யானையுமென்று இவற்றதேதமுடைத்தாதலின்) இராக் காலத்திலே நீவிரிங்ஙனம் வருதல்கூடாது, பிரியின் இறைவி யும் உய்யாள் - (நும்மைப்) பிரியிற் (பிரிவாற்றாமையால்) தலைவியுமுயிர்வாழாள், நீங்கள் இவ்விடத்திற் கூட நேர்ந்தது ஓர் இடமும் இல்லை - நீங்களிருவீரும் இவ்விடத்துக் கூடத் தக்கதோரிடமு மில்லை (ஆதலால்), அடிகள் - ஐயரே, அவடன்னை கொண்டு அகலுதிர் என்றாள் - அத்தலைவியை உடன்கொண்டு செல்லுவீரென்றாள். எ - று.

கங்குற்போது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இறை வியும்பிரியினுய்யாளென்றதற்கு இறைவியும் பிரியினுயிர்வாழாள். இருதேகத்து ளோருயிர்போல்வீ ராதலின் நீருமுய்யீரென்று பொருள்படுதலின் உம்மை எச்சவும்மை. ஆங்கும் ஏயும் அசைநிலை கள். அடிகள் அண்மைவிளி. இச்செய்யுள் எதுக்கள் விரித் துரைக்கப்படுதலின் எதுவணியின்பாற் படுமென்பது.. (162)

என்றிவைகூறிப்பாங்கியிறைவனை நிறுவியேகித்
தன்றுணையாகிவைகுந்தையலையடைந்துகேள்வ
ருன்றனைவெளவிச்செல்வானுள்ளத்திற்றுணியாவிங்ஙன்
சென்றனர்வருதியென்னச்சீரிதென்றெருப்பாடுற்ருள்.

இ - ள். என்று இவை கூறி பாங்கி இறைவனை நிறுவி ஏகி - என்று இவற்றையுரைத்துப் பாங்கியானவள் தலைவ ராகிய சுப்பிரமணியப்பெருமானை (ஆண்டு) நிறுத்திச் சென்று, தன் துணை ஆகி வைகும் தையலை அடைந்து -

தனது துணைவியாராகியிருந்த வள்ளியம்மையாரைச் சார்ந்து, கேள்வர் உன்றனை வெளவி செல்வான் உள்ளத்தில் துணியா இங்ஙன் சென்றனர் வருதி என்ன - தலைவருன்னைக் கவர்ந்து செல்லுதற்கு நெஞ்சத்திற்றுணிந்து ஈண்டுவந்தனர் வருவாயென்று சொல்ல, சிரிது என்று ஒருப்பாடு உற்றாள் - (இது) நன்றென்று சம்மதமுற்றார் (அவ்வள்ளியம்மையார்). எ - று.

துணை ஆகுபெயர். மறைவாக வுடன்கொண்டு செல்வான் என்பாள் வெளவிச் செல்வானென்றாள். தீயன்ன சிறுபரற் கானத்து நின்னடி செல்லுந்தன்மைத்தன்றாயினும் ஈண்டுக்காப்பு மிகுதியானும் இரவுக்குறிக் கேற்றதோரிடமின்மையானும் உடன்கொண்டுசெல்ல வெண்ணி யென்பாளுள்ளத்திற்றுணியா என்றாளென்பது. உடன்போக்குமகளிருக்கு நாணை யழிப்பதாதலின் அவர் கற்பைநோக்கியன்றி மற்றொன்றைநோக்கி அச்செயலைச் செய்தற்குடம்படாராதலின் தானுன்னையுடன்கொண்டு போகும்படி சொன்னேனென்னாது கேள்வருன்றனை வெளவிச் செல்வானுள்ளத்திற்றுணியா இங்ஙன் சென்றனரென்றாளென்பது. (163)

தாய்துயிலறிந்துதங்கடமர்துயிலறிந்துதுஞ்சா
நாய்துயிலறிந்துமற்றந்நகர்துயிலறிந்துவெய்ய
பேய்துயில்கொள்ளும்யாமப்பெரும்பொழுததனிற்பாங்கி
வாய்தலிற்கதவைநீக்கிவள்ளியைக்கொடுசென்றுய்த்தாள்.

இ - ள். பாங்கி - பாங்கியானவள், தாய் துயில் அறிந்து - தாயுடைய நித்திரையையுமறிந்து, தங்கள் தமர் துயில் அறிந்து - தங்களுறவினருடைய நித்திரையையுமறிந்து, துஞ்சா நாய் துயில் அறிந்து - (பெரும்பாலும்) நித்திரை செய்யாத நாயினுடைய நித்திரையையுமறிந்து, அந்நகர் துயில் அறிந்து - அவ்வூரிலுள்ளாருடைய நித்திரையையு

மறிந்து, வெய்ய பேய் துயில் கொள்ளும் யாமம் பெரும் பொழுததனில் - கொடிய பேய்களும் நித்திரைசெய்யும் இடையிரவாகிய பெருமையுடையபொழுதிலே, வாய்தலின் கதவை நீக்கி வள்ளியை கொடு சென்று உய்த்தாள் - வாயிற் கதவை நீக்கி வள்ளியம்மையாரை யழைத்துக்கொண்டு சென்று (அச்சுப்பிரமணியப்பெருமானுடைய திருமுன்னிலையில்) விட்டாள். எ - று.

தாய்துயிலறிதலெவ்வாறெனின் பாங்கி தலைவியைவிளித்துச் சிறுகட்பெருவெண்கோட்டி யானையொன்று நாகமரத்திற்கட்டிய குருமணியூசலைக் கோப்பழிக்கின்றது என்றேனும் இதுபோன்ற பிறிதொன்றேனுங் கூறுவாள்; கூறவே தாய்துயிலாதிருப்பின் இச்சிறுமிகள் ஊசலினுசையினாலே ஆண்டுச்செல்லவுங் கூடுமென்றுட்கொண்டு ஊசலழியினுமழிக நீவிராண்டுச் செல்லன்மி னென்பாள்; அங்ஙனமொன்று முரையாடாமையாற்றாய் துயிலறிந்தாளென்பது. தமர்துயிலறிதலெவ்வாறெனின் தாய்துயிலறிதற்குக் கூறியகூற்றுக்குத் தாயுரையாடாதிருத்தல்போல மற்றைத்தமரு முரையாடாமைபற்றி அவரது துயிலையுமறிந்தாள்; தாய்துயிலத்தமர் துயிலாதிருப்பாராயின் அவருமங்ஙனங் கூறுவாராதலினென்பது. தமர் உறவினரென்னும் பொதுமையில் நின்றது. நாய்துயிலறிதலெவ்வாறெனின் தலைவராகிய சுப்பிரமணியப் பெருமானுண்டு வந்துநிற்கவும் அதுகுரையாதிருத்தல் பற்றி அந்நாய்துயிலறிந்தாளென்பது. மற்று அசைநிலை. நகர் துயிலறிதலெவ்வாறெனின் அவ்விராமதுரை ஆவணியவிட்டமே உறையூர்ப்பங்குனியுத்திரமே கருவூர் உள்ளிவிழாவே என இவை போல ஊர்கொண்ட பெருவிழா நாளன்மையினானும் அப்பொழுது யாவருந்துயிலும்பொழுதாகிய இடையிரவேயாதலினானும் அந்நகர் துயிலறிந்தாளென்பது. சிறுபொழுதைப் பெரும் பொழுதென்றதென்னையெனின் ஈண்டுப் பெரியபொழுதென்றதன்று, பெருமையுடைய பொழுதென்றவாறு; பெருமை தலைமை. சிறுபொழுதுகளுள் இவ்வியாமம் பெருமையுடைத்தாயதென்னை யெனின் அளவையிலின்பத்தைந்திணைகளுட்சிறந்த புணர்தலும்

புணர்தனிமித்தமுமாகிய குறிஞ்சித்திணைக்குரிய பொழுதாதலி னென்பது. தனிமையுற்றுக் காமத்தால் வருந்துபவர்க்கு நெடும் பொழுதுபோலிருத்தலிற் பெரும்பொழுதெனப்பட்டதென்பாரு முளர்; அங்ஙனம் வருந்துபவர்க்கு மாலைவைகறையாகிய மற்றைப் பொழுதுகளும் நெடும்பொழுதுபோறலின் அவருரைபோலியுரை யென்க. நீக்கல் கதவை முற்றத்திறவாதும் திறத்தலால் ஒலி யுண்டாகாதும் மெள்ளத்தாஞ் செல்லுமளவுக்குத்தகத் திறத்த லென்றவாறு. (164)

அறுமுகவொருவன்றன்னையாயிழையெதிர்ந்துதாழ்ந்து
சிறுதொழிலெயினரூரிற்றீயனேன்பொருட்டாலிந்த
நறுமலர்ப்பாதங்கன்றநள்ளிருள்யாமந்தன்னி
லிறைவநீர்நடப்பதேயென்றிரங்கியேதொழுதுநின்றாள்.

இ - ள். அறுமுக ஒருவன்றன்னை ஆயிழை எதிர்ந்து தாழ்ந்து - ஆறுதிருவதனங்களையுடைய ஒப்பில்லாத சுப்பிர மணியக்கடவுளை ஆராயப்பட்ட ஆபரணத்தையுடைய வள்ளியம்மையார் எதிர்சென்றுவணங்கி, இறைவ - எப் பொருட்குமிறையவரே, தீயனேன் பொருட்டால்-தீமையை யுடையேன் காரணமாக, இந்த நள் இருள் யாமந்தன்னில் - இவ்விடையிரவாகிய யாமத்தில், சிறு தொழில் எயினர் ஊரில் நறு மலர் பாதம் கன்ற நீர் நடப்பதே என்று-புல்லிய தொழிலையுடைய வேட்டுவரூரில் நறியதாமரைமலர்போலுந் திருவடி கன்ற நீவிர் நடப்பதோவென்று சொல்லி, இரங்கி தொழுது நின்றாள் - இரங்கிக்கொண்டு கும்பிட்டுநின்றார். எ - று

அறுமுகராகிய ஒருவரெனினுமமையும். ஈண்டுத்தாழ்தல் நிலத்தில் மெய்யுறவீழ்ந்துவணங்கல். சிறுமை புன்மை. இருள் ஆகுபெயர். நடப்பதே என்றதற்கு நடக்கத்தக்கதன்று என்று பொருள்படுதலின் ஏகாரம் எதிர்மறைப்பொருட்டு. (165)

மாத்தவமடந்தைநிற்பவள்ளலையிகுளைநோக்கித்
தீத்தொழிலெயினர்காணிற்றீமையாய்விளையுமின்னே
யேத்தருஞ்சிறப்பினும்மூர்க்கிங்கிவடனைக்கொண்டேகிக்
காத்தருள்புரியுமென்றேகையடையாகநேர்ந்தாள்.

இ-ள். மா தவம் மடந்தை நிற்ப - பெருமையாகிய தவத்தினையுடைய வள்ளியம்மையார் நிற்க, இகுளை வள்ளலை நோக்கி-பாங்கியானவள் அருள்வள்ளலாகிய சுப்பிரமணியப் பெருமானைப் பார்த்து, தீ தொழில் எயினர் காணில் தீமை ஆய் விளையும் - (இச்செயலைத்) தீயதொழிலையுடைய வேட்டுவர்காணில் தீங்காய் விளையும் (ஆதலின்), இன்னே இங்கிவடனை ஏத்து அரும் சிறப்பின் நும் ஊர்க்கு கொண்டு ஏகி காத்தருள்புரியும் என்று கையடை ஆக நேர்ந்தாள் - இப்பொழுதே இத்தலைவியைப் புகழ்தற்கரிய சிறப்பினையுடைய நும்மூர்க்குச் கொண்டுசென்று காத்தருள்புரிவீர் என்று சொல்லி (அவரை) அடைக்கலமாகக் கொடுத்தாள். எ - று.

சுப்பிரமணியப்பெருமான் தாமாகவே வந்து ஆண்டருளப் பெற்றமையால் மாத்தவமடந்தையென்றார். மடந்தை பருவங் குறியாது பெண்ணென்னும் பொருளாநின்றது. அன்பருக்கு வேண்டிய வேண்டியாங்கு கொடுத்தருள்புரிவராதலின் வள்ளலென்றார். ஏத்தல் ஈண்டுப்புகழ்தல். இங்கிவள் ஒருசொல். (166)

முத்துறுமுறுவலாளைமூவிருமுகத்தினன்றன்
கைத்தலந்தன்னிலீந்துகைதொழுதிகுளைநிற்ப
மெய்த்தகுகருணைசெய்துவிளங்கிழாய்நீயெம்பாலின்
வைத்திடுகருணைதன்னைமறக்கலங்கண்டாயென்றான்.

இ-ள். இகுளை முத்து உறு முறுவலாளை மூவிரு முகத்தினன்றன் கைத்தலந்தன்னில் ஈந்து கை தொழுது

நிற்ப - பாங்கியானவள் முத்துப்போலு முறுவலையுடைய வள்ளியம்மையாரை ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமானது திருக்கரத்தில் (அங்ஙனம்) கொடுத்துக்கை (கூப்பி) வணங்கி நிற்ப, மெய்த்தகு கருணை செய்து- (அச்சுப்பிரமணியப் பெருமான் அப்பாங்கிக்கு) மெய்ம்மையாகிய கிருபைசெய்து, விளங்கிழாய் நீ எம்பாலில் வைத்திடு கருணைதன்னை மறக்கலம் என்றான் - விளங்குகின்ற ஆபரணத்தையுடையாய் நீ எம்மிடத்து வைத்தவன்பினைமறவேமென்று திருவாய் மலர்ந்தருளினர். எ - று.

உறு ஈண்டு உவமவுருபு. முத்துறமுறுவலாளை மூவிருமுகத்தினான்றன் கைத்தலந்தன்னிலீதல் வள்ளியம்மையாருடைய திருக்கரத்தைப்பிடித்துச் சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கரத்தின்மேல்வைத்து இவள் நுமதடைக்கலமென்று கொடுத்தலென்றவாறு. வைத்திடுகருணை என்றதிற் கருணை அன்பு. கண்டாய் முன்னிலையொருமையில் வருமோர் அசைமொழி. (167)

மையுறுதடங்கணல்லாள்வள்ளியைவணக்கஞ்செய்து
மெய்யுறப்புல்லியன்னாய்விரைந்தனைசேறியென்னா
வையனோடினிதுகூட்டியாங்கவர்விடுப்பமீண்டு
கொய்யுறுகவரிமேய்ந்தகுரம்பையின்கூரைபுக்காள்.

இ - ள். மை உறு தடங்கண் நல்லாள் வள்ளியை வணக்கஞ்செய்து மெய் உற புல்லி - (தீட்டும்) மைபொருந்தும் பெரிய விழியையுடைய பாங்கியானவள் வள்ளியம்மையாரை வணங்கித் (தனது) சரீரத்திற் பொருந்தத்தழுவி, அன்னாய் விரைந்தனை சேறி என்னா ஐயனோடு இனிது கூட்டி - அன்னையே விரைந்து செல்வாயென்று சுப்பிரமணியப் பெருமானோடு நன்று கூட்டி, ஆங்கு அவர் விடுப்ப மீண்டு சொய்யுறு கவரி மேய்ந்த கூரை குரம்பையின்

புக்காள் - அங்ஙனம் அவ்விருவரும் விடுப்பத் திரும்பிச் (சென்று) கொய்யப்பட்ட கவரிமாமயிரால் வேயப்பட்ட கூரையையுடைய சிறுகுடிலிற் புக்காள். எ - று.

மை கருமையுமாம். அன்னாய் மரபுவழுவமைதி. விரைந்தனை யென்னு முன்னிலை யொருமைவினைமுற்று வினையெச்சமானது. கூட்டுதல் கையாலணைத்துச் செல்லச்செலுத்தல். கூட்டி மீண்டு எனவியையும். கவரி ஆகுபெயர். (168)

விடைபெற்றேயிருளையேகவேலுடைக்கடவுளன்ன
நடைபெற்றமடந்தையோடுநள்ளிருளிடையேசென்று
கடைபெற்றசிற்றூர்நீங்கிக்காப்பெலாங்கடந்துகாமன்
படைபெற்றுக்குலவுமாங்கோர்பசுமரக்காவுட்சேர்ந்தான்.

இ - ள். இருளை விடை பெற்று ஏக - பாங்கியானவள் விடைபெற்றுக்கொண்டு செல்ல, வேல் உடை கடவுள் அன்னம் நடை பெற்ற மடந்தையோடு நள்ளிருள் இடையே சென்று - வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியப்பெருமான் அன்னநடைபோலும் நடையினைப்பெற்ற வள்ளியம்மையாரோடு அவ்விடையிரவின்கண்ணேசென்று, காப்பு எலாம் கடந்து கடை பெற்ற சிறூர் நீங்கி - காவலெல்லாவற்றையுங் கடந்து வாயிலைப்பெற்ற சிற்றூரை நீங்கி, காமன் படை பெற்று குலவும் பசுமரம் ஓர் காவுள் சேர்ந்தான் - மன்மதனுடைய படைகளைப் பெற்று விளங்குகின்ற பசுமையாகிய மரங்களையுடைய ஒரு சோலையுட் சேர்ந்தார். எ - று.

ஏகாரங்களில் முன்னையது அசைநிலையும் பின்னையது பிரிநிலையுமென்க. அன்னம் ஆகுபெயர். கடை யானைத்தந்தங்களானும் பிறவானும் அரணாகச்செய்த வேலியாகிய மதிலின் வாயில். கடைபெற்றசிற்றூர் கீழ்மைபெற்ற சிற்றூருமாம்; ஈண்டுக் கீழ்மை சிற்றூரென்னும் பொதுமையைச் சார்ந்ததென்பது. காமன்படை பூ. ஆங்கு அசைநிலை. (169)

செஞ்சுடர்நெடுவேலண்ணல்செழுமலர்க்காவிற்புக்கு
வஞ்சியொடிருந்தகாலைவைகறைவிடியல்செல்ல
வெஞ்சலில்சீறூர்தன்னிலிறையவன்றனதுதேவி
துஞ்சலையகன்றுவல்லேதுணுக்கமுற்றெழுந்தாளன்றே.

இ-ள். செம் சுடர் நெடு வேல் அண்ணல் வஞ்சி யொடு செழுமலர் காவில் புக்கு இருந்த காலை - செம்மை யாகிய சுடரினையுடைய நெடிய வேற்படைக்கலத்தைக் கொண்ட தலைவராகிய சுப்பிரமணியப்பெருமான் வஞ்சிப் பூங் கொம்புபோலும் வள்ளியம்மையாரோடு செழுமை யாகிய மலர்களையுடைய சோலையுட்புக்கு இருந்தருளிய காலையில், வைகறை விடியல் செல்ல - வைகறையாகிய புலரிக் காலம்வர, எஞ்சல் இல் சீறூர் தன்னில் இறையவன்றனது தேவி துஞ்சலை அகன்று துணுக்கம் உற்று வல்லை எழுந் தாள் - (வளங்கள்) குறைதலில்லாத அச்சிற்றூரிலுள்ள அரசனாகிய நம்பியுடைய மனையாளாகிய கொடிச்சி நித்திரை செய்தலையொழித்து நடுக்கமுற்று விரைவிலெழுந்தாள். எ-று.

வஞ்சி உவமவாகுபெயர். வைகறை விடியல் இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. அவாய்நிலையால் வளங்களென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது. இறைவன் தேவி துணுக்கமுற் றெழுந்தது சுப்பிரமணியப்பெருமானுடைய திருவருளாலென்க; மகளாகிய வள்ளியம்மையார் நெருநலில் மிக்க வருத்தமுற்றிருந்த நினைவு மனத்துளதுடைய அவரைக்காண்டல் வேண்டித் துணுக்க முற்றெழுந்தா ளெனினுமமையும். (170)

சங்கலைகின்றசெங்கைத்தனிமகட்காணுளாகி
யெங்கணுநாடிப்பின்னரிகுளையைவந்துகேட்பக்
கங்குலினவளுநானுங்கண்படைகொண்டதுண்டா
லங்கவளதற்பின்செய்ததறிகிலனன்னுயென்ருள்.

இ - ள். சங்கு அலைகின்ற செம் கை தனி மகள் காணாள் ஆகி எங்கணும் நாடி பின்னர் வந்து இகுளையை கேட்ப - (அந்நற்றாயானவள்) வளை அலைகின்ற செம்மை யாகிய கையினையுடைய ஒப்பில்லாத (தன்) மகளைத் துயிலு மிடத்துக் காணாதவளாகி (இல்லின்புறம்) எங்குந் தேடிப் பின்னர் (அகத்தில்) வந்து (என்மகள்யாண்டையாள் கூறுவா யென்று) பாங்கியைக்கேட்க, அன்னாய் - தாயே, கங்குலில் அவளும் நானும் கண்படை கொண்டது உண்டு அதன் பின் அங்கவள் செய்தது அறிகிலன் என்றாள் - இவ்விரவிலே அவளும் யானுங் கண்டுயில்கொண்டதுண்டு; அதன் பின்ன ரவள் செய்தது (யாதென்று) அறிகிலேனென்றாள் (அப் பாங்கி.) எ - று.

ஆல் அசைமொழி. அங்கவள் ஒருசொல். (171)

தம்மகட்காணா வண்ணந்தாய்வந்துபுகலக்கேட்டுத்
தெம்முனைக்குறவர்செம்மறெருமந்துசெயிர்த்துப்பொங்கி
நம்மனைக்காவனீங்கிநன்னுதற்பேதைதன்னை
யிம்மெனக்கொண்டுபோந்தான்யாவனோவொருவனென்றான்.

இ - ள். தாய்வந்து தம் மகள் காணா வண்ணம் புகல கேட்டு தெவ் முனை குறவர் செம்மல் தெருமந்து செயிர்த்து பொங்கி - (அங்ஙனம்பாங்கிகூறத்) தாயானவள் (தன் தலைவ னிருக்குமிடத்திற்கு) வந்து தமதுமகளைக்காணாத தன்மை யைச் சொல்லக்கேட்டுப்பகைவர்போரில் (அஞ்சாதுசென்று பொரும்) வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவன் சுழன்று வெகுண்டு பொங்கி, யாவனோ ஒருவன் - யாவனோவொருவன், நம் மனை காவல் நீங்கி நல் நுதல் பேதைதன்னை இம்மென கொண்டு போந்தான் என்றான் - நமது வீட்டிற்காவலைக் கடந்து நல்ல நெற்றியையுடைய மகளைவிரைவிற்கொண்டு சென்றானென்று கூறினான். எ - று.

காணுத என்னுமெதிர்மறைப் பெயரெச்சத்திறுதிகெட்டது. காணுமை என்றது ஈண்டு இல்லின்கணில்லாமை. தெருமரல் உள்ளஞ்சுழலுதல். பொங்கல் சினக்குறிப்பு. மகளாகிய வள்ளியம்மையார் மங்கைப்பருவமுடைய ராதலினுலும் தனியே புனங்காவலிற் சென்றிருந்ததனுனும் நெருநற் காமநோயுற்ருருக்குள்ள வருத்தக்குறிகள் அவர்மீது காணப்பட்டமையானும் உய்த்துணர்ந்து யாவனே கொண்டுபோந்தா னென்ருனென்பது. ()

மற்றிவைபுகன்றுதாதைவாட்படைமருங்கிற்கட்டிக்
கொற்றவில்வாளியேந்திக்குமரியைக்கவர்ந்தகள்வ
னுற்றிடுநெறியைநாடவொல்லையிற்போவனென்னுச்
செற்றமொடெழுந்துசெல்லச்சிறுகுடியெயினர்தேர்ந்தார்.

இ - ள். தாதை இவை புகன்று - தந்தையாகிய நம்பியென்பன் இவற்றைக்கூறி, குமரியை கவர்ந்த கள்வன் நாட ஒல்லையில் உற்றிடு நெறியை போவன் என்னு செற்றமொடு எழுந்து - எமதுமகளைக் கவர்ந்துகொண்ட கள்வனைத்தேடி (அறிய) விரைவில் (அவன்) சென்றவழியைச்செல்வே னென்று கோபத்தோடெழுந்து, வாள் படை மருங்கில் கட்டி கொற்ற வில் வாளி ஏந்திசெல்ல - வாளாயுதத்தை அரையிற்கட்டி வெற்றியையுடைய வில்லையும் அம்பையும் ஏந்திக்கொண்டுசெல்ல, சிறுகுடி எயினர் தேர்ந்தார் - அச்சிற்றூரிலுள்ளவேட்டுவர்கள் (அதனை) அறிந்தார்கள். எ - று.

மற்று அசைநிலை. கள்வன் என்னு முயர்திணைப்பெயரைச் சார்ந்த இரண்டாவது விகாரத்தாற்ருெக்கது. கள்வனுற்றிடு நெறியைநாட வொல்லையிற்போவனென்னு என்றதற்கு கள்வனை (அறிதற்கு அவன்) சென்றவழியைநாட விரைவிற்செல்வே னென்று எனப் பொருளுரைப்பினுமமையும். நெறியைப்போவன் என்றது "வழியைச் சென்ருன்" என்றதுபோல நின்றது. ஏழாவதன்திரிபெனினுமொக்கும். அரசனிவ்வாறு போர்க்

கோலங்கொண்டு போவதென்னையென் ருெருவரையொருவர் விஞஅய் அறிந்தோர்சொல்ல எயினருணர்ந்தாரென்பது. (173)

எள்ளுதற்கரியசீறூரிடைதனில்யாமத்தேகி
வள்ளியைக்கவர்ந்துகொண்டுமாயையான்மீண்டுபோன
கள்வனைத்தொடர்துமென்றேகானவர்பலருங்கூடிப் [ர்.
பொள்ளெனச்சிலைகோல்பற்றிப்போர்த்தொழிற்கமைந்துபோனு

இ-ள். கானவர் பலரும் கூடி - அவ்வேட்டுவர் பலருங்கூடி, எள்ளுதற்கு அரிய சீறூர் இடைதனில் மாயையால் யாமத்து ஏகி - (எவராலும்) இகழ்தற்கரிய இச் சிற்றூரின் நடுவே மாயத்தினுல் இடை இரவில் வந்து, வள்ளியை கவர்ந்துகொண்டு மீண்டுபோன கள்வனை தொடர்தும் என்றே - (எமது) வள்ளியம்மையைக் கவர்ந்து கொண்டு திரும்பிச்சென்ற கள்வனைக் (காண யாமும்) தொடர்ந்து செல்வேமென்று, பொள்ளென சிலை கோல் பற்றி போர் தொழிற்கு அமைந்து போனுர் - விரைவிலே வில்லையும் அம்பையும் (எடுத்துப்) பிடித்து யுத்தத் தொழிற்கு (ஏற்றகோலம்) அமைந்துசென்ருர். எ-று.

சிற்றூரிலுள்ளார் பண்பைச் சிற்றூரிலேற்றினுர். பேயுந் துயில்கொள்ளும் இடை இரவிலும் இக்காவலெல்லாங் கடந்து அச்சிற்றூருக்கு நடுவே வந்து கவர்ந்து மீடற்கருமையின் மாயையால் என்ருரென்பது. தம்மையாளுமரசனுக்குமாருன செயலைத் தம்மூராருளொருவனுஞ் செய்யானென்று துணிந்து கவர்ந்து சென்றவன் பிறநிலத்தானென்பதுபட ஏகி மீண்டுபோன வென்ருர். அமைதல் நிரம்புதல். (174)

வேடுவர்யாருமீண்டிவிரைந்துபோய்வேந்தனேடு
கூடினரிரலைதன்னைக்குறித்தனர்நெறிகடோறு
மோடினர்பொதும்பரெல்லாமுலாவினர்புலங்கள்புக்கு
நாடினர்சுவடுநோக்கிநடந்தனரிடங்களெங்கும்.

**இ - ள்.** வேடுவர் யாரும் ஈண்டி விரைந்து போய் வேந்தனோடு கூடினர் - அவ்வேட்டுவர்கள் யாவரும் விரைந்துசென்று அரசனாகிய நம்பியென்பவனோடு கூடி, இரலைதன்னை குறித்தனர் - கொம்பையூதி, நெறிகள் தோறும் ஓடினர் - வழிகடோறுமோடி, பொதும்பர் எல்லாம் உலாவினர் - மரஞ்செறிந்த இடங்களெல்லாமுலாவி, புலங்கள் புக்கு நாடினர் - புலங்களிற் புகுந்துதேடி, இடங்கள் எங்கும் சுவடு நோக்கி நடந்தனர் - இடங்களெங்கு மடிச்சுவட்டைப் பார்த்து நடந்தார்கள். எ - று.

மகளை நாடிச்செல்லுகின்ற அரசனைக்கூடியுடன்சென்று ராதலின் வேந்தனோடு கூடினரென்று உடனிகழ்ச்சிப் பொருட்கும் உருபுகொடுக்கப்பட்டது. இரலையூதுவது தமது வீரத்தைக் காட்டுதற்பொருட்டு. புலம் விளைநிலம்; ஈண்டுத் தினை ஐவன மிவைவிளைநிலமென்க. நடந்தனரென்றதொழிந்த வினைமுற்றுக்களெல்லாம் வினையெச்சங்களாயின. (175)

**ஈங்கனமறவரோடுமிறையவன்றேடிச்செல்லப்**
**பாங்கரிலொருதண்காவிற்பட்டிமைநெறியாலுற்று**
**ளாங்கனந்தெரியாவஞ்சியாறுமாமுகத்துவள்ளல்**
**பூங்கழலடியில்வீழ்ந்துபொருமியேபுகலலுற்றாள்.**

**இ - ள்.** ஈங்கனம் மறவரோடும் இறையவன் தேடிச் செல்ல - இவ்வாறே வேட்டுவரோடும் அரசன் தேடிச் செல்ல, பாங்கரில் ஒரு தண் காவில் பட்டிமை நெறியால் உற்றாள் - (ஓர்) சார்பிலுள்ள ஒரு குளிர்மையாகிய சோலையிற் களவொழுக்கத்தாற் (சுப்பிரமணியப்பெருமானோடு சென்று) இருப்பவராகிய வள்ளியம்மையார், ஆங்கனம் தெரியா அஞ்சி - அத்தன்மையைக் கண்டு பயந்து, மா ஆறு முகத்து வள்ளல் பூ கழல் அடியில் வீழ்ந்து பொருமி புகலலுற்றாள் - பெருமையாகிய ஆறுதிருவதனங்களையுடைய

அச்சுப்பிரமணியப்பெருமானது பொலிவாகிய வீரக்கழலை யணிந்த திருவடியில் வீழ்ந்து பொருமிக்கூறலுற்றார். எ - று.

ஆங்கனந்தெரியா என்றதற்கு (அவர்கள் தேடி வருவதை) அவ்விடத்துக்கண்டு எனினுமமையும். பூங்கழனடியை கழல் பூ அடி எனச்சொல்வகுத்துக் கழலையணிந்த தாமரைமலர்போலுந் திருவடியென்றுரைப்பினுமமையும். (176)

**கோலொடுசிலையும்வாளுங்குந்தமுமழுவும்பிண்டி**
**பாலமும்பற்றிவேடர்பலருமாய்த்துருவிச்சென்று**
**சோலையின்மருங்குவந்தார்துணுக்கமுற்றுளதென்சிந்தை**
**மேலினிச்செய்வதென்கொலறிகிலேன்விளம்பாயென்றாள்.**

இ - ள். வேடர் பலரும் ஆய் - வேட்டுவர் பலருமாகி, கோலொடு சிலையும் வாளும் குந்தமும் மழுவும் பிண்டி பாலமும் பற்றி - அம்போடு வில்லும் வாளும் கைவேலும் மழுவும் பிண்டிபாலமுமாகிய இவற்றைப்பற்றிக்கொண்டு, துருவி சென்று சோலையின் மருங்கு வந்தார் - (எம்மைத்) தேடி நடந்து இச்சோலையின் பாங்கரில் வந்தார், (ஆதலால்) என் சிந்தை துணுக்கம் உற்றுளது - எனதுள்ளம் நடுக்க முறுகின்றது, மேல் இனி செய்வது என் அறிகிலேன் விளம்பாய் என்றாள்-(யாம்) இனிச்செய்வதென்னை (அதனை யான்) அறியேன் (தேவரீர்) கூறியருள்வீரென்றார் (வள்ளி யம்மையார்). எ - று.

கோலுஞ்சிலையும் இருபடைகளாயினும் தனியே தனியே தொழிற்குரியவாதலன்றி அவையிரண்டுங்கூடியே ஒருதொழிற் குரியவாதலிற் கோலொடுசிலையென்றார். பிண்டிபாலம் ஓர் படை; எறியாயுதங்களெனினு மமையும். பலருமாய் என்றது பலருங்கூடியென்றவாறு. மேலினி ஒருபொருட்பன்மொழி. கொல் அசைநிலை. (177)

**வருந்தலைவாழிநல்லாய்மால்வரையோடுசூர**
**னுரந்தனைமுன்புகீண்டவுடம்பிடியிருந்தநும்மோர்**
**விரைந்தமர்புரியச்சூழின்வீட்டுதுமதனைநோக்கி**
**யிருந்தருணம்பினெனென்னுவிறைமகட்கெந்தைசொற்ருன்.**

**இ - ள்.** நல்லாய் வருந்தலை - நங்கை வருந்தாதொழி வாய், முன்பு மால் வரையோடு சூரன் உரந்தனை கீண்ட உடம்பிடி இருந்த-பண்டைக்காலத்திலே பெரிய கிரௌஞ்ச கிரியையுஞ் சூரனுடைய மார்பையுங் கிழித்த வேலாயுத மிருக்கின்றது, நும்மோர் விரைந்து அமர் புரிய சூழின் வீட்டுதும் - நுமர் விரைந்துபோர்செய்ய (எம்மைச்) சூழின் (அவரை) அழிப்பேம், அதனை நோக்கி எம் பின் இருந் தருள் என்னு எந்தை இறைமகட்கு சொற்ருன் - அதனைப் பார்த்துக்கொண்டு எமக்குப்பின் இருந்தருள்வாயென்று எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமான் தலைவியாராகிய வள்ளியம்மையாருக்குத் திருவாய்மலர்ந்தருளினுர். எ-று.

வாழி முன்னிலையசை. ஒடு எண்ணிடைச்சொல். இருந்தது என்றதில் துவ்விகுதி விகாரத்தாற்ருெக்கது. ஒருமை பன்மை மயக்கமெனினுமமையும். நும்மோர் கிழவோனென்றதிற்போல் நுமரென்பதின் ஈற்றயல் அகரம் ஓகாரமாகி மகரமெய் விகாரத் தால் விரியப்பெற்றது. நடுக்கமுமச்சமுநீங்கி இன்புறும் பொருட்டு இருந்தருள் என்று உயர்ந்தோரை ஏவுதல்போற் கூறினுரென்பது; இது மரபுவழுவமைதி. (178)

**குறத்திருமடந்தையின்னகூற்றினைவினவிச்செவ்வேள்**
**புறத்தினில்வருதலோடும்பொள்ளெனக்குறுகியந்தத்**
**திறத்தினையுற்றுநோக்கிச்சீறிவெய்துயிர்த்துப்பொங்கி**
**மறத்தொழிலெயினர்காவைமருங்குறவளைந்துகொண்டார்.**

**இ - ள்.** திரு குற மடந்தை இன்ன கூற்றினை வினவி செவ்வேள் புறத்தினில் வருதலோடும் - அழகிய குறமக

ளாகிய வள்ளியம்மையார் இவ்வார்த்தையைக் கேட்டுச் செம்மையாகிய சுப்பிரமணியப்பெருமானுக்குப் புறத்தே செல்லவும், மறம் தொழில் எயினர்—கொலைத்தொழிலை யுடைய வேட்டுவர், காவை பொள்ளென குறுகி - அச் சோலையை விரைவிற்கிட்டி, அந்த திறத்தினை உற்று நோக்கி-(அவ்விருவருமிருக்கின்ற) அத்தன்மையை உற்றுப் பார்த்து, வெய்து உயிர்த்து சீறி பொங்கி - வெய்தாக மூச்சைவிட்டு வெகுண்டு பொங்கி, மருங்கு உற வளைந்து கொண்டார் - பக்கத்தே மிகச்சூழ்ந்துகொண்டார். எ - று.

குறமடந்தை குறச்சாதிப்பெண். ஓடு இசைநிறை. வெய் துயிர்த்தது தமக்கோரிழிவுவந்தடைந்ததைக்குறித்து. (179)

**தாதையங்கதனைக்கண்டுதண்டலைகுறுகிநந்தம்**
**பேதையைக்கவர்ந்தகள்வன்பெயர்கிலனெமதுவன்மை**
**யேதையுமதியானம்மாவிவன்விறலெரிபாய்ந்துண்ணு**
**மூதையங்கானமென்னமுடிக்குதுமொல்லையென்ருன்.**

இ - ள். தாதை தண்டலை குறுகி அங்கு அதனை கண்டு - தந்தையாகிய நம்பியென்பவனும் அச்சோலையைக் கிட்டி அங்ஙனம் அதனைக் கண்டு, நந்தம் பேதையை கவர்ந்த கள்வன் பெயர்கிலன் - நமது பேதைமையையுடைய மகளைக் கவர்ந்த இக்கள்வன் (யாம் வந்து சூழ்ந்ததைக்கண்டு சிறிதும்) புடைபெயர்கின்றிலன், அம்மா எமது வன்மை ஏதையும் மதியான் - அம்மா எமது வலிமையைச் சிறிதும் மதிக்கின்றிலன், இவன் விறல் எரி பாய்ந்து உண்ணும் மூதையங்கானம் என்ன ஒல்லை முடிக்குதும் என்ருன் - இவனுடைய வலியை அக்கினி பாய்ந்துண்ணப்படும் மூதையாகிய கானகமழிதல்போல விரைவில் (அழிய) முடிப்பேம் என்று கூறினன். எ - று.

எச்ச உம்மைவிகாரத்தாற்றொக்கது. அங்கு ஆங்கென்னும் அசைநிலை முதல் குறுகியதெனினும் ஒக்கும். மகள்மீது மிகுந்த அன்புடையனாகலின் பேதை என்றானென்பது. அம்மா வியப்புப் பொருட்டும் இடைச்சொல். எதையுமென்றதில் ஐ சாரியை; இரண்டாம் உருபெனக்கொண்டு வன்மையோடியையப்பினுமமையும். உண்ணுதல் ஈண்டு எரித்தல். மூதை வெட்டிச்சுடுங்காடு. ஊதையங்கானமெனச் சொல்வகுத்து காற்றையுடைய கானமென்றுரைப்பாருமுளர். கானம் ஆகுபெயர். (130)

**குறவர்கண்முதல்வன்றானுங்கொடுந்தொழிலெயினர்யாரு மறிகடலென்னவார்த்துவார்சிலைமுழுதும்வாங்கி யெறிசுடர்ப்பரிதித்தேவையெழிலிகண்மறைத்தாலென்ன முறைமுறையம்புவீசிமுருகனைவளைந்துகொண்டார்.**

இ-ள். குறவர்கள் முதல்வன்றானும் கொடும் தொழில் எயினர் யாரும் மறி கடல் என்ன ஆர்த்து - வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவனும் கொடுமையாகிய தொழிலையுடைய வேட்டுவர் யாவரும் (திரை) மறிகின்ற கடலைப்போல ஆரவாரித்து, வார் சிலை முழுதும் வாங்கி எறி சுடர் பரிதி தேவை எழிலிகள் மறைத்தால் என்ன முறை முறை அம்பு வீசி முருகனை வளைந்து கொண்டார் - (தாங்கள் கரங்களிற்கொண்ட) நெடிய விற்களெல்லாவற்றையும் வளைத்து (வெய்யிலை) எறிக்கின்ற சூரியனாகிய தேவனை முகில்கள் (மழைத்துளிகளைச் சொரிந்து) மறைத்தாற்போல முறைமுறையே பாணங்களைச் செலுத்திச் சுப்பிரமணியப்பெருமானைச் சூழ்ந்துகொண்டார். எ - று.

மறிதல் மடங்குதல். வெய்யிலென்னுஞ்செயப்படுபொருள் அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. எறித்தல் ஒளிசெய்தலுமாம். பொருளின்செயலுக்கேற்ப உவமையிற்செயல் வருவிக்கப்பட்டது. முகில்கள் மழையைச் சொரிந்து சூரியனை மறைத்தல்

பயனில்செயலாயவர்க்கேயழிவைத்தருமென்பதுபட அவ்வுவமை எடுத்துரைக்கப்பட்டதென்பது. (181)

**ஓட்டலராகிச்சூழ்ந்தாங்குடன்றுபோர்புரிந்துவெய்யோர்**
**விட்டவெம்பகழியெல்லாமென்மலர்நீரவாகிக்**
**கட்டழகுடையசெவ்வேற்கருணையங்கடலின்மீது**
**பட்டனபட்டலோடும்பைந்தொடிபதைத்துச்சொல்வாள்.**

**இ-ள்.** வெய்யோர் ஒட்டலர் ஆகி ஆங்கு சூழ்ந்து உடன்று போர் புரிந்து விட்ட வெம் பகழி எல்லாம் - கொடியராகிய வேட்டுவர் பகைவராகி அங்ஙனஞ் சூழ்ந்து வெகுண்டு போரினைச்செய்து செலுத்திய வெய்ய பாண மெல்லாம், கட்டழகு உடைய செவ்வேல் கருணையங் கடலின்மீது மெல் மலர் நீர ஆகி பட்டன - பேரழகை யுடைய செம்மையாகிய வேற்படைக்கலத்தைக்கொண்ட கிருபைக்குக் கடல்போன்ற சுப்பிரமணியப்பெருமான்மீது (சென்று) மென்மையாகிய மலர்களின்றன்மையனவாய்ப் பட்டன, பட்டலோடும் பைந்தொடி பதைத்து சொல்வாள் - (அங்ஙனம்) படவும் பசுமையாகிய வளையலையுடைய வள்ளி யம்மையார் பதைபதைத்துச் சொல்லுவார். எ - று.

சுப்பிரமணியப்பெருமான் குறிஞ்சிநிலத் தெய்வமாதலின் வேட்டுவரக்கடவுண்மீது எஞ்ஞான்றும் அன்புற்றிருந்தாரன்றே அவரிப்போது அறியாது பகையுற்றமையினால் ஒட்டலராகி என்றார். வில்வளைத்தல் பாணமெடுத்தல் நிலையில் நிற்றல் நாணிற்றொடுத்தலெல்லாம் போர்புரிதலாதலிற் போர்புரிந்து எனப்பட்டது. வெய்யோர் சுப்பிரமணியப்பெருமான்மீது விருப்பமுடையவரெனினு மமையும். மென்மலர்நீர என்றதற்கு மென்மையாகிய மலர்போலுந்தன்மைய எனினுமாம். செவ்வேல் செம்மையின்மை விகுதிகெட்டு முன்னின்ற மகரமெய் வகரமெய் யாகத் திரிந்துமுடிந்தது. கட்டழகைக் கருணையங்கடலோ

டியைக்க. கருணையங்கடல் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பதைபதைத்து என்னும் இரட்டைக்கிளவி முதல்விகாரத்தாற்றொக்கது பதைத்து என்றுரைப்பினுமமையும். (182)

**நெட்டிலைவாளிதன்னை ஞெரேலெனநும்மேற்செல்லத்**
**தொட்டிடுகையர்தம்மைச்சுடருடைநெடுவேலேவி**
**யட்டிடல்வேண்டுஞ்சீயமடுதொழில்குறியாதென்னிற்**
**கிட்டுமேமரையுமானுங்கேழலும்வேழந்தானும்.**

**இ-ள்.** சீயம் அடு தொழில் குறியாது என்னில் மரையும் மானும் கேழலும் வேழந்தானும் கிட்டுமே - (எல்லா மிருகங்களையுங் கொல்லவல்ல) சிங்கமானது கொல்லுந்தொழிலைச் (செய்யக்) கருதாதாயின் மரையும் மானும் பன்றியும் யானையும் (அதனைக் கொல்லவெண்ணிக்) கிட்டுமே (ஆதலால்), நெட்டிலை வாளிதன்னை நும் மேல் ஞெரேலென செல்ல தொட்டிடு கையர் தம்மை சுடர் உடை நெடு வேல் ஏவி அட்டிடல் வேண்டும் - நெடுமையாகிய இலைபோன்ற பாணத்தைத் தேவரீர்மீது ஞெரேலென்று வந்துபடச்செலுத்திய கீழோராகிய இவ்வேட்டுவரை ஒளி செய்தலையுடைய நெடிய வேலாயுதத்தைச் செலுத்தியழித்தருளல்வேண்டும். எ - று.

ஞெரேலெனல் ஒலிக்குறிப்பு; விரைவுக்குறிப்பெனினுமமையும். செல்லுதற்றொழிலாற் படுவதைச் செல்லவென்றார். உடைய என்பது ஈறுகெட்டது. சீயமடுதொழில்குறியாதென்னிற்கிட்டுமேமரையுமானுங் கேழலும்வேழந்தானும் என்றது எல்லாஞ்செய்யவல்ல தேவரீர் போர்த்தொழிலை இயற்றவெண்ணாதிருப்பின் இப்புல்லியராகிய வேட்டுவரும் தேவரீரை எதிர்த்துப் போர்செய்வாரே என்னும் பொருள்பட நிற்றலாற் பிறிது மொழிதலணியென்பது. ஏகாரம் தேற்றப்பொருட்டு. (183)

**என்றிவைகுமரிசெப்பவெம்பிரானருளாற்பாங்கர்**
**நின்றதோர்கொடிமாண்சேவனிமிர்ந்தெழுந்தார்ப்புக்கொள்ளக்**
**குன்றவர்முதல்வன்றனுங்குமரருந்தமருமியாரும்**
**பொன்றினராகிமாண்டுபொள்ளெனப்புவியில்வீழ்ந்தார்.**

இ - ள். என்று இவை குமரி செப்ப - என்று இவற்றை வள்ளியம்மையார் கூற, எம் பிரான் அருளால் பாங்கர் நின்றது ஓர் மாண் கொடி சேவல் - எமதிறைவ ராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவருளினாலே பக்கத்தினின்றதாகிய ஒப்பில்லாத பெருமையுடைய கொடிச்சேவல், நிமிர்ந்து எழுந்து ஆர்ப்பு கொள்ள - நிமிர்ந் தெழுந்து கூவுதல்செய்ய, குன்றவர் முதல்வன்றனும் குமரரும் தமரும் யாரும் பொன்றினர் ஆகி மாண்டு பொள் ளென புவியில் வீழ்ந்தார் - வேட்டுவர்க்கரசனாகிய நம்பி யென்பவனும் (அவனுடைய) புத்திரரும் உறவினரும் (மற்றை) யாவரும் (வலி) அழிந்தவராகி இறந்து விரைவிற் பூமியில் வீழ்ந்தார். எ - று.

நின்றது தொழிற்பெயர். ஓரை அசைநிலையாக்கினும்மையும். நிமிர்தல் தலையுயர்த்தல். பொள்ளென விரைவுக்குறிப்பு. (184)

**தந்தையுமுன்னையோருந்தமரும்வீழ்ந்திறந்ததன்மை**
**பைந்தொடிவள்ளிநோக்கிப்பதைபதைத்திரங்கிச்சோரக்**
**கந்தனத்துணைவியன்புகாணுவான்கடிகாநீங்கிச்**
**சிந்தையிலருளோடேகவனையளுந்தொடர்ந்துசென்றாள்.**

இ - ள். பைந்தொடி வள்ளி - பசுமையாகிய வளையலை யணிந்த வள்ளியம்மையார், தந்தையும் முன்னையோரும் தமரும் இறந்து வீழ்ந்த தன்மைநோக்கி - (தமது) பிதா வாகிய நம்பியென்பவனும் முன்னவர்களும் உறவினரும் இறந்துவீழ்ந்த தன்மையைப் பார்த்து, பதைபதைத்து

இரங்கி சோர - பதைபதைத்து இரங்கிச்சோர, கந்தன் அத்துணைவி அன்பு காணுவான் கடி நீங்கி சிந்தையில் அருளோடு ஏக - சுப்பிரமணியப்பெருமான் அத்துணைவியாராகிய வள்ளியம்மையாருடைய அன்பைக் காணுதற்குச் சிறந்த சோலையை நீங்கித் திருவுள்ளத்திலருளோடு செல்ல, அனையளும் தொடர்ந்து சென்றாள் - அவருந் தொடர்ந்து சென்றார். எ - று.

வீழ்ந்திறந்த இறந்துவீழ்ந்த எனத்திரிக்க. கந்தனத்துணைவியன்புகாணுவானென்றது அவ்வள்ளியம்மையார் தம்மீது கொண்டிருக்கின்ற அன்பை. முன்னரறியாதவர் பின்னரறிதற்கன்று முன்னுமறிந்திருக்கின்றாராதலின் சிறுமகாருடைய செயலை அன்னை தந்தையர் முன்னறிந்திருப்பினும் பின்னரும் அதனை இயற்றுவித்து மிக்க மகிழ்ச்சியடைதல்போலவே அவ்வம்மையாருடைய அன்பைப் பின்னருங்கண்டு மிக இன்புறுதற்கென்பது.

**செல்லநாரதப்பேர்பெற்றசீர்கெழுமுனிநேர்வந்து**
**வல்லியோடிறைவன்றன்னை வணங்கிநின்செய்கையெல்லாஞ்**
**சொல்லுதியென்னவன்னான்றோகையைக்காண்டற்றொட்டு**
**மல்லல்வேட்டுவரையட்டுவந்திடுமளவுஞ்சொற்றான்.**

இ - ள். செல்ல - (அங்ஙனம்) செல்ல, நாரதன் பேர் பெற்ற சீர் கெழு முனி நேர் வந்து வல்லியோடு இறைவன் றன்னை வணங்கி நின் செய்கை எல்லாம் சொல்லுதி என்னலோடும் - நாரதரென்னும் பெயரினைப்பெற்ற கீர்த்தி பொருந்திய முனிவர் எதிரேவந்து வள்ளியம்மையாரோடு கூடிய சுப்பிரமணியப்பெருமானை வணங்கித் தேவரீருடைய செயலெல்லாவற்றையும் (எளியேனறியக்) கூறியருளீரென்று சொல்லவும், அன்னான் தோகையை காண்டல் தொட்டு மல்லல் வேட்டுவரை அட்டு வந்திடும் அளவும் சொற்றான் - அப்பெருமான் அவ்வம்மையாரைக் கண்டது

தொட்டு வலியையுடைய வேட்டுவர்களைக் கொன்றுவந்த அளவும் (நிகழ்ந்தசெயலைக்) கூறியருளினர். எ - று.

சீர் அழகுமாம். ஓடு எண்ணிடைச்சொல்லெனக் கொண்டு பொருளுரைப்பினுமமையும். நின்செய்கையெல்லாம் என்றது முன்னரே தாம் திருத்தணிகைவரைக்கட் சென்று வள்ளியம்மையாரைப்பற்றிக்கூறி அவரிருக்கு மிடத்துக்குச் சென்று அருள் புரியுமென்று வேண்டிக்கொண்டபின் அதனைக்குறித்த நம்முடைய செயலெல்லாவற்றையு மென்பது. தோகை உவமவாகு பெயர். மல்லல் வளமெனினு மமையும். (186)

**பெற்றிடுதந்தைதன்னைப்பிறவுளசுற்றத்தோரைச்**
**செற்றமொடட்டுநீக்கிச்சிறந்தநல்லருள்செயாமற்**
**பொற்றொடிதன்னைக்கொண்டுபோந்திடத்தகுமோவென்னு**
**மற்றிவைமுனிவன்கூறவள்ளலுமஃதாமெனருன்.**

இ - ள். பெற்றிடு தந்தை தன்னை பிற உள சுற்றத்தோரை செற்றமொடு அட்டு நீக்கி - பெற்ற பிதாவையும் மற்றுமுள்ள சுற்றத்தாரையும் வெகுட்சியோடு கொன்று விட்டு, சிறந்த நல் அருள் செயாமல் பொற்றொடி தன்னை கொண்டுபோந்திட தகுமோ என்னு இவை முனிவன்கூற - (அவர்களை எழுப்புதலாகிய) மிகுந்த நல்லருளைச்செய்யாமல் இப்பொன்னுலாகிய வளையலையுடைய அம்மையாரைக் கொண்டு செல்லத்தகாதென்று இவற்றை அந்நாரதமுனிவர் கூற, வள்ளலும் அஃது ஆம் என்ருன் - சுப்பிரமணியப் பெருமானும் (நீகூறிய) அஃது (ஏற்ற) தாகுமென்று திருவாய்மலர்ந்தருளினர். எ - று.

பிற இடைச்சொல் மாத்திரையாய்நின்றது. ஒடுவுருபு அடைமொழிப் பொருளில்வந்தது. ஓகாரம் எதிர்மறை. மற்று அசைநிலை. உம்மை எச்சவும்மை. அஃதாம் என்றது அஃதொக்கு மென்றபடி. (187)

**விழுப்பமதுளதண்காவில்விசாகன்மீண்டருளித்தன்பால்**
**முழுப்பரிவுடையநங்கைமுகத்தினைநோக்கிநம்மேற்**
**பழிப்படுவெம்போராற்றிப்பட்டநுங்கிளையையெல்லா**
**மெழுப்புதியென்னலோடுமினிதெனவிறைஞ்சிச்சொல்வாள்.**

**இ-ள்.** விசாகன் விழுப்பமது உள தண் காவில் மீண்டருளி - சுப்பிரமணியப்பெருமான் சிறப்புள்ள குளிர்மையாகிய சோலையின்கண் மீண்டுவந்தருளி, தன்பால் முழு பரிவு உடைய நங்கை முகத்தினை நோக்கி - தம்பாலில் முழுவன்புடைய அவ்வம்மையாரது வதனத்தைப்பார்த்து, நம் மேல் பழி படு வெம் போர் ஆற்றி பட்ட நும் கிளையை எல்லாம் எழுப்புதி என்னலோடும் - நம்மீது பழித்தலின் பாற்பட்ட வெய்யபோரைச் செய்து இறந்துபட்ட நினது சுற்றமெல்லாவற்றையும் (எழுதிரென்றுசொல்லி) எழுப்புவாயென்று திருவாய்மலர்ந்தருளவும், இனிது என இறைஞ்சி சொல்வாள் - நன்றென்று (அப்பெருமானை) வணங்கிக்கொண்டு கூறுவார் (வள்ளியம்மையார்). எ-று.

முழுப்பரிவு-சிறிதுங்குறைவில்லாதவன்பு. நம்மேற்போராற்றி எனவியையும். வள்ளியம்மையாரையும் அவ்வூரிலுள்ள பிறரையுங் கருதி நுங்கிளையென்றார். தமரல்லார் பிறருமுளராகலினென்பது; அங்ஙனமுரைப்பின் மேற்செய்யுளில் குழுவுறுதமர்களோடுங் குறவர்கோனெழுந்தான் என்றதனோடுமொருகுமேயெனின் அரசனுக்குத் தன்னூரிலுள்ளார் யாவருந் தமரெனப்படுவாராதலினாலும் அவனுக்குத் துணையாய்வந்து போரியற்றுவாருந் தமரெனப்படுவாராதலினானும் ஆகாதென்க. தந்தையும் முன்னையோருந் தமரும் வீழ்ந்திறந்ததன்மை யென்ற செய்யுளானும் பிறவானும் இதுகாறும் வள்ளியம்மையாருக்குத் தெய்வத்தன்மை முழுதும் வந்து சார்ந்ததென்று தோன்றாமையால் எழுப்புதி என்றதற்கு (எழுதிரென்றுசொல்லி) எழுப்புவாயென் றுரைத்தாமென்க. ()

விழுமியவுயிர்கள்சிந்திவீழ்ந்தநங்கேளிர்யாரு
மெழுதிரென்றருளலோடுமிருநிலத்துறங்குகின்ற
பழையநல்லுணர்வுதோன்றப்பதைபதைத்தெழுதற்கொப்பக்
குழுவுறுதமர்களோடுங்குறவர்கோனெழுந்தானன்றே.

இ - ள். விழுமிய உயிர்கள் சிந்தி வீழ்ந்த நம் கேளிர் யாரும் எழுதிர் என்று அருளலோடும் - சிறந்தவுயிர்களழிந்து வீழ்ந்தநந்தமராயினோர் யாவரும் எழுதிரென்று கூறியருளவும், இருநிலத்து உறங்குகின்றோர் பழைய நல்லுணர்வு தோன்ற பதைபதைத்து எழுதற்கு ஒப்ப குழூ உறு தமர்களோடும் குறவர்கோன் எழுந்தான் - பெருமையாகிய பூமியின்கண்ணே துயில்கின்றவர் பழைய நல்லறிவு வரப் பதைபதைத்து எழுதற்கொப்பாகக் கூட்டமாகப் பொருந்திய வேட்டுவர்களோடும் வேட்டுவர்க் கரசனாகிய நம்பியென்பவன் எழுந்தான். எ - று.

உயிரினுஞ் சிறந்தபொருண் மற்றொன்றில்லை யாதலின் விழுமியவுயிர்களென்றார். ஒப்பாக என்றது ஒப்பவெனநின்றது. அன்றும் ஏயும் அசைநிலைகள். (189)

எழுந்திடுகின்றகாலையெம்பிரான்கருணைவெள்ளம்
பொழிந்திடுவதனமாறும்புயங்கள்பன்னிரண்டும்வேலு
மொழிந்திடுபடையுமாகியுருவினையவர்க்குக்காட்ட
விழுந்தனர்பணிந்துபோற்றிவிம்மிதராகிச்சொல்வார்.

இ - ள். எழுந்திடுகின்ற காலை-(அவர்கள்) எழுகின்ற காலையில், எம்பிரான் - எமதிறைவராகிய சுப்பிரமணியப் பெருமான், கருணை வெள்ளம் பொழிந்திடு வதனம் ஆறும் புயங்கள் பன்னிரண்டும் வேலும் ஒழிந்திடு படையும் ஆகி உருவினை அவர்க்கு காட்ட - கிருபையாகிய வெள்ளத்தை யுடைய திருமுகங்களோராறும் திருப்புயங்களீராறும்

வேலாயுதமும் ஒழிந்த படைக்கலங்களும் (உடையர்) ஆகித் தமது திருவுருவை அவ்வேட்டுவர்களுக்குக் காட்டியருள, விழுந்தனர் பணிந்து போற்றி விம்மிதர் ஆகி சொல்வார் - (அவர்கள்) விழுந்து வணங்கித் துதித்து அற்புதமுடைய ராகிக் கூறுவார்கள். எ - று.

பேரருளாதலின் கருணைவெள்ளமென்றார். சுப்பிரமணியப் பெருமானுடைய திருவுருவமுழுதும் அருள்வடிவமேயாயினும் அருள் விளங்கித் தோன்றுவது திருமுகங்களினிடத்தாதலின், கருணைவெள்ளம் பொழிந்திடு வதனமாறுமென்றார். விழுந்தனர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (190)

அடுந்திறலெயினர்சேரியளித்திடுநீயேயெங்கண்
மடந்தையைக்கரவில்வெளவிவரம்பினையழித்துத்தீரா
நெடுந்தனிப்பழியதொன்றுநிறுவினைபுதல்வர்கொள்ள
விடந்தனையனனையூட்டின்விலக்கிடுகின்றருண்டோ.

இ - ள். அடும் திறல் எயினர் சேரி அளித்திடு நீயே-அடுகின்ற வலியினையுடைய சிற்றூரைக் காத்தருளுகின்ற தேவரீரே, எங்கள் மடந்தையை கரவில் வெளவி வரம்பினை அழித்து தீரா நெடும் தனி பழியது ஒன்று நிறுவினை - எங்கள் புத்திரியைக் கரவினாற்கவர்ந்து (எமது குலத்தில்) வரம்பை யழித்துத் தீராதபெரிய நிகரற்றபழியொன்றை நிறுத்தினீர்; அன்னை புதல்வர் கொள்ள விடந்தனை யூட்டின் விலக்கிடுகின்றார் உண்டோ - தாயானவள் புத்திரருட் கொள்ள நஞ்சையூட்டின் (அதனை) விலக்குவாருமுளரோ. எ - று.

ஏகாரம் பிரிநிலை. குலத்தின்வரம்பு குடிப்பழியெய்தாமை. தனிப்பழியென்றது இதுபோன்றபழி மற்றொன்றில்லையென்றபடி. ஓகாரம் எதிர்மறை. புதல்வர் கொள்ளவிடந்தனை யன்னை யூட்டின் விலக்கிடுகின்றருண்டோ என்ற பொதுப்பொருளால்

நீயே வெளவி அழித்து பழியதொன்று நிறுவினையென்னுஞ் சிறப்புப்பொருளைச் சாதித்ததனால் வேற்றுப்பொருள்வைப்பணி.

ஆங்கது நிற்கவெங்களரிவையைநசையால்வெளவி
நாங்களுமுணராவண்ணநம்பெருங்காவனீங்கி
யீங்கிவட்கொணர்ந்தாயெந்தாயின்னினிச்சீறூர்க்கேகித்
தீங்கனல்சான்றுவேட்டுச்செல்லுதிநின்னூர்க்கென்றுன்.

இ - ள். ஆங்கது நிற்க - அதுநிற்க, எந்தாய் எங்கள் அரிவையை நசையால் வெளவி நாங்களும் உணராவண்ணம் நம் பெரும் காவல் நீங்கி ஈங்கிவண் கொணர்ந்தாய் - எந்தையே (தேவரீர்) எங்கள் புத்திரியை விருப்பத்தாற் கவர்ந்து யாங்களுமறியாதபடி எமது பெரியகாவலை நீங்கி இங்ஙனங் கொண்டுவந்தீர், இன்னினி சீறூர்க்கு ஏகி தீங்கனல் சான்று ஆ வேட்டு நின் ஊர்க்கு செல்லுதி என்றூர் - இப்பொழுதே (எங்கள்) சிற்றூருக்குப்போய் நல்ல ஓமாக்கினி சாட்சியாக (இவளை) மணந்து நுமதுபதிக்குச் செல்லுவீரென்றூர்கள் (அவ்வேட்டுவர்கள்). எ - று.

ஆங்கது ஈங்கிவள் இன்னினி என்பன ஒருசொல். உம்மை உயர்வுசிறப்பு. தீ, இனிமை; ஈண்டு நன்மை. தீ என்ற அடையால் கனல் ஓமாக்கினியென்பது பெறப்பட்டது. ஆக என்பது இறுதி கெட்டு நின்றது. (192)

மாதுலன்முதலோர்சொற்றமணமொழிக்கிசைவுகொண்டு
மேதகுகருணைசெய்துமெல்லியறனையுங்கொண்டு
கோதிலாமுனிவனேடுங்குளிர்மலர்க்காவுநீங்கிப்
பாதபங்கயங்கனேவப்பருப்பதச்சீறூர்புக்கான்.

இ - ள். மாதுலன் முதலோர் சொன்ன மணம் மொழிக்கு இசைவுகொண்டு - மாமனுகி நம்பியென்பவன் முதலாயினேர் கூறிய திருமணவார்த்தைக்கு இசைவு

கொண்டு, மேதகு கருணைசெய்து - மேன்மையுற்ற கிருபை செய்து, மெல்லியறனையுங் கொண்டு - மென்மையாகிய சாயலினையுடைய வள்ளியம்மையாரையுங் கொண்டு, கோது இலா முனிவனோடும் குளிர் மலர் காவு நீங்கி - குற்றமில்லாத நாரதமுனிவரோடுங் குளிர்ந்த மலர்ச் சோலையை நீங்கி, பாத பங்கயங்கள் நோவ பருப்பதம் சிறார்புக்கான் - திருவடித்தாமரைகள் நோவுற வள்ளிகிரியின்கணுள்ள சிற்றூரைச்சார்ந்தருளினார் (சுப்பிரமணியப்பெருமான்). எ-று.

உம்மை சிறப்பு. (193)

**தந்தையுஞ்சுற்றத்தோருஞ்சண்முகன்பாங்கரேகிச்**
**சிந்தையின்மகிழ்ச்சியோடுசிறுகுடியோரைநோக்கிக்**
**கந்தனேநமதுமாதைக்கவர்ந்தனனமதுசொல்லால்**
**வந்தனன்மணமுஞ்செய்யமற்றிதுநிகழ்ச்சியென்றார்.**

இ - ள். தந்தையும் சுற்றத்தோரும் சண்முகன் பாங்கர் ஏகி-(வள்ளியம்மையாருடைய) தந்தையாகிய நம்பியுந்தமர்களும் சுப்பிரமணியப்பெருமானுக்குப் பக்கத்தே சென்று சிந்தையின் மகிழ்ச்சியோடு சிறுகுடியோரை நோக்கி - மனமகிழ்ச்சியோடு (தஞ்) சிற்றூரிலுள்ளாரைப் பார்த்து, நமதுமாதை கந்தனே கவர்ந்தனன் - நமது மகளை (எங்குலதெய்வமாகிய) கந்த ஸ்வாமியே கவர்ந்தருளினர், (அன்றியும்) நமது சொல்லால் மணமும் செய்யவந்தனன் - எமது சொல்லினாலே எமதில்லின்கண் விதிப்படி திருக்கலியாணஞ் செய்யவும் வந்தருளினார், இது நிகழ்ச்சி என்றார் - இதுவே நிகழ்ச்சி யென்றார்கள். எ - று.

ஏகாரம் பிரிநிலை. மற்றொருவரெமது காவலைக்கடந்து கவர்ந்துகொண்டு செல்லவல்ல ரல்லரென்பது தொனிக்க கந்தனே கவர்ந்தனனென்றாரென்க. கந்தஸ்வாமியே கவர்ந்தன

ராதலின் தமக்கோர் குறைபாடில்லையென்னுங் கருத்தினும் தமது சொல்லால் எவ்வகைப்பட்டவராலுங் காண்டற்கரிய திருவுருவத்தோடு தமதில்லின்கண் வந்தருளினரென்னுங் கருத்தினும் சிந்தையின் மகிழ்ச்சியோடு நிகழ்ச்சி இது என்றாரென்பது. உம்மை சிறப்பு; எச்சவும்மையுமாம். மற்று அசைநிலை. (194)

**சங்கரன்மதலைதானேதையலைக்கவர்ந்தானென்று**
**மங்கலவதுவைசெய்யவந்தனனிங்ஙனென்றுந்**
**தங்கள்சுற்றத்தோர்கூறச்சிறுகுடிதன்னிலுற்றோர்**
**பொங்குவெஞ்சினமுநாணுமகிழ்ச்சியும்பொடிப்பநின்றார்.**

இ - ள் சங்கரன் மதலைதானே தையலை கவர்ந்தான் என்றும் மங்கலவதுவை செய்ய இங்ஙன் வந்தனன் என்றும் தங்கள் சுற்றத்தோர் கூற - சிவபெருமானுடைய புத்திரராகிய சுப்பிரமணியப்பெருமானே வள்ளியம்மையாரைக் கவர்ந்தாரென்றும் மங்கலமாகிய திருமணஞ்செய்ய (அவர்) இங்ஙனம் வந்தருளினாரென்றுந் தங்கள் தமர்கள் கூற, சிறு குடி தன்னில் உற்றோர் பொங்கு வெம்சினமும் நாணும் மகிழ்ச்சியும்பொடிப்ப நின்றார் - அச்சிற்றூரிலிருப்பவர்கள் மிகுந்த வெம்மையாகிய கோபமும் நாணமும் மகிழ்ச்சியும் தம்மிடத்து உண்டாக நின்றார்கள். எ - று.

மங்கல வதுவை இருபெயரொட்டு. தமது தெய்வமாகிய சுப்பிரமணியப்பெருமான் களவாகக் கவர்ந்து சென்றாரே என்றதனாற் கோபமும் தங்காவல் பயனற்றதுபற்றி நாணமும், தமது புத்திரிக்கு அப்பெருமான் நாயகனானதுபற்றியும் தந்தமருடையசொல்லால் தம்மூரில் திருமணஞ்செய்ய வந்ததுபற்றியும் மகிழ்ச்சியும் பொடிப்பநின்றாரென்பது. (195)

**குன்றவர்தமதுசெம்மல்குறிச்சியிற்றலைமைவைத்தான**
**தன்றிருமனையினூடேசரவணமுதல்வன்றன்னை**
**மன்றலங்குழலியோடுமரபுளியுய்த்துவேங்கைப்**
**பொன்றிகழதளின்மீதுபொலிவுறவிருத்தினரே.**

இ - ள். குன்றவர் தமது செம்மல் - வேட்டுவர்க்கரசனாகிய நம்பி யென்பவன், குறிச்சியில் தலைமைத்து ஆன தன் திரு மனையின் ஊடே - அச்சிற்றூரின்கண் தலைமையையுடைத்தான தனது அழகிய இல்லினுள்ளே, மன்றலம் குழலியோடு சரவணமுதல்வன்றன்னை மரபு உளி உய்த்து-நறுமணத்தைக்கொண்ட கூந்தலினையுடைய வள்ளியம்மையாரோடு சரவணதடாகத்திலுதித்தருளிய முதல்வராகிய சுப்பிரமணியப்பெருமானை முறைமையிற் புகுத்தி, பொன் திகழ் வேங்கை அதளின் மீது பொலிவு உற இருத்தினான் - அழகுவிளங்குகின்ற புலித்தோலின் மேற் பொலிவு மிக இருத்தினான். எ - று.

ஏகாரம் பிரிநிலை. மரபுளி உய்த்தல் - மணமுரசம் மங்கலச் சங்கமாதிய இயம்பப் பூரணகும்பமாதிய மங்கலப்பொருள்களெதிர்வரப் புகுத்தல். குறிஞ்சிநிலத்தாருக்குத் தவிசு தடுக்கும் மரைத்தோலாதிய தோல்களுமாதியவாதலின் உள்ளனவற்றிலுயர்ந்ததாயும் முனிவராதிய மேலோர்களுங் கைக்கொள்ளுவதாயுமுள்ள புலித்தோலாசனத்தில் இருத்தினானென்பது. (196)

**அன்னதோர்வேலைதன்னிலறுமுகமுடையவள்ள**
**றன்னுழையிருந்தநங்கைதனையருளோடுநோக்கக்**
**கொன்னவில்குறவர்மாதர்குயிற்றியகோலநீங்கி**
**முன்னுறுதெய்வக்கோலமுழுதொருங்குற்றதன்றே.**

இ - ள். அன்னது வேலை தன்னில் - அச்சமயத்தில், அறுமுகம் உடைய வள்ளல் தன் உழை இருந்த நங்கைதனை அருளொடு நோக்க - ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப் பெருமான் தமது பக்கத்திலிருந்த வள்ளியம்மையாரைத் திருவருளோடு நோக்கியருள, கொல் நவில் குறவர் மாதர் குயிற்றிய கோலம் நீங்கி முன் உறு தெய்வக்கோலம் முழுது ஒருங்கு உற்றது - கொலைத்தொழில் பயின்ற

வேட்டுவர் மகளிர் ஒப்பனைசெய்த வடிவம் நீங்க முன்னுள்ள தெய்வவடிவமுழுதும் ஒருங்கடைந்தது. எ - று.

ஓர் அசை. ஈண்டு சுப்பிரமணியப்பெருமான் வள்ளியம்மையாரை அருளோடுநோக்க முன்னுறு தெய்வக்கோலமுழுதொருங் குற்றதென்றதனல் இதற்குமுன்னெல்லாம் அருளோடு நோக்கியதின்றேவெனின் அற்றன்று முன்னெல்லாம் களவு கைகோள் நிகழுதற்குக் குறிஞ்சிநிலத்துத் தலைவியாவிருத்தலே சிறப்பாதலின் அக்கோலம் நீங்காதிருக்கச்செய்து இப்பொழுது அக் களவொழுக்கம் நீங்கியதுபற்றி அத்தெய்வவடிவமுண்டாக நோக்கியருளினரென்பது. கொலைத்தொழில் பயிறலைக் குறவர் மேலேற்றுக. குறவர்மாதர் குயிற்றிய கோலம் மானுடமகாரை வளர்க்கு முறைப்படி நெய்பெய்து உச்சியாதிய வுறுப்புக்கள் செவ்வையா வளரத் தங்கைகளாலூன்ற வேண்டுவனவற்றை யூன்றியும் பிடிக்கவேண்டுவனவற்றைப் பிடித்தும் ஒப்பனை செய்த லென்க. நீங்கி நீங்கவென்பதன் றிரிபு. முன்னுறு தெய்வக்கோலம் விஷ்ணுவுடைய மகளாக இருந்தஞான்றுற்ற தெய்வவடிவம். ஒருங்குறுதல்-சிறிது சிறிதாகவுறாது ஒருமிக்கவுறுதல். அன்றும் ஆயும் அசைநிலைகள்.

(197)

**கவலைதீர்தந்தைதானுங்கணிப்பிலாச்சுற்றத்தாருஞ்**
**செவிலியுமன்னைதானுமிகுளையுந்தெரிவைமாருந்**
**தவலருங்கற்பின்மிக்கதம்மகள்கோலநோக்கி**
**யிவளெமதிடத்தில்வந்ததெம்பெருந்தவமேயென்றார்.**

**இ - ள்.** கவலை தீர் தந்தை தானும் கணிப்பு இலா சுற்றத்தாரும் செவிலியும் அன்னை தானும் இகுளையும் தெரிவைமாரும் - கவலை நீங்கிய தந்தையாகிய நம்பியும் அளவையில்லாத சுற்றத்தவர்களுஞ் செவிலித்தாயும் நற்றாயும் தோழியும் (மற்றை) மகளிரும், தவலரும் கற்பின் மிக்க தம் மகள் கோலம் நோக்கி - கெடுதலில்லாத கற்பின் மிகுந்த தமது மகளாகிய வள்ளியம்மையாருடைய தெய்வக்

கோலத்தை நோக்கி, இவள் எமது இடத்தில் வந்தது எம் பெரும் தவமே என்றார் - இத்தெய்வப்பெண் எங்களிடத்தில் வந்து சார்ந்தது எங்கள் தவப்பயனேயென்றார்கள். எ - று.

மகளேயாவளென கரவிற் கொண்டுசென்றானென்று முன்னுணர்ந்தபொழுது தோன்றியகவலை, அங்ஙனங் கவர்ந்தருளியவர் சுப்பிரமணியப் பெருமானென் றறிந்தவுடன் நீங்கியபடியாற் கவலைதீர் தந்தையெனப்பட்டது. சுற்றத்தார் ஆண்பாற் சுற்றத்தார். தெரிவைமார் பெண்பாற்சுற்றத்தார். அருமை ஈண்டு இன்மை. தவம் ஆகுபெயர். (198)

**அந்தநல்வேலைதன்னிலன்புடைக்குறவர்கோமான்**
**கந்தவேள்பாணிதன்னிற்கன்னிகைகரத்தைநல்கி**
**நந்தவமாகிவந்தநங்கையைநயப்பாலின்று**
**தந்தனன்கொள்கவென்றுதண்புனற்றாரையுய்த்தான்.**

**இ - ள்.** அந்த நல் வேலை தன்னில் அன்புடை குறவர் கோமான் - அந்த நல்ல முகூர்த்தத்தில் அன்பினையுடைய வேட்டுவர்க்கரசனாகிய நம்பியென்பவன், கந்தவேள் பாணி தன்னில் கன்னிகை கரத்தை நல்கி - சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கரத்திலே (தனது மகளாகிய) வள்ளியம்மையாருடைய திருக்கரத்தை வைத்து, நம் தவம் ஆகிவந்த நங்கையை நயப்பால் இன்று தந்தனன் கொள்க என்று தண் புனல் தாரை உய்த்தான் - நமது தவப்பயனாகி வந்த மகளை விருப்பத்தினாலே இன்று தந்தேன் (தேவரீர்) ஏற்றுக் கொள்ளுக என்று குளிர்ந்த நீர்த்தாரையை விட்டான். எ - று.

வேலை ஈண்டு முகூர்த்தம். கந்தவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; கந்தன் சிறப்புப்பெயர். தவம் ஆகுபெயர். மான்வயிற்றுதித்து வள்ளிக்கிழங்கு அகழ் குழியிற்கிடக்கக்கண்

டெடுத்தமையால், வந்த நங்கையென்றான். ஒருவற்கு ஒருத்தியைத் தாரமாகத் தத்தஞ்செய்யும்போழ்து நீரோடு தத்தஞ்செய்வது வழக்காதலின் புனற்றுறை உய்த்தானென்பது. (199)

**நற்றவமியற்றுந்தொல்சீர்நாரதனனையகாலைக்**
**கொற்றமதுடையவேலோன்குறிப்பினாலங்கியோடு**
**மற்றுளகலனுந்தந்துவதுவையின்சடங்குநாடி**
**யற்றமதடையவண்ணமருமறைவிதியாற்செய்தான்.**

இ - ள். அனைய காலை நல் தவம் இயற்றும் தொல் சீர் நாரதன் - அச்சமயத்தில் நல்லதவத்தினைச் செய்கின்ற பெருமையாகிய கீர்த்தியினையுடைய நாரதமுனிவர், கொற்றமது உடைய வேலோன் குறிப்பினால் அங்கியோடு மற்று உள கலனும் தந்து - வெற்றியையுடைய வேற்படைக் கலத்தைக்கொண்ட சுப்பிரமணியப் பெருமானது குறிப்பினாலே (ஓமத்துக்குரிய) அக்கினியோடு மற்றுமுள்ள உபகரணங்களையுந்தந்து, நாடி அற்றமது அடையாவண்ணம் அரும் மறை விதியால் செய்தான்-ஆராய்ந்துசோர்தலில்லா வண்ணம் அருமையாகிய வேதவிதிப்படி திருமணச் சடங்கைச் செய்தார். எ - று.

தொல் பழமையுமாம். மற்றுளகலன் - தருப்பை சமித்து ஆதியன. அது பகுதிப் பொருள்விகுதி. தருதல் ஈண்டு அவற்றையெல்லாந் தேடிவைத்தல். (200)

**ஆவதோர்காலைதன்னிலரியுநான்முகனும்வானோர்**
**கோவொடுபிறருஞ்சூழக்குலவரைமடந்தையோடுந்**
**தேவர்கடேவன்வந்துசேண்மிசைநின்றுசெவ்வேள்**
**பாவையையவதுவைசெய்யும்பரிசினைமுழுதுங்கண்டான்.**

இ - ள். ஆவது காலைதன்னில் - (அங்ஙனம் அத்திருமணம்) நிகழுங்காலையில், அரியும் நான்முகனும் கோவொடு

வானோர் பிறரும் சூழ - விஷ்ணு மூர்த்தியும் பிரமதேவரும் இந்திரனோடுதேவர்களும் பிறருஞ்சூழ, குலவரை மடந்தை யோடும் தேவர்கள் தேவன் வந்து சேண் மிசை நின்று செவ்வேள் பாவையை வதுவை செய்யும் பரிசினை முழுதும் கண்டான் - நல்லமலையரசன் புத்திரியாகிய உமாதேவியா ரோடும் தேவர்களுக்குந் தேவராகிய சிவபெருமான் (விடையின்மேலிவர்ந்து) வந்தருளி ஆகாயத்தினின்று செம்மையாகிய சுப்பிரமணியப்பெருமான் சித்திரப்பாவை போலும் வள்ளியம்மைபாரைத் திருமணஞ்செய்யுந் தன்மையை முழுதுங்கண்டருளினார். எ - று.

ஆவது அகரச்சுட்டின் மரூஉவெனினுமமையும். ஓர் அசை. வானோரும் என்றதனும்மை விகாரத்தாற்றொக்கது. பிறர் முனிவர்களும் வானோரொழிந்த பதினேழுகணங்களும் பூதகணங் களும் சிவகணங்களுமென்க. வரை ஆகுபெயர்; மலைமகளுமாம். பாவை உவமவாகுபெயர். பாவை கொல்லியம் பாவையென்றார் நச்சினார்க்கினியார், அது சித்திரப்பாவைகளுட் சிறந்தது போலும். (201)

**கண்ணுதலொருவன்றானுங்கவுரியுங்கண்ணாற்கண்டு**
**தண்ணளிபுரிந்துநிற்பத்தண்டுழாய்முடியோனாதிப்**
**பண்ணவருவகைநீடிப்பனிமலர்மாரிவீசி**
**யண்ணலைவழிபட்டேத்தியஞ்சலிபுரிந்திட்டார்த்தார்.**

**இ - ள்.** கண்ணுதல் ஒருவன்றானும் கவுரியும் கண்ணாற் கண்டு தண்ணளி புரிந்து நிற்ப - கண்ணையுடைத்தாகிய நெற்றியினை யுடைய ஒப்பில்லாத சிவபெருமானும் உமா தேவியாரும் (தங்கள்) திருக்கண்களாற்கண்டு திருவருள் செய்து நிற்ப, தண் துழாய் முடியோன் ஆதி பண்ணவர் உவகை நீடி பனிமலர் மாரி வீசி அண்ணலை வழிபட்டு ஏத்தி அஞ்சலி புரிந்திட்டு ஆர்த்தார் - குளிர்மையாகிய

துழாய்மாலை யணிந்தமுடியினையுடைய விஷ்ணு வாதிய பண்ணவர்கள் மகிழ்ச்சியதிகரித்துக் குளிர்ந்த மலர்களை மழைபோற்றூவி அச்சுப்பிரமணியப்பெருமானை வாழ்த்திக் கும்பிட்டு ஆரவாரித்தார்கள். எ - று.

துழாய் ஆகுபெயர். பண்ணவர் கடவுளர் தேவர் முனிவர் இவர்களுக்குப் பெயராதலானும் அது குணமுடையரென்னும் பொருளாதலின் மற்றையவரையுந்தழுவுதலானும் சிவபெருமானொடு வந்தார் யாருமென்றபடி. மலர்மாரியெனினு மமையும். ஒருவனென்றது இயையின்மையணியின் தொனிப்பும் பண்ணவரென்றது சிலேடையணியும், கண்ணுற் கண்டுதண்ணளி புரிந்து என்றதும் உவகைநீடி வீசி எத்தி புரிந்திட்டு ஆர்த்தார் என்றதும் உவகைச்சுவையணியும், மாரிவீசி என்றதுதொழிலுவமையணியும், அண்ணலென்றது அவ்விஷ்ணுவாதியவர்களுக்கெல்லாந் தலைவரென்னுங் கருத்துடைய விசேஷியமாதலிற்கருத்துடையடைகொளியணியும் ஆகிய பலவணிகள் கலந்திருத்தலிற் கலவையணி. (202)

அறுமுகமுடையவள்ளலன்னதுநோக்கிச்சீறா
ரிறையதுமுணராவண்ணமிமையமேலணங்கினோடுங்
கறையமர்கண்டன்றன்னைக்கைதொழுதேனையோர்க்கு
முறைமுறையுவகையோடுமுழுதருள்புரிந்தானன்றே.

இ - ள். அறுமுகம் உடைய வள்ளல் அன்னது நோக்கி - ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப் பெருமானதனைப்பார்த்து, சீறார் இறையது முணரா வண்ணம் இமயமேல் அணங்கினோடும் கறை அமர் கண்டன்றன்னை கை தொழுது-அச்சிற்றூரிலுள்ளார் சிறிதுமறியாதபடி இமயமலையிற்றோன்றியருளிய உமாதேவியாரோடு ஆலாகலம் அமரப் பெற்ற திருமிடற்றினையுடையராகிய சிவபெருமானைக் கைகூப்பி வணங்கி, உவகையோடு ஏனையோர்க்கும் முறைமுறை முழுது அருள் புரிந்தான் -

மகிழ்வோடு மற்றையோர்களுக்கும் முறைமுறையாகப் பூரணகிருபையைச் செய்தருளினார். எ - று.

சீறூர் ஆகுபெயர். அணங்கினோடுங்கூடிய கறையமர்கண்டன் றன்னை யென்றபடி. முறைமுறை என்றது அவர்களுட் பெரியார்க்கு முன்னரும் ஏனையோர்க்குப் பின்னரும் அருள் செய்தல்

வேறு

அங்கவேலைனலரின்மேலவன்
செங்கண்மாயவன்றேவர்கோமகன்
சங்கைதீர்தருந்தவத்தர்தம்மொடு
மங்கைபாதியான்மறைந்துபோயினன்.

இ - ள். அ வேலையில் - அச்சமயத்தில், அலரின் மேலவன் செம் கண் மாயவன்தேவர் கோமகன் சங்கை தீர்தரும் தவத்தர்தம்மொடும் மங்கைபாதியான் அங்கு மறைந்துபோயினன் - தாமரைப்பூவின் மீதிருக்கின்ற பிரமதேவரும் செம்மையாகிய கண்ணையுடைய விஷ்ணுமூர்த்தியும் தேவர்களும் அத்தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனும் (பொருளுணர்ச்சியில் ஐயம் நீங்கிய தவத்தினையுடைய முனிவராதியவர்களும் ஆகிய இவர்களோடும் பார்ப்பதிதேவியாரை ஓர் கூற்றிலே யுடையராகிய சிவபெருமான் அங்ஙனம் மறைந்து சென்றருளினார். எ - று.

ஆங்கு என்னும் அசைநிலை குறுகியதெனினுமமையும். மங்கையாகிய ஓர் கூற்றினையுடையரெனினு மமையும். (204)

போனவெல்லையிற்பொருவினரதன்
ஞனியற்றியசடங்குமுற்றலுங்
கானவேடுவர்கன்னிதன்னொடு
மானவேலனைவணங்கிப்போற்றினன்.

இ - ள். போன எல்லையில் - சென்றருளிய சமயத்தில், பொருவு இல் நாரதன் தான் இயற்றிய சடங்கு முற்றலும் - ஒப்பில்லாத நாரதமுனிவர் தாஞ்செய்த சடங்கு முற்றுப்பெறவும், கான வேடுவர் கன்னிதன்னொடு மான வேலனை வணங்கி போற்றினான் - காட்டிலுள்ள வேட்டுவர் மகளாகிய வள்ளியம்மையாரோடு பெருமையாகிய வேற்படையையுடைய சுப்பிரமணியப் பெருமானை வணங்கித் துதித்தார். எ - று.

கன்னிதன்னொடு என்றதற்கும் முன் அணங்கினோடு மென்றதற் குரைத்ததுஉரைக்க. (205)

வேறு

**மற்றதுகாலைதன்னில்மாதுலன்வள்ளிதன்னைக்**
**கொற்றவேலுடையநம்பிவதுவைசெய்கோலநோக்கி**
**யுற்றவிவ்விழிகடம்மாலுறுபயனொருங்கேயின்று**
**பெற்றவனென்றானன்னானுவகையார்பேசற்பாலார்.**

இ - ள். அதுகாலைதன்னில் - அப்பொழுதில், மாதுலன் வள்ளிதன்னை கொற்ற வேல் உடைய நம்பி வதுவை செய் கோலம் நோக்கி-மாமனாகிய நம்பியென்பவன் (தனது மகளாகிய) வள்ளியம்மையாரை வெற்றியைக்கொண்ட வேற்படைக்கலத்தை யுடைய சுப்பிரமணியப் பெருமான் திருக்கலியாணஞ் செய்தருளிய அழகைப்பார்த்து, உற்ற இவ்விழிகடம்மால் உறுபயன் இன்று ஒருங்கே பெற்றனன் என்றான் - என் தேகத்தில் உற்ற இக்கண்களாலடையும் பயனை இன்று ஒருசேரவே பெற்றுக்கொண்டேனென்று கூறினான். அன்னான் உவகை பேசல் பாலார் யார் - அவனுடைய மகிழ்ச்சியை இவ்வளவென்று சொல்லுதற்றன்மையர் யார். எ - று.

மற்று அசைநிலை. (206)

மெல்லிடைகொம்பென்றுன்னவிரைமலர்தழைமேற்கொண்ட
புல்லியகுறவர்மாதர்பொருவில்சீர்மருகன்றானும்
வல்லியுமின்னேபோலவைகலும்வாழ்கவென்று
சொல்லியலாசிகூறித்தூமலரறுகுதூர்த்தார்.

இ - ள். மெல் இடை கொம்பு என்று உன்ன விரை மலர் தழை மேல்கொண்ட புல்லிய குறவர் மாதர் - மென்மையாகிய விடை பூங்கொம்பென்றே கண்டோர் கருத நறுமணத்தையுடைய மலர்களையுந் தழைகளையும் மேலே தரித்துக்கொண்ட புல்லிய வேட்டுவப் பெண்கள், பொருவு இல் சீர்மருகன்றானும் வல்லியும் இன்னே போல வைகலும் வாழ்க என்று - ஒப்பில்லாத மருகராகிய சுப்பிரமணியப் பெருமானும் மகளாகிய வள்ளியம்மையாரும் இப்பொழுதே போல எந்நாளும் வாழ்கவென்று, சொல் இயல் ஆசிகூறி தூ மலர் அறுகு தூர்த்தார் - சொல்லானியன்ற ஆசீர்வாதங் கூறித் தூய்மையாகிய மலரோடு கூடிய அறுகை (அவர் மீது) தூர்த்தார்கள். எ - று.

இடை பூங்கொம்போ அன்றோ வென்றையுறாது பூங்கொம்பென்றே கருதவென்றபடி. பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. மேற்கொள்ளல் ஈண்டு இடைக்குக்கீழிடத்திற்றரித்தலென்க; தலைவரை மணந்த அந்நிலத்துமகளிர் ஆண்டுத்தரிப்பது வழக்காதலினென்பது. மருகன்றானும் வல்லியுமென்னும் பெயர்கள் முன்னிலைக்கண் வந்ததெனினுமமையும். மங்கலமகளிர் வாழ்த்துவது மரபுஞ் சிறப்புமாதலின் குறவர்மாதர் ஆசிகூறித் தூர்த்தாரென்பது. தூர்த்தல் - நிறைத்தல். (207)

செந்தினையிடியுந்தேனுந்தீம்பலகனியுங்காயுங்
கந்தமும்பிறவுமாகவிலைபொலிகலத்திலிட்டுப்
பைந்தொடியணங்குநீயும்பரிவுடனுகர்திரென்ன
வெந்திறலெயினர்கூறவியனருள்புரிந்தான்மேலோன்.

இ - ள். செந்தினை இடியும் தேனும் தீம் பல கனியும் காயும் கந்தமும் பிறவும் ஆக இலை பொலி கலத்தில் இட்டு - செம்மையாகிய தினைமாவுந் தேனும் இனிமையாகிய பல வகைக்கனிகளுங் காய்களுங் கிழங்குகளும் பிறபதார்த்தங் களுமாக இலையானியன்ற பொலிந்த கலங்களிலிட்டு, வெம் திறல் எயினர் - வெம்மையாகிய வலியினையுடைய வேட்டு வர்கள், பைந்தொடி அணங்கும் நீயும் பரிவுடன் நுகர்திர் என்ன கூற - பசுமையாகிய வளையலையுடைய (எமது மகளாகிய) வள்ளியம்மையாருந் தேவரீரும் அன்போடு மிசைவீர்களென்று சொல்ல, மேலோன் வியன் அருள் புரிந் தான் - (யாவர்க்கும்) மேலவராகிய சுப்பிரமணியப்பெரு மான் அவர்களுடைய அன்பு நோக்கிப் பெருமையாகிய திருவருளைச் செய்தார். எ - று.

கனி - விளாங்கனி நாவற்கனி சூரைக்கனி ஆதியன. காய் - வள்ளிக்காய்அத்திக்காய்ஆதியன.பிறபதார்த்தம்-தோரைஜவனம் இவற்றின்மா ஆதியன. இலைபொலிகலம்தேக்கிலையாற் செய்யப் பட்ட கலம். தினைமயக்குமுண்மையின் அக்கனியாதியன மூக் கனியாதியன என்றுரைப்பினுமமையும். (208)

வேறு.

**கிராதர்மங்கையும்பராபரன்மதலையுங்கெழுமி**
**விராவுசில்லுணுமிசைந்தனர்மிசைந்திடுதன்மை**
**முராரியாதியாந்தேவர்பான்முனிவர்பான்மற்றைச்**
**சராசரங்கள்பாலெங்கணுஞ்சார்ந்துளதன்றே.**

இ - ள். கிராதர் மங்கையும் பராபரன் மதலையும் கெழுமி விராவு சில் உணு மிசைந்தனர் - வேட்டுவர் மகளா கிய வள்ளியம்மையாருஞ் சிவபெருமானுடைய புத்திர ராகிய சுப்பிரமணியப்பெருமானும் கூடிப் பலவகைப் பதார்த்தங்களையுங் கலந்த சிற்றுண்டியைத் திருவமுது

செய்தார்கள், மிசைந்திடு தன்மை - (அவர்களங்ஙனந்) திருவமுது செய்தருளிய தன்மை; முராரி ஆதி ஆம் தேவர் பால் முனிவர் பால் மற்றை சராசரங்கள் பால் எங்கணும் சார்ந்துளது - விஷ்ணுமூர்த்தியாதிய தேவர்கள்பாலினும் முனிவர்கள்பாலினும் மற்றைய சரம் அசரமாகிய இருவகைச் சீவராசிகள்பாலினும் எவ்விடத்துஞ் சார்ந்துளது. எ - று.

உணு உண்டி; என்பன உண்பன தின்பன நக்குவன பருகுவன யாவற்றுக்கும் பொதுவாக வழங்குவதுண்மையாதலின் சில்லுணு என்றார். பதி பதார்த்தத்துக்குப் பதினொரு மந்திரங்களும் எண்பத்தொரு பதங்களும் ஐம்பத்தோரக்ஷரங்களும் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களும் முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்சகலைகளுமாகிய எல்லாம் உறுப்புக்களாதலின் முராரியாதியாந் தேவர்பான் முனிவர்பான்மற்றைச் சராசரங்கள்பால் சார்ந்துளது என்றொழியாது எங்கணுமென்றாரென்க. (209)

**அனையகாலையிலறுமுகனெழுந்துநின்றுங்கே**
**குனியும்வில்லுடைக்குறவர்தங்குரிசிலைநோக்கி**
**வனிதைதன்னுடன்சென்றியாஞ்செருத்தணிவரையி**
**லினிதுவைகுதுமென்றலுநன்றெனவிசைத்தான்.**

**இ - ள்.** அனைய காலையில் அறுமுகன் ஆங்கு எழுந்து நின்று - அவ்வேளையில் ஆறு திருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் அங்ஙனமெழுந்து நின்று, குனியும் வில் உடை குறவர் தம் குரிசிலை நோக்கி - வளையும் வில்லையுடைய வேட்டுவர்க் கரசனாகிய நம்பியென்பவனைப் பார்த்து, யாம்வனிதை தன்னுடன் சென்று செருத்தணி வரையில் இனிது வைகுதும் என்றலும் - யாம் நினது மகளாகிய இந்நங்கையோடு சென்று திருத்தணிகைவரையின்கண்ணே இனிதாக இருப்பேமென்று திருவாய் மலர்ந்

தருளலும், நன்று என இசைத்தான் - நல்லதென்று சொன்னான் (அவ்வரசன்). எ - று.

நன்று என்றது ஈண்டு உடம்பாட்டுக் குறிப்புப் பொருளைத் தந்தது. (210)

**தாயும்பாங்கியுஞ்செவிலியுந்தையலைநோக்கி**
**நாயகன்பின்னர்நடத்தியோநன்றெனப்புல்லி**
**நேயமோடுபல்லாசிகள்புகன்றிடநெடுவேற்**
**சேயுடன்கடிதேகவேசிந்தையுட்கொண்டாள்.**

இ - ள். தாயும் பாங்கியும் செவிலியும் தையலை நோக்கி - நற்றாயாகிய கொடிச்சியுந் தோழியுஞ் செவிலித் தாயும் வள்ளியம்மையாரைப் பார்த்து, நாயகன் பின்னர் நடத்தியோ நன்று என புல்லி நேயமோடு பல் ஆசிகள் புகன்றிட - தலைவராகிய சுப்பிரமணியப் பெருமானுக்குப் பின்னர் நடக்கின்றனையோ (அது நன்றென்றுசொல்லி அன்போடு பல ஆசிகளைக்கூற, நெடு வேல் சேய் உடன் கடிது ஏகவே சிந்தை உட்கொண்டாள் - நெடியவேற் படைக்கலத்தையுடைய சுப்பிரமணியப் பெருமானோடு விரைவிற் செல்லவே உள்ளத்திற் கருதினார். எ - று.

முற்செய்யுளில் சுப்பிரமணியப் பெருமான் வனிதை தன்னுனுடன் சென்றாயாஞ் செருத்தணிவரையில் இனிது வைகுது மென்ற படியால் நாயகன் பின்னர் நடத்தியோ வென்றாரென்க. வள்ளியம்மையார் சேயுடன் கடிதேகவே சிந்தையுட்கொண்டது அந்நற்றா யாதியவர்கள் நன்றெனப்புல்லி ஆசிகள் கூறிய பின்னரன்று, சுப்பிரமணியப்பெருமான் முன்னர் அரசனை நோக்கிக் கூறியருளியவுடனே ஆதலின் புகன்றிட உட்கொண்டாள் என்றது "சூரியனுதிக்கவந்தான்" என்றதுபோல் நின்றதென்பது. (211)

**பாவைதன்னுடன்பன்னிருபுயமுடைப்பகவன்**
**கோவினீங்கியேகுறவர்தங்குரிசிலைவிளித்துத்**
**தேவருந்தொழச்சிறுகுடியரசியல்செலுத்தி**
**மேவுகென்றவணிறுவியேபோயினன்விரைவில்.**

**இ-ள்.** பாவை தன்னுடன் பன்னிரு புயம் உடை பகவன் கோவில் நீங்கியே - வள்ளியம்மையாரோடு பன்னிரண்டு திருப்புயங்களிணையுடைய சுப்பிரமணியப்பெருமான் நம்பியரசனுடைய இல்லினை நீங்கி, குறவர்தம் குரிசிலை விளித்து - அவ்வேட்டுவர்க்கரசனை யழைத்து, தேவரும் தொழ சிறுகுடி அரசியல் செலுத்தி மேவுக என்று அவண் நிறுவியே விரைவில் போயினன் - தேவர்களும் வணங்க இச் சிற்றூரிலே அரசியலை நடத்திக் கொண்டு வாழ்கவென்று (அவனை) அங்ஙனம் நிறுத்தி விரைவிற் சென்றருளினார். எ - று.

பகம் என்பது ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் இவ்வாறுக்கும் பெயராதலின் பகவன் அவ்வாறு குணங்களையுமுடையனென்று சிலேடையாற் பொருள்கொள்க. குரிசில் ஈண்டு சுட்டுப்பெயர்ப் பொருளில்வந்தது. மேவுக என்னும் வியங்கோளின் இறுதி கெட்டது. (212)

**இன்னதன்மைசேர்வள்ளியஞ்சிலம்பினையிகந்து**
**பன்னிரண்டுமொய்ம்புடையவன்பாவையுந்தானு**
**மின்னும்வெஞ்சுடர்ப்பரிதியும்போலவிண்படர்ந்து**
**தன்னையேநிகர்தணிகைமால்வரைதனைச்சார்ந்தான்.**

**இ-ள்.** பன்னிரண்டு மொய்ம்பு உடையவன் பாவையும் தானும் - பன்னிரண்டு திருப்புயங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் வள்ளியம்மையாருந் தாமுமாக, இன்ன தன்மை சேர் வள்ளியஞ் சிலம்பினை இகந்து - இத்தன்மை

சேரப்பெற்ற வள்ளிகிரியை நீங்கி, மின்னும் வெம் சுடர் பரிதியும் போல விண் படர்ந்து - மின்னும் வெம்மையாகிய சுடரினையுடைய சூரியனு முடன்செல்லு மாறுபோல ஆகாயமே (வழியாகச்) சென்று, தன்னையே நிகர் மால் தணிகை வரையினை சார்ந்தான் - (தானே) தன்னை நிகர்த்த பெருமை யாகிய தணிகாசலத்தை யடைந்தருளினார். எ - று.

இன்ன தன்மை யென்றது சுப்பிரமணியப் பெருமான் வள்ளியம்மையாரைத் திருக்கலியாணஞ் செய்தருளிய தன்மையைச் சுட்டியதாதலின் அக்கிரியின் பெருமையுணர்த்திய வாறு. மொய்ம்புடையவன் பாவையுந்தானும் இகந்து படர்ந்து சார்ந்தானென்றது ஆண்பாலும் பெண்பாலும் விரவிச்சிறப்பினால் ஆண்பான்முடிபேற்றதென்பது. மின் துவட்சியுடைத்தாதலும் ஒளியுடைத்தாதலும் ஆகாயத்திலியங்குதலும் பற்றி வள்ளியம்மை யாருக்கும் பரிதி சிவந்த ஒளியுடைத்தாதலும் ஆகாயத்திலியங்கு தலும் பற்றிச் சுப்பிரமணியப்பெருமானுக்கும் உவமையாயினமை யின் அவை பண்புந் தொழிலுமொத்த உவமை என்பது. (213)

**செச்சைமௌலியான்செருத்தணிவரைமிசைத்தெய்வத்**
**தச்சன்முன்னரேயியற்றியதனிநகர்புகுந்து**
**பச்சிளங்கொங்கைவனசரர்பாவையோடொன்றி**
**யிச்சகத்துயிர்யாவையுமுய்யவீற்றிருந்தான்.**

**இ - ள்.** செச்சை மௌலியான் செருத்தணி வரை மிசை தெய்வத் தச்சன் முன்னரே இயற்றிய தனி நகர் புகுந்து - வெட்சி மாலையை யணிந்த திருமுடியினையுடைய ராகிய சுப்பிரமணியப் பெருமான் திருத்தணிகை வரையின் கண்ணே விச்சுவகன்மா முன்னே இயற்றிய ஒப்பற்ற திருக் கோயிலினுட் புகுந்து, பச்சிளங் கொங்கை வனசரர் பாவையோடு ஒன்றி இச்சகத்து உயிர் யாவையும் உய்ய

வீற்றிருந்தான் - பசுமை யாகிய இளையஸ்தனங்களையுடைய வேட்டுவர் மகளாகிய வள்ளியம்மையாரோடு சேர்ந்து இவ்வுலகத்துள்ள சீவராசிகள் யாவும் உய்யுமாறு வீற்றிருந் தருளினார். எ - று.

சுப்பிரமணியப்பெருமானுக்கு வள்ளியம்மையார் இச்சா சத்தி. இவ்விச்சாசத்தி "உயிர்க்கருணைசமாகும்" ஆதலின் இச்சாசத்தியோடு கூடவே உயிர்கள் அருளையடைதலுண்மையே ஆகலின் இச்சகத்துயிர்யாவையுமுய்ய வீற்றிருந்தானென்று ரென்பது. (214)

**அந்தவேலையில்வள்ளிநாயகிபயில்வேற்கைக்**
**கந்தவேள்பதம்வணங்கியேகைதொழுதைய**
**விந்தமால்வரையியற்கையையியம்புதியென்னச்**
**சிந்தைநீடுபேரருளினாலின்னனசெப்பும்.**

இ - ள். அந்த வேலையில் வள்ளி நாயகி அயில் வேல் கை கந்த வேள் பதம் வணங்கி கை தொழுது - அச்சமயத்தில் வள்ளியம்மையார் கூர்மையாகிய வேற்படைக்கலத்தை ஏந்திய திருக்கரத்தினையுடைய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடிகளைத் தாழ்ந்து (கை கூப்பி) வணங்கி ஐய - சுவாமீ! இந்த மால் வரை இயற்கையை இயம்புதி என்ன - இப்பெருமையாகிய கிரியின் தன்மையைத் திருவாய் மலர்ந்தருள்வீரென்று கூற, சிந்தை நீடுபேர் அருளினால் இன்னன செய்யும் - திருவுள்ளத்தின் மிகுந்த பெருங் கருணையினாலே இவற்றைத் திருவாய் மலர்ந்தருளுவார் (சுப்பிரமணியப்பெருமான்). எ - று.

கந்தவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வணங்கி என்றதற்கு பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்தென்றும் கைதொழுது என்றதற்கு (பின்னர்க் கைகூப்பித் தொழுதுகொண்டு நின்று) என்றும் பொருளுரைப்பினுமமையும். (215)

**செங்கண்வெய்யசூர்ச்செருத்தொழிலினுஞ்சிலைவேடர்**
**தங்களிற்செயுஞ்செருத்தொழிலினுந்தணிந்திட்டே**
**யிங்குவந்தியாமிருத்தலாற்செருத்தணியென்றோர்**
**மங்கலந்தருபெயரினைப்பெற்றதிவ்வரையே.**

**இ - ள்.** இவ்வரை - இம்மலை, செம் கண் வெய்யசூர் செருதொழிலினும் சிலை வேடர் தங்களில் செருதொழிலினும் தணிந்திட்டு யாம் இங்கு வந்து இருத்தலால் - செம்மையாகிய கண்களையுடைய கொடிய சூரனது போர்த்தொழிலினின்றும் விற்படையைக்கொண்ட வேட்டுவர்கள் தங்களிற் செய்த போர்த்தொழிலினின்றுந் தணிந்து யாம் இங்ஙனம் வந்திருத்தலாலே, செருத்தணி என்று ஓர் மங்கலம் திரு பெயரினைப் பெற்றது - செருத்தணிவரையென்று ஓர் சுபத்தினைத் தருகின்ற நாமத்தைப் பெற்றது. எ - று.

சிலைவேடர் தங்களிற்செயுஞ் செருத்தொழிலெனவே அவர்களோடு சுப்பிரமணியப்பெருமான் போர்செய்திலர் என்பது தொனிக்கின்றது. சுப்பிரமணியப்பெருமான் செருத்தணிந்து அருளோடிருந்தருளிய தன்மை அப்பெயரிற்றோன்றுதலான் அப்பெயரைச் சிந்திக்க உரைக்கச் சுபமுண்டாகு மாதலின் மங்கலந்தரு பெயரென்றாரென்பது. (216)

**முல்லைவாணகையுமையவண்முலைவளையதனுன்**
**மல்லன்மாநிழலிறைவரைவடுப்படுத்தமரு**
**மெல்லைநீர்வயற்காஞ்சியினனுகநீன்றிடலாற்**
**சொல்லலாந்தகைத்தன்றிந்தமால்வரைத்தூய்மை.**

**இ - ள்.** முல்லை வாள் நகை உமையவள் முலை வளையதனுல் மல்லல் மாநிழல் இறைவரை வடு படுத்து அமரும் - முல்லையரும்பு போன்ற ஒள்ளிய முறுவலினையுடைய உமா

தேவியார் முலைகளாலும் வளைகளாலும் வளத்தையுடைய மாமரநீழலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைத் தழும்புபடுத்தி இருந்தருளப்பெற்ற, நீர் வயல் எல்லை காஞ்சியின் அணுக நின்றிடலால் - நீரையுடைய வயலை எல்லையாக வுடைய காஞ்சிபுரத்துக்குச் சமீபமாக நிற்றலாலே, இந்த மால் வரை தூய்மை சொல்லல் ஆம் தகைத்து அன்று-இப்பெருமையாகிய கிரியினது பரிசுத்தஞ் சொல்லலாகுந் தன்மைத் தன்று. எ - று.

முல்லை ஆகுபெயர். உமையவள் முலை வளையதனுல் மல்லன் மாநிழலிறைவரை வடுப்படுத்திய சரிதச்சுருக்கம் திருநகரப் படலத்துள்ள "கயிலையிலரனையம்மை" என்னுமுதலையுடைய செய்யுளானுணர்க. (217)

**விரையிடங்கொளும்போதினுண்மிக்கபங்கயம்போற்**
**றிரையிடங்கொளுநதிகளிற்சிறந்தகங்கையைப்போற்**
**றரையிடங்கொளும்பதிகளிற்காஞ்சியந்தலம்போல்**
**வரையிடங்களிற்சிறந்ததித்தணிகைமால்வரையே.**

இ - ள். விரை இடம் கொளும் போதினுள் மிக்க பங்கயம் போல் - நறுமணத்தைத் தம்மிடத்துக்கொண்ட மலர்களுள்மேற்பட்ட தாமரைமலர்போலவும், திரை இடம் கொளும் நதிகளில் சிறந்த கங்கையை போல் - திரையைத் தம்மிடத்துக் கொண்ட நதிகளிலே சிறந்த கங்காநதியைப் போலவும், தரை இடம் கொளும் பதிகளில் காஞ்சியந்தலம் போல் - பூமியாகிய இடங்கொண்ட ஸ்தலங்களிலே காஞ்சீபுரமாகிய ஸ்தலத்தைப் போலவும், வரையிடங்களில் இத் தணிகை மால் வரை சிறந்தது - மலைகளாகிய இடங்களிலே இத்திருத்தணிகைவரை சிறந்தது. எ - று.

விரையிடங்கொளும் என்றதற்கு நறுமணந் தனக்கிடமாகக் கொண்ட என்றும்; திரையிடங்கொளும் என்றதற்கும் அங்ஙன

ழும் பொருளுரைப்பினுமமையும். தரையிடம் வரையிடம் இரு பெயரொட்டுப் பண்புத்தொகைகள். (213)

**கோடியம்பியும்வேய்ங்குழலூதியுங்குரலா
னீடுதந்திரியியக்கியுமேழிசைநிறுத்துப்
பாடியுஞ்சிறுபல்லியத்தின்னிசைபடுத்து
மாடுதும்விளையாடுதுமிவ்வரையதன்கண்.**

இ - ள் இவ்வரையதன்கண் - இச்செருத்தணிவரையின்கண்ணே, கோடு இயம்பியும் - கொம்பு வாச்சியத்தைக் குறித்தும், வேய் குழல் ஊதியும் - வேய்ங்குழலையூதியும், குரலால் நீடுதந்திரி இயக்கியும் - இசையான் மிகுந்த வீணையை (இசையுண்டாக) இயக்கியும், ஏழ் இசை நிறுத்து பாடியும் - ஏழிசையையும் (இசைநூலுக்கு) அமைய நிறுத்திப் பாடியும், சிறு பல்லியத்து இன் இசை படுத்தும் - சிறிய வாச்சியங்களின் இன்னிசையை ஒலித்தும், ஆடுதும் - ஆடுவேம், விளையாடுதும் - (அதுவேயன்றி) மற்றை லீலைகளையும் விளையாடுவேம் (யாம்). எ - று.

குரல் நரம்பு எனினுமாம். தந்திரி ஆகுபெயர். தந்திரி இயக்கலாவது சாதி முகவை சகிகை என்னுமிவைமுந்தாது பிரமாணித்து அவ்வவ்விராகானு கூலமாகக்கூட்டி நரம்புகளைகளையேறுவித்துச் சத்தசுரமறிந்து சௌநி செளநங்களையாராய்ந்து வாசித்தலென்பது. நிறுத்தல் அளவை செய்தல். அளவைசெய்து பாடுதலாவது சட்ஜ வாதிய சத்த சுரபேதங்களும் உதய மாதிய சத்த சுரோத்பத்தியா காலங்களும் மயூரமாதிய சத்தசுரத் தொனிபேதமும் திருவாதிரையாதிய சத்தசுரநக்ஷத்திரங்களும் அமாவாசையாதிய சத்தசுரதிதிகளும் ஆங்கிரசன் ஆதிய சத்த சுரரிஷிகளும் பிரமாவாதிய சத்தசுரதேவதைகளும் மௌவல் ஆதிய சத்த சுரவாசனைகளும் பால் ஆதிய சத்தசுரரசங்களும் அருணமாதிய சத்த சுர வன்னங்களும் சிருங்காரமாதிய சத்தசுரரசங்களும் ஆயுவிர்த்தியாதிய சத்தசுரபலன்களுமாகிய இவற்றை

நிச்சயித்துச் சுவரிதபிரமதங்களாதிய இருபத்திரண்டு சுருதிகமகங்களும்கம்பித சகரிதங்களாதிய எழுதேசிககமகங்களுமறிந்து சுர சுருதி கமகங்க ளென்னுமிவற்றிற் பிறந்த இராகங்களை அவற்றின் புருஷ ஸ்திரிசாதிகளையும் வருணங்களையுமறிந்து பாடுதலென்க. (219)

மந்தரத்தினுமேருமால்வரையினுமணிதோய்
கந்தரத்தவன்கயிலையேகாதலித்ததுபோற்
சுந்தரக்கிரிதொல்புவிதனிற்பலவெனினு
மிந்தவெற்பினிலாற்றவுமகிழ்ச்சியுண்டெமக்கே.

**இ - ள்.** மணி தோய் கந்தரத்தவன் மந்தரத்தினும் மால்மேரு வரையினும் கயிலையே காதலித்ததுபோல் - (நஞ்சாற்) கருமைபடிந்த திருக்கண்டத்தினை யுடையவராகிய சிவபெருமான் மந்தரகிரியினும் பெரிய மேருகிரியினும் கைலாசகிரியையே விரும்பியதுபோல, தொல்புவி தனில் சுந்தரக் கிரி பல எனினும் - (எமக்குக் கோயிலாக) பெரிய பூமியிலே அழகிய கிரிகள் பலவுளவெனினும், இந்த வெற்பினில் எமக்கு ஆற்றவும் மகிழ்ச்சி உண்டு - இத்திருத்தணிகாசலத்தின்கண்ணே எமக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டு. எ - று.

தலைமைபற்றிய மந்தரகிரி மேருகிரி இவற்றினும் கைலையையே காதலித்தது போலெனவே மற்றையகிரிகளினுங் கலையையே காதலித்தது என்பது போதருமென்க. ஏகாரம் பிரிநிலை.

வான்றிகழ்ந்திடுமிருநிலவரைபலவற்று
ளான்றகாதலாலிங்ஙனமேவுதுமதற்குச்
சான்றுவாசவன்வைகலுஞ்சாத்துதற்பொருட்டான்
மூன்றுகாவியிச்சுனைதனிலெமக்குமுன்வைத்தான்.

**இ - ள்.** வான் திகழ்ந்திடும் இரு நில வரை பலவற்றுள் ஆன்ற காதலால் இங்ஙனம் மேவுதும் - ஆகாயத்தில்

(உயர்ந்து) விளங்குகின்ற பெருமையாகிய பூமியினுள்ள கிரிகள் பலவற்றுள்ளு மிகுந்த காதலினாலே இக்கிரியின் கண் வீற்றிருப்பேம், அதற்கு சான்று - அதற்குச் சாட்சி, வாசவன் வைகலும் எமக்கு சாத்துதல் பொருட்டு இச் சுனை தனில் மூன்று காவி முன் வைத்தான் - இந்திரனானவன் எந்நாளும் எமக்குச் சாத்துதற்பொருட்டு இச்சுனையின் கண்ணே மூன்று காவிக்கொடிகளை முன்னரே வைத்தான். எ - று.

வான்றிகழ்ந்திடும் என்றதற்குப் பெருமையாக விளங்குகின்ற எனினுமாம். வரைபலவற்றுள் ஈண்டு சுப்பிரமணியப்பெருமான் தாமெழுந்தருளியிருக்குங் கிரிகள் பலவற்றுளென்றவாறு முற் றும்மை விகாரத்தாற்றொக்கது. ஆன்ற அகன்ற என்றதன்மரூஉ; ஈண்டு மிகுதிப்பொருட்டாகின்றது. அதற்குச் சான்று என்றது தொட்டு மேல்வருமூன்றுஞ்செய்யுளில்தாழிருஞ்சுனை தன்னிடை மலர்ந்திடுந் தவிரா என்றதுவரைக்கு மொருதொடராதலின் அதற்குச்சான்று அங்ஙனமாயவற்புதமேயென்பது. அற்புதத் தாற்றெய்வ அருள்விளக்கமறியப்படுத லுண்மையின் அதற்குச் சான்று அவ்வற்புதமேயென்று திருவாய்மலர்ந்தருளினா ரென்க. ஆல் அசைமொழி. (221)

**காலைப்போதினிலொருமலர்கதிர்முதிருச்சி**
**வேலைப்போதினிலொருமலர்விண்ணெலாமிருள்சூழ்**
**மாலைப்போதினிலொருமலராகவிவ்வரைமே**
**னீலப்போதுமூன்றூழிவின்றிநிற்றலுமலரும்.**

இ - ள். காலை போதினில் ஒருமலர் - (சூரியனுதிக் குங்) காலையாகிய பொழுதில் ஒருமலரும், கதிர் முதிர் உச்சி வேலை போதினில் ஒரு மலர் - அச்சூரியனது கிரண முதிரும் உச்சிக்காலமாகிய பொழுதிலொருமலரும், விண் எலாம் இருள் சூழ் மாலை போதினில் ஒரு மலர் ஆக -

ஆகாயமுழுதும் அந்தகாரஞ் சூழ மாலையாகிய பொழுதி லொரு மலருமாக, நீலம் போது மூன்று நிற்றலும் ஒழிவு இன்றி இவ்வரைமேல் மலரும் - காவிமலர் மூன்றுவைகலும் ஒழிதலின்றி இத்தணிகைவரைமேல் மலரும். எ - று.

காலைப்போது ஆகிய மூவகையும் இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள். வேலைப்போது ஒருபொருட்பன்மொழியாயினு மொருமொழித்தன்மையுற்று உச்சியென்னுஞ் சிறப்புப்பெயரோ டொட்டியோர் பண்புத்தொகையாயது. சூரியனது கிரணத்தின் றன்மையை ஒற்றுமைபற்றி இளஞ்சூரியனென்று அச்சூரியனி லேற்றி வழங்கலுமுண்மையின், கதிர் முதிர் என்றதற்குச் சூரியன் முதிருமெனினுமமையும். வரைக்கும் அவ்வரைக்க ணுள்ள சுனைக்கு மொற்றுமையுண்மையின் சுனைமேல வரை மேலென்றாரென்பது. முற்செய்யுளில் மூன்றுகாவி வைத்தா னென்றிருத்தலின் வைகலும் முறையே ஒருகாவியிலொருபூ மலரு மென்று தொனித்தலுணர்க. (222)

**ஆழிநீரரசுலகெலாமுண்ணினுமளிப்போ**
**ரூழிபேரினுமொருபகற்குற்பலமூன்ருய்த்**
**தாழிருஞ்சுனைதன்னிடைமலர்ந்திடுந்தவிரா**
**மாழையொண்கணுயிவ்வரைப்பெருமையார்வகுப்பார்.**

இ - ள். நீர் ஆழி அரசு உலகு எலாம் உண்ணினும் - நீரினையுடைய கடலரசாகிய புறவாழி உலகமெல்லாவற்றை யுந் தன்னுளடக்கினும், அளிப்போர் ஊழி பேரினும் - பிரமாக்களுடைய (இறுதிக்காலத்து வரும்) யுகமுடிவுகள் வரினும், உற்பலம் ஒரு பகற்கு மூன்று ஆய் தாழ் இரும் சுனை தன்னிடை மலர்ந்திடும் தவிரா - காவிப்பூக்கள் ஒரு நாளைக்கு மூன்ருயாழ்ந்த பெருமையாகிய இச்சுனையின் கண்ணே மலரும் (அங்ஙனமலர்தல் எந்நாளும்) ஒழியா, (இங்ஙனமாய பேரற்புதமிருத்தலின்) மாழை ஒள்கணாய்

இவ்வரை பெருமை வகுப்பார் யார் - மாம்பிஞ்சை நிகர்த்த ஒள்ளிய கண்ணிணையுடையாய்! இத்திருத்தணிகைவரையின் பெருமையை வகுத்துரைப்பார் யார்? எ - று.

அளிப்போருடைய இறுதிக்காலவூழி வேறுகூறுதலின் புறவாழி உலகங்களெல்லாவற்றையும் அடக்குமூழி பிரமாவின் கங்குற்பொழுதில் வருமூழியென்க. அளிப்போர் பிரமவிஷ்ணுக்களெனினுமமையும். மாழை ஆகுபெயர். யார் என்னும் வினாவினைக்குறிப்பு ஈண்டு ஒருவருமிலர் என்னும் பொருடந்து நின்றது. (223)

**இந்தவெற்பினைத்தொழுதுளார்பவமெலாமேகுஞ்**
**சிந்தையன்புடனிவ்வரையின்கணேசென்று**
**முந்தநின்றவிச்சுனைதனில்விதிமுறைமூழ்கி**
**வந்துநந்தமைத்தொழுதுளார்நம்பதம்வாழ்வார்.**

**இ - ள்.** இந்த வெற்பினை தொழுதுளார் பவம் எலாம் ஏகும் - இத்திருத்தணிகைவரையினை (ஒருகாற்கண்டு) வணங்குபவருடைய பாவமெல்லாம் (அவரினின்று) நீங்கிவிடும், சிந்தை அன்புடன் இவ்வரையின்கண் சென்று முந்த நின்ற இச்சுனைதனில் விதி முறை மூழ்கி வந்து நந்தமை தொழுதுளார் நம் பதம் வாழ்வார் - மனஅன்போடு இக்கிரியின்கண்ணே வந்து முன்னேயிருக்கின்ற இச்சுனையின் கண்ணே (ஸ்நானஞ்செய்யும்) விதிமுறையே முழுகி (இக்கோயிலில்) வந்து எம்மை வணங்குபவர் எமது லோகத்தின் கண்ணே (பேரின்பத்தோடு) வாழ்ந்திருப்பார். எ - று.

மனஅன்பின்றிச் செய்யுமறத்தாற் பெரும்பயனின்றென்பார் சிந்தையன்புடனென்றார். ஸ்நானவிதியாவது சங்கற்பஞ்செய்து சுனையிலிறங்கி ஆசமனஞ்செய்து பாவமெல்லாமொழிக புண்ணியமெல்லாம் வருகவென்று சொல்லி அகமருஷணஞ்செய்புரிந்து

கொண்டு முழுகல். நம்பதம் என்றது குகலோகம்; அது மூலப் பிரகிருதிதத்துவத்திலுள்ள பிரமலோக விஷ்ணுலோகங்களுக்கு மேலுள்ள லோகம். (224)

அஞ்சுவைகலிவ்வகன்கிரிநண்ணியெம்மடிக
டஞ்சமென்றுளத்துன்னியேவழிபடுந்தவத்தோர்
நெஞ்சகந்தனில்வெஃகியபோகங்கணிரப்பி
யெஞ்சலில்லதோர்வீடுபேறடைந்தினிதிருப்பார்.

**இ - ள்** அகன் இ கிரி நண்ணி எம் அடிகள் தஞ்சம் என்று உளத்து உன்னியே அஞ்சு வைகல் வழிபடும் தவத்தோர் - அகன்ற இக்கிரியைச்சார்ந்து எமது திருவடிகளை மனத்தில் நினைந்து ஐந்துநாள் வழிபாடுபுரியுந் தவத்தினையுடையோர், நெஞ்சகந்தனில் வெஃகிய போகங்கள் நிரப்பி- உள்ளத்தில் விரும்பியபோகங்களை (அனுபவித்து) முடித்து, எஞ்சல் இல்லது வீடுபேறு அடைந்தது இனிது இருப்பார்- (ஒருகாலும் பேரின்பம்) குறைதலில்லாத பரமுத்தியை யடைந்து இனிதாக வீற்றிருப்பார். எ - று.

ஐந்து அஞ்சு எனத்திரிந்தது. அகன் லகரவீறு னகரவீறாத் திரிந்தது. இவை விதியின்றித் திரிதலின் இலக்கணப்போலியின் இனத்தின்பாற்படும். ஐந்துநாள் வழிபடுவோர் முற்றவமுடையராதலின் தவத்தோர் என்றாரென்க. நிரப்பல் ஈண்டு நிறைவேற்றல். எயும் ஓரும் அசைநிலைகள். (225)

தேவராயினுமுனிவரராயினுஞ்சிறந்தோ
ரேவராயினும்பிறந்தபினிவ்வரைதொழாதார்
தாவராதிகடம்மினுங்கடையரேதமது
பாவராசிகளகலுமோபார்வலஞ்செயினும்

**இ - ள்.** தேவர் ஆயினும் முனிவரர் ஆயினும் சிறந்தோர் ஏவர் ஆயினும் பிறந்தபின் இவ்வரை தொழாதார் -

தேவராயினும் முனிவராயினும் (மற்றுமுள்ள) உயர்ந்தோர் யாவராயினும் பிறந்தபின்னர் இக்கிரியை வணங்காதவர், தாவர ஆதிகள் தம்மினும் கடையரே - தாவர முதலாய கிழான பிறவிகளினுங்கீழானவரே, பார் வலம் செயினும் தமது பாவ ராசிகள் அகலுமோ-இப்பூமண்டலத்தைவலஞ் செய்யினும் அவர்களது பாவவர்க்கங்கள் தொலையுமோ? எ - று.

முன் மண்ணுலகத்திலே மக்களாகப் பிறந்தியற்றிய நல்வினையினாலே இன்பத்தை யனுபவித்தற்பொருட்டு விண்ணுலகத்திற் சென்று பிறக்கும் விசேட பிறப்பினராதலிற்றேவராயினு மென்றும் தவத்தாலுந் தியானத்தாலும் பாவத்தையொழிக்கவல்ல விசேடமுடையாராதலின் முனிவராயினுமென்று முன்னரெடுத்துக் கூறினரென்பது. சிறந்தோர் வேதசிவாகமங்களிற் கூறப்பட்ட விதிவிலக்குகளை யுணர்ந்து அங்ஙனமொழுகுவோர். தாவராதிகள், தாவரம் ஊர்வன நீர்வாழ்வன பறவை விலங்கு ஆகிய ஐவகைப் பிறவிகள். ஏகாரம் தேற்றம. பூவலஞ்செய்தல் மிக்க புண்ணியமாதலிற் பார்வலஞ்செயினு மெனப்பட்டது. ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. (226)

**பாதகம்பலசெய்தவராயினும்பவங்க**
**ளேதும்வைகலும்புரிபவராயினுமெம்பா**
**லாதரங்கொடுதணிகைவெற்படைவரேலவரே**
**வேதன்மாலினும்விழுமியரெவற்றினுமிக்கார்.**

**இ - ள்.** பாதகம் பல செய்தவர் ஆயினும்-பாதகங்கள் பலவற்றைச் செய்தவராயினும், பவங்கள் ஏதும் வைகலும் புரிபவர் ஆயினும் - பாவங்கள் யாவற்றையும் தினந்தோறுஞ் செய்பவராயினும், எம் பால் ஆதரம் கொடு தணிகைவெற்பு அடைவரேல் - எம்பாலன்புகொண்டு இத்திருத்தணிகை வரையினை யடைவராயின், அவரே வேதன் மாலினும் விழு

மியர் எவற்றினும் மிக்கார் - அவரே பிரமவிஷ்ணுக்களினுஞ் சிறந்தவராய் (பசுக்கள்) யாவற்றினு முயர்ந்தவர். எ - று.

பாதங்களாவன: சிவநிந்தை செய்தலாதிய அதிபாதகங்களும் மறையோர்க்கோறலாதிய மஹாபாதகங்களும் அந்தணரது பொருளை வௌவலாதிய உபபாதகங்களுமென்பது; ஒருவன் சிவத்திரவியங்கவர்தலை யறிந்தும் அவனைக்கண்டியாது அவனிருக்குமூரில் ஒத்திருத்தலாதிய அதிபாதகசமங்களும் வெறுப்பு முதலியவற்றால் அந்தணரை யொறுத்துரைத்தலாதிய மஹாபாதகசமங்களும் அவற்றின்பாற்படுமென்க. பாவங்களாவன: மேற்கூறப்பட்ட பாதகங்களுக்குத் தண்ணிதாகிய தீமைகள், அவை பசுக்கள் மேய்தல் நீர் குடித்தலாதியகாரியங்களைச் செய்யுமிடத்து அக்காரியங்கட்கு இடையூறுசெய்தல் முதலான அனேகமாம். அவற்றையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். சிவதருமோத்தரமாதிய சிவபுண்ணியங்களை யுணர்த்து நூல்களுட்காண்க. பவங்கள் எது ஒருமை பன்மைமயக்கம். எகாரம் பிரிநிலை. உம்மைகளில் முன்னைய இரண்டும் இழிவுசிறப்போடு எண்ணும்மைகள். பின்னையது முற்றும்மை. ஏனையது உயர்வு சிறப்பு விழுமியமென்னும் வினைமுற்று வினையெச்சமானது. எவற்றினும் மிக்கார் என்றதற்கு மெய்யுணர்தலாதிய எவற்றினு மிக்கவராவர் எனினுமமையும். (227)

வேறு

உற்பலவரையின்வாழ்வோரோரொருதருமஞ்செய்யிற்
பற்பலவாகியோங்கும்பவங்களிற்பலசெய்தாலுஞ்
சிற்பமதாகியொன்றுய்த்தேய்ந்திடுமிதுவேயன்றி
யற்புதமாகவிங்ஙனநந்தகோடிகளுண்டன்றே.

**இ - ள்.** உற்பல வரையின் வாழ்வோர் ஓர் ஒரு தருமம் செய்யில் பற்பல ஆகி ஓங்கும் - நீலகிரியாகிய இத்திருத்தணிகைவரையின்கண்ணே வாழ்பவர்கள் ஒவ்வோர் புண்ணியஞ்செய்தாலும் (அவ்வொவ்வொன்றும்) பலபல

வாகிய உயரும், பவங்களில் பல செய்தாலும் சிற்பமது ஆகி ஒன்றாய் தேய்ந்திடும் - பாவங்களிலே பலவற்றைச் செய்தாலும் (அவையெல்லாம்) அற்பமாகி ஒன்றாய்த் தேய்ந்துவிடும், இதுவே அன்றி இங்ஙன் அற்புதம் ஆக ஆநந்த கோடிகள் உண்டு - இவ்வற்புதமேயன்றி இக்கிரியின் கண்ணே அற்புதங்களாக அனந்தகோடிகளுண்டு. எ - று.

அற்புதமாகிய காவியையுடைய கிரியாதலின் உற்பலவரை யென்றோர் பெயர்பெற்றதென்க. செய்தாலும் என்றதிலும்மை செய்யாரென்பதைக் குறித்தலின் எதிர்மறை. ஏகாரம் பிரிநிலை. அற்புதமாகவனந்தகோடிக்ள் என்றது அனந்தகோடி யற்புதங்க ளென்றவாறு. உண்டு இருதிணை ஐம்பான் மூவிடங்கட்கும் பொதுவாய்வரும் வினைக்குறிப்புமுற்றாதலின் ஈண்டு அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைக்குறிப்பு முற்றாய் நின்றது. அன் றும் எயும் அசைநிலைகள். (228)

**என்றிவைகுமரன்கூறவெயினர்தம்பாவைகேளா**
**நன்றெனவுவகையெய்திநானிலவரைப்பினுள்ள**
**குன்றிடைச்சிறந்தவிந்தத்தணிகைமால்வரையின் கொள்கை**
**யுன்றிருவருளாற்றேர்ந்தேயுய்ந்தனன்றமியனென்றாள்.**

**இ - ள்** என்று இவை குமரன் கூற எயினர் தம் பாவை கேளா - என்றிவற்றைச் சுப்பிரமணியப்பெருமான் திருவாய்மலர்ந்தருள வேட்டுவர்மகளாகிய வள்ளியம்மை யார் கேட்டு, நன்று என உவகை எய்தி - நன்றென்று மகிழ்வடைந்து, நால் நில வரைப்பின் உள்ள குன்றிடை சிறந்த இந்த மால் தணிகை வரையின் கொள்கை உன் திரு அருளால் தேர்ந்து தமியன் உய்ந்தனன் என்றாள் - நான்கு பகுப்பினதாகிய பூமியிலுள்ள மலைகளுட்சிறந்த இப்பெரு மையாகிய திருத்தணிகைவரையின் தன்மையைத் தேவரீ ருடைய திருவருளினாலே யுணர்ந்து தமியேனுய்ந்தே னென்று கூறினார். எ - று.

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்கு பகுப்பின தாதலின் நானிலமெனப்பட்டது; பாலை யென்னும் பகுப்புமுள தெனின் "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற்றிரிந்து நல்லியல் பழிந்து நடுங்குதுயருறுத்துப் பாலையென்பதோர் படிவங்கொள் ளும்" என்பதனானே பாலைக்குநிலம் வேறின்றென்க. வரைப்பு இடம்; அது நிலத்தோடொட்டி ஒருசொற்றன்மையுற்று நின்றது. நானிலமாகியவரைப் பெனினுமமையும். (229)

**இவ்வரையொருசார்தன்னிலிராறுதோளுடையவெந்தை**
**மைவிழியணங்குந்தானுமாலயனுணராவள்ள**
**லைவகையுருவிலொன்றையாகமவிதியாலுய்த்து**
**மெய்வழிபாடுசெய்துவேண்டியாங்கருளும்பெற்றான்.**

இ - ள். இவ்வரை ஒரு சார் தன்னில் இராறு தோள் உடைய எந்தை மைவிழி அணங்கும் தானும் - இத்திருத் தணிகைவரையினோர் பாலிலே பன்னிரண்டு திருத்தோள் களையுடைய எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமான் கருமையாகிய கண்ணிணையுடைய வள்ளியம்மையாருந்தாமு மாக, மால் அயன் உணராவள்ளல் ஐவகை உருவில் ஒன்றை ஆகம விதியால் உய்த்து - அரி அயன் இவர்களாலுமறியப் படாத சிவபெருமானுடைய ஐவகையுருவங்களாய் பஞ்ச சாதாக்கியங்களிலொன்றாகிய கர்மசாதாக்கியவடிவைச் சிவா கமவிதியினாற்றாபித்து, மெய்வழிபாடு செய்து வேண்டிய ஆங்கு அருளும் பெற்றான் - மெய்ம்மையாகிய பூசனைபுரிந்து வேண்டியவாறு (அச்சிவபெருமானுடைய) திருவருளையும் பெற்றார். எ - று.

இராறு விகாரம். மாலயனுணராவள்ளல் என்றதனானே யாவரேனுமாறுபட்டார்க்கு அரியராயினும் வழிபட்டார்க்கு வேண்டியவேண்டியாங்கருள்பவர் என்பது தொனித்தலுணர்க. மாலயனறியாவள்ளல், பரமசிவம். அப்பரசிவத்தினுடைய வடி வங்களாகிய அரு அருவுரு உரு என்னு மூவகையில், அரு ஒன்று

அருவுரு ஐந்து உரு இருபத்தைந்து ஆக முப்பத்தொன்றாகும். இவற்றுள்ளே, அருவுருவாகிய பஞ்சசாதாக்கிய வடிவங்களையே ஐவகையுருவென்றாரென்பது. பஞ்சசாதாக்கியங்களாவன: சிவசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம் கர்மசாதாக்கியம் என்பன. இவற்றுள் சுப்பிரமணியப்பெருமான் தாபித்தது விந்துமயமாகிய பீடமும் நாதமாகிய இலிங்கமுமாயுள்ள கர்மசாதாக்கியவடிவையென்க. வேண்டியாங்கு விகாரம். உம்மை சிறப்பு. எந்தை அணங்குந்தானும் உய்த்து செய்து பெற்றனென்று ஆண்பாலும் பெண்பாலும் கலந்து சிறப்பினான் ஆண்பால்முடிபேற்றது. (230)

**கருத்திடைமகிழ்வுமன்புங்காதலுங்கடவமுக்க**
**ணொருத்தனைவழிபட்டேத்தியொப்பிலாநெடுவேலண்ணன்**
**மருத்தொடைசெறிந்தகூந்தல்வள்ளிநாயகியுந்தானுஞ்**
**செருத்தணிவரையில்வைகிச்சிலபகலமர்ந்தானன்றே.**

இ - ள். கருத்திடை மகிழ்வும் அன்பும் காதலும் கடவ முக்கண் ஒருத்தனை வழிபட்டு எத்தி - உள்ளத்தின் மகிழ்ச்சியுமன்புமாசையுஞ் செலுத்தத் திரிநேத்திரங்களையுடைய ஒப்பில்லாத சிவபெருமானைப் பூசித்துத்துதித்து, ஒப்பு இலாநெடு வேல் அண்ணல் மரு தொடை செறிந்த கூந்தல் வள்ளி நாயகியும் தானும் செருத்தணி வரையில் சிலபகல்வைகி அமர்ந்தான்-உவமையற்றநெடியவேற்படைக் கலத்தை யுடைய சுப்பிரமணியப்பெருமான் நறுநாற்றத்தையுடைய மாலைசெறிந்த அளகத்தினையுடைய வள்ளியம்மையாருந் தாமுந் திருத்தணிகைவரையின்கண்ணே சிலநாள் தங்கியிருந்தருளினார். எ - று.

மகிழ்வு: அரும்பொருள் காண்டலாதியவற்றால் உள்ளத்தில் நிகழுங்களிப்பு. அன்பு: தன்னால் வேண்டப்பட்டபொருண் மாட்டுச்சேறும் உள்ளநிகழ்ச்சி. காதல்: அப்பொருளைப் பெறவேண்டுமென்னுமாசை. அண்ணல் வள்ளியுந்தானும்

வைகியமர்ந்தானென்றது ஆண்பாலும் பெண்பாலுங்கலந்து சிறப்பினான் ஆண்பால் முடிபேற்றதென்பது; மேலும் இங்ஙனம் வருவதையுய்த்துணர்க. (231)

**தள்ளரும்விழைவின்மிக்கதணிகையினின்றுமோர்நாள்**
**வள்ளியுந்தானுமாகமானமொன்றதனிற்புக்கு**
**வெள்ளியங்கிரியின்பாங்கர்மேவியகந்தவெற்பி**
**லொள்ளிணர்க்கடப்பந்தாரோனுலகெலாம்வணங்கப்போனான்.**

இ - ள். ஒள் இணர் கடப்பந்தாரோன் - ஒள்ளிய கொத்துக்களாயகடப்ப மலர்மாலையையுடையராகிய சுப்பிரமணியப்பெருமான், தள்ளரும் விழைவில் மிக்க தணிகையினின்றும் ஓர் நாள் - விடுதற்கரியவிருப்பமிக்க திருத்தணிகைவரையினின்றுமோர்நாள், வள்ளியும் தானும் ஆக - வள்ளியம்மையாருந்தாமுமாக, மானம் ஒன்று அதனில் புக்கு - விமானமொன்றிலேறியருளி, வெள்ளியங்கிரியின் பாங்கர் மேவிய கந்த வெற்பில் உலகு எலாம் வணங்க போனான் - கைலாசகிரியின் ஓர்பக்கத்திருக்கின்றகந்தகிரியின் கண்ணே உலகமெல்லாம் வணங்கச்சென்றருளினார். எ - று.

இன் அல்வழிச்சாரியை. உலகு, ஈண்டு தேவர்முனிவராகிய வுயர்ந்தோர்; இவர்கள் கூடியுடன்சென்றது கூறப்படாமையின் கண்டுவணங்கவென்றுரைக்க. (232)

**கந்தவெற்பதனிற்சென்றுகடிகெழுமானநீங்கி**
**யந்தமில்பூதர்போற்றுமம்பொனுளயத்தினேசி**
**யிந்திரன்மகடுவாகுமேந்திழையினிதுவாழு**
**மந்திரமதனிற்புக்கான்வள்ளியுந்தானும்வள்ளல்.**

இ - ள். கந்த வெற்பதனில் சென்று கடி கெழு மானம் நீங்கி - (அங்ஙனங்) கந்தகிரியிற்சென்று சிறப்புப்

பொருந்தியவிமானத்தினின்று நீங்கி; அந்தம் இல் பூதர் போற்றும் அம் பொன் ஆலயத்தின் ஏகி - அளவில்லாத பூதசேனைகள் காவல்செய்கின்ற அழகிய பொன்னாலாகிய திருக்கோயிலினுட்போய், வள்ளல் வள்ளியும் தானும் - சுப்பிரமணிப்பெருமான் வள்ளியம்மையாருந் தாமுமாக, இந்திரன் மகடூ ஆகும் ஏந்து இழை இனிது வாழும் மந்திர மதனில் புக்கான் - இந்திரனுடையமகளாகிய ஏந்துகின்ற ஆபரணத்தையுடைய தெய்வயானையம்மையார் இனிது வாழ்கின்றகோயிலினுட் சென்றருளினார். எ - று.

ஆலயத்தினேகிமந்திரமதனிற்சென்றானெனவே, தம்முடைய திருக்கோயிலிற்சென்று அதனுளோர்பாலிலிருக்கின்ற தெய்வயானையம்மையாருடைய கோயிலினுட் சென்றருளினாரென்று தொனித்தலுணர்க. (233)

**ஆரணந்தெரிதறேற்ருவறுமுகன்வரவுநோக்கி**
**வாரணமடந்தைவந்துவந்தனைபுரியவன்னாள்**
**பூரணமுலையுமார்பும்பொருந்துமாறெடுத்துப்புல்லித்**
**தாரணிதன்னிற்றீர்ந்ததனிமையின்றுயரந்தீர்த்தான்.**

**இ - ள்.** ஆரணம் தெரிதல் தேற்றா அறுமுகன்வரவு வாரண மடந்தை நோக்கி வந்து வந்தனை புரிய - வேதங்களாலுமறியப்படாத ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமானுடைய வருகையை தெய்வயானையம்மையார் கண்டு (எழுந்து எதிரே) வந்துவணங்க, அன்னாள் பூரண முலையும் மார்பும் பொருந்தும் ஆறு எடுத்து புல்லி - அவருடைய (மார்பிடமுழுதும்) நிறைந்திருக்கின்றஸ்தனங்களும் (தமது) திருமார்பும்பொருந்தும்படி (அவரை) எடுத்துத்தழுவி, தாரணிதன்னில் தீர்ந்த தனிமையின் துயரம் தீர்த்தான் - பூமியிலே (தாம்) பிரிந்த

தனிமையின்றுன்பத்தை (அவருக்கு) நீக்கியருளினூர் (சுப்பிரமணியப்பெருமான்). எ - று.

தெரிதரேற்றூவென்பன ஒரு சொற்றன்மையுற்று அறியாத என்னும் பொருடந்து நின்றன, காணுதலறியாதவெனினுமமையும். பூரணமுலை, பாரித்தலாதியவிலக்கணமெல்லாம் நிறைந்த முலையெனினுமாம். தீர்ந்ததனிமை பிறபெயரெஞ்சியபெயரெச்சம். (234)

**ஆங்கதுகாலைவள்ளியமரர்கோனளித்தபாவை**
**பூங்கழல்வணக்கஞ்செய்யப்பொருக்கெனவெடுத்துப்புல்லி**
**யீங்கொருதமியளாகியிருந்திடுவேனுக்கின்றோர்**
**பாங்கிவந்துற்றவாறுநன்றெனப்பரிவுகூர்ந்தாள்.**

இ - ள். அது காலை வள்ளி அமரர் கோன் அளித்த பாவை பூ கழல் வணக்கம் செய்ய - அச்சமயத்தில் வள்ளியம்மையார் தேவர்கட்கரசனுகிய இந்திரன் பெற்றபாவை போலும் தெய்வயானையம்மையாருடைய தாமரைப்பூப் போலுந் திருவடிகளைவணங்குதல் புரிய, பொருக்கென எடுத்து புல்லி ஈங்கு ஒரு தமியள் ஆகி இருந்திடுவேனுக்கு இன்று ஓர் பாங்கி வந்து உற்ற வாறு நன்று என பரிவு கூர்ந்தாள் - விரைவிலே அவ்வள்ளியம்மையாரையெடுத்துத் தழுவி இங்ஙனந்தமியேனுகியிருப்பேனுக்கு இன்றோர் துணைவிவந்தடைந்தவாறு நன்றென்று கூறினூர் அன்புமிக்கார் (அத்தெய்வயானையம்மையார்). எ - று.

ஆங்கு, அசைநிலை. பொருக்கென விரைவுக்குறிப்பு. ஒருவும் தமியள் என்பதன்முதனிலையும் ஒரு பொருட்பன்மொழியாய் ஒருசொற்றன்மையுற்று நின்றன. தமியளாகியிருந் திடுவேனுக்கு என்பது தன்மையிற்படர்க்கையிடந்தழுவியவழுவமைதி. (235)

**சூர்க்கடல்பருகும்வேலோன்றுணைவியரிருவரோடும்
போர்க்கடல்கொண்டசீயப்பொலன்மணியணைமேற்சேர்ந்தான்
பாற்கடலமளிதன்னிற்பாவையர்புறத்துவைகக்
கார்க்கடற்பவளவண்ணன்கருணையோடமருமாபோல்.**

இ - ள். கார் கடல் பவள வண்ணன் பாவையர் புறத்து வைக பால் கடல் அமளிதன்னில் கருணையோடு அமருமா போல் - கரியகடலிற்றோன்றும் பவளம்போலுஞ் செவ்வண்ணத்தையுடைய விஷ்ணுமூர்த்தி திருமகள் பூமளாகிய மனைவிகள் பக்கங்களிலிருக்கப் பாற்கடலிலுள்ள சயனத்தின்கண்ணே கிருபையோடு இருக்குமாறுபோல, சூர் கடல் பருகும் வேலோன் துணைவியர் இருவரோடும் போர்க்கு அடல் கொண்ட சீயப் பொலன் மணி அணை மேல் சேர்ந்தான் - அச்சத்தைச் செய்கின்றகடலைப்பருகிய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியப்பெருமான் தெய்வயானையம்மையார் வள்ளியம்மையார் என்னும் மனைவியரிருவரோடும் போர்செய்தற்கண்வலிமைகொண்ட சிங்கங்களாற்றாங்கப்பட்ட பொன்னேமணியே எனவிரண்டாலியன்ற ஆசனத்திற்சேர்ந்தருளினார். எ - று.

பானுகோபன்மாயைப்படையினாலே வீக்கிவீரவாகுதேவராதியயாவரையும் கடலிலிட்டபோதும் சூரபன்மனது உடலைக்கிழித்தபோதும் வேலாயுதம் அக்கடலிற்செல்லவே கடல்வற்றியதாதலினாலும், சுப்பிரமணியப்பெருமான் உக்கிரபாண்டியனாகத் திருவவதாரஞ்செய்து மதுரையை அரசாண்டகாலத்துக் கடலின் மிகையையடக்க எறிந்தபோதும் வேலாயுதங் கடல் நீரைச் சுவற்றியதாதலினாலும் கடல்பருகும் வேலோன்றாரென்க. குவ்வுருபு கண்ணுருபின் திரிபு. விஷ்ணுமூர்த்தி காஞ்சீபுரத்தில் வீரட்டகாசேசுரரைப் பூசித்துக் கருநிறத்தையொழித்துப் பவள நிறத்தைப் பெற்றமையால் பவளவண்ணனென்றாரென்பது. அமருமாறு அமருமா என இறுதி குறைந்துநின்றது. (236)

**செங்கனல்வடவைபோலத்திரைக்கடல்பருகும்வேலோன்**
**மங்கையரிருவரோடுமடங்கலம்பீடமீதி**
**லங்கினிதிருந்தகாலையரமகளவனைநோக்கி**
**யிங்கிவள்வரவுதன்னையியம்புதியெந்தையென்ருள்.**

**இ - ள்.** செம் வடவை கனல் போல திரை கடல் பருகும் வேலோன் மங்கையர் இருவரோடு மடங்கலம் பீடம் மீதில் அங்கு இனிது இருந்த காலை - செம்மையாகிய வடவாமுகாக்கினிபோலத் திரையையுடைய கடலைப் பருகிய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியப்பெருமான் மனைவிமாரிருவரோடுஞ் சிங்காசனத்தின்மே லங்ஙனமினிதாகவிருந்தருளிய வேளையில், அரமகள் அவனை நோக்கி எந்தை இங்கிவள் வரவுதன்னை இயம்புதி என்ருள் - தெய்வயானையம்மையா ரப்பெருமானைப் பார்த்து எமதிறைவரே இவளுடைய வருகையைத் திருவாய்மலர்ந்தருள்வீரென்ருர். எ - று.

வடவாமுகாக்கினி, லவணசமுத்திரத்திலே தென்புறத்திலேயுள்ள சக்கரகிரிக்கும் மைநாகத்துக்கும் நடுவே குதிரைமுகம் போலிருக்கும் அக்கினி. குதிரைப்பெட்டையின் முகத்திலிருக்கும் அக்கினியென்றுங் கூறப. அது தன்ஞற்சங்காரநிகழுங் காலையின் உருத்திரமூர்த்தியின் ஆணையினுலே மேலெழுந்து கடலைப்பருகி யுலகத்தைத் தகிப்பதென்பது. இங்கிவள் ஒரு சொல். (237)

வேறு

**கிள்ளையன்னசொற்கிஞ்சுகச்செய்யவாய்**
**வள்ளிதன்மையைவாரணத்தின்பிணைப்**
**பிள்ளைகேட்பப்பெருந்தகைமேலையோ**
**னுள்ளமாமகிழ்வாலிவையோதுவான்.**

இ - ள். கிள்ளை அன்ன சொல் கிஞ்சுகம் செய்ய வாய் வள்ளி தன்மையை வாரணத்தின் பிள்ளை பிணை கேட்ப - கிளிமொழிபோலுமொழியினையும் முருக்கம்பூப்போன்ற செய்யவாயினையுமுடைய வள்ளியம்மையாரது (உற்பவ மாதியவற்றின்) தன்மையை ஐராவதயானையினுடைய மகளாகிய தெய்வயானையம்மையார்கேட்க, பெருந்தகை மேலையோன் உள்ளம் ஆம் மகிழ்வால் இவை ஓதுவான் - பெருந்தன்மையையுடையராகிய சுப்பிரமணியப்பெருமான் திருவுள்ளத்தின்கணுண்டாகிய மகிழ்வினாலே இவற்றைத் திருவாய்மலர்ந்தருளுவார். எ - று.

கிள்ளை கிஞ்சுகம் ஆகுபெயர்கள். ஐராவதயானை வளர்த்தது பற்றி வாரணத்தின்பிணைப்பிள்ளை என்றார். பிணைப்பிள்ளை பெண் பிள்ளை. பெருந்தகை, தூயவுடம்பினனாதலாதிய பெருமையாகிய குணங்களையுடையர்; அது அன்மொழித்தொகை. (238)

நீண்டகோலத்துநேமியஞ்செல்வர்பா
லீண்டைநீவிரிருவருந்தோன்றினீ
ராண்டுபன்னிரண்டாமளவெம்புயம்
வேண்டிநின்றுவிழுத்தவமாற்றினீர்.

இ - ள். நீண்ட கோலத்து நேமியஞ் செல்வர் பால் ஈண்டை நீவிர் இருவரும் தோன்றினீர் - நெடிய வடிவினை யுடைய சக்கராயுதத்தைக் கொண்ட விஷ்ணுவினிடத்து இங்ஙனமுள்ள நீவிரிருவீரு (முன்னர்) உற்பவித்து, ஆண்டு பன்னிரண்டு ஆம் அளவு எம் புயம் வேண்டி நின்று விழுத் தவம் ஆற்றினீர் - வயது பன்னிரண்டு ஆகுமளவில் எமது புயங்களைச்சேர விரும்பிநின்று சிறந்த தவத்தைச் செய்தீர். எ - று.

நெடிய கோலத்தைச் செல்வரிலேற்றுக. தோன்றினீர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. விழுமம் ஈறுகுறைந்தது. (239)

நோற்றுநின்றிடுநுங்களையெய்தியா
மாற்றவும்மகிழ்ந்தன்பொடுசேருதும்
வீற்றுவீற்றுவிசும்பினும்பாரினுந்
தோற்றுவீரென்றுசொற்றனந்தொல்லையில்.

இ-ள். நோற்று நின்றிடு நுங்களை யாம் ஆற்றவும் மகிழ்ந்து எய்தி - (அங்ஙனந்) தவஞ்செய்துகொண்டிருந்த உங்களை (அச்சிரியதவநோக்கி) யாம் மிகமகிழ்ந்தடைந்து, அன்பொடு சேருதும் - (நீவிர் வேண்டியவாறே நும்மை) அன்போடு சேர்வேம், விசும்பினும் பாரினும் வீற்று வீற்று தோற்றுவீர் என்று தொல்லையில் சொற்றனம் - (நீவிர்) தேவலோகத்திலும் பூமியிலுஞ் சென்று வேறு வேறு உற்பவஞ்செய்யுமின் என்று பண்டு கூறியருளினும். எ-று.

ஒருவரைவிசும்பிலும் ஒருவரைப் பூமியிலுமென்க. (240)

சொன்னதோர்முறைதூக்கியிருவருண்
முன்னமேவியநீமுகிலூர்தரு
மன்னன்மாமகளாகிவளர்ந்தனை
யன்னபோதுனையன்பொடுவேட்டனம்.

இ-ள். இருவருள் முன்னம் மேவிய நீ சொன்னது முறை தூக்கி - இருவிருள் முன்னருற்பவித்த நீ (யாம்) கூறியதாகிய முறைமையை ஆராய்ந்து, முகில் ஊர்தரும் மன்னன் மா மகள் ஆகி வளர்ந்தனை - மேகத்தை வாகனமாக ஊருகின்ற இந்திரனுடைய பெருமையாகிய மகளாகி வளர்ந்தாய், அன்ன போது உனை அன்பொடு வேட்டனம் -

அப்போது உன்னையன்போடு திருக்கலியாணஞ் செய்தருளி னும். எ - று.

ஓர் அசைநிலை. மகளாகி வளர்ந்தனையென்று வளர்தலை விதந்தமையால் இந்திரனுக்கு மகளாகப் பிறவாது ஓர் சிறுமி யாகச் சென்றிருந்து வளர்ந்தாய் என்பதுபெறப்பட்டது. (241)

**பிளவுகொண்டபிறைநுதற்பேதைநின்**
**னிளையளாய்வருமிங்கிவள்யாம்பகர்**
**விளைவுநாடிவியன்றழன்மூழ்கியே**
**வளவிதாந்தொல்வடிவினை நீக்கினாள்.**

இ - ள். பிளவு கொண்ட பிறை நுதல் பேதை நின் இளையள் ஆய் வரும் இங்கிவள் - பிளவின் தன்மையைக் கொண்ட பிறைபோலும் நெற்றியினையுடைய நங்காய் நினக்கு இளையாளாயுதித்த இவள், யாம் பகர் விளைவு நாடி வியன் தழன் மூழ்கி வளவிது ஆம் தொல் வடிவினை நீங்கி னாள் - யாங்கூறிய முறைமையை ஆராய்ந்து பெரிய வக்கினி யில் வீழ்ந்து சிறிதாகிய பழைய வடிவை நீங்கினாள். எ-று.

பிளவு வட்டமாகியதோர் பொருளின் துண்டம். (242)

**பொள்ளெனத்தன்புறவுடல்பொன்றலு**
**முள்ளினுற்றவுருவத்துடனெழீஇ**
**வள்ளிவெற்பின்மரம்பயில்சூழல்போய்த்**
**தெள்ளிதிற்றவஞ்செய்திருந்தாளரோ.**

இ - ள். பொள்ளென தன் புற உடல் பொன்றலும் உள்ளின் உற்ற உருவத்துடன் எழீஇ-விரைவிலே (இவள்) தனது புறத்தேயுள்ள தூலவுடம்பு அழியவும் அகத்தே யுள்ள சூக்குமவுடம்போடெழுந்து, வள்ளி வெற்பின் மரம் பயில் சூழல் போய் தெள்ளிதில் தவம் செய்திருந்தாள் -

வள்ளிகிரியிலே மரங்கள் பொருந்திய சூழலிடத்துச் சென்று சிறிதாகத் தவஞ்செய்து கொண்டிருந்தாள். எ-று.

பொள்ளென விரைவுக்குறிப்பு. சூக்குமதேகம், சத்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் பஞ்சதன்மாத்திரைகளும் மனம் புத்தி அகங்காரங்களுங்கூடிய கூட்டமாயவுடல். (243)

**அன்னசாரலதனிற்சிவமுனி**
**யென்னுமாதவனெல்லையில்காலமாய்**
**மன்னிநோற்புழிமாயத்தினீரதாய்ப்**
**பொன்னின்மானொன்றுபோந்துலவுற்றதே.**

**இ-ள்.** அன்னசாரலதனில் - அக்கிரியின் சாரலிலே, சிவமுனி என்னும் மாதவன் எல்லையில் காலமாய் மன்னி நோற்புழி - சிவமுனியென்னும் பெரிய தவத்தினையுடையோன் அளவையில் காலமாய் நிலைபெற்றிருந்து தவஞ் செய்யுமிடத்து, மாயத்தின் நீரது ஆய் பொன்னின் மான் ஒன்று போந்து உலவுற்றது - மாயத்தின் தன்மைபோலா யழகையுடைய பிணைமானொன்று (ஆண்டுச்) சென்றுலவி யது. எ-று.

மாயத்தின் றன்மை, முன்னுள்ளதல்லாத தொன்றுமுதற் காரணமின்றித் தோன்றல்; அம்மான்பிணைபோல முன்னுள்ள தொன்றில்லையென்பார் மாயத்தினீரதாயென்றாரென்க. (244)

**வந்துலாவுமறிதனைமாதவன்**
**புந்திமாலொடுபொள்ளெனநோக்கலு**
**மந்தவேலையதுகருப்பங்கொள**
**விந்தமாதக்கருவினுளெய்தினள்.**

**இ-ள்.** வந்து உலாவும் மறிதனை மாதவன் புந்தி மாலொடு பொள்ளென நோக்கலும் - (ஆண்டு) வந்துலாவு மான்பிணையை அச்சிவமுனிவன் மனமயக்கத்தோடு விரை

விலே நோக்கலும், அந்த வேலே அது கருப்பம் கொள இந்த மாது அக்கருவினுள் எய்தினுள் - அச்சமயத்திலே அம்மான்பிணை கருப்படைய இந்நங்கையானவளக்கருப்பத் திற்சார்ந்தாள். எ - று.

ஒடு அடைமொழிப்பொருளில்வந்தது. பொள்ளென முன்னையது. நோக்கலும் என்ற உம்மீற்று வினையெச்சம். "பின்முன் கால்கடைவழியிடத்தென்னு மன்னமரபிற் காலங்கண்ணிய வென்னகிளவியு மவற்றியல்பினவே" என்னுஞ் சூத்திரத்தில் அன்னமரபிற் காலங்கண்ணிய வென்னகிளவியு மென்றதனுல் கொள்ளப்பட்டதொன்றெனக. (245)

வேறு.

மானிவடன்னைவயிற்றிடைதாங்கி
யானதோர்வள்ளியகழ்ந்தபயம்பிற்
ருனருள்செய்துதணந்திடவங்கட்
கானவன்மாதொடுகண்டனனன்றே.

இ - ள். மான் இவடன்னை வயிற்றிடை தாங்கி ஆனது ஓர் வள்ளி அகழ்ந்தபயம்பில் தான் அருள் செய்து தணந்திட - அம்மான்பிணையானது இந்நங்கையைத்தன் வயிற்றிற்றாங்கி (அங்ஙனம்) முன்னுண்டானதோர் வள்ளியினது கிழங்கையகழ்ந்தகுழியிலேதான் பெற்றுவிட்டுநீங்க, அங்கண் கானவன் மாதொடு கண்டனன் - அவ்விடத்து வேட்டுவராசனுகிய நம்பியென்பவன் தன் மனைவியோடு (சென்று) கண்டான். எ - று.

ஓர் விகாரம். வள்ளி ஆகுபெயர். அருள்செய்தல் ஓர்குறிப்பு மொழி. வேட்டுவராசன்முன்னர்க்கண்டெடுத்துப் பின்னர்த்தன் மனைவிகையிற் கொடுத்தனனென்றுமுன் கூறப்பட்டிருத்தலால் அவ்விருவருமுன்னும் பின்னுங்காண்ட லுடனிகழ்ச்சி யன்ருதலிற் சென்று என்று ஓர் சொல்வருவிக்கப்பட்டதென்பது. அன்று மேயுமசைநிலைகள். (246)

**அவ்விருவோர்களுமாங்கிவடன்னைக்**
**கைவகையிற்கொடுகாதலொடேகி**
**யெவ்வமில்வள்ளியெனப்பெயர்நல்கிச்**
**செவ்விதுபோற்றினர்சீர்மகளாக.**

**இ - ள்.** அவ்விருவோர்களும் ஆங்கு இவள் தன்னை கை வகையில் கொடு காதலொடு ஏகி - அவ்விருவருமாங்கு நின்று இந்நங்கையைக் கைவகையில் (ஏந்திக்) கொண்டு அன்போடு சென்று, எவ்வம் இல் வள்ளி என பெயர் நல்கி - குற்றமில்லாத வள்ளியென்கிற பெயரையிட்டு, சீர் மகளாக செவ்விது போற்றினர்-(தமது) அழகிய மகளாகச் சிறப்போடு போற்றினார்கள். எ - று.

ஆங்கு அசைநிலையெனினுமாம். காதலினாலே மாறிமாறி ஏந்திக்கொண்டு சென்றாரென்பதுபடக் கைவகையிற்கொடு என்றாரென்பது. ஒடு அடைமொழிப் பொருளில் வந்தது. வள்ளி யென்னுநாமத்தை அச்சிற்றூரிலுள்ள முதியோரிட்டாரெனினும் அவர்களுடைய சம்மதப்படியே யிட்டவொற்றுமைபற்றி நல்கி யெனப்பட்டது. நல்குவித்து எனினுமமையும். (247)

**திருந்தியகானவர்சீர்மகளாகி**
**யிருந்திடுமெல்லையில்யாமிவள்பாற்போய்ப்**
**பொருந்தியும்வேட்கைபுகன்றுமகன்றும்**
**வருந்தியும்வாழ்த்தியுமாயைகள்செய்தேம்.**

**இ - ள்.** திருந்திய கானவர் சீர்மகள் ஆகி இருந்திடும் எல்லையில் யாம் இவள் பால் போய் - திருத்தமுற்ற வேட்டுவரது அழகிய மகளாகி (ஆண்டு) இருந்த காலையில் யாமிந் நங்கையிடத்துச்சென்று, வேட்கைபுகன்றும் வாழ்த்தியும் பொருந்தியும் அகன்றும் வருந்தியும் மாயைகள் செய்தேம்- ஆசையைக்கூறியும் (அதனாலும் புணர்ச்சி கைகூடாமையி னாற்) போற்றியும் புணர்ந்தும் பிரிந்தும் (பிரிவாற்றாமை

யால்) வருந்தியும் (இவ்வாறே) மாயைகளைச் செய்தேம். எ - று.

இந்நங்கையை மகளாகப்பெற்றுக்கொண்ட பெருந்தவத்தின ரென்பார் திருந்தியகானவர் என்றார் செய்யுளாதலின் எதுகை மோனைகட்கிசையுமாறு வேட்கைபுகல்தலாதியவற்றை முறையே கூறாது பிறழவைத்தாரென்க. (248)

**அந்தமின்மாயைகளாற்றியதற்பின்**
**முந்தையுணர்ச்சியைமுற்றுறநல்கித்**
**தந்தையுடன்றமர்தந்திடநென்ன**
**லிந்தமடந்தையையாமணஞ்செய்தேம்.**

**இ - ள்.** அந்தம் இல் மாயைகள் ஆற்றியதற்பின் - அளவையில்லாத மாயைகளை (யாமிவண்மாட்டுச்) செய்த தற் பின், முந்தை உணர்ச்சியை முற்று உற நல்கி - பழைய வறிவை முழுதுமுறவருளி, நென்னல் தந்தையுடன் தமர் தந்திட இந்த மடந்தையை யாம் மணம் செய்தேம் - நெரு நல் (இவளுடைய) தந்தையோடு (மற்றும் உறவினருந்தா இந்நங்கையைத் திருமணஞ் செய்தருளினும். எ - று.

முந்தை உணர்ச்சி, முன்னர் விஷ்ணுமூர்த்தியுடைய மகளா யிருந்த காலத்துள்ள தெய்வவறிவு. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. முற்றுற - முடியவெனினுமாம். தருதல் - உதகத்தோடு தத்தம் செய்துகொடுத்தல். தமருமுடன் பாடாகத் தந்தை தந்தைத் தந்தையுடன் றமர்தந்திடவென்றாரென்பது. (249)

**அவ்விடைமாமணமாற்றியகன்றே**
**யிவ்விவடன்னுடனிம்மெனவேகித்**
**தெய்வவரைந்தனோர்சில்பகல்வைகி**
**மைவிழியாயிவண்வந்தனமென்றான்.**

**இ - ள்.** அவ்விடை மா மணம் ஆற்றி அகன்று இவ்வி வடன்னுடன் இம்மென ஏகி - அச்சிற்றூரிலே பெருமை

யாகிய திருமணஞ்செய்தருளி (அவ்விடத்தை) நீங்கி இந் நங்கையோடு விரைவிற்சென்று, தெய்வ வரைக்கண் சில பகல் மேவி - தெய்வத்தன்மையாகிய திருத்தணிகைவரை யின் கண்ணே சில நாட்டங்கியிருந்து, மை விழியாய் இவண் வந்தனம் என்றான் - கருமையாகிய கண்ணிணையுடையா யிங்ஙனம் வந்தேமென்று திருவாய் மலர்ந்தருளினார். எ-று.

இவ்விவள், ஒரு சொல் இத்தன்மையுற்றவிவளெனினுமாம். இம்மென விரைவுக்குறிப்பு. வரைகளுட் பெருவிசேடமுடைத் தென்பதுபட தணிகைவரையைத் தெய்வவரைஎன்றார். (250)

**என்றிவைவள்ளியியற்கையனைத்தும்**
**வென்றிடுவேற்படைவீரனியம்ப**
**வன்றிறல்வாரணமங்கைவினவி**
**நன்றெனவொன்றுநவின்டுகின்றுள்.**

**இ - ள்.** என்று வள்ளி இயற்கை அனைத்தும் இவை வென்றிடு வேல் படை வீரன் இயம்ப - என்று அவ்வள்ளி யம்மையாருடைய தன்மை எல்லாமாமாகிய இவற்றை (எவ்வகைப்பட்ட சூரமுடையவராலும் வெல்லுதற்கரிய சூரனாதியரை) வென்றிகொண்ட வேற்படையையுடைய வீரராகிய சுப்பிரமணியப்பெருமான் திருவாய்மலர்ந்தருள, வல் திறல் வாரண மங்கை வினவி - வலிய திறலினையுடைய ஐராவதயானையினது மகளாகிய தெய்வயானையம்மையார் வினவி நன்று என ஒன்று நவின்றிடுகின்றாள் - நல்லதென்று ஒன்று கூறியருள்கின்றார். எ - று.

வலிமை, பகையைவெல்ல வல்ல வன்மை. திறல் உடலின் திண்மை. ஒருபொருட் பன்மொழியெனினுமாம். வன்திறல்என்ற அடையினாலே வாரணமங்கை தெய்வயானையம்மை என்னும் பொருள் படாமை யறிக. (251)

வேறு

தொல்லையின்முராரிதன்பாற்றோன்றியவிவளும்யானு
மெல்லையில்காலநீங்கியிருந்தனமிருந்திட்டேமை
யொல்லையிலிங்ஙன்கூட்டியுடனுறுவித்தவுன்றன்
வல்லபந்தனக்கியாஞ்செய்மாறுமற்றில்லையென்றாள்.

இ - ள். தொல்லையில் முராரிதன் பால் தோன்றிய இவளும் யானும் எல்லையில் காலம் நீங்கி இருந்தனம் - பண்டைக்காலத்தே விஷ்ணுவினிடத்துற்பவித்த இவளும் யானும் அளவையில்லாத காலம் பிரிந்திருந்தேம், இருந்திட்டேமை - (அங்ஙனம்) இருந்த வெம்மை, ஒல்லையில் இங்ஙன் கூட்டி உடனுறுவித்த உன்றன் வல்லபந்தனக்கு யாம் செய் மாறு மற்று இல்லை என்றாள் - விரைவிலே இங்ஙனங்கூட்டி யுடனுறச் செய்த தேவரீருடைய வல்லபத்துக்கு யாஞ் செய்யும் பிரதியுபகாரம் பிறிது (ஒன்று) இல்லையென்றார் (அத்தெய்வயானையம்மையார்.) எ - று.

விஷ்ணுமூர்த்தியுடைய வலக்கண்ணிலே தெய்வயானை யம்மையாரும் இடக்கண்ணிலே வள்ளியம்மையாரும் உற்பவித்தனரென்ப. உடனுறச்செய்தல்-ஒருசேரவிருக்கச்செய்தல். மற்று-பிறிதென்னும் பொருடந்தது. (252)

மேதகுமெயினர்பாவைவிண்ணுலகுடையநங்கை
யோதுசொல்வினவிமேன்மேனக்கியான்றங்கையாகு
மீதொருதன்மையன்றியிம்மையுமிவளையானே
னுதலினுய்ந்தேனின்னையடைந்தனனளித்தியென்றாள்.

இ - ள். மேதகும் எயினர் பாவை விண் உலகு உடைய நங்கை ஓது சொல் வினவி - மேன்மையுற்ற வேட்டுவர்மகளாகிய வள்ளியம்மையார் தேவலோகத்தை யுடைய தெய்வயானையம்மையார் கூறியருளிய வார்த்தை

யைக்கேட்டு, மேல் நாள் உனக்கு யான் தங்கை ஆகும் ஈது ஒரு தன்மைஅன்றி இம்மையும் இளையள்ஆனேன் ஆதலின் உய்ந்தேன் நின்னை அடைந்தனன் - முன்னாளிலேயுமக்கு யான் தங்கையேயாம் இவ்வொருதன்மையேயன்றி இப் பிறப்பிலுந் தங்கைமுறையாயினேன் ஆதலிற் பெருவாழ் வடைந்தேனாகி உம்மைச்சார்ந்தேன், அளித்தி என்றாள் - (என்னைக்) காத்தருளீரென்று கூறியருளினார். எ - று.

இந்திரனுக்கு மகளாதலின் அவனுடையவுடைமை அவ்வம் மையாருக்கு ஏற்றப்பட்டதென்க. ஈது சுட்டுமாத்திரையா கின்றது. இப்பெருமான் மணந்தருளிய காரணத்தாலிம்மையு மிளையளானேனென்றவாறு. உய்ந்தேன் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (253)

**வன்றிறற்குறவர்பாவைமற்றிதுபுகன்றுதெளவை**
**தன்றிருப்பதங்கடம்மைத்தாழ்தலுமெடுத்துப்புல்லி**
**யின்றுனைந்துணையாப்பெற்றேனெம்பிரானருளும்பெற்றே**
**னென்றெனக்கரியதுண்டோவுளந்தனிற்சிறந்ததென்றாள்.**

இ - ள். வல் திறல் குறவர் பாவை இது புகன்று தெளவை தன் திரு பதங்கடம்மை தாழ்தலும் - வலியதிற லினையுடைய வேட்டுவர்மகளாகிய வள்ளியம்மையார் இதனைக்கூறித் தெளவையாகிய தெய்வயானையம்மையாரு டைய திருவடிகளைவணங்கலும், எடுத்துபுல்லி இன்று உனை துணையா பெற்றேன் எம்பிரான் அருளும் பெற்றேன் - (அவ்வம்மையாரை) எடுத்துத் தழுவி இந்நாளிலேயுன்னைத் துணைவியாகவும்பெற்றேன் எமதிறைவருடைய திருவருளை யும் பெற்றேன் (ஆதலின்), எனக்கு உளந்தனில் சிறந்தது அரியது ஒன்று உண்டோ - எனக்கு உள்ளத்திற்சிறந்த தாகிய அரியதோர் பொருள் (மற்று) ஒன்றுண்டோ. எ-று.

மற்று அசைநிலை. தௌவை மூத்தாள். சிறந்தது என்னுங் குறிப்புவினை முற்றுப்பெயரெச்சமானது. அரியது குறிப்புவினையாலணையும் பெயர். ஓகாரம் எதிர்மறை. (254)

**இந்திரனருளுமாதுமெயினர்தம்மாதுமிவ்வா**
**றந்தரஞ்சிறிதுமின்றியன்புடனளவளாவிச்**
**சிந்தையுமுயிருஞ்செய்யுஞ்செயற்கையுஞ்சிறப்புமொன்றுக்**
**கந்தமுமலரும்போலக்கலந்துவேறின்றியுற்றார்.**

இ - ள். இந்திரன் அருளும் மாதும் எயினர்தம் மாதும் இவ்வாறு அந்தரம் சிறிதும் இன்றி அன்புடன் அளவளாவி - இந்திரன்பெற்ற புத்திரியாகிய தெய்வயானையம்மையாரும் வேட்டுவருடைய புத்திரியாகிய வள்ளியம்மையாரும் இவ்வாறே பேதஞ்சிறிதுமின்றி அன்புடன் அளவளாய், சிந்தையும் உயிரும் செய்யும் செயற்கையும் சிறப்பும் ஒன்று - உள்ளமும் உயிருஞ்செய்யுஞ் செயலும் சிறப்புமொன்றாக, கந்தமும் மலரும் போல கலந்து வேறு இன்றி உற்றார் - மணமும் பூவும் போலக் கலந்து விகிர்தமின்றி யிருந்தார்கள். எ - று.

அன்புடனளவளாவி யென்றது தெய்வயானையம்மையார் வள்ளியம்மையார்மீதுகொண்ட அன்புபோலவே வள்ளியம்மையாருந் தெய்வயானையம்மையார் மீது அன்புகொண்டு என்றபடி. சிந்தையொன்றுதல், ஒருவர் உள்ளமகிழ்ச்சியாதிய வுறின் மற்றையரும் அவ்வாறுறுதல். உயிரொன்றுதல் ஒருவருற்றவின்பம் போலவே மற்றையரும் உற்றிருத்தல். செய்யுஞ்செயற்கையொன்றுதல் சுப்பிரமணியப்பெருமானுக்குச் செய்யும் வழிபாடு ஒருதன்மையாய் இருத்தல். சிறப்பொன்றுதல், சுப்பிரமணியப் பெருமானவர்களுக்குச் செய்யுஞ் சிறப்பொருதன்மையாய் இருத்தல். (255)

**இங்கிவரிருவர்தாமுமியாக்கையுமுயிரும்போலத்**
**தங்களில்வேறின்றாகிச்சரவணதடத்தில்வந்த**
**புங்கவன்றன்னைச்சேர்ந்துபோற்றியேயொழுகலுற்றார்**
**கங்கையும்யமுனைதானுங்கனைகடலுடன்சேர்ந்தென்ன.**

இ - ள். இங்கு இவர் இருவர்தாமும் யாக்கையும் உயிரும் போல தங்களில் வேறு இன்று ஆகி - இங்ஙனமிவ ரிருவரும் உடலுமுயிரும்போலத் தங்களில் வேறுபாடில்லை யாகி, கங்கையும் யமுனைதானும் கனை கடலுடன் சேர்ந் தென்ன-கங்காநதியும் யமுனாநதியும் ஒலிக்கின்ற கடலோடு சேர்ந்தாற்போல, சரவண தடத்தில் வந்த புங்கவன் றன்னை சேர்ந்து போற்றி ஒழுகலுற்றார் - சரவணதடாகத்திற் றிரு வவதாரஞ் செய்தருளிய சுப்பிரமணியப்பெருமானைச் சேர்ந்து வழிபட்டொழுகினார்கள். எ - று.

கங்காநதியும் யமுனாநதியும் தம்முளொன்று பட்டுக்கடலோடு சேர்ந்தாற்போல அவ்விருவரும் தம்முள் வேறுபாடின்றி ஒன்று பட்டுச் சுப்பிரமணியப்பெருமானைச் சேர்ந்தாரென்க. சேர்ந்தா லென்ன எனற்பாலது சேர்ந்தென்னவெனவிகாரமாயிற்று. ()

**கற்றையங்கதிர்வெண்டிங்களிருந்துழிக்கனலிப்புத்தே**
**ளுற்றிடுதன்மைத்தென்னவும்பர்கோனுதவுமானு**
**மற்றைவில்வேடர்மானும்வழிபடல்புரிந்துபோற்ற**
**வெற்றியந்தனிவேலண்ணல்வீற்றிருந்தருளினானே.**

இ - ள். கற்றையங்கதிர் வெண்டிங்கள் இருந்துழி கனலிப்புத்தேள் உற்றிடு தன்மைத்து என்ன - திரளாகிய கிரணங்களையுடைய சூரியனும் வெண்மையாகிய சந்திரனுங் (கூடி) இருக்கின்ற இடத்திலே அக்கினியாகிய தெய்வமும் (அவற்றோடு) இருக்கின்றதன்மைத்தென்ன, உம்பர் கோன் உதவும் மானும் மற்றை வில் வேடர் மானும் வழிபடல் புரிந்து போற்ற - தேவர்கட் கரசனாகிய இந்திரன்பெற்ற

தெய்வயானையம்மையாரும் மறற்றைவிற்படையை யேந்து கின்ற வேட்டுவருடைய மகளாகிய வள்ளியம்மையாரும் வழிபாடுசெய்துபோற்ற, வெற்றியந்தனிவேல் அண்ணல் வீற்றிருந்தருளினன் - வெற்றியையுடைய ஒப்பற்ற வேற்படைக்கலத்தைக்கொண்ட சுப்பிரமணியப்பெருமான் வீற்றிருந்தருளினர். எ - று.

ஆயிரங்கிரணங்களையுடையனுதல் பற்றிக் கற்றையங்கதிர் எனப்பட்டது. கற்றையங்கதிர் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. உலகத்துக்காதாரமா இருத்தலும் புறத்திருளையொழித்தலும் உலகப்பொருள்களுட் சிறப்புடையனவாயிருத்தலும்பற்றி அம்முச்சுடரும் உயிர்களுக்காதாரமாய் இருத்தலும் அகத்திருளை யொழித்தலும் எல்லாப்பொருள் களினுஞ்சிறப்பாதலு முடைய சுப்பிரமணியப்பெருமானுக்கும் சத்திகளாகிய அவ்விருவருக்கும் உவமையாயினவென்க. அம் முச்சுடருள் அக்கினியிலே அத்தன்மைகள் இயற்கையா யிருத்தல் பற்றி இயற்கையாகவே அத்தன்மைகளையுடைய சுப்பிரமணியப் பெருமானுக்கு அதுவும் அக்கினியாலாதித்தனுக்கு அத்தன்மைக ளுண்டாதல்பற்றிச் சுப்பிரமணியப்பெருமானு லத்தன்மைக ளுண்டாகப்பெற்ற ஞானசத்தியாகிய தெய்வயானையம்மை யாருக்கு அவ்வாதித்தனும். ஆதித்தனாற்சந்திரனுக்கு அத்தன் மைகளுண்டாதல்பற்றி அஞ்ஞானசத்தியினாலே அத்தன்மைக ளுண்டாகப்பெற்ற கிரியாசத்தியாகிய வள்ளியம்மையாருக்கு அச்சந்திரனும் உவமையாயினவென்பது; ஞானசத்தியாற் கிரியா சத்திகாரியப்படுதலை "சத்திதன்வடிவே தென்னில்" என்ற சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுணர்க. (257)

**கல்லகங்குடைந்தசெவ்வேற்கந்தனேர்தருவதாகி**
**வல்லியர்கிரியைஞானவல்லியின்கிளையாய்ச்சூழப்**
**பல்லுயிர்க்கருளைப்பூத்துப்பவநெறிகாய்த்திட்டன்ப**
**ரெல்லவர்தமக்குமுத்தியிருங்கனியுதவுமென்றும்.**

**இ - ள்.** கல்லகம் குடைந்த செவ் வேல் கந்தன் ஓர் தருவது ஆகி கிரியைஞான வல்லியின் வல்லியர் கிளையாய்

சூழ - கிரௌஞ்சகிரியைக் குடைந்த செம்மையாகிய வேற்படையையுடைய சுப்பிரமணியப்பெருமான் ஓர் (பயன்) மரமாகிக் கிரியாசத்தி ஞானசத்திகளாகிய வள்ளியம்மையாரும் தெய்வயானையம்மையாரும் கொம்பர்களாகிச் சூழ, பல் உயிர்க்கு அருளை பூத்து பவநெறி காய்த்திட்டு அன்பர் எல்லவர்தமக்கும் முத்தி இரும் கனி என்று உதவும் - பலவாகியவுயிர்களுக்கும் திருவருளைப் பூத்து (அவ்வான்மாக்களையநாதியே பந்தித்திருக்கின்றமலங்களறுமாறு அவற்றுக்குத்தனுகரணங்களாகிய) பிறவிநெறியைக் காய்த்து (அப்பிறவிகளிற்பிறந்து விரும்பியபுவனபோகங்களையனுபவித்து முடித்து இருவினையொப்புமலபரிபாகமுற்ற அன்பர்யாவர்க்கும்பரமுத்தியாகிய பெருமையுடைய கனியை எந்நாளுங்கொடுக்கும். எ - று.

சுப்பிரமணியப்பெருமானை ஓர்பயன்மரமாகவும் சத்திகளாகிய அவ்விருவரையும் கொம்பர்களாகவுமுருவகித்ததற்கேற்ப ஆன்மாக்களுக்கு அருள்செய்தற்கு அவ்வான்மாக்களிடத்து வைத்தகிருபையை அருளைப்பூத்து என்றும் அவற்றுக்குத் தேகாதியைக்கொடுத்தருளலைக்காய்த்திட்டு என்றும் முத்தியருள்தலைக் கனியுதவுமென்றுமுபசரித்தாரென்க. இன் அல்வழிச்சாரியை. சுப்பிரமணியப் பெருமானுக்குத்தெய்வயானையம்மையார் ஞானசத்தியும் வள்ளியம்மையார் கிரியாசத்தியுமாமென்க. சிலநூல்களிலே தெய்வயானையம்மையாரைக் கிரியாசத்தியென்றும் வள்ளியம்மையாரை இச்சாசத்தியென்றுங் கூறப்பட்டிருத்தலால்இதுமாறுகாதோவெனின், சத்தியென்றே காரியபேதத்தாற் பலவாதலினானும் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியென்னு மூவகையாகக்கொள்ளுமிடத்து அந்நூல்களிற்கூறப்பட்டவாறு கொளல்வேண்டும் (அவ்வகைபற்றியே இவ்வுரையிலும் வள்ளியம்மையாரை இச்சாசத்தி என்று முன்னர்க்கூறினும்) கிரியாசத்திஞானசத்தியென்னு மிருவகையாகக்கொள்ளுமிடத்து இம்முறையேகொள்ளல்வேண்டும் ஆதலின்மாறன்றென்க. (258)

**பெண்ணொருபாகங்கொண்டபிஞ்ஞகன்வதனமொன்றிற்
கண்ணொருமூன்றுவைகுங்காட்சிபோலெயினர்மாதும்
விண்ணுலகுடையமாதும்வியன்புடைதன்னின்மேவ
வண்ணலங்குமரனன்னூர்க்கருள்புரிந்திருந்தானங்கண்.**

**இ-ள்.** பெண் ஒரு பாகம் கொண்ட பிஞ்ஞகன் வதனம் ஒன்றில் கண் ஒரு மூன்று வைகும் காட்சி போல்-பார்ப்பதி தேவியாரையோர் கூற்றிலேகொண்டருளிய சிவபெருமானுடைய திருமுகமொன்றிலே திருநேத்திரங்கள் மூன்று இருக்குந்தன்மைபோல, எயினர் மாதும் விண் உலகு உடைய மாதும் வியன் புடை தன்னில் மேவ அண்ணலங் குமரன் அன்னூர்க்கு அருள் புரிந்து அங்கண் இருந்தான் - வேட்டுவர்மகளாகிய வள்ளியம்மையாரும் தேவலோகத்தையுடைய தெய்வயானையம்மையாரும் பெருமையாகிய (இரு) பக்கத்து மிருக்க அண்ணலாகிய சுப்பிரமணியப்பெருமான் அவ்விருவருக்குந் திருவருள் புரிந்து அங்ஙனம் வீற்றிருந் தருளினூர். எ - று.

சிவபெருமானுடைய திருமுகமொன்றிலே நெற்றிக்கண்ணுயர்ந்து மற்றையகண்களிருபக்கத்துந் தாழ்ந்திருத்தல் போல இருந்தனரென்க.

(259)

**சேவலுங்கொடிமான்றேருஞ்சிறைமணிமயிலுந்தொன்னுண்
மேவருந்தகரும்வேலும்வேறுளபடைகள்யாவு
மூவிருமுகத்துவள்ளன்மொழிந்திடுபணிகளாற்றிக்
கோவிலின்மருங்குமுன்னுங்குறுகிவீற்றிருந்தமன்னே.**

**இ - ள்.** சேவலும் கொடி மான் தேரும் சிறை மணி மயிலும் தொல் நாள் மேவு அரும் தகரும் வேலும் வேறு உள படைகள் யாவும் - (கொடியாகிய) கோழியுங்கொடியையுடைய குதிரை (பூண்ட) தேரும் சிறையையுடைய கரு

மயிலும் பண்டைக்காலத்து (வாகனமாக) மேவிய அரிய தகரும் வேலாயுதமும் மற்றுமுள்ள படைகள்யாவும், மூவிரு முகத்து வள்ளல் மொழிந்திடு பணிகள் ஆற்றி - ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் திருவாய்மலர்ந்தருளும் பணிகளை இயற்றிக்கொண்டு, கோவிலின் மருங்கும் முன்னும் குறுகி வீற்றிருந்த - அத் திருக்கோயிலின் பக்கங்களிலும் முன்னிடத்துஞ் சார்ந்து வீற்றிருந்தன. எ - று.

மேவரும், பிறராலடைதற்கரிய எனினுமாம். வேறுளபடை, மற்றைப் பதினொருபடைகளும் மற்றைய தெய்வத்தன்மை பொருந்திய அம்புகளுமென்க. மன்னும் ஓவும் அசைநிலைகள். ()

**ஆறிருதடந்தோள்வாழ்கவறுமுகம்வாழ்கவெற்பைக்**
**கூறுசெய்தனிவேல்வாழ்ககுக்குடம்வாழ்கசெவ்வே**
**ளேறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க**
**மாறிலாவள்ளிவாழ்கவாழ்கசீரடியரெல்லாம்.**

**இ - ள்.** செவ்வேள் ஆறிரு தடம் தோள் வாழ்க - சுப்பிரமணியப்பெருமானுடைய பன்னிரண்டு திருத்தோள்களும் வாழக்கடவன, அறு முகம் வாழ்க - ஆறுதிருவதனங்களும் வாழக்கடவன, வெற்பை கூறு செய் தனி வேல் வாழ்க - கிரௌஞ்சகிரியைக் கூறுபடுத்திய ஒப்பற்ற வேலாயுதமும் வாழக்கடவது, குக்குடம் வாழ்க - கோழிக்கொடியும் வாழக்கடவது, ஏறிய மஞ்ஞை வாழ்க - (அப்பெருமான்) இவர்ந்தருளும் மயில்வாகனமும் வாழக்கடவது, யானைதன் அணங்கு வாழ்க - ஐராவதயானையின் மகளாகிய தெய்வயானையம்மையாரும் வாழக்கடவர், மாறு இலா வள்ளி வாழ்க-உவமையில்லாத வள்ளியம்மையாரும் வாழக்

கடவர், சீர் அடியார் எல்லாம் வாழ்க - சிறப்பினையுடைய அடியார்கள் யாவரும் வாழக்கடவர்கள். எ - று.

இச்செய்யுள் வாழ்த்தணி. (261)

புன்னெறியதனிற்செல்லும்போக்கினை விலக்கிமேலா
நன்னெறியொழுகச்செய்துநவையறுகாட்சிநல்கி
யென்னையுமடியனுக்கியிருவினை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள்வள்ளல்பாதபங்கயங்கள்போற்றி

இ - ள். புல் நெறி யதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நல் நெறி ஒழுக செய்து - (யான்) புல்லிய நெறியிலே செல்லுஞ் செல்லுகையை விலக்கி மேலாகிய நல்ல நெறியிலே செல்லச்செய்து, நவை அறு காட்சி நல்கி - குற்றமற்ற மெய்யுணர்வைத்தந்து, என்னையும் அடியன் ஆக்கி இரு வினை நீக்கி ஆண்ட - என்னையும் தமக்கடியனாக்கி (நல்வினை தீவினை யென்னு) மிருவினையையும் நீக்கி யாண்ட, பன்னிரு தடம் தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி - பன்னிரண்டாகிய பெரிய திருப்புயங்களையுடைய சுப்பிரமணியப்பெருமானது திருவடித்தாமரை மலர்கள் (என்னுற்) போற்றப்படுவன. எ - று.

புன்னெறி - உலோகாயதமாதிய புறச்சமயநெறி. மேலான நன்னெறி - சித்தாந்த சைவசமயநெறி. நவையறுகாட்சி - சிவாகமங்களின் பொருளைச் சந்தேக விபரீதங்களின்றி மெய்யுணர்தல். என்னையுமென்றதில் உம்மை எச்சவும்மையோடு இழிவுசிறப்பு அடியனுக்கி இருவினைநீக்கியாளுதல்: சபீசதீக்ஷை செய்தாளுதல்; சிவாகமங்களின் மெய்ப்பொருளை ஓதியுணர்ந்தவர்களுக்கு இச் சபீசதீக்ஷையே செய்யப்படுவதென்பதை "ஓதியுணர்ந் தொழுக்க நெறி யிழுக்காநல்ல வுத்தமர்க்குச் செய்வதுயர்பீசம்" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுணர்க. (262)

வேறு

வேல்சேர்ந்தசெங்கைக்குமரன்வியன்காதைதன்னை
மால்சேர்ந்துரைத்தேன்றமிழ்ப்பாவழுவுற்றதேனு
நூல்சேர்ந்தசான்றீர்குணமேன்மைநுவன்றுகொண்மின்
பால்சேர்ந்தநற்புனலும்பயனுவதன்றே.

இ - ள். நூல் சேர்ந்த சான்றீர் - நூலோடு சார்ந்த அறிவினையுடையீர், வேல் சேர்ந்த செம் கை குமரன் வியன் காதை தன்னை மால் சேர்ந்து உரைத்தேன் தமிழ் பா வழுவுற்றதேனும் - வேலாயுதஞ் சேர்ந்திருக்கின்ற செம்மையாகிய திருக்கரத்தினையுடைய சுப்பிரமணியப்பெருமானது பெருமையாகிய காதையை (இங்ஙனம் பாடவேண்டுமென்னு) மாசை சேர்ந்து பாடினேனது தமிழ்ச் செய்யுள் வழுவுற்றிருப்பினும், குணம் மேன்மை நுவன்று கொண்மின் - (அதிற் சார்ந்திருக்கின்ற பொருட்) குணத்தினாலே மேன்மையாகக் கூறிக்கொண்மின், பால் சேர்ந்ததனுல் புனலும் பயன் ஆவது அன்றே - பால் சேர்ந்ததனாலே நீரும் (தன் தன்மை நீங்கிப்) பாலின்தன்மையாவதல்லவோ. எ - று.

தமிழ்ப்பா தொகுதியொருமை. இயற்கையறிவினின்றும் கல்வியாலாய செயற்கையறிவு விசேடமென்பார் நூல் சேர்ந்த என்றார். பயன் ஆகுபெயர். எகாரம் பலாறிதேற்றம்; பின்னையதுமது. (263)

பொய்யற்றகீரன்முதலாம்புலவோர்புகழ்ந்த
ஐயற்கெனதுசிறுசொல்லுமொப்பாகுமிப்பார்
செய்யுற்றவன்மாலுமைபூசைகொடேவதேவன்
வையத்தவர்செய்வழிபாடுமகிழுமன்றே.

இ-ள். கீரன் முதல் ஆம் பொய் அற்ற புலவோர் புகழ்ந்த ஐயற்கு எனது சிறு சொல்லும் ஒப்பு ஆகும் - நக்கீரர் முதலாகிய பொய்யடிமையில்லாத அறிஞர் (பாவாற்) புகழ்ந்த சுப்பிரமணியப்பெருமானுக்கு எனது புல்லியபாவும் ஏற்றதாகும், இப்பார் செய்யுற்றவன் மால் உமைபூசை கொள் தேவதேவன் வையத்தவர் செய்வழி பாடு மகிழும் அன்றே - இப்பிருதிவி யண்டத்தைச் சிருட்டித்த பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் உமாதேவியாரு மாகிய இவர்களது பூசையை ஏற்றுக்கொண்டருளிய தேவ தேவராகிய சிவபெருமான் இப்பூமியிலுள்ள மானுடர் செய்யும் பூசையையு மகிழ்வாரன்றோ. எ - று.

சொல் ஆகுபெயர். செய் முதல்நிலைத் தொழிற்பெயர். ()

**என்னாயகன்விண்ணவர்நாயகன்யானைநாம**
**மின்னாயகனான்மறைநாயகன்வேடர்நங்கை**
**தன்னாயகன்வேற்றனிநாயகன்றன்புராண**
**நன்னாயகமாமெனக்கொள்கவிஞ்ஞாலமெல்லாம்.**

இ-ள். என் நாயகன் - எனது நாயகரும், விண்ணவர் நாயகன் - தேவர்கட்குநாயகரும், யானை நாம மின் நாயகன் - தெய்வயானை யென்னும் பெயருடைய நங்கையாருடைய நாயகரும், நால் மறை நாயகன் - நான்காகிய வேதங்களுக்கு நாயகரும், வேடர் நங்கைதன் நாயகன் - வேட்டுவர் மகளாகிய வள்ளியம்மையாருக்கு நாயகரும், வேல் தனி நாயகன்றன் புராணம் - வேலாயுதத்தையுடைய ஒப்பில்லாதநாயகருமாகிய சுப்பிரமணியப்பெருமானது இப் புராணத்தை, இஞ்ஞாலம் எல்லாம் நல் நாயகமாம் என

கொள்க - இப்பூலோகத்தாரெல்லாரும் நல்ல நாயகமா மென்று கொள்ளக்கடவர். எ - று.

யானைநாம மின்னையகன் வேடர் நங்கை தன்னையகன் இவ் விரண்டிடத்தும் நாயகனைக் கணவனென்றும், ஏனையிடங்களிற் றலைவனென்றுங் கொள்க. ஞாலம் ஆகுபெயர். (265)

**வற்றுவருள்சேர்குமரேசன்வண்காதைதன்னைச்**
**சொற்றுருமாராய்ந்திடுவாருந்துகளுறுமே**
**கற்றுருங்கற்பான்முயல்வாருங்கசிந்துகேட்க**
**லுற்றுரும்வீடுநெறிப்பாலினுறுவரன்றே.**

**இ - ள்.** வற்று அருள் சேர் குமரேசன் வண் காதை தன்னை சொற்றுரும் - குறையாதவருள் சேர்ந்த சுப்பிர மணியப்பெருமானுடைய வளவிய இக்காதையைப் படிப்ப வரும், ஆராய்ந்திடுவாரும் - (அதன்பொருளை) ஆராய்பவ ரும், துகள் உறுமே கற்றுரும்-(அதனைச் சந்தேக விபரீதங் களாய) குற்றமுறாது கற்பவரும், கற்பான்முயல்வாரும் - கற்பதற்கு முயல்பவரும், கசிந்து கேட்கலுற்றுரும் - அறிந்தோர் சொல்லும்போழ்து (உள்ளம்) உருகிக்கேட்பவ ரும், வீடு நெறி பாலின் உறுவர் - (இம்மையிலேவேண்டிய போகங்களை யனுபவித்துத் தேகாந்தியத்திலே) முத்தி யாகிய நல்லவிடத்திற் சேர்வார்கள். எ - று.

வற்றுதவென்றதன் இறுதிகெட்டது. உறுமே-மே ஈற்று -எதிர்மறை வினையெச்சம். (266)

**பாராகியேனைப்பொருளாயுயிர்ப்பன்மையாகிப்**
**பேராவுயிர்கட்குயிராய்ப்பிறவற்றுமாகி**
**நேராகித்தோன்றலிலதாகிநின்றுன்கழற்கே**
**யாராதகாதலொடுபோற்றியடைதுமன்றே.**

இ - ள். பாராகி - பிருதிவியாகியும், ஏனை பொருள் ஆய - மற்றைய (அப்பு தேயு வாயு ஆகாயமாகிய) பொருள்களாகியும், பன்மை உயிராகி - பலவகைப்பட்ட உயிர்களாகியும், பேரா உயிர்கட்கு உயிராய் - அழியாத ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாகியும், பிற வற்றும் ஆகி — பிறவுமாகியும், நேர் ஆகி தோன்றல் இலது ஆகி - நேராகித் தோன்றுதலிலதாகியும், நின்றான் கழற்கே - நிற்கின்ற பரமசிவனுடைய திருவடியின்கண்ணே, ஆராத காதலொடு போற்றி அடைதும் - அமையாத காதலோடு துதித்துச் சேர்வேம். எ - று.

ஏனைப்பொருள் பஞ்சபூதங்களிலே, முற்கூறிய பிருதிவியொழிந்தவை. விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்று மூவகையினராதலின் உயிர்ப்பன்மை என்றார்; ஆன்மாக்களெண்ணிறந்தவையாதலின் அங்ஙனங் கூறினாரெனினுமாம். பேர்தல் போதல்; ஈண்டு அழிதல். பிற, பூதங்களொழிந்த பொருட்பிரபஞ்சமும் சொற்பிரபஞ்சமுமென்க. வற்று அல்வழிச்சாரியை. நேராகித் தோன்றலிலதாகியென்றது, அப்பூதங்களாதியவாகித் தோன்றுதலேயன்றித் தாம் வேறாகித் தோன்றுதலிலதாகியென்றவாறு. குவ்வுருபு கண்ணுருபின்றிதிரிபு. கழற்கு அடைதுமென்றியைக்க. அன்றும் ஏயும் அசைநிலைகள். (267)

## வள்ளியம்மை திருமணப்படலம் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

திருச்சிற்றம்பலம்.

கச்சியப்பசிவாசாரியர் திருவடி வாழ்க.

மணிவாசக நூல் நிலையம்
ஆரம்பம்: 1934
குரும்பசிட்டி, சன்மார்க்க சபை

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

வேலுமயிலுந் துணை.

## பிரகடன பத்திரம்

**திருவள்ளுவர் பரிமேலழகருரை** — விலை ரூ. 5.

இதுவும் இராமநாதபுர சமஸ்தானாதிபதியின் விருப்பத்தின் படி முதல் முதல் (1869) நாவலரால் அச்சிடப்பட்டது. மற்றப் பதிப்புகளெல்லாம் பின்னர் வந்தனவே.

**சிவஞானத் தெளிவுபதேசத்திரயம்** — விலை அணா 8.

சிவஞானசுவாமிகளின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் பாடிய பேரூர்ப்புராணம், தணிகைப்புராணம், திருவானைக்காப்புராணம் முதலியவற்றில் அவர் விளக்கிய சைவசித்தாந்தக் கருத்துகளமைந்த பாக்களின் தொகுதி.

**சமயாசாரியர் சந்தானாசாரியர் சரித்திர சங்கிரகம்** — விலை அணா 8.

இது எளியநடையில் சமயகுரவர் நால்வர் சரித்திரங்களையும் சந்தானகுரவர் சரித்திரங்களையும் சுருக்கமாகக் கூறுவது. இதனோடு நால்வர் நான்மணிமாலையுரையும், சந்தானகுரவர் மாலைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

**நன்னூற்காண்டிகையுரை** — விலை ரூ. 3 12.

பல காண்டிகையுரை இருந்தும் இதுவே பி. ஏ. பாடபுத்தகமாக நியமிக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பைக் காட்டுகின்றது.

**பாலபாடங்கள்**—முதற்பாலபாடம் — விலை அணா 3.

இரண்டாம்பாலபாடம் — „ 5.

மூன்றாம்பாலபாடம் — „ 10.

நான்காம்பாலபாடம் — ரூ. 1 12.

தமிழராயுள்ளவர் இந்நான்கு பாலபாட புத்தகங்களையும் படிப்பாராயின் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் ஓங்கிவளரும். நான்காம் பாலபாடம் மிகச்சிறந்தது. தமிழ்வசன நடைக்கு ஏணியாயுள்ளவை இவை யென்பதாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

**வித்தியாநுபாலனயந்திரசாலை,**

நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.

# பிரகடன பத்திரம்

**அபிராமியந்தாதியுரை** — **விலை அணா 6.**

தேவியை உபாசிப்பவர்களுக்கு ஏற்ற அருமையான நூல். உரை மிகச் சிறந்தது. தத்துவார்த்தங்களை விளக்குவது.

**நாவலர் பிரபந்தத்திரட்டு** — **விலை ரூ. 2.**

நாவலர் தமிழ் வசன,நடையை முதலில் உண்டாக்கியவராகலின் அவர் எழுதிய பல விஷயங்களை மறைந்துபோகாதபடி காப்பாற்றுவதற்காக இத்திரட்டு அவரது தமையனார் மகனாராகிய த. கைலாசபிள்ளையால் தொகுக்கப்பட்டது.

**நீதிநூற்றிரட்டு** — **விலை ரூ. 1 8.**

" ஆப்பயிண்டு " **1 12.**

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம் முதலிய நூல்கள் உரைகளோடு புதிய முறையில் அமைந்துள்ளன.

**ஆறுமுகநாவலர் சரித்திரம்** — **விலை ரூ. 1 4.**

எழுபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த நாவலர்பெருமான் சைவசமய பரிபாலனத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தமது உடல் பொருள் ஆவி மூன்றினையுந் தத்தஞ்செய்து பல அறநிலைகளை ஏற்படுத்தி அழியாப் புகழ்பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே. இத்தகைய பெருந்தகையாரின் சரித்திரத்தை எல்லா மாணவரும் மற்றவரும் படித்தறியவேண்டியது அவசியமே.

**சைவ வினாவிடைகள்**—முதற்பாகம் — **விலை அணா 3.**

" இரண்டாம் பாகம் " **10.**

இவ்விரண்டு சிறு நூல்களும் உருவத்தில் சிறியதாயினும் அவற்றுள் விளக்கப்பட்டுள்ள விஷயங்கள் எவரும் படித்து அறியத்தக்கவை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
**வித்தியாநுபாலனயந்திரசாலை,**
நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.